www.padippakam.com

# பாராளுமன்ற விவாதங்கள்
# PARLIAMENTARY DEBATES

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போதும், குழுநிலை விவாதத்தின் போதும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி—(ஈ.பி.டி.பி) யின் பாராளுமன்ற பிரதிநிதிகள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு

*1995* **நவம்பர் - டிசம்பர்.**

"இன்றைய காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் தமிழ்பேசும் பிரதிநிதிகளது எண்ணிக்கை ஒரு காத்திரமான அரசியல் பங்கை வகிக்க முடியும்! அதனை சரியாக நாம் பயன்படுத்தினால், தமிழ் பேசும் மக்களின் நலன்களிற்கான அரசியல் அபிலாசைகளுக்கான குரலை வலுவுள்ளதாக, உரமிக்கதாக உயர்த்த முடியும்!"

கே.என். டக்ளஸ் தேவானந்தா. பா.உ
செயலாளர் நாயகம்
ஈ.பி.டி.பி.

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி - ஈ.பி.டி.பி.
## EELAM PEOPLE'S DEMOCRATIC PARTY- E.P.D.P.

படிப்பகம்

www.padippakam.com

**அன்பிற்கினியவர்களே!**
**வணக்கம்.**

நாடாளுமன்றத்தில் எமது கட்சியின் சார்பாக நம்மக்களின் பக்கம் நின்று எழுப்பப்பட்ட குரல்களில் ஊசலாட்டமில்லை; பொய் கலந்த பாசாங்குகள் இல்லை.

பத்திரிகைகளில் வருவதற்கு மட்டும் நாடாளுமன்றத்தில் முழங்கிவிட்டு, திரைமறைவில் அந்த முழக்கங்களுக்கு மாறாக நடப்பது நமக்கு ஒத்துவராத முறையாகும்.

அதனால்தான் அரச தரப்பை நோக்கி கோரிக்கைகள் விடுக்கும் போது, நம் நாவாற்றலைக் காட்டும் முழக்கங்களாக அல்லாமல் நடைமுறைக்கு சாத்தியமானவற்றை மட்டும் முன் வைத்து வருகிறோம்.

முன் வைத்த கோரிக்கைகள் முழுவதும் நிறைவேற்றப்பட்டு விட்டதாக நாம் பொய் சொல்லமாட்டோம். ஆனாலும் பல கோரிக்கைகளைத் தொடர்ந்தும் வாதாடியும், எமது அரசியல் பலத்தை முடியுமானவரை பயன்படுத்தியும் நிறைவேற்றச் செய்திருக்கிறோம்.

இன்றைய காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் தமிழ் பேசும் பிரதிநிதிகளது எண்ணிக்கை ஒரு காத்திரமான அரசியல் பங்கை வகிக்க முடியும். அதனைச் சரியாக நாம் பயன்படுத்தினால், தமிழ் பேசும் மக்களின் நலன்களிற்கான, அரசியல் அபிலாசைகளிற்கான குரலை வலுவுள்ளதாக, உரமிக்கதாக உயர்த்த முடியும்.

ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரை, புலிகளோடு மாறுபட்ட கருத்துக்களை மறைக்காமல் சொல்லி வருகிறோம்.

மக்கள் சார்பாக நாம் அரசோடு வாதிட்டுக் கொண்டிருக்கும் போது, எம் முதுகுக்குப் பின்னால் துப்பாக்கிகளோடு நின்று எம்மை குறிபார்த்துக் கொண்டிருப்பவர்களை கண்டும் காணாமல்: கண்டிக்காமல் நாம் எப்படி இருக்க முடியும்?

ஆனால் தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகளை பலவீனப்படுத்தப் புலிகளோடு எமக்குள்ள முரண்பாட்டை எவரும் பயன்படுத்த முடியாது!

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்பேசும் மக்களது பாரம்பரிய பூமியில் சமஷ்டிக் கூட்டாட்சி என்பதை நாம் வலியுறுத்தி வருகிறோம். பாரம்பரிய பிரதேசத்தைப் பிரிக்கும் முயற்சி எதற்கும் எதிர்ப்பு தெரிவித்தே வந்திருக்கிறோம்.

நாமும் இன்னுயிர் தோழர்கள் பலரை நாம் இனத்தின் விமோசனத்திற்காக இழந்தவர்கள்; துயர் சுமந்தவர்கள். அதனை மறந்துவிட்டு கண்களை விற்று சித்திரம் வாங்க ஒப்பமாட்டோம்.

பாராளுமன்றத்தில் நமது பிரதிநிதிகள் ஆற்றியுள்ள உரையின் ஒரு பகுதிதான் இது; ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். நம் உணர்வுகளை இது எடுத்துக் காட்டும்.!

"என்றும் நாம் மக்களுக்காக"

**அன்புடன்**
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா.பா.உ.**
**செயலாளர் நாயகம்**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

**ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. இராசமாணிக்கம் அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, 10 நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.**

ඒ. රාසමානික්කම් මහතා
(திரு. ஏ. இராசமாணிக்கம்)
(Mr. A. Rasamanickam)

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, பொதுஜன முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்ட விவாதத்தில் எனது கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் விவாதத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

உன்னதமான சமாதானத்தைக் கொண்டுவருவோம் என வாக்குறுதியளித்துப் பதவிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசு, இன்று அதன் இரண்டாவது வரவு செலவுத் திட்ட விவாதத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது. ஆனால், இவ்வரசால் வாக்குறுதி வழங்கப்பட்ட உன்னதமான சமாதானம், இன்று கொடூரம் மிக்க யுத்தமாக மாறியிருப்பது வேதனைக்குரியது.

இந்நாட்டின் பிரஜைகளில் ஒரு பகுதியினர் யாழ் குடாநாட்டில் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில், நாம் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி உணவு, உடுதுணி, சுகாதார, வசதிகளற்ற நிலையில் அகதி முகாம்களிலும், மரநிழல்களிலும் என்றுமே கண்டிராத துயர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது அவர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தினால் வழங்கப்படும் எந்தவித நிவாரணங்களும் தேவைப்படா. உண்பதற்கு உணவும் உயிர் வாழ்வதற்குப் பாதுகாப்புமே அம்மக்களுக்குத் தேவைப்படுகின்றன. இப்பொழுது யாழ்ப்பாண மக்களுக்கு இந்த வரிச் சலுகைகளோ, ஏனைய வரிச் சலுகைத் திட்டங்களோ எந்தத் திருப்தியையும் வழங்காது. அவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தங்குதடையின்றி கிடைக்க ஆவன செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்திருக்கும் மக்களுக்கு அரசாங்கம் சகல அடிப்படை வசதிகளையும் வழங்குவதுடன், அரச சார்பற்ற நிறுவனங்கள் எந்தவித நிபந்தனைகளுமின்றி உதவி செய்ய அரசு தடையாக இருக்கக் கூடாது.

அரசு, சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறி தமிழ் மக்களைத் துயரத்திற்கும் விரக்திக்கும் உட்படுத்தி வருகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை இந்த வரவு செலவுத் திட்டத்தின் விளைவுகளை விட, தமது உயிர், உடைமைகளைத் தக்க வைப்பதே முக்கிய பிரச்சினையாக வுள்ளது. பாதுகாப்புச் செலவினங்கள் அதிகரித்துள்ள நிலையில் பொருளாதார முன்னேற்றம், சமூக அபிவிருத்தி போன்றவைகள் கேள்விக்குள்ளாகியுள்ளன. இவ் வரவு செலவுத் திட்டத்தில், யுத்தத்தின் மூலம் இழக்கப்படும் அனைத்து நிதி வழங்கலும், இந்த நாட்டின் பிரஜைகளின் முதுகில் மறைமுகமாக சுமத்தப்பட்டிருப்பதை நாம் உணருகின்றோம்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் கூட, சில பிரதேசங்களுக்கு உணவு, எரிபொருள், சீமெந்து, உர வகைகள், மருந்துப் பொருள்கள் எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயம், மீன்பிடித் துறைகளில் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் கணிசமான தமிழ் மக்களைப் பொறுத்த வரை எட்டாக் கனியாகவே இருக்கும். விவசாயிகள், மீனவர்கள் வாழ்வில் நன்மைகள் ஏற்படக்கூடிய வரவு செலவுத் திட்டமாக இது இருந்த போதிலும், வடக்கு — கிழக்கு வாழ் விவசாயிகள், மீனவர்களின் வாழ்வில் இது தொடர்ந்தும் வறுமையையும் பற்றாக்குறையையுமே ஏற்படுத்தும். நாட்டுச் சூழல் சீராக இல்லாத நிலையில் இம் மக்களுக்கு இதன் மூலம் நன்மைகள் வாய்க்கப் போவதில்லை என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

வடக்கு — கிழக்கில் நிலவும் போர்க்காலச் சூழலின் காரணமாக, மக்கள் தங்களது வயல்களுக்குச் செல்ல முடியாதிருப்பதும், கடல்களுக்கும் ஏரிகளுக்கும் சென்று மீன்பிடிக்க முடியாதிருப்பதும் யாவரும் அறிந்ததே. ஆகவே, வடக்கு — கிழக்கு மக்களின் வாழ்வில் நம்பிக்கை வருவதற்கு, ஏன், இந்நாட்டு அனைத்து மக்களினது வாழ்விலும் நம்பிக்கை வருவதற்கு, நாட்டில் சமாதான சூழல் ஏற்படுவது அவசியமானதாகும்.

வடக்கு — கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மீன்பிடித் தொழிலில் சிறப்புற்று விளங்கிய வடக்கு — கிழக்கு மீனவர்கள், இன்று நொந்து போயுள்ளனர். அம்மக்களின் அன்றாட வாழ்வு மிகவும் கஷ்ட ஜீவனமாகியுள்ளது. என்னதான் ஏழை மக்களின் மீது வாழ்க்கைச் சுமையை ஏற்றாத வரவு செலவுத் திட்டமாக, இது இருந்த போதிலும், ஏற்கனவே மலைபோல் உயர்ந்துள்ள விலைவாசி ஏற்றம், அன்றாட செலவினங்கள் போன்றவற்றை எம்மால் குறைக்க முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளது. ஒரு சராசரி தொழிலாளியின் வருமானத்திற்கும் அவனது வாழ்க்கைச் செலவினத்திற்குமிடையே பாரிய வேறுபாடு இருப்பதானது — அவனைத் தொடர்ந்தும் கடன் சுமையில் மூழ்கடிக்கும் நிலைக்குத் தள்ளுவது — எமது பொருளாதாரத் திட்டத்தின் குறைபாடாகும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, கடந்த வரவு செலவுத் திட்ட உரையின்போது, அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது. சம்பள ஆராய்வுக் 'கமிஷன்' அறிக்கையின் பிரகாரம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு கிடைக்குமென அரச ஊழியர்கள் எதிர்பார்த்தனர். அரச ஊழியர்களைப் பொறுத்தவரை, இந்த அரசின் காலத்தில் இதுவரை சம்பள உயர்வைப் பெறாதிருக்கும் அரச ஊழியர்களுக்கு 250 ரூபா இடைக்காலப்படி வழங்குவதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய சூழ்நிலையில், இந்த இடைக்காலப்படி திருப்தி தரக்கூடியதல்ல. மேலும், இந்த 250 ரூபாகூட இரண்டு கட்டங்களாகவே வழங்கப்படவுள்ளது. கௌரவ நிதிப் பிரதி அமைச்சர் அவர்கள் அதனை ஜனவரியில் இருந்து முழுமையாக வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அத்துடன், இயன்றவரை விரைவாக சம்பள 'கமிஷன்' சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அரச ஊழியர்களைத் திருப்திப் படுத்தாமல் அவர்களிடமிருந்து உச்ச சேவைத் திறனை எதிர்பார்க்க முடியாது. தமது வாழ்க்கைச் செலவுகளுக்கு ஈடுகொடுப்பதற்காக அவர்கள் வேறு நிய நடவடிக்கைகளிலும் ஈடுபடலாமென்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும் 15 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட ஊழிய வருமானத்திற்கு இரண்டு சதவீதமும், 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊழிய வருமானத்திற்கு மூன்று சதவீதமும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு அறவிடும் சிபார்சையும் அரசு கைவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன். அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்காத நிலையில், மேலும் அவர்கள் மீது சுமைகள் ஏற்றக்கூடாது.

அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 51 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சேகரிக்கின்றது. ஆனால், இலங்கையின் வரி அறவீட்டு முறைகள் மிகவும் பழமை வாய்ந்தவை. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியின் 1993 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, 7414 மில்லியன் ரூபா அறவிடப்பட வேண்டிய வரி, நிலுவையாக உள்ளது. தற்போதைய வரி அறவீட்டு முறைகளின்ன குறைபாடு காரணமாகவே இப்பெருந்தொகை நிலுவை காணப்படுகின்றது. சர்வதேச அனுபவங்களையும் நவீன மாற்றங்களையும் அணுகுமுறைகளையும் கருத்திற்கொண்டு, எமது உள்நாட்டு இறைவரித் திணைக்கள நிர்வாகமும் முற்றாக மறுசீரமைக்கப்பட வேண்டும். எந்தவொரு நிறுவனமும் தான் எதிர்பார்க்கும் இலக்குகளையும் சேவைகளையும் அடைவதற்கு, அதில் பணியாற்றும் ஊழியர்களை முதலில் திருப்திப்படுத்த வேண்டும். ஆனால், இறைவரித் திணைக்கள ஊழியர்களைப் பொறுத்தவரை அவர்களின் சேவைக்கேற்ற சம்பளம் இல்லை; திருப்திகரமான பதவி உயர்வுகளும் வழங்கப்படுவதில்லை. வரி உத்தியோகத்தர்களாக பட்டதாரிகள் நியமிக்கப்பட்டபோதிலும், அவர்கள் எழுதுவினைஞர்களுக்குரிய கடமைகளையே மேற்கொள்ளுகின்றனர். உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழியர்களுக்கு நிவாரணமளிப்பதற்காகக் கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'போனஸ்' ஊக்குவிப்புத் திட்டம், இன்றைய அரசினால் கேள்விக்குரியதாக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் முதல் காலாண்டிற்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு செப்டெம்பர் இறுதியில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நிதி அமைச்சரின் ஒப்பம் பெறுவதற்காக உரிய கோவைகள் இன்றுவரை நிதி அமைச்சில் தூங்கிக் கிடக்கிறதென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் ஊழியர்களை இவ்வாறு விரக்தி நிலைக்கு உள்ளாக்கிவிட்டு எப்படி அவர்களிடமிருந்து சிறந்த சேவைகளைப் பெறப்போகிறீர்கள் ?

மேலும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் அமுலானதன் பின்னர் பொலன்னறுவை மாவட்ட அனுராதபுர இறைவரி அலுவலகத்தின் கீழ் உள்ளகக் கோவைகள், மட்டக்களப்பு அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்படுமென அறிவித்தபோதிலும் இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது அனுராதபுர இறைவரித் திணைக்கள அலுவலகத்தில் தமிழ் அதிகாரிகள் இல்லை. ஆனால் திருமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்கள் அனுராதபுர அலுவலகத்தின்கீழ் உள்ளன. இதனால் தமிழ்ப் பேசும் வரியிறுப்பாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, திருமலை மாவட்டம், மாகாண எல்லைகளை அனுசரித்து உடனடியாக மட்டக்களப்பு பிராந்தியத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும். அதேபோல மன்னார்,



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வவுனியா, முல்லைத்தீவு என்பன யாழ்ப்பாண அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். மேலும் இறைவரித் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இறைவரி ஆணையாளர் அதிபதியின் இறுதியாக வெளியிடப் பட்ட அறிக்கையின்படி அங்கு 317 வெற்றிடங்கள் நிலவுகின்றன. 1993 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பிரகாரம் 131 வரி உத்தியோகத்தர்களும் 24 வரி மதிப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். ஆனால் பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி இன விகிதாசாரம் பேணப்படாததால் தமிழ்ப் பேசும் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். தமிழ்ப் பேசும் வரி உத்தியோகத்தர்கள் 13 பேரும் தமிழ் பேசும் வரிமதிப்பாளர்கள் 2 பேரும் நியமிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இத்தகைய குறைபாடுகள் நிலவும் நிலையில் நிதி அமைச்சர் எவ்வாறு வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடு செய்வார் என்பது கேள்விக்குரியது.

முன்பிருந்த அரசாங்கங்களைவிட, இன்றைய அரசாங்கம் ஆரம்ப காலத்தில் தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கையைப் பெற்றிருந்தாலும், அண்மைய நிகழ்வுகளால், அனைத்து அரசுகளும் தமிழ் மக்களுக்குச் சொன்ன செய்தியான "யுத்தத்தின் மூலந்தான் தீர்வு" என்பதை இந்த அரசும் நிரூபித்து வருகிறது. இன்றைய அரசும் இத்தேசத்து மக்களும் ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தை இழந்து விட்டனர் என்பதை இச்சபைக்கு நான் உறுத்திக் கூற விரும்புகிறேன். சிறுபான்மையின மக்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் யோசனையை வெற்றி பெறச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் மனங்களில் அதிக நம்பிக்கையைப் பெறச் சந்தர்ப்பம் இருந்தது. அத்துடன் நிரந்தரமான சமாதானத்திற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் தடையாக இருப்பவர்களை அடையாளம் காணும் வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் இன்று யாழ் குடாநாட்டில் அகதிகளாகி விட்டனர். உண்ண உணவில்லை ; உடுக்க உடை இல்லை ; வீடில்லை ; நிம்மதியான உறக்கமில்லை. எங்கும் கண்ணீர்! மர நிழல்களுக்குள்ளும் பாதையோரங்களிலும் மழையிலும் சேறு சகதிக்குள்ளும் யாழ் மக்களின் வாழ்வு கழிகின்றது. தமிழர்களின் போராட்டம் தொடங்கிய இரண்டு தசாப்தங்களாக இப்படியோர் அவலம் தமிழர்களுக்கு ஏற்பட்டதில்லை. அம்மக்களை இச்சபையில் பிரதிநிதித் துவப்படுத்தும் ஈ.பீ.டி.பீ. யினராகிய நாம் அம்மக்களின் துயரங்கள் பற்றி ஏற்கனவே இச்சபையிலும் ஜனாதிபதியிடமும் அமைச்சர்களிடமும் முறையிட்டுள்ளோம். இப்படிப்பட்ட வேளையில் நாம் பல நெருக்கடி களுக்கு முகம் கொடுக்கவேண்டியவர்களாகவே இருக்கிறோம். எமது கட்சியின் செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்த அவர்களைக் கொலை செய்ய எதிரிகள் முயற்சி செய்தனர். எம்மீதும் எமது கட்சியின் மீதும், எமது நியாயமான வளர்ச்சியைப் பொறுக்காதவர்கள் மறைமுகமாகச் சேறு பூசவும் எதிர்க்கவும் முயற்சி செய்து வருகிறார்கள்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, நீண்ட காலமாக யாழ் குடாநாட்டுக்கு உணவு, மருந்து வகைகள், எரிபொருள்கள் போன்றவற் றைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதிகாரிகள் மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள், தாண்டிக்குளத் தடைமுகாமில் வெறும் வெற்று வார்த்தைகளாகின்றன. கடந்த மூன்று தினங்களுக்கு முன், 10 ஆயிரம் மெட்ரிக் தொன் உணவு அனுப்புவதாக வாக்குறுதி அளித்தார்கள். இவ்வாக்குறுதிகள் செயற்படுத்தப்படுமா எனப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டியிருக்கின்றது. ஆனால், ஒன்றை மட்டும் கருத்திற் கொள்ளுங்கள். பட்டினிச் சாவை, தொற்று நோய்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்துக்கு மனிதாபிமான உதவிகளை உடன் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றேன். இழுத்தடிப்புக் கள், காலந்தாழ்த்தல் நடவடிக்கைகள் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றுவிடுமென மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள ஐந்து இலட்சத்திற்கு அதிகமான மக்களுக்கு மனிதாபிமான நடவடிக்கைகளில் உதவுவதற்கு அங்குள்ள தொண்டர் நிறுவனங்களுக்கும் சர்வதேச உதவி ஸ்தாபனங்களுக்கும் வளங்கள் பற்றாக்குறையாகவேயுள்ளன. இந்நிலைமையைப் பற்றி அங் குள்ள தொண்டர் நிறுவனங்களான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பிரான்ஸ் தொண்டர் நிறுவனமான mSF போன்றவை அறிவித்துள்ளன. இந்த நிலையில் சர்வதேச சமூகத்தின் மனிதாபிமான - உதவிக் கரங்களையும் இலங்கை அரசு நிராகரித்துள்ளது. இது வருந்தத்தக்க விடயம். அங்கு ஏற்கனவே செயற்பட்டு வரும் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் சேவை மகத்தானது. அல்லற்படும் மக்களுக்கு மனிதாபி மான முறையில் உதவும் கரங்களைத் தடுக்க முற்படுவது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்று. வடக்கில் உணவு, பால் மா, மருந்து வகை, கூடாரம் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு அதிக தட்டுப்பாடு உள்ளது. இவற்றை யாழ் மக்களுக்கு அரசு கடந்த தினங்களில் வழங்கத் தவறியிருக்கும் நிலையில் சர்வதேச சமூகத்தின் உதவி அம்மக்களுக்கு இன்று அத்தியாவசியமாகின்றது. எனவே ஒன்றில் மனித நேயத்துடன் அம்மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வையுங்கள், அல்லது சர்வதேச சமூகத்திற்குக் கதவுகளைத் திறந்து விடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, இன்றைய அரசாங்கம் கடந்த காலங்களில் உரத்துச் சொன்ன சமாதானம், சிறுபான்மை மக்களின் உரிமைகள் என்பவை, இத்தனை இலட்சம் அகதிகளும் ஆயிரக்கணக் கான உயிரிழப்புக்களும் அவலங்களும் தானா எனக் கேட்கத் தோன்று கின்றது. இந்த நாட்டிலுள்ள தேசிய இனங்கள் அனைத்தும் சம உரிமைகள், சம வாய்ப்புக்கள் வாய்க்கப்பெற்றனவாக வாழ அனைவரும் உழைக்க முன்வரல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எஸ். சிவதாசன் அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, 13 நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

එස්. සිවදාසන් මහතා
(திரு. எஸ். சிவதாசன்)
(Mr. S. Sivathasan)

Mr. Deputy Speaker, I consider it a privilege to participate in this debate on the second budget of the people's Alliance Government. As all of us know, the budget and the debate on the budget is the most important task before the parliament annually. Sir, all of us would agree that it is the bounding duty of any Government in power to raise the living standard of the people of the country in general and the budget in any Parliament could be considered a policy statement of the Government and it is for the upliftment of the lives of the people. We all know it is money that is very necessary for the running of a Government or any Institution.

Sir, the second Budget presented by the learned professor G.L Peiris is a Budget that the whole country received with acclaim. We welcome it as a Budget which has not placed unnecessary burden on the common man. But, let us hope that new taxes will not be introduced through gazette notifications. You also find that this Budget encourages investment and development. It will also stimulate industrial activity and thereby lead to more employment and exports. Incentives through as holidays. Reduced Turnover Tax and Import Duty will increase production and investment. The reduction of taxes on vans is welcome as it would benefit the transport to schools and work-places. The reduction of import duty on some electronic and electrical items such as radios, TV, refrigerators anc washing machines will be a boon to the wage earners as the item are not luxuries but have become necessities of day-to day life. The reduction of taxes on magazines, periodicals and printing and writing paper is most welcome as it will facilitate the spread of knowledge. We should day that this is a very necessary move in the correct direction. All of us are aware that our rate of literacy is comparatively high in the south-East Asia Region.

Sir, even though the increase of Rs. 250 for government servants is insufficient in consideration of the present cost-of-living, we are hopeful that the amount would be increased when the salaries Commission Report of the "Perera commission" is tabled and implemented. We are disappointed that the pensioners have been overlooked. We also welcome the raising of the non-taxable income to Rs. 144,000 per year.



படிப்பகம்

www.padippakam.com

In the field of employment, we welcome the reduced tax facilities provided to investors to open up more avenues of employment, but regret to note that very little has been done to encourage small scale industries, cottage industries or self employment. These three sectors absorb a singnificant number of those employed. Hence, if we are seriously thinking of solving the unemployment problem of reducing it, these sectors should be helped. The facilities provided to large scale investors should be extended to these sectors as well. Mr. Deputy Speaker. Increased activity in this field has been foreseen. But, we regret that this increased activity will lead to a decline of only 1.14 per cent of the total deficit figure. It should be noted here that we are forecasting an increase in export of agricultural products which are highly vulnerable to the vagaries of the weather and international market.

Mr. Deputy Speaker I, as a Tamil Member of Parliament of the EPDP representing the Tamil people, complain that the Budget is in on way going to help the Tamil people of the North. Sir, the other day, Hon.. Member Sennan speaking on behalf of the Tamil plantation workers also complained that this Budget has not helped them as well. To start with, Sir, I would begin by quoting the first paragraph of the introduction of the Budget speech the Hon. Deputy Minister where he says

**"It is a great honour and privilege for me to present the second Budget of our People's Alliance Government under the inspiring and bold leadership of Her Excellency Chandrika Bandaranaike Kumaratunga. The Election Manifesto of the People's Alliance promised at the last General Election that ours Government during its term of office of six years, will formulate and implement policies and programmes to achieve rapid and sustainable economic development, which will ameliorate unemployment and poverty and enable our people to live without fear in a free, fair and democratic society, with dignity, self-respect, peace and in amity."**

He also goes on to say, Sir.

**"In the midst of escalated hostilities in the North and the East, this Budget is formulated under severe resource constraints, as defence expenditure is expectd to remain high during 1996. However, we shall not sacrifice our development priorities because of the conflict and will make every effort to contain the budget deficit and monetary expansion within manageable limits, while providing necessary incentives to promote rapid employment generation and economic growth. Inevitably, what we will achieve will be far below our full potential. That is why we will continue to devote our wholehearted effort to the ongoing peace process."**

Well, Sir, I have no doubt that this Government, under the leadership of the President, Her Excellency Chandrika Bandaranaike Kumaratunga, the Prime Minister Madam Srimavo Bandaranaike, for whom I have the highest regard, and the Government has taken the most courageous step in finding a just and lasting solution to the ethnic problem.

This is what I have to say as introductory remarks. I crave your indulgence to go into the details of certain aspects of the Budget specially in relation to the North East, the area that I represent in Parliament. The question not only in this budget but also in previous budgets as well, was the alleviation of poverty of the people. Well Sir, the previous government introduced the Janasaviya, which is claimed to be the vision of the late President His Excellency Ranasinghe Premadasa, to alleviate poverty. I do not for a moment question the good intentions of either the present government or the last government. But all what I urge this Government is to think of the needy people who are not only living in these parts of the country. There are needy people living in the North and the East as well. Sir, in relation to the implementation of Samurdhi, the Hon. Minister agreed that this scheme would be extended to the North and East. I only urge the Hon. Minister to take early steps in this direction.

Sir, coming to agriculture, the Deputy Minister of Finance in page 14 of his speech has said, the Government has provided incentives to sustain high production in the agricultural sector, fulfilling an election promise. The fertilizer susbsidy which was removed by the previous Government was restored to the farmer. Thus, the price of urea declined to an average level of Rs. 500 per bag from the cost price of Rs. 850 per bag, and sold with other varieties of fertilizer. Sir, as far as the North-East concerned, this had absolutely no bearing on the farmer. It is not only that the farmer has had no opportunity of even seeing as to what urea is, for the last few years. In particular, in the last 5 years, this is a item banned from being transported to the North. Mr. Deputy Speaker, the Minister has further stated fulfilling another important promise to the Agricultural Sector. The government in October 1994, announced a relief to farmers who have failed to repay their cultivation loan to lending institutions during the period 1978 – 1994. Farmers were given an option to make a down payment of 25% of the loans outstanding and the balance was to be written off, in a joint program by the lending banks. The government and the Central Bank providing this facility, a large number of farmers who had been ineligible for loans, became eligible for credit. Here Sir, no farmer in the North has been benefitted by this benevolent scheme. The position in the Jaffna peninsula in particular is that any bank is unable to transact any business with its customers. From October, this year, Sir, I should state that even the public servants have not been paid their earned wages for the month of October. The pensioneers have not been able to draw their pension from the banks, even the ordinary people who have deposited montes in the banks have not been able to withdraw any money from the banks.

No bank was allowed to take any money to the Jaffna peninsula. In fact Sir, in early October, the Bank of Ceylon Officials who took money to Trincomalee to be taken to Jaffna were stopped when they were about to board ship sailing to Point Pedro. Repeated requests to authorities concerned have not been fruitful.

The Hon. Deputy Minister of Finance, has also said the Government's medium term policy strategy in Agriculture will aim at upgrading the quality of research and extensive support, Agricultural Seeds and material, rural infrastructure Rural Credit Markets, Storage and Market facilities and Land Markets.

**"These reforms are crucial for alleriating deep-seated rural poverty, assuring food security and getting agriculture moving. We will remove the institutional and policy obstacles which have retarded agricultural profitability and constrained investment."**

Well, Sir, as far as the North is concerned, this has no bearing at all. Farmers there are handicapped for want of necessary tools, quality seed paddy and other necessities for Agriculture. In this connection, we should also note that the Jaffna farmer was our main producer of vegetables, fruits, chillies, onions, pulses and cereals. Unfortunately, the war situation has prevented normal production. If not, all these produce would have come to the market, and would have considerably reduced the cost of living all over the country.

Sir, you have been to Jaffna a number of times and you know the geography of Jaffna as much as Members of both sides know it. Sir, viewing news on TV, the day before yesterday, we saw the war being waged where plantain's are grown in large numbers. In that area the war is going on at the moment, be it Neerveli, be it Kopay, be it Siruppiddy, be it Punnalai Kadduvan. These areas have the most fertile soil in Jaffna – the red soil.


படிப்பகம்

www.padippakam.com

Sir, now I would come out with some figures. The North East province is said to have produced 33% of the rice, 40% of dried chillies, 85% of red onions, 30% of pulses and cereals. You can just imagine how the cost of living would be lowered if these items came to the market.

I should also bring to the notice of this House, a painful situation where an Agricultural Research Centre was set up in Kilinochchi to cater to research needs of five districts of Jaffna, namely, Jaffna, Kilinochchi, Vavuniya, Mullaitivu and Mannar. But the situation of this research centre is most deplorable as facilities for research in the way of necessary equipment for research and qualified research officials are totally lacking.

The farmer is unable to undertake any form of cultivation. Even if he does a limited cultivation, facing untold hardships, he is unable to reap the harvest for reasons beyond his control. His entire sweat and labour go waste as the harvest is reaped by some othert force.

Sir, when coming to Parliament this morning in my vehicle, the person who drives the vehicle switched on the radio. There is a famous Tamil song which I heard. " விதைத்தவன் யாரோ, அறுப்பவன் யாரோ " "Somebody sows, somebody else reaps the benefit. " This is the realistic situation in the North. As far as industries are concerned, as mentioned earlier, I request that attention be paid to small-scale cottage industries and self-employment. As most of the members of this House are aware, the only state - sponsored industries in Jaffna were the Cement Factory at Kankesanthurai, the Chemical Factory at Paranthan and the Paper Factory at Valaichenai. All three factories were set up long ago, as far back as 1948. Well, Sir, there were smaller state concerns like the Ceramics Factory at Oddusuddan and the Plywood Factory in Chunnakam, besides the private factories which produced asbestos sheets, kitchen-ware, and water buckets out of aluminium ; glass factories in Jaffna and Trincomalee ; soap factories and a number of power-looms run by the Multi-purpose Co-operative Societies which produced quality textiles. Sir, I am personally aware that the Pandaterruppu Multi-Purpose Co-operative Society produced quality textiles in the early 'seventies and exported them to Germany and Switzerland. Besides this, there were a number of fruit canning and processing factories in Kilinochchi, Ariyala ; and Atchuveli in Jaffna Peninsula which produced quality cordials, jams and canned fruits which were exported and had a high demand in foreign countries, specially in the Middle East.

Then, Sir, connected to fisheries, there was the well known CEY-NOR Factory which built boats and manufactured nets. Not only this CEY-NOR Factory, there were a number of other boat building establishments all over the North East Province. Today, all these factories are completely closed down as far as almost all of them are concerned. Buildings and machinery have been completely damaged or removed.

The workers who were employed in these factories are today on the roads, left high and dry.

Then, coming to the next subject –

නියෝජ්‍ය කථානායකතුමා
(பிரதிச் சபாநாயகர் அவர்கள்)
(Mr. Deputy Speaker)

What about the Mineral Sands Factory at Pulmoddai ?

එස්. සිවදාසන් මහතා
(திரு. எஸ். சிவதாசன்)
(Mr. S. Sivathasan)

Sir, that was also in the 'Seventi'es. There were a lot of problems there and it is very difficult for the factory to function at the moment.

On Human Resources Development, the Hon Minister at pages 23 and 24 of his speech has said :

"Our government made a strong committment to increase allocations to modernise our education and health services and thereby remedy the long neglect of thse sectors by the previous regime. We have made a start on this programme, which will be implemented during our tenure.

public expenditure of Rs. 16,858 million, (2.5% of G.D.P.) on education has been directed at improving the infrastructure facilities and the quality of education. We established a Sri Lanka Teacher Service with vastly improved salaries for about 200 thousand teachers at an additional cost of Rs. 3,000 million. The average increase in teacher salaries is 50%.

An independent transfer board system was created to insure teachers from politically motivated transfers.

The Principal's Service has been restructured to improve school administration, with training in management. The system of inspection and supervision has been revived. Teaching skills are being upgraded by in-service training and distance education, especially in Science, computers and English.

"Informal education programmes for school-leavers and dropouts have been strengthened. Curricula are being systematically improved."

Well, Mr. Deputy Speaker, the Hon. Minister goes on to say:

"Rural schools have been strengthened by the provision of new teachers and facilities. During the year, 222,050 student chairs, 194,350 student desks, 15,640 teacher chairs, 78,395 teacher tables, 15,400 blackboards have been provided for these schools."

Well, sir, we do not grudge the provision of these needy furniture to the students and teachers. These facilities are a necessity. But here, Sir, permit me to reveal the realistic situation of the schools in the North. In very many cases schools are functioning without proper building facilities. No new buildings have been put up, repairs and renovation of buildings have not been undertaken for many years. A large number of school buildings have been completely destroyed or very badly damaged by shelling and bombing.

As the Hon. Minister is aware, many schools in the Jaffna Peninsula are functioning outside the places where the schools were earlier housed as almost the entire population of those areas have got displaced and moved out. In the case of most of such schools they are functioning with very minimum facilities, only in very small temporary sheds. This is the condition of the schools there.

The Hon. Minister, Mr. Siripala de silva, who is now in charge of activities in the North, this morning reminded us of Shylock, Shakespeare's character in the "Merchant of Venice," and said that certain people are demanding the pound of flesh. It is not the pound of flesh that we demand. What we demand or what we really request for are at least the basic necessities of food, clothing and shelter. As far as shelter is concerned a number of houses have been completely damaged. Well Sir, about the food situation. I am running out of time

I would only hope that this time would be made good because I am running short of time. Time spent on this should be given.



படிப்பகம்

www.padippakam.com

Sir, coming to the food situation in Jaffna and the general situation, because I have no time I will table* a document, a memorandum addressed to Her Excellency the President by five Government Agents, the Government Agents of Jaffna, Mullaitivu, Killinochchi, Mannar and Vavuniya, where the realistic situation is explained. The Hon. Ministers and the Government are very hopeful that this war would end very soon, that it would end today or tomorrow, which I have my doubts. Till such time, efforts must be taken by the Government to do whatever possible in the interests of the civilians. I do not doubt the good intentions of Her Excellency the President, some of her senior Ministers and officials. But, Sir, there is a Tamil saying : **" தெய்வம் இடம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடான் "** 'දෙවියන් ඉඩ දුන්නත් කපුවා ඉඩ දෙන්නේ නැහැ' කියා පැරණි දෙමළ කියමනක් තිබෙනවා. So, I am reminded of this saying. There are a lot of abstacles. Decisions taken here, the directive do not go down the line. Today about

* පුස්තකාලයේ තබා ඇත.
நூனிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது
*Placed in the Library.*

550,000 peoples of the Peninsula are displaced. They have moved from one place to another, and in some cases to five or six places. Here too, I am reminded of two old proverbs. - "Justiçe delayed is justice denied" and "A stitch in time saves nine." Therefore, Sir, what should be done should be done immediately. This is what we request from the Government. The Hon. Deputy Minister of Finance in introducing the Budget said that it is the right of every citizen in this country to live as equals without fear. This is what we, the representatives of the Tamil speaking people of this country, elected by the Tamils, State. From the First Parliament in 1948, our leaders first spoke in Parliament and then resorted to non violent means. Many senior Members of this House who were Members of Parliament in 1956 would remember the backlash against a non-violent struggle. It continued this way and standardization shut the doors of the Jaffna students to enter the University. Even today a student who has scared 286 marks is unable to enter the University, whereas in some districts those students who scared 180 marks are able to enter the University. The Hon. Minister of Education said that three Universities are to be opened and new faculties would be opened in the other Universities. Sir, we really welcome such a move as we feel it is very necessary that deserving students should enter the Universities. Even in this Budget the Hon. Minister of Education has not given the real information as far as the University of Jaffna, the Eastern University in Batticaloa and the Open Universities of Vavuniya and Trincomalee are concerned. Well, Sir, I urge the Hon. Deputy Minister of Finance and the Hon. Minister of Education and Higher Education to take necessary and meaningful steps in that direction.

Finally, Sir, before I end my speech, is very necessary, to put it in the words of the learned Professor Peiris, to find a fair and lasting political solution at the earliest. Sir, we have been repeatedly telling this House that the problems of the ordinary people of the North and the East should be looked into and that those people should be treated as equal citizens of this country.

We also vehimently condemn these murderous and butchery acts which have happened all over the country, whether they be at the oil installation or at the Army Headquarters. Sir, you can deal with the LTTE that way, but you cannot and you should not think of penalizing the ordinary Tamil people, if it is the real intention of the Government to win the hearts and the minds of those people and solve this problem. From the introductory words right to the end there is a connecting thread running through the entire Budget, that is the amount of money that is being spent on the war efforts is very much more than what has been really voted for other essential items such as education, health and other social amenities.

Sir, I come to the last point of my speech, even though I have much more to say. As far as we of the EPDP are concerned, we have been repeatedly requesting Her Excellency the President and the Government to create an interim administration for the North-East province. All of us know that under the 13th Amendment the Provincial Council system was introduced to this country to solve the ethnic problem and for the betterment of the North-East. But, today there are only a set of officials and bureaucrats. My complaint is that there are some officials who are in charge of three to four departments and there is nothing moving there. The people of the North-East do not get any benifit from the Provincial Council. So, in all earnestness, I urge the Hon. Deputy Minister of Finance, as he is also the Minister for Constitutional Affairs, to take this matter up and see that a political leadership is given to the North-East Provincial Administration and that all efforts taken in the North-East are handled through this administration.

Thank you.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஆர். இராமமூர்த்தி அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, 14, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ආර්. රාමමූර්ති මහතා
(திரு. ஆா. ராமமூர்த்தி)
(Mr. R. Ramamoorthy)

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின்போது நான் சார்ந்திருக்கின்ற ஈ. பீ. டீ. பீ. கட்சியின் சார்பில் இச்சபையில் சில கருத்துக்களை முன்வைக்கலாமென்று எண்ணுகின்றேன். இந்த வரவு செலவுத் திட்ட மானது இந்த நாட்டில் வாழுகின்ற சாமான்ய மக்களின் முதுகுகளில் அதிகளவு பொதியைச் சுமத்தாமலிருப்பதையிட்டு அந்த மக்களோடு நானும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின் றேன். இருந்தும் இந்த வரவு செலவுத் திட்டத்தினால் வடக்கு —கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையும் எட்டப் போவதில்லை. அவர்களுடைய தற்போதைய பிரச்சினைகளெல்லாம், "இந்த யுத்தத்திலிருந்து தப்பி எப்படி உயிர் வாழ்வது ? அடுத்த நேர உணவுக்கு யாருடைய கையைப் பிடித்து அதை நிறைவேற்றுவது? இன்றைய பொழுதை எந்த மரநிழலுக்குள் ஒதுங்கிக் கழிப்பது?" என்பது போன்ற அவலங்களாகத்தான் இருக்கின்றன.

மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள். யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறிய மக்களின் பிள்ளைகளுக்கு — குழந்தைகளுக்கு — பால் மா இல்லை. கருப்பனீர் மாத்திரமே இப்போது அங்கு பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையை சோமாலியா, பொஸ்னியா போன்ற நாடுகளின் நிலையுடன் ஒப்பிட்டு எனக்கு முன் இப்பாராளுமன்றத்தில் பல தமிழ் உறுப்பினர்கள் பேசியுள்ளனர். யுத்தமொன்று நடைபெறுகின்ற இடத்தில் மரண ஓலங்களும் அல்லல்களும் அவலங்களும் ஏற்படாமல் யுத்தத்தை நடாத்திச் செல்ல முடியாதென்று யுத்தவாதிகள் கூறலாம் ; அது எமக்கும் தெரியாத ஒன்றல்ல. ஆனாலும், சாதாரண மக்கள்மீது ஏற்படக்கூடிய தாக்கத்தின் கனதியைக் குறைக்கவேண்டியது இந்த நாட்டை ஆட்சிபுரியும் அரசின் கடமையல்லவா?

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் 99 சத வீதத்துக்கும் அதிகமான விவசாயிகள் வாழும் செம்மண் பிரதேசங்களான நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் போன்ற பகுதி களிலிருந்து விவசாய அறுவடைப் பொருட்களையெல்லாம் விட்டது விட்டபடியே நான்கு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அகதிகளாக


படிப்பகம்

www.padippakam.com

வெளியேறியுள்ளனர். இந்நடவடிக்கையினால் விவசாயப் பெருநிலமான செம்மண் பிரதேசம் தரிசு நிலமாக மாறியுள்ளது. இது எமது நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான அளவு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தென்பகுதியிலிருந்த தமிழ் மக்கள் தம் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வட பகுதியை நோக்கி ஓடிவார்கள். ஆனால், இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கையினால் வட பகுதியிலுள்ள மக்கள் தென் பகுதிக்கு வர முடியாமல் அநாதைகளாக, அகதிகளாக கிளிநொச்சிக் காடுகளுக்கும் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். அவர்களின் அன்றாட வாழ்வுக்கும் உயிருக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் இச்சபையில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, தற்போதைய அரசு தேர்தல் தொகுதி வாரியாக நூறு வீடுகளைக் கட்டும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றது ; அது வரவேற்கத்தக்கது தான். ஆனால், வீடமைப்பு, நிருமாணத்துறை, பொதுவசதிகள் அமைச்சின் அறிக்கையில், " யாழ்ப் பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள தேர்தல் தொகுதிகளைத் தவிர, நாட்டிலுள்ள ஏனைய தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் நூறு வீடுகள் கட்டும் திட்டம் ஆரம்பிக் கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது " என்று குறிப்பிடப்பட் டுள்ளது., இதிலிருந்து, தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் அநேகமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. அங்கே யுத்தத்தைக் காரணங்காட்டித் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகளைத் தகர்த்து அழிக்கும் திட்டம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இந்நடவடிக்கையின் தொடர்ச்சியினால் இந்நாட்டின் வட பகுதிக்கும் தென்பகுதிக்குமிடையே பொருளாதாரத்தில் மேடும் பள்ளமும் போன்றதொரு சமநிலையற்ற தன்மை நிலவுகின்றது. இது மாத்திரமன்றி தென் பகுதிகளில் குறைந்த வருமானத்தைப் பெறுகின்றவர்களுக்கு, அவர்களின் வீடுகளின் கூரையை வேய்வதற்குக் கூரைத் தகடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் வட பகுதிகளிலும் ஏனைய பிரதேசங்களிலும் வீடுகளில் உள்ள கூரைத் தகடுகள் கழற்றப்பட்டு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பாவிக்கப் பட்டு வருகின்றன. தென் பகுதியில் இத்திட்டத்தின் முதலாம் கட்டமாக ஆறாயிரத்து நானூற்று முப்பத்தைந்து குடும்பங்கள் நன்மை பெற்றுள் ளன. இரண்டாம் கட்டமாக பதினோராயித்து நூற்று ஐம்பத்தைந்து குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்கவுள்ளன என்பதையும் இச்சபையில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

தற்போதைய அரசாங்கத்தினால் காட்டு உயிர்க் காப்பு நில அபிவிருத்திக்கென நாலாயிரத்து நானூறு ஏக்கர்களைக் கொண்ட நிலப் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், எமது நாட்டிற்குப் புலம்பெயர்ந்து வருகின்ற பறவைகள், நாடோடிப் பறவைகள், முலையூட்டிகள், ஊர்வன, மீனினம் போன்ற உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு இக்கருத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது. இதை நான் வரவேற்கின்றேன். இவ்வுயிரினங்களைப் பாதுகாப்பது இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவருடையதும் தார்மீகப் பொறுப்பாகும். ஆனால், இந்த நாட்டில் தமிழ்ப் பேசும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது கேள்விக் குறியே ! ஏதாவதொரு சம்பவம் இந்நாட்டின் எப்பகுதியில் ஏற்பட்டாலும், அதனைக் காரணம் காட்டிப் பேரினத்தைச் சார்ந்த மக்களில் எவரேனும் தமிழ்ப் பேசும் மக்களின் உயிர்களில் விளையாடலாம். இது போன்ற சம்பவங்கள் சமீப காலங்களில் கொழும்பில் அரங்கேறியுள்ளன. இந்தப் பறவைகள், மற்றைய உயிரினங்களின் உயிர்களுக்குள்ள உத்தரவாதங்கள் கூட, தமிழ்ப் பேசும் மக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகள் என, இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் அரசும் புரிந்து கொள்வதன் ஊடாக, அவர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்க முடியும் என்பதைக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

இவ்வரசாங்கம் புனித இடங்களின் அபிவிருத்திக்கென, திட்டமிட்டுச் சில இடங்களைப் புனித இடமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அனுராத புரம், கதிர்காமம், மஹியங்கனை, முறியங்கனை, தம்புள்ள, தெவிநுவர, களனி, பண்டுகஸ்நுவர, மிஹிந்தல, வட்டாராம, மாத்தளை, அலுவிஹார, சிவனொளிபாத மலை, இரத்தினபுரி சமன் தேவாலயம், திம்புலாகல ஆரனி, சோனாசனம் ஆகியவை புனித இடங்களாகக் கருதப்பட்டு, இவைகள் யாவும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழ்ப் பேசும் மக்களின் பிரதேசங்களில் எத்தனையோ புனிதத் தலங்கள் இருக்கின்றன என்பதை அரசு கருத்தில் எடுக்காததையிட்டு நான் விசனப்படுகிறேன். இந்நடவடிக்கையானது இனவொதுக்கலின் ஒரு கட்டமாகவே கருதப்படும். திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரம், சைவ நாயன்மார்களில் ஒருவரால் பாடல் பெற்ற ஒரு தலமாகும். இவ்வாலயம் முற்றுமுழுதாக அரச கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதை யாவரும் அறிவர். இதேபோல், நயினாதீவிலுள்ள நயினாதீவு நாக பூசனியம்பாள் தேவாலயமும் அரச கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பிரதேசமாகும்.

இவைகளைப் புனிதப் பிரதேசங்களாக அரசு பிரகடனப் படுத்துவதில் எந்தவித இடையூறும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. ஆனால், அங்கு நடப்பவைகளோ எதிர்மறையான தோற்றப்பாடுகளைக் கொண்டுள்ளன. இவைகளைப் பற்றி முன்பும் ஒருமுறை நான் பாராளு மன்றத்தில் தெரிவித்துள்ளேன்.

தமிழ்ப் பேசும் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களிலுள்ள தேவாலயங் களிலும் புனிதப் பிரதேசங்களிலும் பாதுகாப்புப் படையினரின் காவல ரண்களும் அவர்களின் இருப்பிடங்களும் இருக்கின்றனவே தவிர, அவை புனித இடங்களாகக் கருதப்படவில்லை. எனவே, அரசு இவற்றைக் கருத்திற் கொண்டு அப்பகுதியிலுள்ள புனிதப் பிரதேசங்களை, புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் இச்சபையில் கேட்டுக்கொள்கின்றேன். அவற்றின் அபிவிருத்திக்கும் ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, தொடர்ந்தும் இத்தகைய பாரபட்சம் காட்டப்படுமாயின், தமிழ்ப் பேசும் மக்கள் அன்னியப்படுத்தப்பட்டு, அரசுக்கு எதிரான உணர்வுகளுடைய சக்திகளின் பக்கம் சார்ந்து விடுவார்கள் என்பதையும் இச்சபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, புதிய வரவுசெலவுத் திட்ட உரையில், கடந்த ஆண்டில் அதிகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் உதவிக் கொடுப்பனவுகள், மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஒரு கொடையாக அமைந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான திட்டத் தினால் தென்பகுதியில் வாழ்கின்ற மீன்பிடித் தொழிலாளர்களே நன்மை யடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், வடக்கு — கிழக்கிலுள்ள மீன்பிடித் தொழிலாளர்களின் வீட்டில் விளக்கு எரிவதற்கே மண்ணெண்ணெய்யற்ற நிலைதான் அங்கு நிலவுகின்றது. அவர்கள் தமது அன்றாட ஜீவனோபாயத் தேவைகளையாயினும் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். வடபகுதியில் கடல்வலயச் சட்டங்களி னாலும் கொடிய யுத்தத்தினாலும் அவர்களின் மாமூல் வாழ்க்கை சிதைக்கப்பட்டுள்ளதோடு, தமது பூர்வீகப் பிரதேசங்களிலிருந்தும் பிடுங்கி எறியப்பட்டுள்ளார்கள். எனவே, இத்தகைய காரணிகளால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணங் களை வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நலன்புரி நிலையங்கள், புகலிடங்கள், உணவு, நீர், சுகாதார, மருத்துவ வசதிகள் என்பன என்றுமே திருப்திகரமாக அமைந்தது கிடையாது. உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்திலும் பல குறைபாடுகளும் குளறுபடிகளும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அவைகளைக் கவனத்திற்கெடுப்பது அவசியமாகும். அந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படும்வரை, இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவு, ஏனைய வசதிகள் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும். உலர் உணவுப் பொருட்களின் பங்கீட்டிற்குப் பதிலாக, பணம் கொடுக்கும் முன்னோடித் திட்டமொன்று திருகோணமலையில் நடைமுறைப்படுத்தப் படுவதாக நாம் அறிகின்றோம். இத்திட்டம் திருகோணமலை மாவட் டத்தில் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய மாவட்டங்களிலும் நடை முறைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க திட்டமாக இருப்பினும், பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத இடங்களில் இத்தகைய திட்டத்தினால் மக்கள் எதுவித பலாபலன்களையும் அடையப் போவதில்லை. எனவே, இதனை மறுபரி சீலனை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வேறு பல தேவைகளுக்கு மத்தியிலும்கூட, 1995 ஆம் ஆண்டுக்கான புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 1,048.5 மில்லின் ரூபா ஒதுக்கப் பட்டது. இதனைப் போதியதாகக் கருத முடியாது. அடுத்த ஆண்டில் இதை விடப் பன்மடங்கு தேவைகள் அதிகரிக்கும். இந்த யுத்தத்தினால் பல இன்னல்களுக்கு மத்தியில் அகதிகளாகியுள்ளவர்களுக்கு இந்த நிதியை இன்னும் கூட்டவேண்டுமென்றும் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். எமது நாட்டைப் பொறுத்தவரை பனிமூட்டம் போட்டு நிற்கும் போர்க்காலச் சூழல், பிள்ளைகளை அநாதைகளாக்கு கின்றது. ஆயுதங்களுக்கு அவர்களது பெற்றோர் தாரைவார்க்கப்படும் போது, அந்தப் பிள்ளைகள் ஒன்றில் மனநோயாளிகளாக அல்லது போராளிகளாக மாறவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. இந்த நாட்டின் இனப்பிரச்சினையைப் பந்தாகப் பயன்படுத்திய இனவெறியர்கள், அர சியல் பிரகிருதிகள், அப்பாவிகளின் மரணத்தில் சந்தோசம் காணும் யுத்த வெறியர்கள் இதற்குத் தூபமிடுகின்றார்கள். நாளைய சந்ததி முளைவிட இதன்மூலம் அடித்தளம் இடமுடியுமா என்று கேட்டு எனது பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன். நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. யூ. பாஸ்கரன் அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, 15, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

යූ. බාස්කරන් මහතා
(திரு. யூ. பாஸ்கரன்)
(Mr. U. Baskaran)

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, 1996 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இச்சபையிலே ஈ.பீ.டீ.பீ. சார்பிலும் எனது சார்பிலும் எனது மக்களின் சார்பிலும் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் இச்சபையிலே சமர்ப்பிக்கப்பட்ட இவ்வேளையில் நாட்டின் ஒரு பகுதி மக்கள் யுத்தத்தின் விளைவால் சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்டு அன்றாட வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில் இருக்கும்போது இச்சபையில் வரவு செலவுத் திட்ட விவாதம் சம்பிரதாய நடவடிக்கையாக நடைபெறுகின்றது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, பத்து வருடங்களுக்கு முன் நாம் பின்நோக்கிச் சிந்தித்துப் பார்ப்போம். பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது அது மக்களிடத்தில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தும். விற்பனை நிலையங்களில் பதுக்கல்கள் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். ஆனால், இன்று எமது பகுதிகளில் இவ்வாறான சலசலப்பையும் நிகழ்வுகளையும் காண முடியவில்லை. இன்று, குறைந்த பட்சம் தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளப் புகலிடம் தேடி ஓடிக்கொண்டிருக்கும் வட பகுதி மக்கள், நின்று நிதானித்து வரவு செலவுத் திட்டத்தின் பலாபலன்களை விவாதித்துக் கொண்டிருக்க முடியுமா என்பதை இச்சபையிலே உள்ள அனைத்து கௌரவ உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பத்து வருடங்களுக்கு மேலாக வரவு செலவுத் திட்டத்தின் நன்மை தீமையறியாமல், அவை அவர்களைச் சென்றடையாத நிலையில் வாழ்கின்ற இந்நாட்டின் ஒரு பகுதி மக்களையும் சேர்த்து வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறுவது வேதனைக்குரிய விடயமாகும்.

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கத் திறனை வழங்கும் கைத்தொழிற்சாலைகள் வட பகுதியில் இப்பொழுது மூடிக் கிடக்கின்றன. இலங்கை நாட்டின் மொத்தத் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் வருவாய்த் துறைக்கும் பங்களிப்புச் செலுத்திய காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, காரை நகரில் இருக்கும் சீ — நோர் நிறுவனம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் போன்ற தொழிற்சாலைகளும் மற்றும் தனியார் தொழிற்சாலைகளும் இன்று அழிந்து சிதைந்து மூடிக்கிடக்கின்றன. இந்த நிலைமையானது இந்த நாட்டின் மொத்த உற்பத்தியையும் பொருளாதார வளர்ச்சியையும் பெருமளவு பாதித்திருப்பதை நாம் காண்கின்றோம். இந்நிலைமைகளில் இருந்து நாம் தேசிய அபிவிருத்தியையும் உச்ச வளர்ச்சியையும் அடைந்து கொள்வது சாத்தியமாகுமா? ஒரு கையால் யுத்தத்தை நடத்திக்கொண்டு மறு கையால் பொருளாதார வளர்ச்சியைப் பெற்று விடுவோம் என்று கூறுவது எப்படிச் சாத்தியமாகும்?

கொடூர யுத்தம் தேசிய பொருளாதாரத்தை விழுங்கி அரித்துக்கொண்டு வருவதைக் கடந்த கால ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்தினூடாகவும் நாம் காண்கிறோம். இப்போது நாம் இந்த வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டு, அடுத்த வருட நடுப்பகுதியில் ஒரு குறை நிரப்புப் பிரேரணையைக் கொண்டு வருவதற்குத் தள்ளப்படலாம். இந்தத் தளம்பல் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்றால் யுத்தம் முற்றாக நிறுத்தப்பட்டு இந்நாட்டில் வாழும் பல்லின சமூகங்களும் சுதந்திரமாகவும் சம உரிமைகள் வாய்க்கப் பெற்றவர்களாகவும் வாழவேண்டும். அந்தச் சூழலில்தான் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி சாதகமானதாக இருக்கும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, 1977 க்குப் பின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கொண்டுவந்த இந்தப் பொருளாதாரக் கொள்கையின் ஊடாக இந்த நாடு முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் பொருளாதார அபிவிருத்தியைக் காணச் சந்தர்ப்பம் இருந்தது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 17 வருட காலமாகப் போரை நடத்தியதன் காரணமாக அந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஊடாக வடக்கு — கிழக்குக்கு வெளியே வாழும் மக்கள் அனுபவித்த நன்மைகளை வடக்கு — கிழக்கு வாழ் மக்கள் அனுபவிக்கவில்லை. வடக்கு — கிழக்கு மக்கள் முன்பிருந்த பொருளாதார நிலையைவிட இன்று மிகவும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். வடக்கு — கிழக்கில் இன்று விவசாயம் செய்ய முடியவில்லை ; மீன் பிடிக்க முடியவில்லை ; பிள்ளைகள் பாடசாலை சென்று கல்வி கற்க முடியவில்லை ; கைத்தொழிற் சாலைகள் இயங்க முடியவில்லை ; தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள் அழிந்துபோய் விட்டன. வடக்கு — கிழக்கு மக்கள் கற்காலத்துக்குப் போய்விட்டார்கள். யுத்தத்தின் கொடூர வடுக்களைத் தென்னிலங்கை மக்கள் அனுபவ வாயிலாக உணராதவர்கள். அதன் சோகத்தை, அதன் அவலத்தை இப்போது நம் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் இக்கணத்தில் நான் இந்தச் சபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிக்கொண்டிருக்கிறேன்.

யாழ் குடாநாட்டு மக்கள் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயந்து, மரணத்திலிருந்தும் அழிவிலிருந்தும் தப்பிக்கொள்ள இடம்மாறி இடமாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையைத் தொலைத்து, வயிற்றுப் பசிக்கு உணவின்றிக் களைத்துப்போன தாய்மார் தமது பச்சிளம் குழந்தைகளுக்கு எப்படிப் பாலூட்ட முடியுமென்பதை நீங்கள் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் சமாதானத்துக்கான பாடலாக ' ரூபவாஹினி ' யில் செய்திக்குப் பின் ஒளிபரப்பப்படுகின்ற வெண்புறாப் பாடலில் வருகின்ற காட்சிகளை வடபகுதி மக்களின் இன்றைய நிலைக்கு உதாரணம் காட்ட விரும்புகின்றேன். அக்காட்சியொன்றில் போரின் கொடுமையினால் வாடிப்போன ஆபிரிக்கத் தாயொருவர் குழந்தைக்குப் பாலூட்டுகின்ற வேளையில், அக்குழந்தை தன் முகத்தில் மொய்க்கின்ற ஈயைக்கூட விரட்ட முடியாத பலவீனமான அவல நிலையில் இருப்பது காண்பிக்கப்படுகின்றது. அதனைச் சகலரும் பார்த்திருப்பீர்களென நான் நினைக்கின்றேன். வட பகுதியிலுள்ள அகதி முகாம்களின் நிலை இந்நிலையை விட மோசமாக உள்ளதென்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, அதைவிடவும் மிகவும் மோசமான அவல நிலையே யாழ் குடாநாட்டில் இன்று நிலவுகின்றது. ஒரு தாயானவள் தன் மகவைப் பெற்றெடுப்பதற்கு முன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, உயர்ந்த தரமுடைய வைத்தியசாலைக்குச் சென்று பிரசவிக்கின்றாள். ஆனால், இன்று யாழ் குடாநாட்டுத் தாய்மார் தெருவோரங்களில் பிரசவிக்கின்றார்கள்.

கடந்த 7 ஆம் தேதியன்று அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வடக்கு — கிழக்கு யதார்த்த நிலையைப் பின்வருமாறு கூறியுள்ளார். " யாழ் குடாநாட்டு மக்களின் ஆதரவு தேவையென்று அரசாங்கம் கருதினால், அத்தியாவசிய உணவுப் பொருள்களை அந்த மக்களுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால் அவர்களை இயல்பாகப் புலிகளின் பக்கம் தள்ளிவிடுவதாகவே அது அமையும் " என்று குறிப்பிட்டார். எந்தவோர் ஆட்சியாளரும் அதிகாரத்திலிருக்கின்றபொழுது வடக்கு — கிழக்கு மக்களின் யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ளத் தவறிவிடுகின்றனர். அதே தினத்தில் அந்தஅவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தை முடித்துவைத்துப் பேசிய கௌரவ பாதுகாப்புப் பிரதியமைச்சர், " புலிகள் சமாதானத் தீர்வுக்கு வரும் வரை யுத்தத்தை நடாத்துவோம் " என்று கூறினார். அமைச்சின் பார்வையில் சமாதானத் தீர்வு புலிகளுக்குரியதாகத் தென்படுவதாகத் தெரிகின்றது.தமிழ்பேசும் மக்களுக்குத்தான் சமாதானத் தீர்வு உரியது ; புலிகளுக்கல்ல. எமது கட்சி தொடர்ந்தும் புலிகளின் பிரச்சினையை வேறாகவும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை வேறாகவும் நோக்கவேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றது. புலிகள் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர். இதை கௌரவ பாதுகாப்புப் பிரதி அமைச்சரவர்கள்புரிந்து கொள்வாரென நினைக்கின்றேன். உங்கள் பார்வையில் புலிகள் விட்ட தவறுக்குத் தமிழ் பேசும் மக்கள் எப்படிப் பொறுப்பாக முடியுமென்பதை இச்சபையில் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுவைக்க விரும்புகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, யாழ் குடாநாட்டிலிருந்து வெளியேறிய மக்கள் இன்று வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளில் அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள். இந்த மக்களின் உடனடித் தேவை மருத்துவம், எரிபொருள், இருப்பிடம் ஆகியவையேயாகும் இவையனைத்தும் உடனடியாக அம்மக்களைச் சென்றடைய வேண்டும். இதற்கான பொறுப்பு அரசாங்கத்தையே சாரும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, தம்முயிரைப் பாதுகாக்க அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களுக்கு ஓடும் மக்களுக்குத்தான் இந்த நிலைமையென்றால், அரசின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்கின்ற மக்களின் நிலைமையும் அதே தரத்திலேயே காணப்படுகின்றது. கடந்த 7 ஆம் தேதிய அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கௌரவ அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா அவர்கள், "அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழுகின்ற சகல மக்களுக்கும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன" என்று கூறினார். ஆனால், கௌரவ பிரதிச் சபாநாயகர் அவவர்களே, யாழ் மாவட்டத்தில்,


படிப்பகம்

www.padippakam.com

1991 ஆம் ஆண்டு "வலம்புரி" இராணுவ நடவடிக்கை மூலம் விடுவிக்கப்பட்ட பகுதியான யாழ் தீவகப் பகுதியில் அம்மக்களோடு வாழ்கின்ற ஒருவனென்ற ரீதியில் அப்பகுதி தொடர்பான தகவலை இச்சபையில் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். அப்பகுதிகள் மீட்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகி விட்டது. ஆனால், இன்னமும் அடிப்படை வசதிகள் பல பூர்த்தி செய்யப்படாத நிலையில் அப்பகுதி மக்கள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். அப்பிரதேசம் பல தீவுகளைக் கொண்டது. தீவுகளுக்கிடையிலான கடல் போக்குவரத்துக்கு இது வரையில் அரச படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. முன்னைய அரசாங்கத்தால் மக்களின் பயணத்திற்கென சேவையில் ஈடுபடுத்தப்பட்ட "குமுதினி" படகு பழுதடைந்த நிலையில் கரையொதுங்கி, கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது என்பதை இச்சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அப்பகுதி மக்கள் யாழ் பெருநிலப்பரப்போடு எவ்வித தொடர்பும் அற்ற நிலையில் திருகோணமலையோடு தொடர்புகொள்ள வேண்டிய நிலையில் இருந்தார்கள். கடந்த அரசாங்கம் தீவுப்பகுதிக்கும் திருகோணமலைக்கும் கப்பல் போக்குவரத்துச் சேவையை ஒழுங்கு செய்து கொடுத்திருந்தது. ஆனால், கடந்த ஆகஸ்ட் 28 ஆந் தேதி 'ஈரிஸ் மோனா' கப்பல் புலிகளால் கடத்தப்பட்டதுடன் இச் சேவையும் அற்றுப் போய்விட்டது. இதனால், பல்வேறு தேவைகளுக்காக திருகோணமலை, கொழும்பு போன்ற இடங்களுக்கு வந்த பெருமளவு தீவுப்பகுதி மக்கள், தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். புலிகளால் கப்பல் கடத்தப்பட்டதைக் கண்டிக்கிறோம். அதேவேளை புலிகளின் செயல்களினால் மக்கள் பாதிக்கப்படுவதை அல்லது மக்களின் வசதிகள் சீர்குலைக்கப்படுவதை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்படிச் செய்தால், புலிகளின் செயல்களுககு அரசாங்கம் அடிபணிந்ததாகவே அமையும். எனவே, அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுத்து, திருமலை — தீவகப் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, தீவுப்பகுதியில் அரசு வழங்கும் நிவாரணப் பொருள்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் வாங்க முடியாத நிலை நிலவுகின்றது. எனவே, உடனடியாக ஊர்காவற்றுறையில் 'சதோச' விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து, தீவுப்பகுதி மக்களின் அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்கும்படி கௌரவ அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

யாழ் குடாநாட்டில் வைத்திய வசதிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் மீட்கப்பட்ட தீவுப்பகுதி தொடர்ந்தும் சகல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. கல்வி, வைத்தியம், மீன்பிடி போன்ற ஏனைய துறைகளிலும் தீவுப்பகுதி மிகவும் பின் தங்கியுள்ளது. தீவகத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலை தொடர்பாக இச்சபையின் கவனத்திற்கு நான் சில தகவல்களைக் கொண்டு வருகின்றேன். இத்தீவுப் பகுதியில் மூன்று மாவட்ட வைத்தியசாலைகளும், மூன்று சுற்றியல்கூறு வைத்தியசாலைகளுமுள்ளன. இம்மூன்று மாவட்ட வைத்தியசாலைகளிலும், மற்றும் சுற்றியல்கூறு வைத்தியசாலைகளிலும் முக்கியமான உத்தியோகத்தர்கள் இல்லை.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, தீவுப்பகுதியில் பெருந்தொகையான முதியவர்கள் உள்ளனர். நோயாளிகளான அவர்கள் வைத்திய வசதியின்றி மரணத்தை எதிர்கொண்டு வருகின்றனர். சிறு குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதற்குக்கூட திருகோணமலை செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் அப்பகுதி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தீவு முழுவதற்குமான ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி ஒருவரே உள்ளார். இந்த ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் தாதிகளோ, ஏனைய வைத்திய ஊழியர்களோ இல்லை. சாதாரண ஊழியர்களைக் கொண்டே இவ்வைத்தியசாலை இயங்கி வருகின்றது. நெடுந்தீவு, காரைநகர் வைத்தியசாலைகள், ஓய்வு பெற்ற ஆர். எம். பி. வைத்திய அதிகாரிகளைக் கொண்டே இயங்குகின்றன. அனலைதீவு சுற்றியல்கூறு வைத்தியசாலை மருத்துவதாதி ஒருவரினாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. இந்நிலையானது துன்பந்தருவதாய் உள்ளது. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசமும் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதானது, விடுவிக்கப்படும் பகுதிகளில் எதிர்காலம் குறித்து அச்சப்படும் நிலையை உருவாக்குவதாயுள்ளது. இப்படியான நிலை தொடருமானால், தமிழ் பேசும் மக்களுக்கு அரசின்மேல் எப்படி நம்பிக்கை ஏற்படப்போகின்றது !

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, நாட்டின் தென்பகுதியில் குழந்தைகளுக்குப் 'போலியோ' தடுப்பூசி போடுவதைப் பெருவிழாவாகக் கொண்டாடும் இவ்வேளையில், யாழ் தீவுப்பகுதிக் குழந்தைகளுக்கும் 'போலியோ' தடுப்பூசி போடுவதற்கு அங்கு நிலவும் மருந்து, ஊழியர் பற்றாக்குறை போன்றவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி கௌரவ அமைச்சர் பௌஸி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தீவுப்பகுதியின் பிரதான தொழில் மீன்பிடித்தலாகும். இப்பொழுது அங்கு மீன்பிடித் தொழில் முற்றாகப் பாதிப்படைந்திருக்கின்றது. அம்மக்கள் கடந்த பத்து வருடமாகத் தமது தொழிலை இழந்து வறுமைப்பட்டுள்ளனர். ஆகவே, அவர்களுக்கான நிவாரணத் திட்டத்தில் விசேட கவனம் செலுத்தி, நிவாரணம் வழங்க வேண்டுமென கௌரவ கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, 'சமுர்த்தி' திட்டத்தின் மூலம் நாட்டின் தென்பகுதியில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கியுள்ளீர்கள். ஆனால், வடக்கு — கிழக்குப் பகுதிகளில் என்ன அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளீர்கள் என்பதைக் கேட்டு அறிய விரும்புகின்றேன். ஏன்? விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில்கூட அதே நிலைதான் காணப்படுகின்றது.

இவ்வரவு செலவுத் திட்டமானது வடக்கு — கிழக்கிற்கு வெளியே வாழும் மக்களின் மீது பாரத்தைச் சுமத்தாத வரவு செலவுத் திட்டமாகும். அதற்காக நான் கௌரவ நிதிப் பிரதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். ஆனால், இந்த வரவு செலவுத் திட்டத்தினால் வடக்கு — கிழக்கில் வாழும் மக்கள் எந்தவிதப் பிரயோனசமும் அடையப் போவதில்லை என்பதையும் இச்சபைக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். வடக்கிற்கு உணவு, மருந்து வகைகள் அனுப்பும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, அம்மக்களின் துயர் துடைக்க நடவடிக்கை எடுப்பதற்கு அனைவரும் முன்வருமாறு நான் இச்சபையின் ஊடாகக் கோரிக்கை விடுகின்றேன். அத்துடன், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் இன்னல்களைத் தீர்க்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இதனூடாகத் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும் என்று இச்சபைக்குக் கூறிக் கொண்டு எனது பேச்சை முடிக்கின்றேன். அனைவருக்கும் நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். சந்திரகுமார் அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, 16, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

එම්. චන්ද්‍රකුමාර් මහතා
(திரு. எம். சந்திரகுமார்)
(Mr. M. Chandrakumar)

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, வடக்கில் தமிழ் மக்களின் நிலைமை மிகவும் மோசமடைந்துகொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், அழகும் வனப்பும் வளமும் நிறைந்த யாழ் மண் அவலமும், இரத்தமும் கண்ணீரும் நிறைந்ததாக மாறியிருக்கும் இத்தருணத்தில், நான் இச்சபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்ற வந்துள்ளேன். வடக்கு — கிழக்கைத் தவிர்த்து, நாடு பூராவும் தற்போது பல்வேறு தரப்பிலும் இந்த வரவு செலவுத் திட்டத்தின் சாதக, பாதகங்கள் குறித்துக் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வடக்கு — கிழக்கு மக்கள், அதிலும் குறிப்பாக குடாநாட்டு மக்கள் இவ்வரவு செலவுத் திட்டம் குறித்து எவ்விதத்திலும் அக்கறை செலுத்தும் நிலையில் இல்லை. இந்த வரவு செலவுத் திட்டத்தின் சாதகமான அம்சங்கள் அவர்களைச் சென்றடைவதென்பது தற்போதைய நிலையில் சாத்தியமில்லாதவொன்று.

வரலாற்றில் முதல் தடவையாக முழுக் குடாநாட்டு மக்களுமே யாழ் குடாநாட்டை விட்டு உடுத்த உடையுடன், கால்நடையாக, மிகுந்த கஷ்டங்களின் மத்தியில் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். அகதிகளான மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களாலோ, அரச அதிகாரிகளாலோ முழுமையாக உதவமுடியாத நிலை தொடர்ந்தும் அங்கு காணப்படுகின்றது. அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உணவுப் பொருள்கள் போதியளவு அங்கு போய்ச் சேரவில்லை. இதனால் நிலைமை மிகவும் மோசமடைகின்றது. மிக விரைவில் சோமாலியா, பொஸ்னியா, பயாப்ரா போன்று அங்கும் பட்டினிச் சாவுகள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

"பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தாற்போல" இடம் பெயர்ந்த மக்களை மழையும் கடுங்குளிரும் நோய்களும் பற்றாக்குறைகளும் வாட்டி வதைக்கின்றன. அரை வயிற்றுணவுடன் படுக்கைக்குச் சென்றால்,



படிப்பகம்

www.padippakam.com

உறங்கக்கூட இடமில்லாத துர்ப்பாக்கிய நிலையில் குடாநாட்டு மக்கள் உள்ளனர். மத்தளத்திற்கு இரண்டு பக்கமும்தான் அடி விழும் ! ஆனால், தமிழ் மக்கள் — மனிதர்கள் — இயற்கை, கடல், ஆகாயம், தரை எனப் பல்வேறு பக்கங்களாலும் அடி வாங்கிக்கொண்டிருக்கின்றனர்.

கல்வியில் மிகவும் முன்னேறிய ஒரு சமூகம், கல்வியைப் பெரும் சொத்தாகப் பேணிவந்த ஒரு சமூகம், இன்று கல்வியில் பல வருடங்கள் பின்தங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களும் மாணவர்களும் அகதிகளாக ஓடிக்கொண்டிருக்கின்றனர். பாடசாலைகள் அகதி முகாம்களாகவும் தடைமுகாம்களாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன. பல நூறு கல்விமான்களை உருவாக்கிய கல்விக்கூடங்கள் இன்று சிதைந்து போயுள்ளன ; சிதைக்கப்படுகின்றன. வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு பல்கலைக்கழகமான யாழ். பல்கலைக்கழகம் இன்று பலத்த " ஷெல் " அடிக்குள் சிக்குண்டு, மூடப்பட்டுத் தென்மராட்சியில் ஒரு காலையும் கிளிநொச்சியில் மறு காலையும் வைத்துக்கொண்டு அரைகுறையாக இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. வெறும் அலுவலக விடயங்களே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளன. பெறுமதிவாய்ந்த கம்பியூட்டர் சாதனங்கள், தஸ்தாவேஜுகள், கிடைத்தற்குரிய புத்தகங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் எல்லாம் அப்படியே விடப்பட்ட நிலையில் உள்ளன. எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் ஆண்டு ஐந்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையும் அதையடுத்து க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையும் இலங்கை பூராவும் நடைபெறவுள்ளன. ஆனால், தற்போது வடக்கில் பெரும்பாலான இடங்களில் இவ்விரண்டு பரீட்சைகளையும் நடாத்த முடியாத நிலைமையே காணப்படுகின்றது. பரீட்சை நடைபெற்றாலும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மனோநிலையில் இல்லை.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, யாழ் மாவட்டத்தில் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் மொத்தமாக 2,06,000 குடும்பங்கள் வசித்து வந்தன. இதில், ஏற்கெனவே இராணுவ நடவடிக்கைகளின் காரணமாகப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட தீவுப்பகுதி உட்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து சுமார் 85,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்து, யாழ்ப்பாணத்தின் ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்த பல்வேறு நலன்புரி நிலையங்களில் அகதிகளாக இருந்தன. தற்போதைய ' ரிவிரச ' இராணுவ நடவடிக்கைக்குப் பின்பு இந்த 85,000 குடும்பங்களும் இரண்டாவது தடவையாக மீண்டும் இடம்பெயர்ந்துள்ளதுடன், யாழ்ப்பாணத்தின் ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, நல்லூர், கோப்பாய், உடுவில் ஆகிய பிரிவுகளிலிருந்து வெளியேறியுள்ள சுமார் 69,250 குடும்பங்களுமாக, மொத்தம் 1,54,250 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இதில் 25,000 குடும்பங்களைச் சேர்ந்தோர் வட பகுதியின் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற பிற மாவட்டங்களுக்கும் மீதமானோர் இன்று சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் சென்று அகதிகளாகத் தங்கியுள்ளனர். ஏற்கெனவே மேற்படி நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் 51,750 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதைவிட பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்திற்குள் இருந்தாலும், அது யாழ் பெருநிலப்பரப்புடன் இணைந்திருப்பதால் உணவு விநியோக இலகுக்காக யாழ் மாவட்ட நிர்வாகத்திற்குள்ளேயே உட்படுத்தப்பட்டுள்ளது. இங்கும் இருபத்தையாயிரம் மக்கள் வசிக்கின்றனர். விடுவிக்கப்படாத மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள சுமார் 174 நலன்புரி நிலையங்களில் கிட்டத்தட்ட 28,000 குடும்பங்கள் தங்கியுள்ளன. இடம்பெயர்ந்த மிகுதிக் குடும்பங்கள் தங்குவதற்கு அங்கு வசதியில்லாமையால் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் சாலையோரங்களிலும் மரநிழல்களிலும் கொட்டும் மழையிலும் தவித்து நிற்கிறார்கள். யுத்தம் நடைபெறாத மேற்படி பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீது ஏவப்படும் ' மோட்டார் ஷெல் ' தாக்குதல்கள், அவர்களது அவலங்களை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளிலிருந்தும் படைகளால் கைப்பற்றப்படும் என்று கருதப்படும் பகுதிகளிலிருந்தும் மக்கள் முற்று முழுதாக இடம்பெயர்ந்துள்ள நிலையில் — ஐ. சி. ஆர். சி. மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள், அரசாங்க அலுவலகங்கள், யாழ் பிரதான வைத்தியசாலை போன்ற அனைத்தும் இடம்பெயர்ந்துள்ள நிலையில் — புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை மீட்பதாகச் சொல்லப்படும் இந்த யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் அனைத்து வழிகளும் அடைக்கப்பட்ட நிலையில் — மக்கள் இல்லாத யாழ் மண்ணில் சிங்கக் கொடிகளை மட்டும் எடுத்துச் சென்று நாட்டும் வேலைகளைச் செய்வதன் ஊடாக, எந்தத் தமிழ் மகனதும் மனத்தை இவ்வரசாங்கத்தால் வென்றெடுக்க முடியாது என்பதை நான் எதார்த்தமாக இச்சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் முன்வைத்த தீர்வு யோசனையைச் சில திருத்தங்களுடன் ஈ.பீ.டீ.பீ. இனராகிய நாமும் ஆதரித்த அதேவேளையில், அனைத்துத் தமிழ் அரசியல் சக்திகளும் தீர்வு யோசனை தொடர்பாகத் தங்களது முழு ஆதரவினையும் வழங்கியிருந்தன. தென்னிலங்கையிலுள்ள இந்த நாட்டில் உன்னத சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற உண்மையான அவா கொண்ட மக்கள் தங்களது முழு ஆதரவையும் இத் தீர்வுத் திட்ட யோசனைக்குத் தெரிவித்து வந்தனர். தீர்வு யோசனையை முன்வைத்துவிட்டு, அத்தீர்வு யோசனையைத் திட்டமாக்கும் நடவடிக்கையில் இறங்காது இன்று யுத்தத்தில் மட்டும் காட்டும் தீவிர முனைப்பானது நாளை யாழ்நகரைக் கைப்பற்றிய பின் தீர்வு யோசனை குறித்து தெற்கில் இனவாதிகள் மூலமாக ஏற்படும் தீவிர எதிர்ப்பைக் கண்டு அரசு பின்வாங்கிவிடுமோ என்ற நியாயமான அச்சத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளுக்கு அரசியல் தீர்வு காணாமல், யுத்தத்தின் மூலம் தீர்வு காணலாம் என நம்புவது நியாயமாகாது என்பதை இச்சபையில் பல தடவைகள் நாம் வலியுறுத்தியுள்ளோம். அரசின் தீர்வு யோசனை தொடர்பாக தெற்கின் இன்றைய நிலைகூட ஆரோக்கியமானதாக இல்லை. தீர்வு யோசனைகளை முன்வைத்தவுடன் அத்தீர்வு யோசனைகளுக்கு ஆதரவாகத் துணிந்து உறுதியுடன் எழுப்பப்பட்ட குரல்கள்கூட இன்று மௌனித்து விட்டன. அதையும் மீறி தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென உறுதியுடன் எழுப்பப்படும் ஓரிரு குரல்கள்கூட இன்று நசுக்கப்படுகின்றன. 'யுக்திய' பத்திரிகை ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய தென்னிலங்கையில் தாக்கப்பட்டமையைச் சமாதானத்திற்கு விழுந்த அடியாக நாம் கொள்ளலாம்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, நான் ஏற்கெனவே இச்சபையில் கூறியது போல் இந்த வரவு செலவுத் திட்டத்தின் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் முற்றுமுழுதாகக் கடந்த நிலையிலேயே வடக்கு — கிழக்கு தமிழ் மக்கள் இன்று உள்ளனர். பல்வேறு துறைகளினூடாகவும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். தொழில் வாய்ப்பு, 'சமுர்த்தி', விவசாயத்துறை, கூட்டுறவுத்துறை, கைத்தொழிற்றுறை, நிதித்துறைப் புனரமைப்பு, மனித வள அபிவிருத்தி, கல்வி, மீன்பிடி போன்ற துறைகளிலும் எமது மக்களின் வாய்ப்புக்கள் கணிசமான அளவு மறுக்கப்பட்டிருக்கின்றன.

தொழில் வாய்ப்பைப் பொறுத்தவரையில், 16 வயதுக்கு மேற்பட்ட, தொழிலில் ஈடுபடக்கூடியவர்களின் தொகை 6.48 மில்லியன் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 5.76 மில்லியன் நபர்கள் அதாவது, 89 சதவீதத்தினர் ஏதோ ஒரு வகையில் தொழிலில் ஈடுபடுகின்றனர் என அமைச்சரின் அறிக்கை தெரிவிக்கின்றது. ஆனால், அமைச்சரின் கணிப்பீட்டின்படி வடக்கு — கிழக்கில் உள்ள 2.5மில்லியன் சனத் தொகையில் 16 வயதுக்கு மேற்பட்ட, வேலையில் ஈடுபடக்கூடிய ஆற்றல் கொண்டோர் சுமார் பத்து இலட்சம் நபர்கள் என நாம் கொள்ளலாம். இவர்களில் எத்தனை சத வீதமானோர் இன்று வடக்கு — கிழக்கில் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர் என அமைச்சர் கணிப்பிடுவாரேயானால் அவர் ஆச்சரியமடைந்து போவார். வடக்கு — கிழக்கில் கூடுதலான தொழிலின்மை பிரச்சினை நிலவுகின்றது. நிறையப் படித்த இளைஞர்களும் யுவதிகளும் தொழில்நுட்ப ரீதியாக ஆற்றல் படைத்தோரும் இன்று வேலையற்றிருக்கின்றனர்.

அரசாங்கம் கடந்த தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளில் ' சமுர்த்தி ' திட்டமும் ஒன்றாகும். ஆனால், இச் ' சமுர்த்தி 'த் திட்டம் வடக்கு — கிழக்கில் அமுலாக்கப்படவில்லை. அபிருத்தி முதலீட்டுத் திட்டங்கள் வடக்கு — கிழக்கில் இல்லாத நிலையிலும், மற்றும் சுய தொழில் வாய்ப்புக்கள், அனைத்துத் தொழில் முயற்சிகளுக்குமான சந்தை வாய்ப்புக்கள் இல்லாத நிலையிலும் இவ்வரசாங்கம் கட்டாயமாக வடக்கு — கிழக்கிற்கே முதலில் இந்தச் ' சமுர்த்தி 'த் திட்டத்தை அமுல்படுத்தியிருக்க வேண்டும். இச் ' சமுர்த்தி 'த் திட்டத்தினூடாக வடக்கு — கிழக்கிற்கு வெளியே 1110 பட்டதாரிகளுக்கும் ' சமுர்த்தி ' முன்னோடிகள் அலுவலர்களாக 29,568 பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையானது வடக்கு — கிழக்கில் வாழும் வேலையற்ற இளைஞர் — யுவதிகள் மத்தியில், இவ்வரசாங்கத்தின் மீதான அதிருப்தியை வளர்த்து விடும் என்பதை இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பில் நாம் அதிகம் நம்பிக்கை வைத்து, அதனூடாக எமது வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவு தீர்க்கலாம் எனத் திருப்திப்படும் அதேவேளை, எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குத் தொழில்வாய்ப்புக்களுக்காகப் புலம்பெயரும் நம்நாட்டு மூளைசாலிகளின் வெளியேற்றத்தையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இந்த வெளியேற்றமானது இன்று தமிழ் மக்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது. உதாரணமாக, இந்த நாட்டிற்குப் பல வைத்திய நிபுணர்களைத் தந்த யாழ் மண், இன்று ஒரேயொரு வைத்திய நிபுணரை வைத்துக்கொண்டு, மரணத்திற்கும் வாழ்வுக்கும் இடையிலான போராட்டத்தில் மக்களைக் காக்க வைத்திய நிபுணர்கள் இல்லாது தடுமாறி நிற்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, விவசாயத் துறையில் அதிக உற்பத்தியைப் பெறுவதற்காகவும், வறிய விவசாயிகளின் வாழ்வுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காகவும் 1994/95 இடையாண்டில் 53,690 விவசாயிகளுக்கு விவசாயக் கடனாக 77 மில்லியன் ரூபா முழுமையான கடனாக வழங்கப்பட்டுள்ளது எனவும், 11,820 விவசாயிகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட கடனாக 99 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதெனவும் தரவுகள் காட்டுகின்றன. ஆனால், வடக்கு — கிழக்கிலுள்ள தமிழ்ப்பேசும் விவசாயிகள் எத்தனை பேருக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது? இதில் குறைந்தபட்சம் இனவிகிதாசாரமாவது பேணப்பட்டிருக்கின்றதா எனக் கேட்க விரும்புகின்றேன். இந்த நாட்டின் பாரம்பரிய விவசாயப் பிரதேசங்கள் வடக்கு — கிழக்கு என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஒரு காலத்தில் இந்த நாட்டு அரிசித் தேவையின் பெரும் பகுதியை வடக்கு — கிழக்கு விவசாயிகளே பூர்த்தி செய்தார்கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. விவசாய உபகரணங்களுக்கான வரி 35 சத வீதத்தில் இருந்து 10 சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதை நாம் வரவேற்கின்றோம். அதேநேரத்தில், வடக்கு — கிழக்கிலுள்ள விவசாயிகளை நாம் மறந்துவிடக் கூடாது. அங்கு விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. இலங்கையின் விவசாய மொத்த உற்பத்தியில் 14.6 சதவீதமானது, வடக்கு — கிழக்கில் இருந்து கிடைப்பதாகும். வடக்கு — கிழக்கு விவசாயிகள் பாதிக்கப்படுவதானது, இந்த நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, நிதித்துறைச் சீரமைப்புக்கள் குறித்து அமைச்சரின் கருத்துக்கள் வரவேற்கக்கூடியதாகவுள்ளன. எதிர்காலத்தில் வளர்ச்சியடைந்த நிதி நிறுவனங்களுடன் போட்டி போடக்கூடிய நிலையில் எமது நிதித்துறை நிறுவனங்களை நாம் புனரமைக்க வேண்டியுள்ளது. ஆனால், வடக்கு — கிழக்கிலுள்ள அரச வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு உச்ச நன்மைகளை வழங்குவதில் பின்னிற்கின்றன. ஆகக் குறைந்த சேவைகளை வழங்கும் நிலையில்கூட வடபகுதியில் வங்கிகள் இல்லை. வடக்கு — கிழக்கில் நிலவும் இன்றைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு வெளிநாட்டு வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தங்களது சேவைகளை வடக்கு — கிழக்கிற்கு விஸ்தரிக்கத் தயங்கும் நிலையில், அம்மக்களுக்கு உச்சச் சேவையை வழங்க அரச வங்கிகள் பின்னிற்கக் கூடாது.

கல்வியின் தரத்தையும் வசதிகளையும் மேம்படுத்துவதற்காக 16,858 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்த உள்நாட்டுற்பத்தியில் 2.5 சதவீதமாகும். ஒரு தேசத்தின் கல்வி நிலைமைதான் அந்த நாட்டின் அனைத்து வளர்ச்சிக்கும் ஆணிவேரானது என்பதை நாம் அறிவோம். ஆனால், இதே நேரத்தில் வடக்கு — கிழக்கில் கல்வியின் தரத்தையும் வசதிகளையும் மேம்படுத்துவதற்கு என்னென்ன திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போகின்றீர்கள் எனக் கேட்க விரும்புகின்றேன். இவ்வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக கல்விக்கான அதிக நிதி ஒதுக்கீடானது, ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பையே பிரதானமாகக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஆசிரியர்களின் சம்பளங்களைக் கூட வடக்கிற்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நாட்டின் கல்வி அபிவிருத்தியில்கூட, அரசியல் ரீதியான செல்வாக்கும், இன ரீதியான பார்வையும் இருப்பது வருந்தத்தக்கது. இந்த நாட்டின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுடன் ஒப்பிடும் போது தமிழ்ப் பேசும் மக்களின் நிலை இன்று மிகவும் பரிதாபத்திற்குரியது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் அனைத்து அடிப்படை உரிமைகளையும் வசதிகளையும் வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால், கல்வித் துறையில் வடபகுதி மக்கள் மேம்பாடடைவதற்கான அரசின் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவது யுத்தத்தைக் காரணங்காட்டிப் புறக்கணிக்கப்படுகின்றது. ஆகவே, அரசாங்கம் பதவிக்கு வர, தமிழ் மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய உயரிய கொள்கைகளைக் கருத்திக்கொண்டு பாரபட்சமற்ற முறையில் செயற்பட வேண்டும் என்று இச்சபையில் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நாட்டில் உயர் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக மூன்று புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதை நாம் வரவேற்கின்றோம். அதனால் மேலும் 15,000 மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்கள் கடந்த 10 ஆண்டுகளாக எவ்வித அபிவிருத்தியும் இன்றிப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. யாழ் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின் பல ஆண்டுகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட றுகுணு பல்கலைக்கழகம் இன்று அடைந்திருக்கும் வளர்ச்சியானது, தமிழ் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பில் எந்தளவு புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கு நல்லதொரு உதாரணமாகும். யாழ் பல்கலைக்கழகமானது இந்த நாட்டிற்குப் பல புத்திஜீவிகளைத் தந்திருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஆனால் இன்று இப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டுள்ள நிலைமையும், அப் பல்கலைக்கழக இடம்பெயர்வும் மிகவும் துரதிஷ்டவசமானது ; வேதனைக்குரியது.

வவுனியா மாவட்டத்திலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியும் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியும், திருமலையில் உள்ள இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இங்கு பல்கலைக்கழகங்கள் வெறும் முகப்புப் பெயர்ப் பலகையுடனும் எவ்வித விரிவுரைக் கூடங்களோ விடுதி வசதிகளோ இல்லாத கூடங்களாகவே இருக்கின்றன. இந்நிலைமைகளையிட்டு இச்சபையில் எமது ஆட்சேபனையை வெளிப்படுத்துகிறோம்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, சுகாதார சேவை மேம்பாட்டிற்காகப் பல நவீன மயப்படுத்தப்பட்ட சேவைகள் அறிமுகப்படுத்தப்படப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முற்று முழுதாக யுத்த சூனியப் பிரதேசமாகவுள்ள வடபகுதியில் இந்நவீன மயப்படுத்தப்படல் திட்டங்கள் கொண்டு செல்லப்படுமா ? யாழ் குடாநாட்டில் இன்று ' பனடோல் ', ' டிஸ்பிறின் ' கூட பெறமுடியாத நிலைமை இருக்கின்றது. பல இலட்சத்திற்கும் அதிகமாக இடம் பெயர்ந்த நிலையிலுள்ள யாழ் குடாநாட்டு மக்கள், எந்த அடிப்படைச் சுகாதார வசதிகளுமின்றி இன்று அல்லல்படுகின்றனர். சுகாதார அபிவிருத்தி மேம்பாடுகள் யுத்தத்திற்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்குக் கிடைக்க வழி செய்யப்படல் வேண்டும். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக வடக்கின் சுகாதார சேவை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் மருத்துவ சேவை வடபகுதி மக்களுக்கு இன்று அறவே கிடைக்காத நிலையில், வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் உதவி குறிப்பாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், எம். எஸ். எப். மற்றும் பல அமைப்புக்களின் மனிதாபிமான உதவிகள் பாராட்டப்பட வேண்டியவை. வட பகுதியில் எம். எஸ். எப்., ஐ. சீ. ஆர். சி. போன்றவை சுதந்திரமாகச் செயற்பட அரசு அனுமதிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபன வைத்தியர்களும் எம். எஸ். எப். நிறுவன வைத்தியர்களும் தேவையான அளவு வடக்கே சேவையாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும்.

உலக அபிவிருத்தி நிறுவனத்தால் வரையறுக்கப்பட்ட "அடிப்படைச் சுகாதார, போசாக்கு" இன்றி யாழ் மக்கள் இருக்கின்றார்கள் என்பதை அரசு கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். 35 மாவட்ட வைத்திய சாலைகள் தரமுயர்த்தப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், வடக்கு — கிழக்கில் உள்ள மாவட்ட வைத்திய சாலைகள் பல, இருக்கும் தரத்தையும் இழக்கும் நிலையிலேயே உள்ளன என்பதுதான்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, மீன்பிடி உற்பத்தி வடக்கு — கிழக்கில் 47 சதவீதமாகவுள்ளது. இலங்கையின் மீன்பிடி உற்பத்தியில் இது கணிசமான பங்களிப்பாகும். கடந்த யுத்த நிறுத்த காலத்தில் நாட்டின் மீன்பிடித் தொழில் அதிகரித்திருந்ததாக அமைச்சரின் அறிக்கையே தெரிவிக்கின்றது. நாட்டுக்கு வருமானத்தைத் தரும் மீன்பிடித் தொழிலை வடக்கு — கிழக்கு யுத்தத்தைக் காரணம் காட்டி நாம் இழக்க முடியாது. வடக்கு — கிழக்கில் மீன்பிடித் துறையில் ஈடுபடுவோரின் நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். விவசாயத் துறையைப்போல் மீன்பிடித்துறையும் வடக்கு — கிழக்கில் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மீனவர்கள் தவிர்ந்த ஏனைய வடக்கு — கிழக்கு மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கான நிவாரணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. வங்கிக் கடன்கள் வழங்குவதிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது. வடக்கு — கிழக்கு மீனவர்களின் அவலங்கள் குறித்து எமது கட்சி பல தடவைகள் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது. வடக்கு — கிழக்கு மீனவர்களின் வாழ்வில் சாதகமான நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை இவ்வரசாங்கத்திடமிருந்து நாம் எதிர்பார்க்கிறோம்.

சாதாரண மக்களின் மேலுள்ள வாழ்க்கைச் சுமைகளைக் குறைப்பதற்காக இந்த அரசு பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் இவ்வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார். அதன் வழியில் ஏழை மக்கள் மீது வரிச்சுமையைச் சுமத்தக்கூடாது என்பதற்காக இரண்டு விதமான நடவடிக்கைகளை அமைச்சு எடுத்துள்ளது. ஒன்று, புதிய வரிகளை விதிக்காது விடல். இரண்டாவது, மிக அத்தியவசியப் பொருட்களுக்கு ஏற்கெனவே இருந்த வரியைக் குறைத்தல் அல்லது முற்றாக நீக்குதல். ஒரு திறந்த பொருளாதார அமைப்பின் ஊடாக வியாபாரத்தில் ஈடுபடுவோரின் பிரதான நோக்கம் இலாபமடைவதே. இவ்வுண்மையை நாம் மறந்துவிடலாகாது. ஆனால் யதார்த்த நிலையில் பார்ப்போமேயானால் வரவு செலவுத் திட்ட அறிக்கை வாசிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே சிகரெட்டின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. ஆனால், வரி குறைக்கப்பட்ட அல்லது வரி முற்றாக விலக்களிக்கப்பட்ட பொருள்களின் விலைகள் இதுவரையில் குறைக்கப்படவில்லை. எனவே, அரசாங்கத்தின் நோக்கத்தை அடையவேண்டுமானால் இந்தச் சந்தை நிலைமையை இல்லாதொழிப்பதற்குச் சிறந்த நிர்வாக முறையை ஏற்படுத்துவது அவசியமாகும்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, ' பியர் ' விலையைக் குறைத்தமைக்குப் பதிலாக, குழந்தைகளுக்கான பால் மாவின் விலையைக் குறைத்திருந்தால், நாடெங்கிலும் வாழும் சகலருமே நன்மையடைந்திருப்பார்கள். ' பியர் ' விலைக் குறைப்பால் நகர்ப்புறங்களில் வாழும் ஒரு சில பணம் படைத்தவர்களே நன்மையடைகின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கு யுத்தத்தைக் காரணங்காட்டி, " அப்பகுதி முழுவதிலும் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாது " என்று பொதுவான முடிவினைக் கொழும்பிலுள்ள அமைச்சு அதிகாரிகள் எடுக்கின்றனர். வடக்கு — கிழக்கிலிருந்து அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் அனுப்பப்பட்டால், அத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் மேசைகளிலும் லாச்சிகளிலும் தூங்குகின்றன. ஏற்கெனவே வடக்கு — கிழக்குப் பகுதிகள் இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் பல வருடங்கள் பின்நிற்கின்றன. எனவே, இந்நிலைமையை மாற்ற அரசு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, மனித உரிமை மீறல்கள் விடயம் மற்றும் இனப்பிரச்சிக்கான தீர்வு போன்றவற்றில் மேம்பாடு காணப்பட்டதால் சர்வதேச உதவிகள் இலங்கைக்குச் சாதகமாக அமைந்திருப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், மனித உரிமைகள் பேணப்படுவதாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருப்பதானது, தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரை திருப்தி காணக்கூடியதாக இல்லை. எம்மைப் பொறுத்தவரை இவ்விடயங்கள் சர்வதேச சமூகத்திற்கான கவர்ச்சிகரமான பிரச்சாரமாகவே கொள்ளப்படுகின்றன. எனவே, நடைமுறையில் தமிழ் பேசும் மக்களின் மனித உரிமைகளைப் பேணுவதும் அவர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவதுமே சர்வதேச சமூகத்தில் எமது நாட்டின் மதிப்பை உயர்த்த வழிகோலுமென்பதை இச்சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான போராட்டமென்பது வெறுமனே அதிகாரங்களைப் பங்குபோட்டுக் கொள்வதற்கான ஒன்றல்ல. தமது தொடர்ச்சியான பாரம்பரிய பிரதேசங்கள், அப்பிரதேசங்களின் பாதுகாப்பு, தமது மொழி, கலாசார முன்னேற்றத்திற்கான தங்குதடையற்ற வாய்ப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் தான் தமிழ்ப் பேசும் மக்கள் தமது போராட்டத்தினை நடாத்தி வருகின்றார்கள். அந்த அபிலாசைகளுக்கான நேர்மையான தீர்வொன்று எவ்விதமான பூசிமெழுகலுமில்லாமல் முன்வைக்கப்படல் வேண்டும். தமிழ் பேசும் மக்கள் எந்த இனத்தினுடைய உரிமைகளிலும் பங்கு கேட்கவில்லை. தமது தனித்துவத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதற்கான கோரிக்கைகளையே அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். இந்தக் கோரிகைகளுள் முக்கியமானது, வடக்கு — கிழக்கு ஒரே அரசியல் நிர்வாக அலகாகத் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென்பதாகும். இதனையே ஈ. பீ. டி. பீ. தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, கௌரவ அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அவர்களின் உரை முழுவதையும் உற்று நோக்குகின்ற போது, ஒரு விடயம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை இழையோடியிருப்பதைப் பார்க்கின்றோம். அதுதான் வடக்கு — கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினையாகும். அதனை முடிவுக்குக் கொண்டுவந்து தீர்க்காவிட்டால் நாடே பாதிப்படையுமென்ற உண்மையைக் கருத்திற் கொண்டு நாம் அனைவரும் செயற்படமுன்வர வேண்டும். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. நடராஜா அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, 17, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

[illegible]
(திரு. ஏ. நடராஜா)
(Mr. A. Nadarajah)

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, நாட்டின் நிகழ்ச்சிநிரலில் இன்று யுத்தம் முதலிடத்தைப் பிடித்திருக்கின்றது ; வரவு செலவுத் திட்டத்திலும் யுத்தச் செலவினம் பெரும் நிதியை ஆக்கிரமித்திருக்கின்றது. எனினும் புதிய சுமைகளை மக்களின்மீது திணிக்காத வகையில் முடிந்தளவு அக்கறை செலுத்தப்பட்டு இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் நாங்கள் நினைவில் கொள்ளுகின்றோம். தற்போதைய நிலையில் இதனைவிட மேம்பட்டதாக வரவு செலவுத் திட்டம் அமையக் கூடுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நிதி ஆதாரங்களை யுத்தம் விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கின்றது.

யுத்தம் நடைபெறுகின்றபோது நாட்டில் அபிவிருத்தி ஏற்பட முடியாது : அழிவு விருத்திதான் ஏற்பட முடியும். இந்த நாட்டில் அபிவிருத்தியா அல்லது அழிவு விருத்தியா என்பதைக் கடந்த பல ஆண்டுகளாக யுத்தம்தான் தீர்மானித்துக்கொண்டிருக்கின்றது. யுத்தமில்லாத பூமியாக நாடு மாறும்போதுதான் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை வளமான வாழ்க்கை நிலைக்குக் கொண்டுவரக் கூடிய திட்டங்களைத் திட்ட முடியும் ; திட்டப்படுகின்ற திட்டங்களுக்கு நிதியை ஒதுக்கவும் முடியும். அவ்வாறான நிலைமை ஏற்படும் வரை அரசாங்கம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் யுத்தத்திற்குத் தீனி போடுவதற்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். அப்படிக் கொடுத்து மிஞ்சியதைத்தான் ஆக்கப் பணிகளுக்குப் பகிர்ந்து கிள்ளிப்போட வேண்டியிருக்கும்.

இன்று யுத்தத்தில் வெற்றி யாருக்கென்பது பிரச்சனையல்ல! ஆனால், இங்கே எல்லாவற்றையுமே யுத்தம் வெற்றி கொண்டுவிட்டது. நாட்டின் முன்னேற்றம், நிம்மதியான வாழ்க்கை, மனித உயிர்களுக்கான மதிப்பு, மனித உரிமைகளுக்கான முக்கியத்துவம், ஜனநாயக நிறுவனங்களுக்குள்ள மரியாதை, வெளிப்படைத் தன்மை என்பவற்றையெல்லாம் யுத்தம் வெற்றி கொண்டுவிட்டது ; தனது காலடியில் போட்டு மிதித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் "நாட்டில் சமாதானம் ஏற்படும் ; புலிகள் இயக்கத்தினர் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு ஒரு வாய்ப்பை வழங்குவார்கள்" என்ற நம்பிக்கை இங்கே வெளிப்பட்டது. ஆனால், அப்போதும் ஈ.பீ.டீ.பீ. யினராகிய நாங்கள், "அப்படியொரு வாய்ப்பைப் புலிகள் வழங்கப்போவதில்லை" என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தோம். "தமிழ் மக்களின் பிரச்சினை வேறு, புலிகள் இயக்கத்தின் பிரச்சினை வேறு என்ற ரீதியில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் " அரசியல் தீர்வைக் காண்பதற்கான அணுகு முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம்.

போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் ஒரு கட்டத்திற்கு மேல் நீடிக்குமேயானால், ஏதாவதோர் உடன்பாட்டிற்குச் செல்ல வேண்டியேற்படும் ; அவ்வாறான நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகப் புலிகள் அவசரமாகப் போர் நிறுத்தத்தை முறித்துக்கொண்டார்கள். அதனால் இன்று யுத்தமென்னும் பொறியில் வடக்கு — கிழக்கு மக்கள் சிக்கியிருக்கின்றார்கள். மீண்டும் ஒரு போர் ஆரம்பித்தால் அது தமக்குச் சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் புலிகள் போரை ஆரம்பித்தார்கள். எனவே, இன்றைய போரினால் வீடிழந்து, உடைமைகளை இழந்து, வெட்டவெளிகளிலும் வீதிகளிலும் மா நிழல்களிலும் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்புப் புலிகளுக்கும் இருக்கின்றது. இன்றைய யுத்தத்தின் அவல நிலை பற்றிக் கூறுகின்ற பொழுது, அரசாங்கத்திற்கு இருக்கக் கூடிய பொறுப்பையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. புலிகளுக்கு இருக்க்கூடிய பொறுப்பையும் நாம் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கின்றது. ஆனால், புலிகளுக்கு இருக்கக் கூடிய பொறுப்பைச் சுட்டிக் காட்டினால், புலிகள் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு வந்துவிடுவார்கள் என்பதால், அதனைப் பற்றிப் பேசாமலிருப்பதே புத்திசாலித்தனம் என்று கருதுகின்ற ஒரு போக்கும் காணப்படுகின்றது. இவ்வாறான போக்குத்தான் புலிகள் இயக்கம் தமது இயக்க நலன்களை மட்டுமே முதன்மைப்படுத்திச் சகல முடிவுகளையும் எடுப்பதற்குக் காரணமாகின்றது என்று நாங்கள் நினைக்கின்றோம்.

போர் நிறுத்தத்தைப் புலிகள் மீறிய போது கண்டிக்காதவர்கள், இன்று போரை நிறுத்துமாறு கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஈ.பீ.டீ.பீ. ஐப் பொறுத்த வரையில், புலிகளின் போர் நிறுத்த மீறலை நாங்கள் கண்டித்து இருக்கின்றோம். அதேபோல, போர் நடைபெறும் போது பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற உயிழப்புக்கள், உடைமையழிவுகள் பற்றியும், அவை தவிர்க்கப்பட வேண்டும் என்பது பற்றியும் எமது கருத்தை அரசாங்கத்திற்கு உரத்த மட்டும் குரலிலே தெரிவித்தும் இருக்கின்றோம். ஆனால், எக்கட்டத்திலும் அரசாங்கத்தை மட்டும் பார்த்து போரை நிறுத்துங்கள் என்று நாம் கோரிக்கை விடவில்லை. ஏனெனில், யுத்தம் என்பது இருதரப்புக்கள் சம்பந்தப்பட்ட விடயமாகும். ஒருதரப்பு அடிக்கும் போது, மறுதரப்புக் கையைக் கட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது. ஆனால், அவ்வாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து, அந்தக் கோரிக்கை பத்திரிகைகளிலும் வெளிவந்தால், எங்களுக்கும் சமாதானப் பிரியர்கள் என்ற பட்டம் கிடைத்திருக்கக் கூடும். ஆனால்,


படிப்பகம்

www.padippakam.com

அது மக்களை ஏமாற்றுவதுடன் எங்களையும் நாங்களே ஏமாற்றிக் கொள்கின்ற ஒரு முயற்சியாகவே இருக்கும். இரு தரப்பும் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம் ; முன்பும் நாம் கோரினோம். புலிகள் அரசுக்கு எதிரான யுத்தத்தை மட்டுமல்லாமல், ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கு எதிரான யுத்தத்தையும் ஆயுதப் பிரயோகத்தையும் நிறுத்த வேண்டும் என்றும் நாம் கோருகிறோம். ஆனால், புலிகளின் யுத்த விதிகளுக்கு மாறான நடவடிக்கைகளைக் கண்டும் காணாததுபோல் இருப்பதும், அவற்றைக் கண்டிக்காமல் இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிரான கண்டனங்களை மட்டும் தொகுத்து வழங்கிக் கொண்டிருப்பதும் நேர்மையான முறையாகாது என்று நாங்கள் கருதுகின்றோம்.

புலிகள் ஐரிஸ்மோனா பயணிகள் கப்பலைக் கடத்தினார்கள். பயணிகளைப் பணயம் வைத்து, கடற்படைப் படகுகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். பயணி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று பேசுகின்றவர்கள், அப்போது மௌனமாக இருந்தார்கள் என்பதையும் நாங்கள் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது. பயணி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியோ அல்லது தீவுப் பகுதி மக்களின் போக்குவரத்து நிறுத்தப்பட்டது பற்றியோ பேசுவதற்கு அப்போது யாரும் முன்வரவில்லை. அப்படியானால், தீவுப் பகுதியில் உள்ள மக்கள் தமிழர்கள் இல்லை என்று அவர்கள் நினைத்துவிட்டார்களோ தெரியவில்லை. ஈ.பீ.டி.பி. ஐப் பொறுத்த வரையில், புலிகளின் யுத்தம் என்பது தமிழ் மக்களின் விமோசனத்துக்கானது அல்ல என்பதில் நாங்கள் உறுதியான முடிவுடையவர்களாக இருக்கிறோம். ஆனால், புலிகளுக்கு எதிரான யுத்தம் என்பது, இனங்களுக்கிடையிலான யுத்தமாக, இனங்களுக்கிடையிலான கௌரவப் பிரச்சினையாக மாறக் கூடிய சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இனப் பிரச்சினையின் காரணமாகவே ஆயுதப் போராட்டம் தோன்றியது. அதன் விரிவாக்கமாகவே யுத்தம் ஏற்பட்டது. யுத்தத்தின் ஒரு கட்டத்தில், புலிகள் தங்கள் இராணுவ மேலாதிக்க நோக்கத்திற்காக அதன் திசையை மாற்றிக்கொண்டார்கள். தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான போராட்டத்தை, தங்கள் இயக்கத்தின் அபிலாசைகளுக்கு உட்பட்டதாக மாற்றிக்கொண்டார்கள். தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை, தங்கள் இயக்கத்தின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கான காரணிகளாக ஆக்கிக் கொண்டார்கள். ' கெரில்லா ' யுத்தத்தில் புலிகளுக்கிருந்த திறமையும் படிப்படியாக அவர்கள் பெற்ற வெற்றிகளும் இலங்கையின் இனப்பிரச்சினையை உலக அரங்கிற்குக் கொண்டு சென்றது என்பதை நாங்கள் மறுக்க முடியாது ; மறைக்கவும் முடியாது. ஆனால் அந்த வெற்றிகளின் மூலமாகத் தமது தவறுகளையும் புலிகள் மூடி மறைத்துக்கொண்டார்கள் என்பதையும் நாங்கள் மறந்துவிட முடியாது. இயக்கங்களின் ஒற்றுமை சிதைக்கப்பட்டது ; தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவாகச் சிங்கள மக்களின் ஆதரவினை வென்றெடுக்கக் கூடிய முயற்சிகள் தடைப்பட்டன.

தமிழ் பேசும் மக்களான முஸ்லிம் மக்கள் வடக்கு — கிழக்கில் படுகொலை செய்யப்பட்டார்கள். வடக்கிலிருந்து விரட்டப்பட்டார்கள். இலங்கையின் இனப் பிரச்சினையில் அனுதாபம் கொண்டிருந்த இந்தியாவின் நல்லெண்ணம் முறித்துப் போடப்பட்டது. இத்தனை நடவடிக்கைகளுக்கும் புலிகளே காரணமாக இருந்தார்கள். இப்போதுகூட இன்றைய யுத்தத்தை இன யுத்தமாக மாற்றுகின்ற முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால்தான் தமிழ் மக்களின் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று நாங்கள் குரல் கொடுக்கின்றபோது, புலிகள் சிங்களக் கிராமவாசிகளை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏழு லட்சம் மக்கள் வரை அகதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் ; புனர்வாழ்வு உதவிகளுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நாம் எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில் நாடெங்கும் இன மோதலைத் தூண்டி, ஏழு லட்சம் மக்கள் எவ்வாறு யாழ்ப்பாணக் குடாநாட்டில் அகதிகளாக்கப்பட்டார்களோ, அதுபோல் நாடெங்கும் அகதிகள் தொகை அதிகரிக்க வேண்டுமென்று நினைத்து அதற்கேற்ப காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம். அவலங்களும் அகதிகளும் உருவாகக் கூடிய சூழலைத் தோற்றுவிக்க முற்படும்போது, அவ்வாறான சூழலைத் தோற்றுவிக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும் கண்டிக்காமல் இருந்துவிட்டு பின்னர் அகதிகளுக்காகக் கண்ணீர் விடுவதில் அர்த்தமிருக்க முடியாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பொதுமக்களின் குடியிருப்புக்கள் மத்தியில் ' ஷெல் ' வீச்சுகள், விமானக் குண்டு வீச்சுகள் நடைபெறுவதை நாம் கண்டித்தே வந்திருக்கிறோம். நாம் கண்டித்தால் மட்டும் போதாது. இவ்வாறான நடவடிக்கைகளைச் சிங்கள அரசியல் கட்சிகளும், சாதாரண தமிழ் மக்கள் பாதிப்படையக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையிலே கண்டிக்க முன்வர வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம். கொழும்பிலே பொதுமக்கள் மத்தியில் குண்டுவெடிப்பு நடந்திருக்கிறது. எவ்வித இலக்குமில்லாமல் பொதுமக்கள் மத்தியில் நின்று புலிகளின் உறுப்பினர் ஒருவர் தன்னை வெடிக்க வைத்திருக்கிறார். சாதாரண பொதுமக்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதைத், தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் கண்டிக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளின் மூல மாகவே இன்றைய யுத்தமென்பது இனங்களுக்கிடையிலான யுத்தமாகக் கருதப்படும் நிலைமை மறைய முடியும் ; இனப் பிரச்சினை என்பது இனங்களுக்கிடையிலான பிரச்சினையாக மாறுவதைத் தடுக்க முடியுமென்று நாங்கள் கருதுகிறோம். சிங்கள அரசியல் கட்சிகள் இனவாதிகளையும் திருப்திப்படுத்திக்கொண்டு இனப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டுமென்று நினைத்தால், அது இரண்டு தோணிகளிலே கால் வைப்பது போன்ற காரியமாகவே இருக்க முடியும். அதுபோல தமிழ் அரசியல் கட்சிகளும் புலிகளையும் திருப்திப்படுத்திக்கொண்டு மறுதரப்பை மட்டும் கண்டனம் செய்தால் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக அது அமையாது என்று நாம் கருதுகிறோம்.

" புலிகள் கொழும்பிலே மண்ணெண்ணெய்க் குதத்தைத் தாக்குவார்கள். அதனைக் கண்டிக்கக் கூடாது ; அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு, மண்ணெண்ணெய் அனுப்ப வேண்டும் என்று மட்டும் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்க வேண்டும். புலிகள், பயணிகள் கப்பலையும் அந்தப் பயணிகள் கப்பலில் சென்ற மாலுமிகளையும் கடத்திச் செல்வார்கள் ; தடுத்து வைத்திருப்பார்கள். அவர்களை விடுதலை செய்யுமாறு கோரக்கூடாது. ஆனால், அரசாங்கம் ஏன் கப்பல்களை அனுப்பவில்லை என்று மட்டும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். கிழக்கிலே புலிகள் மின்மாற்றிகளைத் தகர்ப்பார்கள். அரசாங்கம் ஏன் மின்மாற்றிகளைப் போடவில்லை என்று கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். " அது தான் தமிழ்மக்கள் மீது நாங்கள் காட்டுகின்ற விசுவாசமென்று கருதப்படுமானால், அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இரு தரப்பிலும் பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றபொழுது, அதனைக் கண்டிக்க வேண்டிய பொறுப்பு சகல அரசியல் கட்சிகளுக்கும் இருக்கின்றது என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். ஆனால், புலிகள் மக்களின் தேவைகள் குறித்து அக்கறை காட்டுவதில்லை. தமது நடவடிக்கைகளின் விளைவுகள் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதையெல்லாம் புலிகள் நினைத்துப் பார்ப்பதும் கிடையாது. எனவே, புலிகளின் தவறான நடவடிக்கைகளைக் கண்டிக்கின்ற அதேவேளையில், அரசாங்கத்தின் பொறுப்பையும் நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டியதாக இருக்கின்றது.

யுத்தமும் சூதாட்டமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டவையாக இருக்கின்றன. இரண்டிலுமே வெற்றி பெறுகின்றவர்கள் தொடர்ந்து வெற்றிபெறும் ஆசையிலே ஆடிக்கொண்டிருப்பார்கள். தோல்வியடைந்தவர்கள், எப்படியாவது வெற்றியைப் பெற்றுவிடலாம் என்ற நோக்கில் ஆடிக்கொண்டிருப்பார்கள். இன்றைய யுத்தம் என்னும் சூதாட்டத்தில் யாருக்கு வெற்றி கிடைத்தாலும், இதுவரை இழக்கப்பட்ட மனித உயிர்கள் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்களுக்கு இந்த யுத்தத்தின் வெற்றியானது, அந்தப் பிள்ளைகளை உயிர்ப்பித்துக் கொடுக்கப் போவதுமில்லை.

இன்று பாதுகாப்புப் படையினர் யாழ் நகரை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்றோ, நாளையோ அவர்கள் 'யாழ் நகரைச் சென்றடைந்து விட்டார்கள்' என்ற செய்தி கிடைக்கக் கூடும். யுத்தம் என்ற நோக்கத்தில் பார்க்கின்றபொழுது, பாதுகாப்புப் படையினர் மரபுப் போர் முறையில் தமது பலத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். போரில் புலிகளுக்கு இருக்கக் கூடிய பலவீனங்களைக் கண்டறிந்து, அதனையே தமது பலமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், யாழ் நகரைக் கைப்பற்றுவதோடு இந்த யுத்தம் முடிவடைந்து விடப் போவதில்லை. யாழ் நகருக்குப் படையினர் சென்று நிலைகொண்ட பின்னர்தான் உண்மையான சவால்கள் எதிர்நோக்கப்படப் போகின்றன.

தற்போது யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களைத் தவிர ஏனைய பிரதேச மக்கள் முற்றாக வெளியேறி இருக்கிறார்கள். பெரும்பாலான மக்கள் போரின் கரங்களுக்குள் சிக்கிக் கொள்ளாமல் தமது உயிர்களுக்கான உத்தரவாதம் தேடித் தாமாகவே வெளியேறியிருக்கிறார்கள். ஒரு பகுதி மக்களைப் புலிகளும் வெளியேற்றியிருக்கிறார்கள். எப்படியிருந்தபோதிலும், இடம்பெயர்ந்திருக்கின்ற மக்களின் உடனடி நிவாரணத்திற்கு முதலில் ஏற்பாடு செய்ய வேண்டியது உடனடித் தேவையாக இருக்கின்றது. இரண்டாவதாக, அந்த மக்களை மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திருப்பி அழைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கின்றது. தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்று பிரச்சினை இல்லாமல் வாழ முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துவதுதான் முக்கியமான சவாலாக இருக்கின்றது. அந்தச் சவாலை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பதை வைத்துத்தான் யுத்தத்தில் பெறப்பட்ட பலாபலன்களை மதிப்பிட முடியும்.

தற்போது மக்கள் வெளியேறியுள்ள பகுதிகளில் நடைபெறும் யுத்தம் குறித்து, அங்கே பிரயோகிக்கப்படுகின்ற ஆயுதங்கள் குறித்து கவலைப்படுவதை விட, மக்கள் புகலிடம் தேடிச் சென்றுள்ள பகுதிகளை நோக்கி நடாத்தப்படுகின்ற 'ஷெல்' வீச்சுக்கள் குறித்தே நாங்கள் கவலை கொண்டிருக்கிறோம். சமீபத்தில் மக்கள் புகலிடம் தேடிச் சென்றுள்ள வடமராட்சியை நோக்கி ' ஷெல் ' வீச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றன. மனித உயிர்கள் பலியாகியும் இருக்கின்றன. இடம்பெயர்ந்த மக்களை மேலும் அசசத்துக்கும் அவலத்துக்கும் உள்ளாக்கும் விதமான இந் நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து, அதாவது சண்டை நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்றமையால் பெரும்பாலான உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருக்

படிப்பகம்

www.padippakam.com

கின்றன. இடம்பெயர்ந்த மக்கள், "புலிகள் இல்லாத பகுதிகளில் நாங்கள் வாழமாட்டோம்" என்று நினைத்துக்கொண்டு வெளியேறிச் சென்றார்களென்று யாரும் கருதி விடக் கூடாது. எனவே, இடம்பெயர்ந்து புகலிடம் தேடியுள்ள மக்களைத் திரும்ப அழைக்கும் விதமான நடவடிக்கைகள்தான் இன்று அவசியமாக இருக்கின்றன.

யாழ் குடாநாட்டைவிட்டே தமிழ் மக்களை முற்றாக வெளியேற்றக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதன் பாதிப்பு நிச்சயமாகப் புலிகளுக்கு ஏற்படப்போவதில்லை. புலிகளின் யுத்தத்திற்குத்தான் அது வசதியாக இருக்க முடியும். வடக்கில் ஒரு பெரும் நிலப்பரப்பு மக்களே இல்லாத மயான பூமியாக மாறியிருக்கும்பொழுது, மற்றொரு புறம் அகதிகளும் அவலங்களும் சூழ்ந்த ஒரு பிரதேசம் அங்கு நிரந்தரமாகவே உருவாகி வருகின்ற ஓர் அவலம் ஏற்பட்டுவிடும். வரலாற்றில் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு இம்முறை வடக்கில் அகதிகள் தொகை அதிகரித்திருக்கிறது. அந்த அகதிகளுக்குரிய நிவாரணங்களை வழங்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும். அப்பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம்.

அதேபோன்று, இன்று யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பட்டினிச்சாவு அபாயங்களும் இதற்கு முன்னர் எப்போதும் ஏற்பட்டதில்லை. இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தொண்டர் நிறுவனங்கள் தம்மால் முடிந்தளவுக்குச், செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனாலும் போதுமானளவு வசதிகள் அவர்களிடம் இல்லையென்று எமக்குக் கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. தொற்றுநோய்களைத் தடுக்கக்கூடிய மருந்து வகைகள், சுகாதார சீர்கேட்டைத் தடுக்கக்கூடிய போதிய வசதிவாய்ப்புக்கள் அத்தொண்டர் நிறுவனங்களுக்கு இருக்க வேண்டும். தற்போதைய நிலையில் மோசமான தொற்றுநோய்கள் பரவ ஆரம்பித்தால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகக்கூடிய அபாயம் இருக்கின்றதென்பதை இச்சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். தற்போதைய நிலையில் இடம்பெயர்ந்த மக்களை நோக்கி அரசாங்கம் நீட்டுகின்ற உதவிக்கரம்தான் அவர்கள் மீண்மம் தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்புவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

இன்றைய யுத்தப் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றால், யுத்தத்தில் பெறப்படும் வெற்றிகளால் மட்டும் அதை நிறைவேற்றிவிட முடியாது. யுத்தத்திற்கான காரணிகள் இருக்கும்வரை வெற்றியும் தோல்வியும் மாறிமாறி ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். புலிகளின் தலைமை மீது நாம் வேறுபாடு கொண்டிருக்கின்றோம். ஆனால், புலிகள் இயக்கத்தில் நூற்றுக்கணக்கான கரும்புலிகள் உருவாகக்கூடிய சூழ்நிலை எவ்வாறு ஏற்பட்டது என்பதையும் சிந்திக்க நாம் மறந்துவிடக் கூடாது.

" யுத்தத்தில் புலிகளுக்கு ஏற்படுகின்ற தோல்விகள் இனப் பிரச்சினையை அணைத்துவிடும். தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான வெளிப்பாடுகளை அடக்கிவிடும் " என்று இனவாதிகள் சிலர் கருதிக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான கருத்துக்கள் கடந்த காலங்களிலும் நிலவியதால்தான் இந்த நாடு பல ஆயிரம் மனித உயிர்களைப் பலி கொடுக்க வேண்டியிருந்தது. தொடர்ந்தும் அவ்வாறான கருத்துக்கள் வளர்வது அடுத்த தலைமுறையிடம் யுத்தத்தைக் கைமாற்றிக் கொடுப்பதாக அமைந்துவிடும். எனவே, நீண்ட கால யுத்தத்தின் மூலமாகப் பெறப்பட்ட அனுபவங்களைக் மறந்து விடாமல் இனப்பிரச்சினைக்கு அரசியல் ' தீர்வொன்று எட்டப்படும்வரை யுத்தத்தில் எத்தரப்பும் நிரந்தர ' வெற்றியைப் பெறமுடியாதென்ற உறுதியோடு, அந்நிரந்தர வெற்றிக்கு அரசியல் தீர்வினைக் காணச் சகல அரசியல் கட்சியினரும் தங்கள் பங்களிப்புக்களை வழங்க வேண்டியது முக்கியமென்று கூறி விடைபெறுகின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. யூ. பாஸ்கரன் அவர்கள் சுகாதார பெருந்தெருக்கள் சமூக சேவை அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 22, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

යූ. බාස්කරන් මහතා
(திரு. யூ. பாஸ்கரன்)
(Mr. U. Baskaran)

கௌரவ தவிசாளர் அவர்களே, சுகாதார, நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் ஈ. பி. டீ. பி. சார்பாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

வடக்கு — கிழக்கில் உள்ள அம்பாறை, மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி, திருகோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதி ஆகியவற்றைத் தவிர ஏனைய பிரதேசங்களில் சுகாதாரம், நெடுஞ்சாலைகள், சமூகசேவைகள் என்பன மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இன்றைய யுத்த நடவடிக்கைகள் காரணமாக, யாழ் குடாநாட்டு மக்கள் அகதிகளாகி, அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இன்று வடக்கு — கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார வசதிகள் பூர்த்தி செய்யப்படுகின்றனவா என்ற கேள்விக்குறி நிலவுகின்ற நிலையில் இவ்விவாதம் நடைபெறுவது வேதனைக்குரிய விடயமாகும். வடக்கு — கிழக்குப் பிரதேசங்களில் உடல் ரீதியாகவும் மனோரீதியாகவும் ஆரோக்கியமற்ற ஒரு மக்கள் கூட்டம் பெருகி வருகின்றது. இந்த யுத்தம் காரணமாக ஏற்பட்ட நிகழ்வுகளினால் குடும்பத்தில் உழைப்பவர்கள் இறந்து, அல்லது காணாமல் போய் மக்கள் அகதிகளாகிப் போனதாலும், யாழ் குடாநாட்டில் நிலவுகின்ற உணவுத் தட்டுப்பாட்டினாலும், கிடைக்கின்ற பொருள்களுக்குக்கூட அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை காணப்படுவதனாலும், ஏழை எளிய மக்கள் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை காணப்படுவதனாலும் இந்நிலை அங்கு காணப்படுகின்றது. இன்று யாழ் குடாநாட்டில் குழந்தைகளின் இறப்பு வீதம் மிக மோசமான நிலைக்கு உயர்ந்துள்ளதென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இப்பிரதேசங்களில் உள்ள மக்கள் சகல நோய்களுக்கும் வயது வித்தியாசமின்றி ' பனடோலை ' த் தான் பயன்படுத்துகின்றார்கள். அது கூட அரச வைத்தியசாலைகளில் கிடைக்காத நிலையே நிலவுகின்றது. தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து ' பனடோலை ' வாங்க வேண்டியிருக்கின்றது. அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதில் பல தடைகள் உள்ளன. குறைந்த பட்சம் தமது நோய்களுக்காகவாவது மருந்துகளை எடுத்துச் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இன்று மக்கள் பாரம்பரிய மருந்து வகைகளையே பயன்படுத்துகின்றார்கள். வடக்கு — கிழக்கு பிரதேசங்களில் உள்ள நெடுஞ்சாலைகள் குன்றும் குழியுமாகவே இருக்கின்றன. எல்லாவித நோயாளிகளையும் மாட்டுவண்டிகளிலும் சைக்கிள்களிலுமே கொண்டு செல்ல வேண்டிய அவல நிலை அங்கு நிலவுகின்றது. பல நோயாளிகள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பே இறந்து விடுகின்ற ஒரு சோகமான நிலையும் அங்கு காணப்படுகின்றது.

எமது மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மருத்துவ வசதிக்காகக் காத்திருக்கும்போது, வடக்கு — கிழக்கைச் சேர்ந்த வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கும் நாட்டின் இதர நகரங்களுக்கும் தொழில் செய்யச்செல்வது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். நாட்டின் இன்றைய யுத்த நிலையைக் காரணங்காட்டி எமது நாட்டைச் சேர்ந்த வைத்தியர்கள் இங்கு சேவையாற்ற முன்வராததனால், சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் உதவியை மேலும் பெற்றுக்கொள்ள அரசு முன்வரவேண்டும். கடந்த காலங்களிலும் போர் உக்கிரமடைந்துள்ள சமகாலத்திலும் வடக்கு — கிழக்குப் பகுதிகளில் மருத்துவ சேவைகள் ஸ்தம்பிதமடைந்த சூழ்நிலைகளில், ஐ. சி. ஆர். சி, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், எம். எஸ். எப் ; எஸ். சி. எப் — போன்ற தொண்டர் நிறுவனங்கள் எமது மக்களுக்கு வழங்கிய, வழங்கி வருகின்ற அடிப்படை மருத்துவ சேவைகளை நாம் நினைவு கூரவேண்டும். கடுமையான யுத்த சூழலில் அவர்களது சேவைகள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவையாகும்.

யாழ் குடாநாட்டில் உள்ள மக்களில் 75 சதவீதமானோர் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அங்குள்ள அகதி முகாம்களில் சுகாதார நிலைமை மிகவும் பின்தங்கியே இருக்கின்றது. அங்கு மக்கள் ஆடு மாடுகள் போல் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் ; சுத்தமான கழிப்பிடங்கள் இல்லை ; சுத்தமான குடிநீர் வசதிகள் இல்லை. இவை போன்ற முக்கிய காரணிகளால் சகலவிதமான தொற்றுநோய்களும் பரவக்கூடிய நிலை காணப்படுகின்றது.

யுத்தப் பிரதேசங்களில் சேவையாற்ற முன்வரும் வைத்தியர்கள், ஊழியர்கள் ஆகியோருக்குப் பிற பகுதிகளைவிட சலுகைகள், மேலதிக ஊதியம் என்பனவற்றை வழங்க சுகாதார அமைச்சு முன்வரவேண்டும். இச்சலுகைகள் உடனடியாக அவர்களுக்குக் கிட்டக்கூடிய வகையில் எமது செயற்பாடு அமைய வேண்டும். யுத்தப் பிரதேசங்களில் சேவையாற்றச் செல்வோருக்கு மிக முக்கியமாக போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இதுபோன்ற சலுகைகளை குறைந்தபட்சம் வைத்தியர்களுக்கு


படிப்பகம்

www.padippakam.com

வழங்குவதன் மூலம், இன்று வடக்கு — கிழக்கிலுள்ள சுகாதார சேவைகளுக்கு உயிர்கொடுக்க முடியுமென நான் நினைக்கின்றேன். சொந்தப் பிரதேசங்களில் சேவையாற்றும் நல்ல மனங்கொண்ட வைத்தியர்களும் ஊழியர்களும் உள்ளார்கள். இந்த வைத்தியர்களினதும் ஊழியர்களினதும் அர்ப்பணத்தையும், தமது பிரதேசங்களில் தமது மக்களிடையே சேவையாற்றும் மனப்பான்மையையும் நாங்கள் கௌரவித்து, அவர்களது சேவைக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுக்க வேண்டும். இது போன்ற செயற்பாடுகளின் ஊடாக வெளிநாட்டில் சேவையாற்றும் வைத்தியர்களையும் இங்கு கொண்டு வர முடியும் என நான் நம்புகின்றேன்.

வடக்கு — கிழக்குப் பிரதேசத்திலே குண்டுவீச்சுக்களினாலும் 'ஷெல்' தாக்குதலினாலும் கக்கப்படுகின்ற கெந்தக நச்சுப்புகை காற்றோடு கலப்பதனால், அந்தக் காற்றைச் சுவாசிக்கின்ற மக்களுக்கு ஏற்படுகின்ற நோய்கள் பல. இந்த விடயத்தில் சுகாதார அமைச்சு தனியாக எதனையும் நடைமுறைப்படுத்த முடியும் என்று நான் சொல்ல வரவில்லை ; ஆனால், சகல அமைச்சுக்களும் ஒன்று கூடி இது சம்பந்தமாக ஆலோசனை செய்ய வேண்டும். மருத்துவ சுகாதாரத் தேவைகளைப் பற்றி நாம் இச்சபையில் ஆற்றும் உரைகளிலிருந்து. இத்துறைகளில் வடக்கு — கிழக்குப் பகுதி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. வடக்கில் மருத்துவர்கள் பற்றாக்குறை மிகவும் அதிகமாகவுள்ளது. மருத்துவர் நியமனங்களை வழங்கும் போது, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத்தான் அரசு முன்னுரிமை வழங்க வேண்டும். மருத்துவர் நியமனங்கள் மத்திய சுகாதார அமைச்சின் ஊடாக வழங்கப்படுவதால், வடக்கு — கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் புறக்கணிப்பு நிலையையே எதிர்நோக்கி வருகின்றது.

பல்கலைக்கழகங்களில் இருந்து மருத்துவர்கள் வெளியேறும் போது, அவர்கள் பாதிக்கப்பட்ட அல்லது கஷ்டப் பிரதேசங்களில் குறிப்பிட்ட காலம் சேவையாற்ற வேண்டுமென அரசு கட்டாயப்படுத்த வேண்டும். இந்நிலைமை இங்கு இல்லை. பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் மருத்துவர்கள் நகர்ப்புறங்களை நாடிச் செல்வதாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் செல்ல மறுப்பதாலும் ஏழை மக்கள் வைத்திய வசதியின்றிப் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலைமையானது யாழ்ப்பாணம், மன்னார், கிளிநோச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவுகின்றது. 'வடக்கு — கிழக்கு மாகாணங்களில் காணப்படும் வெற்றிடங்கள் பற்றிய விபரத்தை நான் இச்சபையில் சமர்ப்பிக்கின்றேன்.* கடந்த இரண்டு வாரகாலத்திற்கு முன்னர் இராணுவத்தால் விடுக்கப்பட்ட மன்னார் மாவட்டத்திற்கு இதுவரையும் பல் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. முல்லைத்தீவில் எம்.ஓ.எச். ஒருவர் இல்லை. கிளிநொச்சியில் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லை. மன்னார் மாவட்டத்தில் இரண்டேயிரண்டு வைத்தியர்களே சேவையாற்றினர். ஆனால், இப்போது அதில் ஒருவர் வவுனியாவுக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

පූ. භා 10.00

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்குப் பகுதியில் மருத்துவத் தாதி, மருந்தாளர், மருத்துவ ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோருக்கான பற்றாக்குறையும் பரவலாகக் காணப்படுகின்றது. வைத்தியர்கள்தாம் இல்லை என்றாலும், இவ்வூழியர்களையாவது நியமிப்பதில் அரசு ஏன் தயக்கம் காட்டுகின்றது ? வைத்திய சேவைத் துறையில் உள்ளவர்களுக்குப் பயிற்சி வழங்கி, ஊக்குவிப்பு அளிக்கும் அரசின் திட்டத்தில், வடக்கு — கிழக்குப் பகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்றுபவர்கள், பயன்பெறாதவர்களாக உள்ளனர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகள் வெறுமனே பெயரளவில்தான் இயங்குகின்றன.

ஆளணிப் பற்றாக்குறையைத் தீர்க்கும் நடவடிக்கையை நேரடியாக மத்திய அரசாங்கமே கையாளுகின்றது. வடக்கு — கிழக்கில் இருந்து வைத்திய சேவைக்குத் தெரிவு செய்யப்படும் ஊழியர்கள், தங்களது நியமனங்களை வடக்கு — கிழக்குப் பகுதிக்குப் பெற்று விட்டு, குறிப்பிட்ட காலங்களின் பின், செல்வாக்கைப் பயன்படுத்தி இடமாற்றம் பெற்று, வடக்கு — கிழக்கை விட்டு வந்து விடுகின்றனர். அரசு வடக்கு —கிழக்கில் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதாக எண்ணிக்கொள்கின்றது. ஆனால், இந்நிலைமையின் காரணமாக வடக்கு — கிழக்கு மக்கள் இவர்களின் சேவையைப் பெறமுடிவதில்லை.

வடக்கு — கிழக்குப் பகுதியில் இருந்து உதவி வைத்திய உத்தியோகத்தர்கள் வெளியாவதில் மந்த நிலை காணப்படுகின்றது. இந்நிலைக்கான பிரதான காரணம், 1989 ஆம் ஆண்டுக்குப் பிறகு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைக்கப்பட்டிருந்த உதவி வைத்திய உத்தியோகத்தர் பயிற்சிநெறி களுத்துறைக்கு மாற்றப்பட்டிருப்பதாகும். எனவே, இந்த நிலையை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வடக்கு — கிழக்கிலுள்ள வைத்தியசாலைகள் தரமிழந்து காணப்படுகின்றன. ஆனால், நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பெருமளவு வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. வடக்கு — கிழக்கில் பெருமளவு வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்படவில்லையாயினும், தரமுயர்த்தப்பட்ட வைத்தியசாலைகளாவது அவற்றிற்கான அடிப்படை வசதிகளை இன்னும் கொண்டிருக்காதது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். இதற்கு உதாரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையைக் குறிப்பிடலாம். மட்டக்களப்பு வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாயினும் அது ஒரு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடமொன்றை ஏற்படுத்துவதனூடாக நாம் இதனைச் செய்யலாம். போதனா வைத்தியசாலை அந்தஸ்தை மட்டக்களப்பு வைத்தியசாலை பெற்ற பின், சிற்றூழியர்கள் சிலபேர் நியமனம் பெற்றுள்ளார்கள் என்பதைத் தவிர, அங்கு எவ்வித கட்டட, மருத்துவ முன்னேற்றமும் காணப்படவில்லை.

வடக்கு — கிழக்கிலுள்ள தள வைத்தியசாலைகள், நாட்டிலுள்ள ஏனைய தள வைத்தியசாலைகளுடன் ஒப்பிடும்போது மிகவும் பின் தங்கியுள்ளன. அம்பாறை, கல்முனை, மன்னார், வவுனியா, பருத்தித்துறை, மந்திகை தள வைத்தியசாலைகளின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. வடக்கு — கிழக்கில், அம்பாறை மாவட்டத்தில் 27 மருந்தகங்களும் மட்டக்களப்பில் 14 மருந்தகங்களும் திருகோணமலையில் 11 மருந்தகங்களும் வவுனியாவில் 4 மருந்தகங்களும் மன்னாரில் 4 மருந்தகங்களும் முல்லைத்தீவில் 4 மருந்தகங்களும் கிளிநொச்சியில் 7 மருந்தகங்களும் யாழ்ப்பாணத்தில் 14 மருந்தகங்களும் உள்ளன. இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஆகக் குறைந்த சேவைகளைக்கூட வழங்க முடியாத நிலையில் இம்மருந்தகங்கள் உள்ளன.

இந்நிலைமைகள் ஒரு குறைந்தளவிலான யுத்தம் நடைபெறும் காலத்தில் இருந்தவையாகும். ஆனால், இப்போது வடக்கில் பெரும் யுத்தமொன்று நடந்துகொண்டிருக்கின்றது ; இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களும், இடம்பெயர்ந்து சுகாதார வசதியீனங் காரணமாகத் தொற்று நோய்களுக்காளானவர்களும் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் அம்மக்களுக்கு அதிகரித்த வைத்திய வசதிகள் தேவைப்படுகின்றன. இந்த நிலைமையில் சுகாதார சேவை வடக்கில் மரணித்துக் கிடக்கின்றது.

யாழ் மாவட்டத்திலுள்ள நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இப்போது ஏழு இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். அங்குள்ள மக்களின் அத்தியாவசிய மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட அங்கு மருந்து வகைகளோ, வைத்தியர்களோ, ஊழியர்களோ இல்லை. பருத்தித்துறையிலுள்ள மந்திகை ஆஸ்பத்திரியும், மற்றும் மருதங்கேணி,. கரவெட்டி, வரணி, கொடிகாமம் போன்ற இடங்களிலுள்ள கிராமியச் சுற்றயற்கூறு ஆஸ்பத்திரிகளும் இன்று இயங்குகின்ற நிலையில் இருந்தபோதிலும் அவை அந்த ஏழு இலட்சம் தமிழ் மக்களின் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாதிருக்கின்றன. பொதுவாக, வடக்கில் மருந்துகள் இல்லை ; வைத்தியர்கள் இல்லை ; ஊழியர்கள் இல்லை. எனவே, உடனடியாக அரசு வடக்குக்கு மருத்துவர்களையும் மருந்து வகைகளையும் அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

முன்பு வடக்கில் — யாழ்ப்பாணத்தில் — இரண்டு சித்த மருத்துவ ஆயுர்வேதக் கல்லூரிகள் இயங்கின. ஆயுர்வேத வைத்தியத்துறை இன்று வடக்கு — கிழக்கில் அழிந்துபோகும் நிலையிலுள்ளது. ஆயுர்வேத வைத்தியத்துறையை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்த ஓர் ஆயுர்வேதக் கல்லூரியிலிருந்து வெளியேறிய நூற்றுக்கும் மேற்பட்டோர் இன்னும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படாதிருக்கின்றனர். 1985 ஆம் ஆண்டிலிருந்து அம்மாணவர்களுக்கு வேலை வழங்கப்படாதிருக்கின்றது. இப்போதும் அங்கு ஆயுர்வேதக் கல்லூரியில் 160 மாணவர்கள் உள்ளனர். ஆகவே, கௌரவ அமைச்சரவர்கள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வடக்கு — கிழக்கில் 45 இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகள் இயங்குகின்றன. அவை உள்ளூராட்சி மன்றங்களின் கீழேயே செயற்பட்டு வருகின்றன. இந்த ஆயுர்வேத வைத்திய நிலையங்களுக்கு ஆளணியினர் 46 பேர் தேவை. இப்போது 34 பேர் சேவையிலுள்ளனர் ; 12 பேர் தற்காலிக ஊழியர்களாகச் சேவையிலுள்ளனர். இவர்களை நிரந்தரமாக்குவதற்கு கௌரவ அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

* කථාව අවසානයේ පළ කර ඇත.
உரையின்இறுதியில் தரப்பட்டுள்ளது.
*Reproduced at end of speech.*



படிப்பகம்

www.padippakam.com

ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள் வவுனியாவில் 2, அம்பாறையில் 4, மட்டக்களப்பில் 3 என, மொத்தமாக 09 மருந்தகங்கள் உள்ளன. இவற்றில் 8 பேரே சேவையிலுள்ளனர். ஓர் ஊழியருக்கான பற்றாக்குறை நிலவுகின்றது. வடக்கு — கிழக்கில் 72 பிரதேசச் செயலகங்கள் உள்ளன. அரசாங்கத்தின் கொள்கையின்படி அங்கு குறைந்தது 72 ஆயுர்வேத மருந்தகங்களாவது அமைக்கப்படல் வேண்டும். எனவே, உடனடியாக இதுபற்றி அமைச்சர் அக்கறை கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

யுத்த நிலைமையில் வடக்கில் கடமையாற்றுவதற்கு வைத்தியர்களைத் தர UNO முன்வந்தது. ஆனால், அரசாங்கம் அவர்களை இங்கு அனுமதிக்கவில்லை. இது வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும். எம்மால் அம்மக்களுக்கு வைத்திய வசதிகளை வழங்க முடியாவிட்டால், மனிதாபிமான முறையில் எமது மக்களைப் பாதுகாக்க முன்வரும் சர்வதேச நிறுவனங்களின் உதவியை அரசு மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மக்களுக்கு உடனடியாக உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைக்கவேண்டுமென்று இச்சபையிலுள்ள அனைவரும் கோரவேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்று அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் நிலவுகின்ற சுகாதார நிலைமையைவிட, அரச கட்டுப்பாட்டிற்குள் வந்த தீவுப் பகுதியின் நிலைமையானது மிக மோசமாக இருக்கின்றது. தீவுப்பகுதியில் மூன்று மாவட்ட வைத்தியசாலைகளும் மூன்று சுற்றியல் கூறு வைத்தியசாலை, நயினாதீவு சுற்றியல்கூறு வைத்தியசாலை என்பன ஆர். எம். பி. தரத்திலுள்ள ஓய்வுபெற்ற வைத்தியர்களால் கடந்த ஐந்து வருடங்களாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. காரைநகர் சுற்றியல்கூறு வைத்திய சாலையில் வெளி நோயாளர் பிரிவு மட்டுமே இயங்குகின்றது. அனலைதீவு சுற்றியல்கூறு வைத்தியசாலை, மருத்துவ தாதி ஒருவரினால் நிர்வகிக்கப்படுகின்றது. அத்துடன் மூன்று கால்கள் உள்ள கட்டில்கள் கூட அங்கு காணப்படுகின்றன. படுக்கை விரிப்புக்கள், மெத்தைகள் கிழிந்த நிலையில் காணப்படுகின்றன. வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவோர், வீட்டிலிருந்து குடிதண்ணீரை எடுத்துவரவேண்டிய அவல நிலையில் இருக்கின்றனர்.

நயினாதீவு வைத்தியசாலையின் ஆண் நோயாளர் பிரிவுக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. இங்கு கடமையாற்றும் ஓய்வுபெற்ற ஆர்.எம்.பி. வைத்திய அதிகாரி, உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தியும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இங்குள்ள குளிர்சாதனப் பெட்டி பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பல் 'கிளினிக்' பகுதியிலிருந்தும், ஐந்து வருட காலமாக பல் வைத்தியர் ஒருவர் இல்லாத நிலை காணப்படுகின்றது. யாழ் தீவுப் பகுதியில் இன்றும் மருந்துப் பொருள் களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. வைத்தியசாலைகளில் ஊழியர் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே, இப்பகுதி மக்களும் இந்நாட்டின் மக்கள் எனக் கருதி, பாதுகாப்புக் காரணங்களை முன்வைக்காமல், உடனடியாக சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும்படி கௌரவ சுகாதார, நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விடுவிக்கப்பட்ட பிரதேசமென்று முன்னுதாரணம் காட்டப்படுகின்ற யாழ் தீவுப் பகுதியில், இற்றை வரைக்கும் அரசால் மேற்கொள்ளப்பட்ட சுகாதார சேவைகளை நான் அறிய விரும்புகின்றேன். அரச கட்டுப் பாடற்ற பிரதேசங்களைவிட, அரச கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் எல்லாத் துறைகளிலும் பின்தங்கியிருப்பது, இவ்வரசில் தமிழ் பேசும் மக்களை நம்பிக்கையிழக்கச் செய்கின்றது.

இன்றைய யுத்த நிகழ்வுகள் காரணமாக, யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் சேவையாற்ற யாரும் முன்வராத நிலையில் 1986 ஆம் ஆண்டு தொடக்கம் நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேவை யாற்றும் இரு வைத்தியர்களும், ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலையில் கடந்த ஒன்றரை வருடங்களாகச் சேவையாற்றும் வைத்தியர் ஒருவரும் தொடர்ந்தும் விரும்பிச் சேவையாற்றி வருகின்றார்கள். ஆனால், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் அரசாங்கத்தினால் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை. வெளித் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கும் தீவுப்பகுதியிலிருந்து தமது தேவைகளுக்காகக் கொழும்பு வந்து செல்வதற்கு தாமதமின்றிப் போக்குவரத்துச் செய்ய அவர்களுக்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதனால் அவர்களது மனநிலை திருப்தியடைந்து அந்த மக்களுக்குக் கிடைக்கின்ற சொற்ப அளவு வைத்திய சேவை தொடர்ந்தும் கிடைக்க வாய்ப்பேற்படும்.

சமகால நிகழ்வுகளினால் தொழில் வசதியற்ற நிலையில் வாழும் தீவுப் பகுதி மக்கள், மூக்குக் கண்ணாடி வாங்குவதற்குக்கூடத் திருகோண மலைக்கும் கொழும்புக்கும் வரவேண்டியிருப்பதால் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இப்பகுதி மக்களின் வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கண், பல் வைத்தியர்களை நியமித்து, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலையிலோ அல்லது புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலையிலோ சத்திரசிகிச்சை வசதிகளை ஏற்படுத்தி, தீவுப்பகுதி மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும்படி சுகாதார, நெடுஞ்சாலைகள், சமூகசேவைகள் அமைச்சர் கௌரவ பௌசி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

யாழ் குடாநாட்டின் சமகால நிகழ்வுகளைத் தென்னிலங்கை மக்கள் அறிந்துகொள்ளவில்லை. அதற்கு செய்தித் தணிக்கை பிரதான காரண மாக இருக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் இந்நிலைக்கு புலிகள் மட்டும்தான் காரணமென்று இலகுவாக அதிகாரத்துக்கு வந்த ஆட்சியாளர்கள் காரணம் கூறிவிடுகின்றனர். ஆனால், புலிகளைப் போலவே, சுதந்திரத்திற்குப் பிறகு அதிகாரத்திற்கு வந்த ஒவ்வோர் ஆட்சியாளரும் வடக்கு — கிழக்கின் சமகால நிலைமைக்குப் பொறுப் பேற்க வேண்டும். அதிகாரத்திற்கு வந்த ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுத்ததன் மூலமே சமகால நிலைக்கு இந் நாட்டை இட்டுச் சென்றனர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நிலைமைக்கு தமிழ் பேசும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்கள் மீது ஒற்றையாட்சி முறையைத் திணிக்க முற்பட்டது உட்பட, தரப் படுத்தல் போன்ற காரணங்களும் உண்டென்பதை இன்றைய உலக சமுதாயம் தெரிந்து கொண்டுள்ளது.

பெருந்தெருக்கள் திணைக்களத்திற்குட்பட்ட தீவுப்பகுதியின் படகுச் சேவையானது இன்று இயங்க முடியாத நிலையில் உள்ளது. ஆகவே, கௌரவ அமைச்சர் அவர்கள் கூடிய கவனம் எடுத்து, தீவுப்பகுதியின் கடல் போக்குவரத்தை நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். நன்றி. வணக்கம்.

* සභාමේසය මත තබන ලද ලැයිස්තුව :
சபாபீடத்தில் வைக்கப்பட்ட நிரல் :
*List tabled:*

CADRE VACANCIES IN THE HEALTH DEPARTMENTS - NORTH-EAST PROVINCE

| No | Name of post | Ampara C | Ampara V | B'caloa C | B'caloa V | Trinco C | Trinco V | Vavuni C | Vavuni V | Kilinoch C | Kilinoch V | Jaffna C | Jaffna V | Total V |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Accountant | 1 | 0 | 1 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 |
| 2. | Administrative Officer | 3 | 0 | 1 | 1 | 2 | 1 | 3 | 1 | 1 | 0 | 2 | 1 | 4 |
| 3. | Clerks | 41 | 0 | 28 | 0 | 20 | 0 | 26 | 0 | 11 | 0 | 27 | 0 | 0 |
| 4. | Stenographers | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 4 |
| 5. | Typists | 3 | 1 | 3 | 0 | 3 | 0 | 3 | 2 | 3 | 1 | 3 | 0 | 4 |
| 6. | Book Keeper | 1 | 0 | 1 | 0 | 1 | 0 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 2 |
| 7. | Store Keeper | 2 | 0 | 2 | 1 | 2 | 0 | 2 | 1 | 0 | 0 | 2 | 0 | 2 |
| 8. | Binder | 1 | 1 | 1 | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 2 |
| 9. | Drivers | 40 | 11 | 22 | 9 | 21 | 0 | 33 | 21 | 18 | 15 | 41 | 23 | 79 |
| 10 | Packers | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 2 | 2 | 1 | 7 |
| 11. | Watchers | 48 | 35 | 28 | 21 | 25 | 9 | 31 | 25 | 24 | 24 | 56 | 41 | 155 |
| 12. | Medical Officer Spl. Grade | 15 | 13 | 1 | 0 | 8 | 5 | 15 | 13 | 1 | 1 | 13 | 11 | 43 |
| 13. | Medical Officer I&II | 67 | 16 | 17 | 10 | 32 | 13 | 54 | 38 | 15 | 13 | 66 | 59 | 149 |
| 14. | Regional Epidemiologist | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 3 |
| 15. | R.M.O. (AMC) | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 1 | 1 | 5 |
| 16. | Medical Officer-Indigenous | 5 | 0 | 2 | 0 | 1 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 17. | Dental Surgeons | 17 | 8 | 7 | 3 | 8 | 3 | 10 | 5 | 6 | 6 | 15 | 8 | 33 |
| 18. | Planning Program. Officer | 1 | 1 | 1 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 |
| 19. | RMO/AMO | 58 | 0 | 33 | 11 | 25 | 0 | 35 | 11 | 32 | 15 | 61 | 21 | 58 |
| 20. | N/OO-Spl. Gr. | 3 | 3 | 0 | 0 | 2 | 2 | 3 | 3 | 0 | 0 | 2 | 2 | 10 |
| 21. | N/OO-Gr.I | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 2 | 8 | 8 | 16 |
| 22. | N/OO-Gr.II"A"&"B" | 281 | 44 | 74 | 20 | 149 | 46 | 197 | 136 | 79 | 63 | 292 | 199 | 508 |
| 23. | Family Health Workers | 65 | 10 | 32 | 16 | 36 | 29 | 46 | 31 | 37 | 23 | 82 | 46 | 155 |
| 24. | Fami. Heal. W. Hos-Field | 184 | 59 | 138 | 67 | 105 | 75 | 86 | 68 | 74 | 50 | 303 | 214 | 533 |
| 25. | Public Health Inspectors | 75 | 49 | 59 | 35 | 43 | 25 | 40 | 36 | 42 | 39 | 107 | 85 | 269 |
| 26. | Pharmacist | 37 | 26 | 9 | 9 | 18 | 12 | 28 | 23 | 16 | 14 | 34 | 12 | 96 |
| 27. | Medical Lab. Tech. | 13 | 6 | 3 | 0 | 9 | 6 | 11 | 8 | 4 | 3 | 19 | 13 | 36 |
| 28. | Microscopist | 10 | 5 | 6 | 5 | 5 | 4 | 5 | 5 | 8 | 5 | 6 | 0 | 24 |
| 29. | Radiographers | 4 | 3 | 0 | 0 | 2 | 1 | 4 | 3 | 2 | 2 | 5 | 5 | 14 |
| 30. | E.C.G. Recordist | 4 | 2 | 0 | 0 | 2 | 2 | 4 | 4 | 0 | 0 | 4 | 4 | 12 |
| 31. | Dental Technicians | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 1 | 1 | 5 |
| 32. | Physiotherapists | 2 | 2 | 0 | 0 | 1 | 0 | 2 | 2 | 0 | 0 | 2 | 2 | 6 |
| 33. | Occupational Therapist | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 1 |
| 34. | Dispensers | 34 | 8 | 20 | 10 | 17 | 0 | 25 | 12 | 18 | 7 | 31 | 0 | 37 |
| 35. | School Dental Therapist | 9 | 4 | 7 | 5 | 5 | 1 | 4 | 4 | 4 | 4 | 14 | 7 | 25 |
| 36. | Food & Drugs Inspector | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 2 |
| 37. | Health Educators | 1 | 0 | 1 | [illegible] | 1 | [illegible] | 1 | 1 | 0 | 0 | 1 | 1 | 4 |

படிப்பகம்

www.padippakam.com

**ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். சந்திரகுமார் அவர்கள் விவசாய, காணி, வனவள அமைச்சு மீதான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 23, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.**

எம். சந்திரகுமார் மஹதா
(திரு. எம். சந்திரகுமார்)
(Mr. M. Chandrakumar)

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நாட்டில் இனப்பிரச்சினையின் தீவிரத்தை அதிகப்படுத்திய ஓர் அடிப்படைக் காரணியோடு சம்பந்தப்பட்ட இந்த அமைச்சின் குழுநிலை விவாதத்தில், இவ்வடிப்படைக் காரணி தொடர்பான பிரச்சினையில் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளையும் அதனால் வடக்கு-கிழக்குத் தமிழ்பேசும் சமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையின் தீவிரம் குறித்தும் இச்சபையின் கவனத்திற்கு ஈ. பீ. டி. பீ.யின் சார்பில் கொண்டுவரலாமென எண்ணுகின்றேன்.

இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு என்பது, வெறும் அதிகாரங்களை மட்டும் பெயரவில் பகிர்ந்தளிப்பதனூடாகச் சாத்தியப்படப்போவதில்லை. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசம், மொழி, கலாசாரம், தனித்துவங்கள் போன்றவை பாதுகாக்கப்படுவதுடன், அம்மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும்போதுதான் நிரந்தர சமாதானம் சாத்திமாகுமென்பதை நாம் அனைவரும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த ஒரு பிரதேசத்தின் இன விகிதாசார அமைப்பை மாற்றும் விதத்தில், அப்பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற மக்களைச் சிறுபான்மையினராக்கும் விதத்தில், அரசின் குடியேற்றக் கொள்கை அமையக்கூடாது. கடந்த காலங்களில் இலங்கையில் ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களும் இவ்விடயத்தில் ஒத்த செயற்பாட்டையே கொண்டிருந்ததை நாம் கடந்த கால வரலாற்றினூடாகக் காண்கின்றோம். டி. எஸ். சேனாநாயக்க அவர்களின் ஆட்சிக்காலந்தொட்டு இன்றுவரை இந்த நிலைமை தொடர்கின்றது. இதில் இன்றுவரை நாம் எந்த மாற்றத்தையும் காணவில்லை! மக்கள் சுயமாக, இயற்கையாக இலங்கையின் எப்பகுதியிலேனும் சென்ற குடியேறுவதை எமது கட்சி எதிர்க்கவில்லை. ஆனால், வடக்கு-கிழக்கில் பிரதேச ஆக்கிரமிப்பு நோக்குடனும், வடக்கு-கிழக்கின் தொடர்ச்சியான நிலப்பரப்பினைத் துண்டாடும் நோக்குடனும் திட்டமிட்ட முறையில் நடாத்தப்படும் குடியேற்றங்களையே நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். திட்டமிட்ட குடியேற்றங்கள், பிரதேச ஆக்கிரமிப்புக்களின் மூலமாகவே மணலாறு-'வெலிஓயா' எனவும், முதலிக்குளம்'மொரவெவ' எனவும், அம்பாறை-'திகாமடுல்ல' எனவும், பட்டிப்பனை ஆறு-'கல்லோயா' எனவும், தம்பலகாமம்-'தம்பலகமுவ' எனவும் பெயர் மாற்றப்பட்டுள்ளன. இவை 'செவன', 'கம்உதாவ', 'சமுர்த்தி', 'ஜனவசம' போன்ற வெறும் சிங்கள மொழித் திணிப்பல்ல. இவை தமிழ்பேசும் மக்களினதும் எதிர்கால தமிழ் பேசும் சந்ததியினரினதும் ஜீவாதார வாழ்விடப் பிரச்சினையாகும். வவுனியா மாவட்டத்தின் தென்பகுதியும், முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பகுதியும், திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பகுதியும், மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையோரப் பகுதிகளும், அம்பாறை மாவட்டத்தின் பெரும்பகுதியும் இன்று பறிபோய்விட்டன. அம்பாறை நகரில் தமிழ்பேசும் மக்கள் சிறுபான்மையினரானதுபோல, கிழக்கின் பல பகுதிகள் பறிபோயும், பறிபோய்க் கொண்டிருக்கும் நிலைமையும் காணப்படுகின்றன. இந்நிகழ்சிகளுக்கு காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் இனவாதிகளும் துணை போவது வருத்தத்திற்குரியது.

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால், விகிதாசார அளவில் அது பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அங்கு 1827 ஆம் ஆண்டு மொத்த சனத் தொகையில் 81.8 சத வீதத்தினராக இருந்த தமிழர்கள், 1981 ஆம் ஆண்டில் 36.4 சத வீதத்தினராகக் குறைந்து விட்டார்கள். 1827 ஆம் ஆண்டு 1.3 சத வீதத்தினராக இருந்த சிங்கள மக்கள், 1981 ஆம் ஆண்டில் 33.6 சத வீதத்தினராக அதிகரித்துள்ளனர். 1981 ஆம் ஆண்டுக்குப் பின் நாட்டில் ஏற்பட்ட இனப்பூசல்களால் இன்று அங்கு தமிழர்களின் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடைந்து, சிங்கள மக்களின் விகிதாசாரம் அதிகரித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு கந்தளாயில் ஏற்படுத்தப்பட்ட பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டம், 1949 ஆம் ஆண்டு பார்வதிபுரம் எனும் தமிழ்க் கிராமம், ' பதவியா ' எனப் பெயர் மாற்றப்பட்டு உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம், 1950 இல் அல்லை எனும் தமிழ்க் கிராமம் ' சேருவில ' எனப் பெயர் மாற்றப்பட்டு உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம், 1957 இல் முதலிக்குளம் எனும் தமிழ்க் கிராமம் ' மொறவெவ ' எனப் பெயர் மாற்றப்பட்ட குடியேற்றம், 1970 களுக்குப் பின் அபயபுரம், சிறிமாபுரம், உப்புவெளி, மட்கோ, திரியாய், மகிந்தபுரம், ஜெயந்திபுரம், ஆண்டாங்குளம், சீனக்குடா, பாலம்பட்டாறு, பெரியகுளம், கினிவெட்டி, முள்ளிப்பொத்தானை, புடவைக்கட்டு மற்றும் திருமலை நகரை அண்டிய பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக தமிழர்களின் விகிதாசாரம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கில் ஏற்பட்ட அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக மூன்று அம்சங்களைச் சுட்டிக் காட்டலாம் என எண்ணுகிறேன். முதலாவது, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் உள்ள வளம் மிக்க மண்களில் ஏற்பட்ட குடியேற்றங்கள். இது பொருளாதார ரீதியில் தமிழ் பேசும் மக்களைப் பின் தள்ளிவிடும் நோக்கில் செய்யப்பட்டதாகும். இரண்டாவது, தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதனூடாகத் தமிழ் பேசும் மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைப்பதன் மூலம் அம்மக்களின் அரசியல் பலத்தைச் சிதைப்பதுடன், அவர்களின் கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பலவீனப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. மூன்றாவது, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டிப் பதனை நோக்கமாகக் கொண்டது ; இதனூடாகத் தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டைக் கேள்விக்குள்ளாக்க முற்படுவது.

மகாவலி ' எல் ' திட்டம் என்ற பெயரில் வடக்கு — கிழக்கின் நிலத் தொடர்பைத் துண்டிக்கும் நோக்கில் செய்யப்பட்ட ' வெலி ஓயா ' சிங்களக் குடியேற்றத் திட்டமானது தமிழ் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகக் கொள்ளப்பட வேண்டியதாகும். மணலாறு பிரதேசம் தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசமாகும். கிட்டத்தட்ட 13,500 தமிழ்க் குடும்பங்களைத் துரத்தியடித்து விட்டுத்தான் வெலி ஓயா குடியேற்றத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. மணலாறுப் பிரதேசத்தில் குடியேற்றம் செய்வதற்கு தண்ணீரூற்று, குமுழமுனை, அளம்பில் முதலான நாயாறு ஏரிக்கும் மேற்குப் புறமாக 43 தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த மக்களை வெளியேறுமாறு நிர்ப்பந்தித்து, 15.04.1988 வர்த்தமானி அறிவித்தலூடாக மணலாறுப் பிரதேசத்தை — வெலி ஓயா — சிறப்புப் பிர தேசமாக அறிவித்துவிட்டு, அரசு வெலி ஓயா எல்லைகளை வரையறை செய்தது. அவ்வரையறைக்குள் அடங்கும் 75,000 ஏக்கர் நிலப் பரப்பினை அபகரிக்கும் வகையில் மேற்படி 43 தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த மக்களை அவர்களது பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மண்ணைவிட்டு வெளியேற்ற ஆயுதப் படைகளின் உதவி நாடப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இம்மக்களின் வெளியேற்றத்தால் மக்களின் வாழ் விடங்கள், வளமான விவசாய நிலங்கள், பண்ணைகள், கால்நடைகள் போன்ற எல்லாமே இழக்கப்பட்டன.

கௌரவ தவிசாளர் அவர்களே, அண்மையில் முன்னாள் ' சேவேயர் ஜெனரலாக ' இருந்த திரு. சோமசேகரம் என்பவர் ' டெயிலி நியூஸ் ' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அவரின் கட்டுரையில் இருந்து சில முக்கியமான விடயங்களை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந் நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் ' இன்னும் பகிர்ந்தளிக்கப்படாத நிலங்கள் ' என இனங்காணப்பட்ட நிலங்களின் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், வட மத்திய மாகாணத்தில் 72,740 ஹெக்டயார் நிலமும், ஊவா மாகாணத்தில் 33,051 ஹெக்டயார் நிலமுமே மற்றைய மாகாணங்களை விட அதிகமாகக் கொண்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தென்மாகாணத்திலகூட 16,346 ஹெக்டயார் நிலம் பகிர்ந்தளிக்கப்படாமல் இருக்கிறது. மேற்படி தரிசு நிலங்களைச் சிங்கள மக்களின் எதிர்காலத் தேவைக்காகப் பிரத்தியேகமாக வைத்துக் கொண்டு, உடனடித் தேவைக்காக வடக்கு — கிழக்கிலுள்ள தரிசு நிலங்களைச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதிலேயே அரசின் கவனம் செலுத்தப்பட்டிருப்பதை நாம் இங்கு அவதானிக்கலாம்.

நாங்கள் வெறும் வரைபடத்தை வைத்துக்கொண்டு கற்பனை பண்ணுவதை விட, வடக்கு — கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்குப் பாரிய நிலப்பிரச்சனை உண்டு என்பதை நான் இச்சபையில் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். வடக்கு — கிழக்கிலுள்ள தரிசு நிலங்கள் எமது மக்களின் உடனடித் தேவைக்குக் கூடப் போதுமானதாக இல்லை. கடந்த 20 வருட காலமாக வடக்கு — கிழக்கு மக்களுக்கு எந்தவிதமான



படிப்பகம்

www.padippakam.com

நிலப் பகிர்வும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கு — கிழக்கில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்க வேண்டியுள்ளது. இவர்களுக்குப் புதுவாழ்வு வழங்குவதற்கும் எமது சந்ததியின் எதிர்காலத் தேவைக்கும் தற்போது இனங்காணப்பட்டுள்ள வடக்கு — கிழக்கிலுள்ள தரிசு நிலமான சுமார் 27,000 ஹெக்டெயர் நிலம் எமக்குத் தேவைக்குப் போதுமானதாக இல்லை. ஏற்கெனவே திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களின் ஊடாகப் பல ஆயிரக்கணக்கான ஹெக்டயர் நிலங்களை இழந்திருக்கின்றோம் என்பதை இச்சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, காணிகளின் நிலை தொடர்பாக நான் முக்கியமான ஒரு விடயத்தை இங்கு கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்த ஏற்பாட்டுக்கமைய, இரண்டுக்கு மேற்பட்ட மாகாணங்களுக்கிடையில் இருந்து பாயும் ஆற்று நீரைக் கொண்டு மறித்துக் கட்டிய குளங்களில் இருந்து நீர் பாய்ச்சப்படும் எல்லையளவைக் கொண்ட நிலங்கள் அனைத்தும் "Inter Provincial Scheme" முக்குள் கொண்டு வரப்பட்டு மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. மாகாணங்களிலுள்ள மேற்படிக் காணிகளை மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் ஏற்பாடானது, அம்மாகாண மக்களின் காணி தொடர்பான பாதுகாப்பை உத்தரவாதம் செய்யாத நிலையையே உருவாக்கியுள்ளது. இது அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்த ஏற்பாட்டின் பாரிய குறைபாடாகும். மேற்படி திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் ஏக்கர்களிலிருந்து 32,000 பேருக்குக் காணித் துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் கிட்டத்தட்ட 70 சதவீதமானோர் சிங்கள மக்களாகும். அத்துமீறிய குடியேற்றங்கள் காரணமாக வடக்கு — கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் இழந்த காணிகள் என்று ஒருபுறத்திலும், மறுபுறத்தில் இத்திட்டங்களின் ஊடாக வளமான பயிர்ச்செய்கைக் காணிகளையும் எம்மக்கள் இழந்திருக்கின்றார்கள். அதிகாரப் பகிர்ந்தளிப்பின் போது, பிராந்தியங்களின் அதிகாரத்தின் கீழேயேதான் காணி தொடர்பான விடயங்கள் அனைத்தும் வர வேண்டும் என்பதை எமது கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த காலச் சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இணங்கிக் கொண்டதன் அடிப்படையில் ஒருபோதும் சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் பகுதிகளிலே இருந்து விலக்கிக்கொள்ளப்படவில்லை. இந்நிலைமையை இன்றைய தலைமைகள் மீள்பரிசிலனை செய்ய வேண்டும். 1948 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட சிங்களக் குடியேற்றங்களை வடக்கு — கிழக்கை விட்டுத் திருப்பியழைப்பதன் ஊடாக, கடந்த கால அரசுகளால் தமிழ்ப் பகுதிகளில் செய்யப்பட்ட பாரிய நில அபகரிப்பின் ஊடான அபகீர்த்தியில் இருந்து மீள்வதற்கு அரசியல் தலைமைகள் முன்வரவேண்டும் என்பதுடன், நிலம் தொடர்பான பிரச்சினையில் அநீதி இழைக்கப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் முன்வர வேண்டுமென நான் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கு மாகாண காணி நிர்வாகத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைக் கௌரவ காணி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசால் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம், வடக்கு — கிழக்கில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உதவிக் காணி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வருடாந்தச் சம்பள அதிகரிப்புக்கள், கடந்த மூன்று வருடங்களாக வழங்கப்படவில்லை. இவர்கள் மாகாண அரசின் நிர்வாகத்திற்குள் இருப்பதனால், மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு முறையிட்டும், இதுவரையும் சம்பள அதிகரிப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் சட்டத்தின் 42/87 இன் 33 ஆம் பிரிவின் 8 ஆம் உப பிரிவின் கீழ், சம்பள அதிகரிப்பு அல்லது குறைப்புச் செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இருந்தும் இவர்களது விடயத்தில் இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. இந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, இந்த உதவிக் காணி ஆணையாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

வடக்கு — கிழக்குப் பகுதியில் அம்பாறை, வவுனியா, திருகோணமலை போன்ற மாவட்டங்களுக்கான உதவிக் காணி ஆணையாளர்கள் நியமனம் செய்யப்படாமல் அப்பதவிகள் வெற்றிடமாகவேயுள்ளன. இதை விட ஒவ்வொரு பிரதேசச் செயலகப் பிரிவிற்கும் காணி அலுவலர் நியமிக்கப்படல் வேண்டும். ஆனால், வடக்கு — கிழக்கிலுள்ள 72 பிரதேசச் செயலகங்களில் 27 காணி அலுவலர்களே கடமையிலுள்ளனர். இதனைவிட வெளிக்களப் போதனாசிரியர்களுக்கான 60 வெற்றிடங்களும் நிரப்பப்படாதுள்ளன. இவற்றுடன் காணிப் பயன்பாட்டு உத்தியோகத்தர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற அடிப்படையில் நியமிக்க வேண்டும். வடக்கு — கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில், யாழ் மாவட்டத்தைத் தவிர ஏனைய ஏழு மாவட்டங்களில் இதற்கான பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. மேற்படி ஆளணிப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய, சம்பள ஆளணிக் கமிசனுக்குக் கடந்த ஒரு வருட காலமாக முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது விடயத்திலும் கௌரவ அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அண்மையில் ' ஜெயபூமி ' காணி உறுதிப் பத்திரங்கள் நாடு பூராவும் வழங்கப்பட்டன. அப்பத்திரத்தின் முன்பக்கம் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு, தனிச் சிங்களத்திலேயே அச்சிடப்பட்டுள்ளது. இதனைக் கௌரவ உறுப்பினர் துரைராஜசிங்கம் அவர்களும் இந்தச் சபையிலே அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார். தமிழ்மொழிப் புறக்கணிப்பானது தொடர் கதையாகவேயுள்ளது. இது தொடர்பாக நாடு பல தடவை இந்த அவையினுள்ளும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு விவசாய நாடாக இருந்த இலங்கை, இன்று இலகு கைத்தொழில் நாடாக மாறிக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் விவசாயத் துறையில் இன்றைய நிலைமை குறித்துப் பேசலாம் என எண்ணுகின்றேன். வடக்கு — கிழக்கிலுள்ள மக்கள் விவசாயத்தையே வருமானந் தரும் தொழிலாகக் கொண்டிருந்தனர். இன்றைய யுத்தம் காரணமாகவும், விவசாய உள்ளீட்டுப் பொருள்களின் தட்டுப்பாடு, விலையுயர்வு காரணமாகவும், வடக்கு — கிழக்கின் பெருளமவு செழிப்பான விவசாய நிலங்கள், இன்று தரிசு நிலங்களாக பாழ்பட்டுக் கிடக்கின்றன. யாழ்குடாநாட்டின் செழிப்பான செம்மண் பிரதேசங்கள், இன்று யுத்த களங்களாக மாறியுள்ளன. குண்டு வீச்சுக்களாலும், ' ஷெல் ' வீச்சுக்களாலும் இவ் விவசாய நிலங்களில் கிணறுகள் போல் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. இந்தோ — சீன நாடுகளான வியட்நாம், கம்போடியாவில் நடந்தது போல, இங்கும் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினராலும் விவசாய நிலங்களில் கண்ணி வெடிகள், மிதி வெடிகள், பொறி வெடிகள் போன்றவை விதைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அறுவடைகளாக மனித தசைகளும், இரத்தமும், கண்ணீருமே பெறப்படும் நிலைமை உள்ளது. உழவு இயந்திரங்களும் எருதுகளும் உழுத நிலங்களை, இன்று டாங்கிகளும் புல்டோசர்களும் உழுதுகொண்டிருக்கின்றன. விவசாயிகள் தமது வீடுகளையும் விளைநிலங்களையும் விட்டுவிட்டு உடுத்த உடைகளுடன் அகதிகளாக வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். பலருக்கு உணவு வழங்கிய விவசாயி, இன்று தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் ஒரு வேளை உணவுக்காக அகதி முகாம்களில் இருந்துகொண்டு, நிவாரணம் வழங்குவோரின் கைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

வடக்கு — கிழக்கில் விவசாயம் முழு அளவில் பாதிப்புற அரச காரணமாக இருக்குமேயானால், வடக்கு — கிழக்கில் பெரும் பஞ்சம், பட்டினி நிலை உருவாகும். தெற்கிலும் விவசாயப் பொருள்களின் விலை உயரும் நிலை ஏற்படும். தெற்கில் இருந்தே அனைத்து உணவுப் பொருள்களும் வடக்கு — கிழக்கிற்கு அனுப்பிவைக்கும் நிலையேற்படும். இது அரசின் செலவை மேலும் அதிகரிக்கச் செய்யும். எனவே இது குறித்து அரசு உடனடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என்பதை இச்சபையில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

பாதைச் சீர்கேடுகளாலும் போக்குவரத்து இடர்ப்பாடுகளாலும் தாண்டிக்குளத்தைத் தாண்டிவருவதில் உள்ள சிரமங்களாலும் கிளிநொச்சி, மன்னார், வன்னிப் பகுதிகளில் உற்பத்தியாகும் நெல்லைத் தென்பகுதிக்குக்கொண்டு வந்து சந்தைப்படுத்த முடியாத நிலையுள்ளது. நெல்லைச் சேமித்து வைக்கும் சனல் சாக்குகளுக்கு வடக்கில் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் விவசாயிகள் நெல்லை வீடுகளில் குவித்து வைத்தே பாதுகாக்கின்றார்கள். இவ்வாறு குவித்து வைத்திருப்பதால் நெல் பல வழிகளிலும் வீணாகின்றது.

விவசாயத்திற்கு நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற வளமாக்கிகள் மிக அவசியமானவை. நைதரசன் வளமாக்கிகளில் யூரியா, அமோனியா குளோரைட், அமோனியா சல்பேட் என பல வகையுள்ள போதும் யூரியாவே சிறந்ததாகும். இதனால், யூரியாவையே விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால், யூரியாவை வடக்குக்குக் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஏனைய நைதரசன் வளமாக்கிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கிழக்கிலும் சில பகுதிகளில் இந்நிலையே நிலவுகின்றது. நைதரசன் வளமாக்கிகள் இல்லாவிட்டால், பயிர்கள் செழிப்பாக வளரமாட்டா. இதனால் விளைச்சல் பெருமளவு பாதிக்கப்படும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, பலாலி, வவுனியா, மட்டக்களப்பு விமான நிலையங்களின் விஸ்தரிப்புக்காகவும் வேறு பல இடங்களில் இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காகவும் பெருமளவு விவசாயக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கு இன்னும் சரியான முறையில் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. இவற்றை துரிதமாக வழங்க் அரசு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாற்றுக் காணிகள் வழங்க அரசு முன்வர வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

யூரியா உட்பட இரசாயன உரங்களின் விலை இந்த நாட்டில் அதிகமாக இருப்பது, விவசாய வளர்ச்சியைப் பாதிக்கும். இந்த வரவு செலவுத் திட்டத்தினூடாக யூரியாவின் விலை குறைக்கப்பட்டாலும்கூட அக்குறைப்பு மிகவும் குறைவானதாகவே உள்ளது. இதனால், உரப் பாவனை இலங்கை பூராவும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. விவசாயம் இன்று பல வழிகளிலும் உற்பத்திச் செலவு கூடிய, இலாபம் குறைந்த தொழிலாக மாறி வருகின்றது. இதனால் விவசாயிகள் வேறு தொழில்களில் நாட்டம் செலுத்தி வருகின்றனர். கொழும்பு, குருநாகல், கண்டி வீதிகளின் இருமருங்கிலும் பல ஏக்கர் நெற்காணிகள் தரிசு நிலங்களாகிக் கிடப்பதை நாம் காணலாம்.

வடக்கு — கிழக்குப் பகுதிகளுக்கு நல்லின விதைகள், விதை உருளைக்கிழங்கு, பெரிய வெண்காயம் விதைகள் போன்றவை போதிய அளவில் கிடைப்பதில்லை. எனவே, உரிய காலத்தில், உரிய பகுதிகளில் இவை தாராளமாகக் கிடைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளிலாவது விவசாய, காணி ஆராய்ச்சி நிலையங்கள், விதையுற்பத்தி நிலையங்கள், கமநலச் சேவை நிலையங்கள், விவசாயக் களஞ்சியங்கள் போன்றவை நல்ல முறையில் செயற்பட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இலங்கை சுதந்திரம் பெற்றபோது, இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 70 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதி காடாக இருந்தது. தற்போது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 20 வீதத்திற்குக் குறைவான பகுதியிலேயே காடுகள் காணப்படுகின்றன. உலகில் கைத்தொழில் துறையில் முதலாம் இடத்திலுள்ள நாடான ஜப்பானின் மொத்த நிரலப்பரப்பில் 70 வீதத்திற்கு மேற்பட்ட பகுதி இன்னும் காடாகவேயுள்ளது. ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் குறைந்தபட்சம் 25 சதவீதமான பகுதிகளாவது காடுகளாக இருக்கவேண்டுமென விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன. காடு அழிப்பால் சூழல் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனால் வட — தென் துருவ பனிக்கட்டிகள் உருகி, மாலைதீவு போன்ற சிறிய நாடுகள் கடலில் மூழ்கும் ஆபத்து நிலையை எதிர்நோக்குகின்றன. திட்டமிட்ட குடியேற்றங்கள் காரணமாகவும் மர முந்திரிகைத் தோட்டங்கள், மகாவலி, மாதுறு ஓயா, கல்லோயாத் திட்டங்கள் காரணமாகவும் யுத்தத்தின் காரணமாகவும் வடக்கு — கிழக்கிலுள்ள காடுகளும் மர வளமும் பெருமளவில் அழிக்கப்பட்டுவிட்டன. இதனை ஈடு செய்ய மரநடுகைத் திட்டங்கள் பெருமளவில் அரசினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

யுத்தத் தேவைகளுக்காகத் தென்னை, பனை, காட்டு மரங்கள் என்பன வடக்கு — கிழக்கில் இரு தரப்பினாலும் அழிக்கப்படுகின்றன. மின்சாரம் மற்றும் எரிபொருள்கள் வடக்கில் இல்லாமலும் தட்டுப்பாடாகவும் இருப்பதனாலும் சமையல் வாயு, வடக்குக்கு முற்றாகவே அனுப்பப்படாமையினாலும் சமையலுக்கு விறகையே நம்பியிருக்கவேண்டிய நிலைமை அங்குள்ள மக்களுக்கு இருக்கின்றது. இதனால் விறகுக்காகப் பெருமளவு காடுகள் அழிக்கப்படுகின்றன. இதைவிட, சில அரசியல்வாதிகள், மற்றும் சமூக விரோதிகள் பொலிசாரின் உதவியுடன் நாடு பூராவும் சட்ட விரோத மர வியாபாரம், மற்றும் காடுகளில் கஞ்சாப் பயிர்ச் செய்கை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளமையும் காடழிவுக்குக் காரணமாக இருக்கின்றது.

உமி, மரத்தூள், தும்புத்தூள், காய்ந்த சாணம், உயிர்வாயு, கரும்புச் சக்கை போன்றவற்றை விறகுக்கு மாற்றீடாக உபயோகிக்கக் கூடிய விதத்தில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வடக்கு — கிழக்கு உட்பட நாடு பூராவும் எல். பீ. காஸ் — சமையல் வாயு — தட்டுப்பாட்டின்றிக் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இதன் மூலம் நாட்டின் வனவளத்தைப் பெருமளவில் பாதுகாக்க முடியுமென்று கூறிக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஆர். இராமமூர்த்தி அவர்கள் கலாசார மத விவகார அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 24, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ආර්. රාමමූර්ති මහතා
(திரு. ஆர். ராமமூர்த்தி)
(Mr. R. Ramamoorthy)

கௌரவ தவிசாளர் அவர்களே, பண்பாட்டு, சமய அலுவல்கள் அமைச்சின் நிதியொதுக்கீட்டு விவாதத்திலே பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓர் இனம் தன்னைத் தேசிய இனமாக அடையாளங்காட்டி, வெளியுலகுக்கும் தன்னைத் தேசிய இனம் என்று பிரகடனப்படுத்துவதற்கு, அதற்கென்று ஒரு வரைவிலக்கணம் உண்டு. அவையாவன, மொழி, கலை, கலாசாரம், தனித்துவமான பிரதேசம், பொருளாதாரம் என்பனவாகும். ஓர் இனம் இவையனைத்தையும் ஒருங்கே கொண்டிருந்தால், அது ஒரு தேசிய இனமாகும். இந்நாட்டில் தமிழ்பேசும் இனமும் ஒரு தேசிய இனம் என்ற அந்தஸ்தைக் கொண்டுள்ளது. தேசிய இனம் என்ற அந்த அந்தஸ்தைச் சிதைப்பதற்குப் பல தடவைகள் இனவாதிகள் முயற்சித்துள்ளார்கள். இம்முயற்சியின் வடுக்களை ஒவ்வோர் அம்சத்திலும் காணலாம். தமிழ் இனம் தனது தனித்துவத்தைச் சிதைக்காமல் பல தடைகளைத் தாண்டி வந்துள்ளது. ஆனால், தற்போது நடைபெற்று வரும் கொடூரமான யுத்தத்தினால், இது சிதைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு எழுந்துள்ளது. தொடர்ச்சியாக நடைபெற்று வரும் குண்டுவீச்சினாலும் 'ஷெல்' தாக்குதலினாலும் கிழக்கு மாகாணத்திலுள்ள பல இந்து ஆலயங்கள், கிறிஸ்தவத் தேவாலயங்கள் என்பன சேதமுற்றுள்ளன. அதன் விபரங்கள் சிலவற்றை இச்சபையில் சமர்ப்பிக்கின்றேன். இவ்விபரங்கள் அனைத்தும் 'ஹன்சாட்' டில் இடம்பெற அனுமதிக்குமாறு சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

சில தினங்களுக்கு முன்பு இந்துக் குருமார்களும் கிறிஸ்தவப் பாதிரிமார்களும் கைது செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் தமது அடையாள அட்டைகளையும் ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்தும், அவற்றைப் பாதுகாப்புப் படையினர் உதாசீனம் செய்து, பூநூல்கள் அறுக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. பாதுகாப்பு என்ற பெயரில் தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் கெடுபிடிகள், இன்று புதியதொரு பரிமாணத்தை அடைந்துள்ளதையே இவ்வாறான கைதுகளும் நடவடிக்கைகளும் கட்டியம் கூறுகின்றன. தமிழில் ஒரு முதுமொழி உண்டு. அது "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதாகும். இப்படி அவர்கள் ஆலயங்களோடு பின்னிப் பிணைக்கப்பட்டவர்கள். ஆண்டவர்களுக்குப் பாத பூசை செய்யும் இவர்களை இம்சைப்படுத்துவதோ, அவமதிப்பதோ, ஒரு சமூகத்தின் மலினப்படுத்தப்பட்ட உணர்வுகளைத் தூண்டி விடுகின்றன. பிராமணக் குருக்களின் பூநூல்கள் அறுக்கப்பட்டதை, இந்நாட்டின் இரண்டு சமூகங்களுக்கிடையிலான இணைப்பின் பாலத்தை இழுத்து அறுத்ததாகவே கருத முடியும். இப்படியான சமயக் குரவர்களையும் வணக்கத் தலங்களையும் இம்சைப்படுத்துவதனால் ஏற்பட்ட அனர்த்தங்களை நாம் எமது அயல் நாடாகிய இந்தியாவில் கண்டு கொண்டிருக்கின்றோம் அல்லவா.

இந்தியா 70 கோடி இந்து மக்களையும் பத்துக் கோடிக்கும் குறைவான முஸ்லிம் மக்களையும் கொண்டுள்ள நாடு. இந்தப் பிராந்தியத்திலேயே ஒரு மதச் சார்பற்ற நாடாகிய இந்தியா திகழ்வதை நாம் ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும். மதத்தின் பெயரால் அரசியல் நடத்துவதையும் அரசாங்க மதமாக ஒரு மதத்தைப் பிரகடனப்படுத்துவதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டுள்ள இனத்தின் மதிக்கப்படக் கூடிய வணக்கத் தலங்களைப் பாதுகாப்புப் படையினர் தமது பாதுகாப்பு அரணாகப் பாவிப்பதும் அவற்றில் குடியிருப்பதும் கண்டிக்கப்பட வேண்டும். இதை நான் இப்பாராளுமன்றத்தில் முன்பும் ஒரு முறை சுட்டிக்காட்டியுள்ளேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்நாட்டில் இரண்டு இனங்களுக்கிடையே இனவிரிசல் ஏற்பட்டுள்ளது. இலக்கியத்தால் இனங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வை வளர்க்க முடியும் என்பது எனது அபிப்பிராயமாகும். தென்பகுதியில் காலியிலுள்ள ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையின் தன்மை வடிவம் வேறாக இருக்கும் ; யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவில் அல்லது வல்வெட்டித்துறையிலோ இருக்கக்கூடிய பிரச்சினை, ஒடுக்குமுறை வேறாக இருக்கும். எனவே, இவை இரண்டின் தன்மைகளையும் இரு இனங்களும் புரிந்து கொள்வதற்கு, அவ்வப் பகுதிகளிலுள்ள இலக்கியங்களை மற்றவர் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். இதனூடாக இரண்டு இனங்களுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும். அத்தோடு இந்நாட்டின் இரண்டு இனங்களுக்குமுள்ள தலைசிறந்த இலக்கியங்களை மொழிபெயர்க்க வேண்டும் என்றும் கௌரவ சபாநாயகர் அவர்களைக் கேட்டு கொள்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு கலாசார அமைச்சின் பொறுப்புக்கள் இதுவரையும் வழங்கப்படவில்லை. அங்கு கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு பெயரளவில் இருக்கின்றதே தவிர, அதற்குக் கலாசார அமைச்சின் பொறுப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே, இவ்வமைச்சு பெயரளவில் இருப்பதைத் தவிர்த்து, வடக்கு — கிழக்கு மாகாணங்களில் அவ்வமைச்சு செயற்படுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, கிராமங்களிலும் நகரங்களிலும் இருக்கும் மன்றங்கள், சங்கங்கள் என்பவற்றுக்கு அவற்றின் கலாசார பண்புகளுக்கும் செயல்களுக்கும் எற்ப, அவைகளுக்கு நிதியுதவி வழங்க வேண்டும். மாவட்டம் தோறும் இருக்கும் கலாசார பேரவைகளுக்கு உதவிகள் வழங்கி அவற்றின் நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் கலாசார நடவடிக்கைகள் செயலற்றிருப்தற்கு அரசின் புறக்கணிப்பு நிலையே காரணமாகும்.

மு. ப. 10.00

இச்சபையில் நான் உரையாற்றிக்கொண்டிருக்கும் இவ் வேளையில், இந்து, சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'தமிழ் இலக்கிய விமர்சனத்தின் இன்றைய போக்குகள்' என்ற தலையங்கத்தில் இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் கருத்தரங்கொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். இதை நான் மிகவும் ஆவலுடன் வரவேற்கிறேன். இப்படியான கருத்தரங்குகள் இன்றைய காலகட்டதில் அவசியமானதும் தேவையானதும்கூட. ஆனால் "கரடியார் பிறை கண்டது போல" எப்போதாவது இருந்துவிட்டு இப்படியான நிகழ்சிசிகள் நடக்காமல், அவை ஒழுங்குபடுத்தப்பட்டு தொடர்சியாக நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயுதத்தால் சாதிக்க முடியாத சாதனைகளைப் பேனாக்கள் சாதித்த வரலாறுகள் எமக்கு முன்னே இருக்கின்றன. எனவே ஆயுதத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பேனாக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இச்சபையில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது இனத்தின் தொடர்ச்சியான அவலங்களையும் அல்லல்களையும் பலஸ்தீனக் கவிதை வரிகளோடு ஒப்பிட்டுக் காட்டி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

"கசந்து போனதேசம்
மட்கி வரும் இலைகள்
பிளவுண்ட உதடுகள்
புல்வெளியில்
உறைந்து போன இரத்தம்
கருவாய் உருவானபோதே
புதைக்கப்பட்ட குழந்தை
நெளிந்துபோன பித்தளை வளையங்கள்
கிழிக்கப்பட்ட புன்னகை
ஒவ்வொரு மரத்திலும்
ஆணியில் அறையப்பட்ட வானம்பாடிகள்
வானத்தைப் பிரதிபலிக்கும் நதிகள்
நதிகளில் புலிகளின் உறுமல்
மழைக்காலம் மண்ணின் நிறத்தை
மீட்டுத் தருமா?
வேதனை என்னை இன்னும்
எரிப்பது எத்தனை நாளோ?

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எஸ். சிவதாசன் அவர்கள் வெளிநாட்டு அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 24, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

එස්. සිවදාසන් මහතා
(திரு. எஸ். சிவதாசன்)
(Mr. S. Sivathasan)

Mr. Deputy Chairman. I am really glad to follow one of our most veteran Members of this House, the Hon. Lakshman Jayakody. The Ministry of Foreign Affairs is a very important Ministry. I call it a most important Ministry because all other Ministries are linked to it. Well Sir, a foreign policy, in the words of the late illustrious Prime Minister of India, Jawaharlal Nehru, is an extension of the national interest of a country. Today this Ministry is playing an important role with this Budget speaking of foreign investment, foreign trade and foreign employment.

Sir, up to now we have been listening to very elequent speeches of hon. Members who really know tis subject , starting from Mr. Anura Bandaranaike. Thoguh we are a small country, we can claim with pride that our country has earned a place, a name and a reputation the world over. But, Sir, there are certain other aspects which I would deal with mainly, as Mr. Anura Bandaranaike mentioned in his speech, our relationship with our immediate neighbour, India. The PA in its election manifesto has very clearly stated that the relationship with India should be improved and should be built. In the words of Mr. Anura Bandaranaike, it becomes the corner stone of our foreign policy. Sir, in all our activities India has been involved and it has been helpful. Our relationship with India is many sided — our cultural relationship, our political relationship. Even in tregard to our own security, India has been very helpful. There was a time when India came to the rescus'e of Sri Lanka with the Indo Lanka Accord of 1987 which tried to helpour country to find a solution to the ethnic problem which hasbecome a big cancer in this country. It was after that the Thirtenth Amendment to the Constitution was introduced and the Fovincial Councils System was set up. In this process India lost nt only in money and material, but lives of thousands of its valint soldiers. Well, sir, even at this stage, it is not that I say that Idia should be permitted t oa bully, but as a friendly neighhour t could help our country to resolve our problems.

Another point I wuld mention is about Non-Governmental Organizations that hve been doing quite a lot of work in the North-East like the IRC, the UNHCR, the FORUT, the OXFAM, the Save the Childrn, Redd Barna and the French Medical organization. Well, Sr, all of us are aware and the Hon. Foreign Minister is also welaware about the part these organizations played-mainly the IRC which was very helpful in the transport of food, other esserial medicines and the transport of needy passnegers, very sicly patients who had to be brought to either Trincomalee or Colmbo for medical attention as these facilities are totally lacking i the North East. The UNHCR helped a number of our displced people. Even, those people who went to India as refugees wre brought to Trincomalee and the UNHCR helped in re-settlin them in various areas.

Well, today thi has become a problem. There is a prestige battle between the lovemment or the Ministry of Foreign Affairs and these organizions. Even in today's papers Hon. Dharmasiri Senanayake, Minier of Information, Meida, Tourism and Aviation had said that forgn countries have pledged to donate Rs. 52

www.padippakam.com

billion for rehabilitation and reconstruction of the war torn areas of the North-East. Sir, while welcoming this, for the last 3-4years we know that foreign countries were prepared to give very large sums of money for rehabilitation and reconstruction of these areas. But nothing meaningful has been done in this direction. Sir, today the biggest bropblem that the people, especially of the North face is that in these areas, which have been captured or taken over by the armed froces, no civilians are living there. Most of them are eithere in the Thenmarachchi or the Vadamarachchi area or in Kilinochchi.

Sir, yesterday, I was able to read a letter, a relative of mine has written to his daughter, which said that for four days they had to walk a fair distance without any food, exposing themselves to bad weather and heavy, rain to reach Mirusulil. Well, Sir, Government officials, even high officials in Colombo whom we meet, are unaware as to where their family members are, their wives and children. Executive officers, SLAS officers, class I officers whom I know are unable to find the whereabouts of their kith and kin. In such a situation, it is very necessary that foreign funds are made use of meaningfully for the rehabilitation of these people, to feed them, at least to put up temporarysheds which work some of these NGOs were doing. These NGOs should be allowed to continue such work to help thses people. Well, of course, I do not say that the Government should give up its role, its supervisory role.

Therefore, Sir, I oly urge the Hon. Minsiter to see that steps are taken to alleviate their sufferings and that monies granted by foreign countries or donated by foreign countries are used meaningfully. Thank you, Sir.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஆர். இராமமூர்த்தி அவர்கள் நீர்ப்பாசன, மின்சக்தி, எரிபொருள் அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 27, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ආර්. රාමමූර්ති මහතා
*(திரு. ஆர். ராமமூர்த்தி)*
**(Mr. R. Ramamoorthy)**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீர்ப்பாசன, மின்வலு, சக்தி அமைச்சுக்கான நிதியொதுக்கீடுகளின் மீதான விவாதத்தில் நானும் சில கருத்துக்களைக் கூறி வைக்கலாமென்று எண்ணுகின்றேன். இச்சபையில் ஒவ்வோர் அமைச்சின் மீதான விவாதத்திலும் பேச வேண்டிய தேவைகள், பேச வேண்டிய மரபு, ஒரு சடங்காகவே — சம்பிரதாயமாகவே — மாறியிருப்பதாக நான் கருத இடமுண்டு. ஏனெனில், இந்த அமைச்சின் விவாதத்திலும் இதுபோன்று ஏனைய அமைச்சுக்களின் விவாதங்களிலும் இன்றைய காலகட்டத்தில் பேசுவதில் எவ்வித நன்மையும் வடக்கு — கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படப்போவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக எமக்கு முன்னால் பூதாகாரமாய் நிற்கிறது யுத்தப் பிசாசு! அதற்கு நாம் ஒவ்வொரு நாளும் எமது நாட்டு இளைஞர்களைத் தாரைவார்த்துக் கொண்டும் பலியிட்டுக் கொண்டும் இருக்கும்போது, இந்த அமைச்சுக்களால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை எப்படி நாம் எமது வடக்கு — கிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு விளங்கப்படுத்த முடியும்? அதிலும், இன்று யுத்தம் உக்கிரத் தன்மையை அடைந்திருக்கும் நிலையில், அப்பகுதிகளிலிருந்து நான்கு இலட்சத்திற்கும் மேலானவர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு அகதிகளாக அல்லுறும் வேளையில்!

வடக்கு வாழ் மக்கள் சில மாதங்களுக்கு முன்பு— அதாவது யுத்தம் உக்கிரத் தன்மையை அடைவதற்கு முன்பு, எப்படித் தமது மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தார்களென்று பார்ப்போமானால், காற்றாடிகளில் சைக்கிள் டைனமோவை இணைத்துச் சுற்றுவதன் மூலமும் சைக்கிளிலுள்ள டைனமோவைச் சுற்றுவதன் மூலமும் மின்சாரத்தைப் பெற்று, வானொலிப் பெட்டியை இயங்க வைத்து செய்திகளையும் ஏனைய விடயதானங்களையும் கேட்டறிந்தார்கள் என்பதைக் கூறவேண்டியிருக்கின்றது. இம் முயற்சியானது அம்மக்கள் தமது சிறிய தேவைகளைப் பூர்த்தி செய்ய எடுத்துக்கொண்ட ஒரு முன்முயற்சியே.

இன்று தலைநகரிலும் தென் பகுதியிலும் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள மக்கள் கம்பியூட்டர் மயமான ஓர் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் வேளையில், அவர்களால் எப்படி வடபகுதி மக்களின் இன்னல்களையும் அவலங்களையும் புரிந்துகொள்ள முடியும்? இந் நாட்டின் தென் பகுதியிலுள்ள மக்களும் நகரங்களும் கம்பியூட்டர் மயமாக மாறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் வட பகுதியில் இருக்கும் நகரங்களும் அப்பகுதியில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களும் கற்காலத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கின் மொத்த மின்சக்தித் தேவை, போர் தொடங்குவதற்கு முன் ஐபது " மெகா வாட் " ஆக இருந்து வந்துள்ளது. இன்று அது இருபது "மகா வாட் " ஆகக் குறைந்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் அங்கு மின்சார விநியோகத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குக் கணிசமானளவு தொகையைச் செலவிட வேண்டியுள்ளது. இதில் முக்கியமாக, முற்றாக அழிந்துபோயுள்ள சுன்னாகம் மின் உற்பத்தி நிலயம் குறிப்பிடத்தக்கது. வடக்கு — கிழக்கில் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கேற்ப மின்சாரத் தேவையைக் கணக்கிட வேண்டியுள்ளது. இந்த மின்சாரத் தேவையைத் தொழில் துறை, புலம்பெயர்வு, குடியேற்றங்கள், மக்கள் தொகை விரிவு என்பவற்றை வைத்தே நாம் கணிப்பிடுக் கூற முடியும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு நாடு கைத்தொழில் உட்பட சகல துறைகளிலும் துரித வளர்ச்சியடைய வேண்டுமாயின், நாடு பூராவும் தடையற்ற மின்சக்தி விநியோகம் மிக அவசியமாகும். இதையுணர்ந்த சோவியத் புரட்சியின் பிதா மகனான " லெனின் " 1917 இல் புரட்சிக்குப் பின் சோவியத் யூனியன் பூராவும் மின் நிலயங்களை நிறுவினார். இதற்காக மத அமைப்புக்களுக்குச் சொந்தமாகவிருந்த பாரிய கட்டடங்களைக் கூடச் சுவீகரித்து அவற்றில் மின் நிலையங்களை நிறுவினார். இதன்மூலம் குறுகிய காலத்தில், அதாவது 25 வருடங்களில் சோவியத் யூனியன் ஒரு வல்லரசாகவும் கைத்தொழில் நாடாகவும் மாறியது. புரட்சிக்கு முன்னர் சோவியத் யூனியன் ஒரு வறிய விவசாய நாடாகவே விளங்கியது.

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது நாடான இலங்கையும் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்று ஆசியாவில் கைத்தொழில் நாடாக மாறவேண்டுமென்பதே நம்மெல்லோருடைய ஆவாவாகும். இந் நோக்கத்தை நாம் விரைவில் அடையவேண்டுமாயின், நாடு புராவும் மின் வெட்டின்றி மின்சாரத்தை வழங்க வேண்டும். வருடாந்தம் எமது மின் தேவை மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இதைப் பூர்த்தி செய்வதற்கு நாம் தொடர்ந்து நீர் மீன்சாரத்தை மட்டும் நம்பியிருக்க முடியாது. டீசல், நிலக்கரி போன்றவற்றின் மூலமாக இயங்கும் அனல் மின் நிலையங்களையும் அமைக்க வேண்டும்.

வடக்கில் இன்று முழுமையாகவே மின் விநியோகம் சீரற்றுப் போயுள்ளது. கிழக்கிலும் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் இல்லை. இதனால் கல்வி, விவசாயம், கைத்தொழில் உட்பட மக்களின் அன்றாட வாழ்க்கை பெரும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. வடக்கில் படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலாவது அரசு உடனடியாக மின் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும். கடந்த அரசாங்கத்தினால் தீவுப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. தீவுப்பகுதிகளுக்கென ஒதுக்கப்பட்ட ' ஜெனரேட்டர்கள் ' எங்கே என்று தெரியாதுள்ளது. எனவே, அப்பகுதியிலுள்ள ஒவ்வொரு தீவுக்கும் மின்சாரத்தை வழங்க அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அத்துடன், வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டிற்கு வெளியேயுள்ள பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் அரசு எரிபொருளையும் 'ஜெனரேட்டர்' களையும் வழங்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, மன்னார் மாவட்டம் இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டமாகத் தொடர்ந்தும் புறக்கணிக்கப் பட்டு வருகின்றது. மன்னார் நகரின் முக்கிய பகுதிகளுக்கு இரவில் சில மணித்தியாலயங்கள் மாத்திரம் ' ஜெனரேட்டர் ' மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. அதுவும் அடிக்கடி தடைபடுகின்றது. மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு யுத்தத்திற்கு முன்னர்கூட மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மன்னார் தீவு இந்தியாவுக்கு மிக அருகில் இருப்பதால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியைக் கொண்டு தலைமன்னார் துறைக்கு நிலக்கரி மூலம் இயங்கும் ஓர் அனல் மின் நிலையத்தைச் செயற்பட வைக்க முடியும். இதன் மூலம் முழு மன்னார் மாவட்டத்தினதும் மின்சாரத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். டீசல் மின் நிலையங்களைவிட, நிலக்கரி மின்நிலையங்கள் இலாபகரமானவை. இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தஞ்சாவூர், நாகபட்டினம் ஆகிய மாவட்டங்களில்


படிப்பகம்

www.padippakam.com

பெருமளவில் மசகு எண்ணெய்யும் எரிவாயுவும் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். வருங்காலத்தில் அவற்றை இந்தியாவிலிருந்து பெற்று, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அனல் மின் நிலையங்களை இயங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்படலாம். இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதிகளிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் மீண்டும் எண்ணெய், நிலவாயு ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டு வருவதனால் வருங்காலத்தில் விறகுத் தட்டுப்பாடு ஏற்படலாம். இதற்கு விறகைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் அடுப்புக்களான உமிஅடுப்பு, மரத்தூள் அடுப்பு போன்றவற்றை அரசு மலிவு விலையில் பொது மக்களுக்கு வழங்கி, இவ்வகை அடுப்புக்களைப் பொது மக்கள் பாவிக்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன், வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் மரத்தூள், உமி, தும்புத்தூள், கரும்புச் சக்கை போன்றவற்றைக் கெட்டியான விறகாக மாற்றிப் பாவனைக்கு விடவேண்டும். அத்துடன், விறக்குக்காக தரிசு நிலங்களில் இப்பில் இப்பில், சவுக்கு போன்ற வேகமாக வளரும் மரங்களை வளர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஓ. வ. 11.15

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் உள்ளதைப் போன்று சாணத்தைக் காயவைத்து விறகாகப் பயன்படுத்தும் நிலை எமது நாட்டிலும் வருங்காலத்தில் ஏற்படலாம். கால்நடைக் கழிவுகள், பண்ணைக் கழிவுகளிலிருந்து உயிர் வாயு (BIO GAS) உற்பத்தி செய்யும் தொழில் நுட்பம் இந்தியாவிலும் சீனாவிலும் நன்கு வளர்ச்சி யடைந்துள்ளது. மெதேன் வாயு, வாகனங்களை இயக்கவும் சமையல் வாயுவாகவும் பயன்படுகின்றது.

வடக்கு — கிழக்கு உட்பட நாடு பூராவும் திரவ பெற்றோலிய வாயு தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழி செய்ய வேண்டும். இதன்மூலம் விறகுப் பாவனையைக் குறைக்க முடியும். தாய்லாந்தில் பெற்றோல் காஸில்தான் அதிகளவு வாகனங்கள் ஓடுகின்றன. பெற்றோல் காஸ், டீசல் என்பன பெற்றோலை விடவும் மலிவானவை. வாகனங்களுக்குப் பெற்றோல் காஸ் நிரப்பு நிலையங்கள் நாட்டில் அதிகம் அமைக்கப்படல் வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, எம்து நாட்டில் நீண்ட கடற் கரைகள் இருப்பதனால், அக்கரைகளில் உண்டாகும் கடலலைகளிலிருந்து கணிசமான அளவு மின்சாரம் தயாரிக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன், திருகோணமலைக்கருகிலுள்ள கடல் நீரின் வெப்பநிலைகளில் பாரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. இந்த வெப்பநிலை வித்தியாசத்தைக்கொண்டு திருமலைக் கடலில் மின்னுற்பத்தி செய்யும் வாய்ப்புள்ளது. அரசு இது குறித்து உரிய ஆலோசனைகளை மேற்கொள்வதுடன் நடவடிக்கை களையும் எடுக்கவேண்டுமென்று இச்சபையில் கேட்டுக்கொள்ளுகின்றேன். காங்கேசன்துறை, திருமலை, ஒலுவில் துறைமுகங்களுக்கருகே நிலக்கரி அல்லது டீசலில் இயங்கும் அனல் மின் நிலையங்களை அமைக்க வேண்டும். திருமலையில் இவ்வாறான நிலையம் ஒன்று அமைக்கப்பட வுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அனல் மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

காற்று நன்கு வீசும் பகுதிகளில் — குறிப்பாக கடற்கரையோரங் களில் — காற்றாடிகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் வாய்ப்புள்ளது. இந்தியாவில் தமிழ் நாட்டிலும் குஜராத்திலும் காற்று மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்றனர். ஸ்கண்டினேவிய நாடுகள், நெதர்லாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் காற்று மூலம் மின்சார உற்பத்தியுடன் நீரிறைக்கும் வேலையையும் செய்கிறார்கள். மலைநாட்டிலுள்ள சிறிய நீர் வீழ்ச்சிகளைக் கொண்டு சிறிய நீர் மின்சார நிலையங்களை ஏற்படுத்து வது இலாபகரமானது. இதன்மூலம் தோட்டப்புற மக்களுக்கும் அயலி லுள்ள கிராம மக்களுக்கும் மலிவான முறையில் மின்சாரம் வழங்கலாம்.

எமது நாடு மத்திய கோட்டுக்கு அண்மையிலுள்ளது. எனவே, எமது நாடானது வருடம் பூராவும் நல்ல சூரிய ஒளி கிடைக்கும் அயன மண்டல நாடாகும். நாம் வருடம் பூராவும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி சூரிய மின்கலங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். மின் விநியோகம் இல்லாத கிராமப் புறங்களிலும் மலைநாட்டிலும் சூரிய மின்சாரம் மிகவும் பயனுள்ளதாகும். மேலும், நகர்ப் புறங்களில் சேரும் குப்பை, கழிவுகள் என்பனவற்றைக் கொண்டும் பழைய ரயர்களைக் கொண்டும் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க முடியும். இதன்மூலம் கழிவுகளையும் பிரயோசனப்படுத்தி இயற்கைச் சூழலையும் பாதுகாக்க முடியும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெளிநாட்டு உதவிகளுடனும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவைகளின் உதவியுடன் புதிய, புதிய பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்பட்டன ; அமைக்கப் பட்டும் வருகின்றன. அத்துடன் இந்த உதவிகள் மூலம் ஏற்கெனவே இருந்த நீர்ப்பாசன அமைப்புக்களும் பெருமளவில் புனரமைக்கப்பட்டன. ஆனால் வடக்கு — கிழக்கில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களோ அல்லது பாரிய புனரமைப்பு வேலைகளோ வெளிநாட்டு உதவியுடன் பெருமளவில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. வடக்கிலும் வெலிஓயாப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் — மகாவலி — மதுறு ஓயா, கல்லோயா — வடக்கு, கிழக்கு மக்களுக்கு உதவும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இவை எமது பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்யும் நோக்குடன் பின்னோக்கித் தள்ளப்பட்டன என்பதும் எமது கருத்து. எம்மை எமது பகுதிகளில் சிறுபான்மை யினராக்கும் எண்ணத்துடனேயே இவை நிறைவேற்றப்பட்டன. மகாவலி கங்கை வடக்கே கிளிநொச்சி வரை திசை திருப்பப்படவுள்ளதாக 20 வருடங்களுக்கு முன்னர் அரசினால் தெரிவிக்கப்பட்டது. இன்று 20 வருடங்களாகியும் வவுனியாவரைகூட மகாவலி திசை திருப்பப்பட வில்லை. அனுராதபுரத்தில் மல்வத்து ஓயாவாகத் தொடங்கி மன்னாரில் அருவி ஆறாக முடிவடையும் ஆற்றில்கூட கொழும்பு அரசாங்கங்கள் நினைத்திருந்தால் மகாவலி நீரைத் திருப்பி விட்டிருக்க முடியும். "மனமுண்டானால் இடமுண்டு" என்று சொல்வார்கள். ஆனால் இங்கே மனமில்லாததால் எதுவுமே நடக்கவில்லை. கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களால் பாரம்பரியமாக அப்பகுதிகளில் விவசாயம் மேற்கொண்டு வந்த தமிழ், முஸ்லிம் விவசாயிகளுக்குக் கிடைத்து வந்த நீரும் சில பகுதிகளில் கிடைக்காமல் போனதுதான் மிச்சம்.

திருகோணமலையில் உள்ள தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் சில பிரச்சினைகள் உள்ளன. அதையும் இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நிரந்தரமான அலுவலகம் என்பது இல்லை. அதனால் அந்த அலுவலகத் துக்கு இடநெருக்கடியும் கஷ்டங்களும் நிறைய உண்டு. ஊழியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது. பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றோரின் பற்றாக்குறையே கூடுதலாகவுள்ளது. உவர்மலைச் சந்தி அனுரா ஜபாம் தொழிற்சாலைக் கருகில் உள்ள காணியைப் பெற்று அலுவலகம் ஒன்று கட்டுவதற்கு அமைச்சு அனுமதி தந்தபோதும், இதுவரை அதற்குரிய நிதி ஒதுக்கீடு களோ அல்லது நடைமுறையில் அதனைச் செய்வதற்கான ஆக்க பூர்வமான வேலைகளோ எதுவும் செய்யப்படவில்லை. எமக்குரிய நீர் வழங்கல் வேலைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்வதற்காக உரிய இயந்திர உபகரணங்கள், வாகன வசதிகள் எதுவுமே இல்லை. இவை பற்றி அரசுக்கு அவர்கள் பலமுறை அறிவித்த போதிலும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

கௌரவ தவிசாளர் அவர்களே, எனக்கு முன் பேசிய பல பாராளுமன்ற உறுப்பினர்கள், குளத் திட்டங்களையும் குள அமைப்புக்களையும் பற்றிக் கூறினார்கள். இவ்வேளையில் நான் சிறு வயதில் படித்த பாடம் ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் அன்று படித்ததை இன்று இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். முன்பு ஒரு முறை அரச சபையில் ஒரு சம்பவம் நடந்ததாக நான் அன்று படித்துள்ளேன். அரச சபையில் புலவர்கள் வீற்றிருக்கின்றார்கள். அரசர் அங்கு வருகின்றார். அப்போது அங்கிருந்த புலவர்கள் அரசரை வாழ்த்துகின்றார்கள். ஒருவர் எழுந்து சந்திரனைப் போன்றவனே என்றும், மற்றவர் எழுந்து, சூரியனைப் போன்றவனே வாழ்க என்றும் வாழ்த்துகின்றார்கள். ஆனால், அங்கிருந்த ஔவைப் பிராட்டியார் என அழைக்கப்படும் ஒரு புலவர் அரசனைப் பார்த்து "வரப்புயர நீர் உயரும்" என வாழ்த்துகின்றார். "வரப்புயர நீர் உயரும், நீருயர நெல் உயரும், நெல்லுயரக் குடி உயரும், குடியுயரக் கோன் உயரும், கோலுயரக் கோன் உயருவான்" என்று அவர், அவருடைய பாடல் மூலம் அந்த அரசனை வாழ்த்துகின்றார்.

எனவே, நாம் இதிலிருந்து ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு — ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு — நீர்ப்பாசனத் திட்டங்களும் நீர்ப்பாசன நடைமுறை அபிவிருத்திகளும் எவ்வளவோ முக்கியமானவை என்பதை விளங்கிக் கொள்கின்றோம் எனக் கூறிக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

**ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. நடராஜா அவர்கள் பாதுகாப்பு அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 29, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.**

[illegible]
(திரு. ஏ. நடராஜா)
(Mr. A. Nadarajah)

கௌரவ தவிசாளர் அவர்களே, யாழ் குடாநாட்டில் யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் நமது உணர்வுகளைத் தெரிவிக்க வேண்டிய கடமை பாக்கிருக்கின்றது. நமது உணர்வுகளையும் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் இருக்கின்றது. யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூழலில் தமிழ்ப் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எவ்வாறு நடந்துகொள்ளுகின்றார்கள், இக்காலத்திற்குத் தேவையான கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்களா என்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கவனிப்பு என்பது பாராளுமன்ற ஜனநாயகத்தில் மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையைத்தான் கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

"பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அரசாங்கத்தால் கருத்தில் கொள்ளப்படும் ; தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று மக்கள் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக நாம் இந்தச் சபையிலே தெரிவிக்கும் கருத்துக்கள், விடுகின்ற கோரிக்கைகள் எந்தளவிற்குக் கவனிக்கப்படுகின்றன என்பதையிட்டுச் சில சந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. ஈ.பீ.டி.பீ. யினராகிய எம்மைப் பொறுத்த வரையில், எவ்வாறான கோரிக்கைகளையும் இங்கே எழுப்பக் கூடிய உரிமை இருக்கிறதென்பதற்காக நாம் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைப்பதில்லை.

இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற யுத்தத்தை, அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தமாக மட்டும் நாம் கருதவில்லை. யாருமே அப்படிக் கருதவும் முடியாது. ஆனால், சிலர் அதனைச் சொல்லுவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். தற்போது நடைபெறுகின்ற யுத்தம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மட்டுமே நடைபெறுவதாக இருந்தால், வடக்கு — கிழக்கிலிருந்து இந்தச் சபைக்கு வருகின்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்படாது. வடக்கு — கிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில்தான் தமது அலுவலகங்களை வைத்துக்கொள்ள முடிகின்றது. அவற்றுக்கும் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பாதுகாப்பைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

அப்படியானால் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மீதும் எங்கிருந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன? யாரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்கள் பாதுகாப்பை நாடவேண்டியிருக்கின்றது என்பதை நாங்கள் எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கின்றது. புலிகளிடமிருந்து தங்கள் உயிருக்கு ஆபத்து நேருமென்று தமிழ்ப் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒவ்வொருவரும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, புலிகளின் ஆயுதங்கள் அரசாங்கத்தை நோக்கி மட்டும் நீட்டப்படவில்லை. இந்த நாட்டின் சகல ஜனநாயக அரசியல் சக்திகளுக்கெதிராகவும் திருப்பப்பட்டிருக்கின்றது. இன்னமும் சொல்லப்போனால், கடந்தகால அரசாங்கத்தோடு புலிகள் போர் நிறுத்தம் செய்தார்கள். ஆனால், ஏனைய தமிழ்க் கட்சிகளோடு ஒருபோதும் புலிகள் போர் நிறுத்தம் செய்யவில்லை. மாறாக, அரசாங்கத்தோடு போர் நிறுத்தம் செய்துகொண்ட காலங்களிலும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மீது ஆயுதப் பிரயோகத்தைப் புலிகள் நடாத்திக்கொண்டிருந்தார்கள். கடந்த அரசாங்க காலத்தில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் கொழும்பில் வைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேபோன்று, இன்றைய அரசாங்கத்தோடு போர் நிறுத்தத்தை அறிவித்திருந்த புலிகள், அவ்வேளையில் கிழக்கு மாகாணத்தில் சக தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களை வேட்டையாடினார்கள். இராணுவத்தினரையும் பொலிஸாரையும் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள். சக தமிழ்க் கட்சி உறுப்பினர்களை நோக்கித் தமது துப்பாக்கிகளால் சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஆக, அரசாங்கத்தோடு மட்டும் எப்போதாவது ஒரு தடவை நிறுத்தம் செய்யக்கூடிய யுத்தத்தையும், தமிழ் அரசியல் கட்சிகளோடு நிறுத்தமே இல்லாத யுத்தத்தையும் புலிகள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, புலிகள் நடத்துகின்ற யுத்தத்தை இன விடுதலைக்கான யுத்தம் என்றோ, யுத்தத்தில் ஏற்படும் வெற்றி தோல்விகளை தமிழர்களைச் சார்ந்த ஒரு விடயமென்றோ நாம் கருதவில்லை. பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தை வற்புறுத்தி யுத்தத்தை நிறுத்துமாறு ஏன் கோரவில்லை என்று சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். யுத்தம் கொடியது என்பதையும் அது அப்பாவி மக்களை நிர்க்கதியாக்கி நிரந்தர அவலத்தில் வீழ்த்திக் கொண்டிருக்கின்றது என்பதையும் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தரப்புக்களில் ஒரு தரப்பிடம் மட்டும் கோரிக்கை விட்டுக் கொண்டிருப்பது அர்த்தமற்றது என்பதையும் நாம் அறிவோம்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புங்கள் என்று நாங்கள் கோரிக்கை விடுத்துக் கொண்டிருந்தோம். புலிகள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் கப்பலைக் கடத்தினார்கள். அவர்கள் அதன் மூலம் கப்பலுக்கு மாலுமிகளாகச் செல்பவர்களையும் அச்சுறுத்தினார்கள். யாழ் குடாநாட்டில் யுத்த நடவடிக்கைகளால் பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று அரசாங்கத்திடம் நாம் கோரிக்கை விடுத்தோம். பாராளுமன்றப் பகிஷ்கரிப்பின் மூலமாக எமது உணர்வினையும் வெளிப்படுத்தினோம். அதற்குப் பின்னர்தான் பிரபாகரன் எமது தலைவரைக் கொலை செய்வதற்காகத் தமது ஆட்களையும் ஆயுதங்களையும் கொழும்புக்கு அனுப்பி வைத்திருந்தார்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு எரிபொருள் பற்றாக்குறை இருக்கின்றது. அங்கு தமிழ் மாணவர்கள் குப்பி விளக்கிலே கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தினால் யாழ் மருத்துவமனை கூட இயங்க முடியாத நிலையில் இருக்கின்றது. யாழ் குடாநாட்டு மக்களுக்கு எரிபொருள்களை அனுப்பி வையுங்கள் என்று நாம் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில்தான் கொழும்பில் உள்ள எரிபொருள் குதங்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். எனவே, புலிகளின் நடவடிக்கைகளை நம்மால் தடுக்க முடியாத போது, அரசாங்கத்தை நோக்கி மட்டும் யுத்தத்தை நிறுத்துங்கள் என்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருப்பது அர்த்தமற்றது என்று நாங்கள் கருதுகின்றோம்.

கொழும்பிலே இடம்பெறுகின்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தமிழ்க் கட்சிகள் கண்டிப்பதில்லை என்று இன்று இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சியின் கௌரவ உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். ஈ.பி.டி.பி. ஐப் பொறுத்த வரையிலே, அவரின் அந்தக் குற்றச்சாட்டு எப்போதுமே பொருந்தாது என்பதை நாங்கள் எதிர்க் கட்சியின் அந்தக் கௌரவ உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஒருவேளை, அவர் எமது கண்டன அறிக்கைகளைப் பத்திரிகைகளிலே படிக்காமல் இருந்திருக்கக் கூடும். எரிபொருள் குதங்கள் தாக்கப்பட்டதனையும் மற்றும் எல்லைக் கிராமங்களிலுள்ள சிங்கள மக்கள் தாக்கப்பட்டதனையும் எமது கட்சியாகிய ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டித்திருந்தது. இன்று வெளிநாட்டிலே தங்கியிருந்து சர்வதேச அமைப்புக்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூட, தான் விடுகின்ற அறிக்கையிலே, புலிகள் சிங்கள மக்களைப் படுகொலை செய்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் என்பதையும் நாங்கள் இவ்வுறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

கடந்த 26 ஆம் திகதி "புலிகள் குரல்" வானொலியில் பிரபாகரன் உரையாற்றியிருக்கின்றார். தற்போதைய நிலையில் போர் நிறுத்தத்திற்கோ, பேச்சுவார்த்தைக்கோ தாம் தயாராகவில்லை என்று அவர் தெரிவித்திருக்கின்றார். இந்த நேரத்தில் போர் நிறுத்தம் செய்யுமாறு கேட்டால் புலிகளுக்கு அது பிடித்தமான விடயமாக இருக்கும் என்று சிலர் நினைத்தார்கள். எனவே, கோரிக்கைகளை விடுத்தார்கள். அவர்களில் சிலர் இனி வாயே திறக்கமாட்டார்கள். புலிகளுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று நாடி பிடித்து அறிந்து கோரிக்கைகளை விடுத்துக் கொண்டிருக்க நாம் தயாராகவில்லை. நாங்கள் உண்மையை நேரடியாகவே கூறுகின்றோம். போரிலே தமக்கு வெற்றி கிடைத்துக் கொண்டிருக்கும் போது புலிகளும் யுத்தத்தை நிறுத்தப் போவதில்லை ; அதேபோல் போரிலே அரசாங்கத் தரப்பிற்கு வெற்றி கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில், அரசாங்கமும் போரை நிறுத்தப் போவதில்லை. அவ்வாறான ஒரு யுத்தத்தை எந்த நாட்டிலும் நடத்தவும் முடியாது.

இன்று யாழ் குடாநாட்டில் அரசாங்கத்தின் கைகள் மேலோங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அரசாங்கத்தைப் பார்த்து, போரை நிறுத்துங்கள் என்று நாங்கள் கோரிக்கை விடுக்க முடியும். ஆனால், புலிகள் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில் போரை நிறுத்துங்கள் என்று யாராலும் கோரிக்கை விடுகின்ற துணிச்சலும் யாருக்கும் இருக்காது. எனவே நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்கள் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்காமல் நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் குறித்தே பேச வேண்டியவர்களாக இருக்கின்றோம். அது குறித்தே அக்கறை கொள்கிறோம்.


படிப்பகம்

www.padippakam.com

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழ் மக்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கைது செய்யப்படுகின்ற வடக்கு — கிழக்கு இளைஞர்களும் யுவதிகளும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களா, இல்லையா என்பதைக் கண்டறிவதற்கு எவ்வாறான நடைமுறை பின்பற்றப்படுகிறது என்று எமக்குத் தெரியவில்லை. சில பொலிஸ் நிலையங்களில் வடக்கு — கிழக்கைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களை ஒரு வார காலத்துக்கு உள்ளே வைத்துவிட்டுத்தான் வெளியே விடவேண்டும் என்பது போன்ற அணுகுமுறை கையாளப்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்தவித விசாரணையும் இல்லாமல் இவ்வாறான தடுப்புக் காவல் போடப்படுவதால் எவ்வாறான நன்மையும் ஏற்படப் போவதில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். பல தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைகளில் இருந்து எமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின்படி, அவர்களில் பலர் கைது செய்யப்படும்போது எவ்வித விசாரணையும் நடத்தப்படவில்லை. அடையாள அட்டையை வாங்கி பெயர் விபரங்களைப் பதிவு செய்துவிட்டு தடுப்புக் காவலுக்கு அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்படும் இளைஞர்கள் — யுவதிகள் விடயத்தில் எமது சிபார்சுகளும் கவனத்திற்கொள்ளப் படுவதில்லை. ஈ. பி. டி. பி. யினராகிய நாங்களோ அல்லது 'புளொட்' அமைப்பினரோ புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை விடுதலை செய்யுமாறு சிபார்சு செய்யப்போவதில்லை. ஆனால், சில பொலிஸ் நிலையங்களில் அவ்வாறு கருதப்படுகிறதோ என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. புலிகளுக்கு எதிரான உறுதியான நிலைப்பாடு உடையவர்கள் என்ற வகையிலே எமது ஆதரவாளர்கள் பாதிக்கப்படாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கிருக்கிறது. எமது ஆதரவாளர்கள் பல தடவைகள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களை விடுதலை செய்யுமாறு நாம் கோருவது எவ்வகையிலும் அரசியல் தலையீடாகக் கொள்ளப்பட முடியாதென்றே நாம் கருதுகிறோம்.

பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுகின்ற அரசியலை ஈ. பி. டி. பி. நடத்திக்கொண்டிருக்கவில்லை. புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாம் கண்டித்தே வந்திருக்கிறோம். அதேபோல் எந்தவிதக் குற்றமும் அற்றவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளால் பாதிப்படையாமல் தடுக்க வேண்டிய பொறுப்பும் நமக்கிருக்கிறது. வடக்கு — கிழக்கில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலிருந்து பெருந்தொகையான மக்கள் கொழும்பு வந்து செல்கிறார்கள். தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருப்பவர்கள் தொடர்பாகப் போதிய விபரங்களைப் பெற்றுக்கொள்வது, பாதுகாப்புப் படையினருக்கும் புலனாய்வு நிறுவனங்களுக்கும் சிரமமான காரியம் என்பதை நாங்கள் நன்றாக அறிகிறோம். அந்த விபரங்களையும் தகவல்களையும் திரட்டிக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் தற்போது குறைவாகவே இருக்கின்றன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனாலும் அவ்வாறான நிலையிலே குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உத்தரவாதப்படுத்துகின்றவர்களை விடுதலை செய்யத் தயக்கம் காட்டப்படுமானால், கைது செய்யப்படுவோர் விசாரிக்கப்படுவதிலும் விடுதலை செய்யப்படுவதிலும் தேவையற்ற தாமதங்கள் ஏற்படும் என்றே நாங்கள் நினைக்கின்றோம்.

அண்மைக் காலத்தில் திருகோணமலையில் பெருந்தொகையான மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் விசாரணைகள் இன்றித் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் தற்போதைய விடுமுறை காலத்தைப் பெரும்பாலான மாணவர்கள் சிறை அறைகளிலேயே கழிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். க. பொ .த. சாதார்ண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் ஆரம்பமாகப் போகின்றது. கைது நடவடிக்கைகளும் தடுத்து வைப்புக்களும் காரணமாக மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்துப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அவர்கள் தமது கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

கொழும்பில் தற்போது தனியார் தங்கும் விடுதிகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சில கட்டுப் பாடுகள் விதிக்கப்படவேண்டியிருப்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், ஒவ்வொரு பொலிஸ் பகுதிகளிலும் வெவ்வேறு விதமான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படுவது பல குழப்பங்களை மக்களுக்கு உருவாக்குகின்றது என்பதனை நாங்கள் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். விடுதிகளில் தங்கியிருப்போருக்குக் கால அவகாசம் வழங்கப்படாமல் அவர்களை வெளியேற்றுகின்ற நடவடிக்கைகள் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதவையாகும்.

தலைநகரில்கூட பாதுகாப்பு நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு விதமாக அமைந்திருக்குமானால், அந் நடவடிக்கைகளினால் மக்கள் வீணான குழப்பங்களுக்கும் தேவையற்ற பாதிப்புக்களுக்கும் உள்ளாவார்களென்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். கொழும்பில் தங்கியிருக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமது பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒருமுறை பதிவு செய்தால் போதுமானது என்று பொலிஸ் மா அதிபர்\அவர்கள் பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்திருந்தார். ஆனால், சில பொலிஸ் நிலையங்களில் தற்போது திரும்பவும் பதிவு செய்யப்படவேண்டுமென்று கேட்கப்படுகின்றது. "பொலிஸில் பதிவு செய்ததற்கான அத்தாட்சியைச் செல்லுமிடமெங்கும் கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் பொலிஸ் மா அதிபர் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியிருந்தார். ஆனால் வீதிச் சோதனை நடவடிக்கைகளின்போது தற்போதும் பொலிஸில் பதிவு செய்யப்பட்ட 'துண்டு' கேட்கப்படுகின்றது. பத்திரிகையாளர் மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்த கருத்தைப் பொது மக்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால், அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டத்தை ஒழுங்குப் பிரிவைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். எனவே, சொல்வது ஒன்றாக இருக்கிறது, நடப்பது வேறொன்றாக இருக்கிறது என்ற மனப்போக்குத்தான் பாதிக்கப் படுகின்ற மக்களிடம் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, யாழ் குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அரசாங்கம் நிவாரணப் பொருள்களை அனுப்பி வருகின்றது. அதனால் அங்கு உணவு நெருக்கடியும், பட்டினி அபாயமும் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. அதையிட்டு அரசாங்கத்துக்கு எமது நன்றியை நாம் தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். யாழ் குடாநாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கக்கூடிய நிலை இருந்தாலும் அவற்றை வாங்கக்கூடிய பண வசதிகள் அம்மக்களிடம், இல்லாதிருக்கின்றது. இதற்கு, அங்குள்ள வங்கிகளில் பணம் இல்லாதிருப்பதும் ஒரு முக்கிய காரணமாக இருகின்றது. அது மட்டுமல்லாமல், யாழ் குடாநாட்டில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு இம்மாத ஊதியம் வழங்கப்படுவதிலும் தாமதமேற்படக்கூடிய நிலை இருப்பதாக நாம் அறிந்துள்ளோம். வங்கிகளுக்குப் பணம் அனுப்பப்பட்டால்தான் ஊதியம் வழங்கக்கூடியதாக இருக்கும். இதையிட்டும் பாதுகாப்புப் பிரதி அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ் குடாநாட்டில் யாழ்ப்பாண நகரைப் பாதுகாப்புப் படையினர் நெருங்கியதும் வெடி கொளுத்த வேண்டும் ; வெற்றி விழா கொண்டாட வேண்டும் என்றவொரு கருத்து நிலவிக்கொண்டிருக்கின்றது. யுத்தத்தில் ஈடுபடும் தரப்புக்களில், தமது தரப்புக்கு ஏற்படும் வெற்றிகள் குறித்து மக்கள் மகிழ்ச்சி கொள்ளுகின்ற போக்கு இயல்பான ஒன்றுதான். ஆனால், போர் முனையில் ஏற்படுகின்ற வெற்றிகளை, 'கிரிக்கட்' போட்டிகளில் ஏற்படுகின்ற வெற்றிபோல எண்ணுகின்ற போக்கு தவறானதென்பதையும் நாங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்தும் வெற்றி பெறுகின்ற உற்சாகத்தோடு, வெற்றி பெற வேண்டுமென்ற ஆசையோடு விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படும் வெற்றிகளை நாங்கள் கொண்டாடுகின்றோம். ஆனால், யுத்தத்தைப் பொறுத்தவரை, அதன் வெற்றியோ, தோல்வியோ நினைவுகூரப்படும்போது, " மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டு விடக் கூடாது : மீண்டும் மீண்டும் அழிவுகள் தொடரக் கூடாது ; அழிவுகளுக்குக் காரணமான யுத்தம் உருவான காரணமென்ன ? மீண்டும் இவ்வாறான அழிவுகள் ஏற்படாமல் தடுப்பது எப்படி ?." என்ற எண்ணங்களையே நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த எண்ணங்களே மேலோங்க வேண்டும்.

இதுவரை இழக்கப்பட்ட மனித உயிர்களும் உடைமை அழிவுகளும் மிகப்பாரியவை. அடுத்த தலைமுறையிடமும் இந்த யுத்தம் சுமைகளைத் திணித்திருக்கின்றது. யுத்தத்தின் வெற்றியன்றி நிரந்தர சமாதானம் மட்டுமே இந்த இழப்புகளுக்கு ஈடானதாக ஒரு பிரகாசமான எதிர் காலத்தை நமது நாட்டுக்கு உருவாக்கித் தர முடியும். நிரந்தர சமாதானம் உருவாக வேண்டுமென்றால், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இனங்களுக்கிடையிலான சமத்துவமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஆயுதப் படைகளின் நடவடிக்கைகள் பற்றிச் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற அதே சமயத்திலே — புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை நடத்துகின்ற அதே நேரத்திலே — இனவாதத்திற்கு எதிரான திட்டமிட்ட பிரச்சாரங்களையும் அரசாங்கம் நடத்த வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம். சமீபத்திலே பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அவர்கள், இனவாதத்திற்கு எதிராக வெளியிட்ட அறிக்கையையிட்டு நிச்சயமாக நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தும் விதமான பிரசாரங்கள் மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றுதான், நிரந்தரமான வெற்றியை உருவாக்கும் என்பதை, மக்கள் மத்தியிலே எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற பிரசார முறைகளை அரச தகவல் தொடர்புச் சாதனங்கள் வகுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு விடை பெறுகின்றேன். நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. இராசமாணிக்கம் அவர்கள் தொழில் தொழிற்பயிற்சி அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 30, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

கௌரவ தவிசாளர் அவர்களே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் அன்றாடம் உழைத்து வாழும் இலட்சக்கணக்கான மக்கள், இன்று மரநிழல்களின் கீழும் வீதியோரங்களிலும் விதியை நொந்து, பட்டினியால் பரிதவித்து வாழும் நிலையில், நாம் இங்கு தொழில், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிக்கொண்டிருக்கின்றோம். கஷ்டப்பட்டு உழைத்துச் சேர்த்த உடைமைகளையும் உற்றார் உறவினர்களையும் இழந்து தவிக்கின்ற வடக்கு — கிழக்குத் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தினால் எந்த நன்மையும் கிட்டப் போவதில்லை. வடக்கு — கிழக்குத் தொழிலாளர்கள் யுத்த சூழ்நிலை காரணமாக, அன்றாடம் புரியக்கூடிய தொழில்களை இழந்து வருவாயின்றி அவதியுற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணமளிக்கக்கூடிய துரிதமான திட்டங்களைத் தொழில், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுசன ஐக்கிய முன்னணி அரசு துணிச்சலான முறையில் தொழிலாளர் சாசனத்தை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது. அதற்குச் சட்டரீதியான அந்தஸ்து வழங்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதன் பலாபலன்களைத் தொழிலாளர் வர்க்கம் நடைமுறையில் அனுபவிக்க வழிவகை காணப்படவும் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் முதலீட்டாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கப்படுகின்றன. ஆனால், தொழிலாளர்களைச் சுரண்டி அவர்களின் நலவுரிமைகளைப் பாதிக்கக்கூடியதான சலுகைகள் வழங்கப்படக் கூடாது. தொழிலாளர்களின் உரிமைகளை மதிக்கக்கூடிய முறையிலான திறந்த பொருளாதாரக் கொள்கையே அமுல்படுத்தப்பட வேண்டும். தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள், நவீன மாற்றங்களையும் அனுபவங்களையும் கருத்திற்கொண்டு மறுசீரமைக்கப்பட வேண்டும். சில வேளைகளில் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் காலதாமதத்தை ஏற்படுத்தும் வண்ணம் நடைமுறைகள் இருப்பதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். அத்துடன், தொழிலாளர்களின் நலவுரிமைகளைப் பேணும் விதிமுறைகள் சட்டங்களில் இருந்தபோதிலும், அவை அமுல்படுத்தப்படுவதில் காட்டப்படும் கரிசனை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தொழில் திணைக்கள அதிகாரிகள் தொழில் நிலையங்களுக்குத் திடீர் விஜயங்களை மேற்கொண்டு, தொழிலாளரின் தரங்களையும் அவர்களின் சமூக நலன்களையும் உறுதிப்படுத்த வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே தொழிலாளர் கல்வித் திட்டம் வடக்கு — கிழக்கு மாகாணங்களிலே சீராக அமுல்படுத்தப் படுவதில்லையென்று புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. "தொழிலாளர் முகாமைத்துவமும் சனத் தொகையும்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தை, படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தொழில் திணைக்களம் அமுல்படுத்த வேண்டும். அத்துடன் தொழிற்திறன் மிக்க மனிதச் சக்தியை ஏற்படுத்துவதற்கான நடமாடும் பயிற்சித் திட்டங்களின் நன்மைகளை, வடக்கு — கிழக்கு மக்களும் அனுபவிப்பதை உறுதி செய்ய வேண்டும். ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினராகவுள்ள தொழிலாளர்களுக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படுவது பாராட்டுக்குரியது. ஆனால், இக்கடன் வடக்கு — கிழக்கு வன்செயல்களினால் வீடுகள் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்பட வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு-கிழக்கிலுள்ள இளைஞர்-யுவதிகள், வேதனையின் விளிம்பில் விரக்தியுற்றுள்ளனர். எனவே, அவர்களுக்கு விசேட தொழிற் பயிற்சிகளை வழங்குவதுடன், சுயதொழில்களை மேற்கொள்ளக் கடன் வசதிகளும் வழங்கப்பட வேண்டும். வன்செயல்கள் காரணமாகக் கணவன்மார்களை இழந்த விதவைகளுக்கும் பெற்றோரை இழந்த அநாதைச் சிறார்களுக்குமென விசேட தொழிற்பயிற்சித் திட்டத்தை, தொழில், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு செயற்படுத்த வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் திணைக்களம், சாப்புச் சட்டத்தைச் சரியாக அமுல்படுத்துவதில்லை என்று கடைச் சிப்பந்திகள் புகார் தெரிவிக்கின்றார்கள். அவர்கள் வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றார்கள். எனவே, குறைந்தது வாரத்தில் ஒரு நாளாவது ஓய்வெடுக்கக்கூடியதாக சாப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். அத்தோடு சில இடங்களில் பாடசாலைக்குச் செல்லும் வயதிலான சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள். இவ்விடயத்தில் தலையிட்டுச் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதைத் தடைசெய்ய வேண்டும். மற்றும் சகல வர்த்தக நிறுவனங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களையும் ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களாக்குவதை உறுதிப்படுத்த வேண்டும். அனேக தொழில்கொள்வோர், இவ்விடயத்தில் அசமந்தமாகவே உள்ளனர். இதனால் தொழிலாளர்கள் தமது இறுதிக் காலத்தில் பல சிரமங்களை அனுபவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு, வந்தாறுமூலையில் தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வந்த தொழிற்பயிற்சி நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்கு வன்செயல்களால் பாதிக்கப்பட்ட கட்டடம், 'நோராட்' உதவியுடன் புனரமைக்கப்பட்டு, பயிற்சிக்காகக் கடந்த வருடம் விண்ணப்பங்களும் கோரப்பட்டன. ஆனால், பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. உரிய இயந்திரத் தொகுதிகளை வழங்குவதுடன், பயிற்றுநர்களையும் நியமித்து, வந்தாறுமூலை தொழிற்பயிற்சி நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழில், வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சு, வடக்கு-கிழக்கின் சூழ்நிலைகளைச் சாட்டாகக் கூறாது, படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும். தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்துவதற்கான நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் தொழில் திணைக்கள அதிகாரிகள், வெளிக்கள வேலைகளை மேற்கொண்டு தொழிலாளர்களின் தரத்தை மேம்படுத்த உதவ வேண்டும். அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் போது, எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கு வாழ் இளைஞர்-யுவதிகளுக்கும் அதிக முன்னுரிமை வழங்க வேண்டுமெனக் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. யூ. பாஸ்கரன் அவர்கள் மீன்பிடி நீரியல்வளத்துறை அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 30, நவம்பர் 95 இல் ஆற்றிய உரை.

යූ. බාස්කරන් මහතා
(திரு. யூ. பாஸ்கரன்)
(Mr. U. Baskaran)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். என்னைப் பொறுத்தவரை —'எனது கட்சியைப் பொறுத்தவரை — நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்களைப் பொறுத்தவரை — இச்சபையிலே வெறும் சம்பிரதாயத்திற்காக அமைச்சுக்களைப் பாராட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் கோபமல்ல. பல அமைச்சுக்களின் பலாபலன்களைப் பல வருடங்களாக வடக்கு — கிழக்கு மக்கள் பெறாமையே இதற்குக் காரணமாகும். ஆனால், பாதுகாப்பு அமைச்சின் முழுப்பலனையும் வடக்கு — கிழக்கு மக்கள் பல வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். அதன் வெளிப்பாடே இன்று வடக்கில் அதிகமான மக்கள் அகதிகள் அந்தஸ்தைப் பெற்று விட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கு கடல் பிரதேசம் அமைதியாக உறங்கிப் போயிருந்தது. யுத்தம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து பாதுகாப்பு அமைச்சு இராணுவ ரீதியாக எடுத்து வரும்


படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கைகளில் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சும் அந்த நடவடிக்கைக்குட்படுத்தப்படுகின்றது. வடக்கு — கிழக்குப் பிரதேசங்களில் பல வருடங்களாக கடல் வலயச் சட்டங்களும் 100 மீற்றருக்கு அப்பாற்சென்று மீன்பிடிக்க முடியாத நிலையும் இருந்து வருகின்றன. இக்காரணங்களில் வடக்கு — கிழக்குப் பகுதியில் மீன்பிடி தொடர்பான நடவடிக்கை அதுவும் இற்றைவரை மேற்கொள்ளப்படவில்லை. சமகாலத்தில் வடக்கு — கிழக்கில் மட்டக்களப்பு வாவி போன்ற உள்ளூர் நீர் நிலைகளிலும் மீன் பிடிக்க முடியாத சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. வடக்கில் எங்கு பார்த்தாலும் யுத்த நடவடிக்கை காணப்படுவதால் வடக்கு — கிழக்கு கடற்றொழிலாளர்கள் தமது பிள்ளைகளை வறுமைக்குக் காவு கொடுத்திருக்கின்றார்கள். யுத்தம் என்பது மிகவும் கொடூரமானது !

பி.ப. 4.00

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட " எதிர்காலத்துக்கு அடித்தளம் அமைத்தல் — அரசாங்கத்தினது பொருளாதாரச் சாதனை 1994 — 1995 " என்ற வெளியீட்டிலிருந்து ஒரு குறிப்பை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

" 1990 இல் அரசு உள்நாட்டு மீன்பிடி அபிவிருத்திக்கான அதன் அலுவல்சார் உதவியினை விலக்கிக் கொண்டதன்விளைவாக உள்நாட்டு மீன்பிடியின் மொத்த உற்பத்தி 1989 இன் உச்ச மட்டமான 40,000 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இல் 12,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இது தொழில் வாய்ப்பினையும் பாதித்ததுடன், கிராமிய குடித்தொகையினரிடையே போசாக்கின்மையையும் அதிகரித்துள்ளது "

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல வருட யுத்தத்தினால், இலங்கையின் மொத்த கடற்பரப்பில் மூன்றிலொரு பகுதியான வடக்கு — கிழக்குப் பிரதேசம் கொண்டுள்ள கடற் பரப்பில் எந்தவொரு கடற்றொழில் நடவடிக்கையும் இன்று வரை நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மீன்பிடியின் மொத்த உற்பத்தி வீழ்ச்சிக்கு மீன்பிடி அபிவிருத்திக்கான அலுவல்சார் உதவியினை விலக்கிக்கொண்டது மட்டும் காரணமல்ல. வடக்கு — கிழக்கில் கடல் தொழில் சம்பந்தமான நடவடிக்கை எதுவும் நடைபெறாததே முக்கிய காரணமாகும்.

பத்து வருடங்களுக்கு முன் வடக்கு — கிழக்குப் பகுதிகளில் இருந்து நாளாந்தம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட கடல் உற்பத்திகளின் தொகையைப் பதிவேடுகளைப் புரட்டிப் பார்ப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். வடக்கு — கிழக்கு பிரதேசத்தின் கடல் மட்டும் பாதிப்படைந்தது மட்டுமல்ல ; மக்களின் முற்றுமுழுதான சகல நடவடிக்கைகளும் பாதிப்படைந்திருக்கின்றன. இலங்கையின் தேசியப் பொருளாதாரத்திற்கு கடல் வளத்தால் கிடைக்கப்பெறுகின்ற மொத்த வருமானத்தில் இருந்து மூன்றிலொரு பகுதி வடக்கு — கிழக்கு யுத்தத்தால் விழுக்காடாகவே இருக்கின்றது என்பதை யாவரும் உணர வேண்டும்.

இலங்கையின் முக்கிய மீன்பிடித் தளங்களாக விளங்கிய மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் இன்று எவ்வித உற்பத்தியும் இல்லாமல் அழிந்து கிடக்கின்றன. பணத்தினை அள்ளித் தரும் முத்து, கடலட்டை, இறால், சிங்கி இறால், சங்கு போன்ற அங்குள்ள வளங்களைப் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது.

கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சினால் "கடல் தொழில் அபிவிருத்தியும் பயிற்சியும்" என்ற திட்டத்திற்கு 1996 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் 64,77,000 ரூபா செலவீடு செய்வதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மட்டக்குளி, நீர்கொழும்பு, தங்காலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் தமிழ் அல்லது சிங்கள மொழிகளில் "வள்ளம் இயக்குனர் பயிற்சி நெறி" நடாத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பயிற்சி நிலையங்கள் எவ்வித பயிற்சி உபகரண வசதிகளுமின்றிக் காணப்படுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக இதே நிலைமைதான் இங்கு நிலவுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தரமான பயிற்சியை வழங்கக்கூடியவாறு பயிற்சி நிலையங்க்ள் நவீன மயப்படுத்தப்பட்டுத் தரமுயர்த்தப்பட வேண்டும். இப்பயிற்சி நிலையங்களில் கூடுதலான பயிற்சியாளர்களை இணைத்துப் பயிற்சி கொடுக்கக்கூடியவாறான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதாவது, ஒரே ஆண்டில் தற்போதைய நிலையைவிடக் கூடுதலான பயிற்சியாளர்களை இணைத்துப் பயிற்சி கொடுக்கத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். கௌரவ அமைச்சர் அவர்களே, இதன்மூலம் இப்பகுதியில் கூடுதலான கடல் தொழிலாளர்கள் நன்மையடைய வாய்ப்பேற்படும்.

தவிசாளர் அவர்களே, கடற்றொழிலாளர்களுக்கு, விசேடமாக கடற்றொழில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் குறுகிய கால வெளிக்கள பயிற்சி நெறிகளை நடாத்துதல் போன்ற பயிற்சித் திட்டங்கள் கடற்றொழில் அமைச்சினால் நடாத்தப்படுகின்றது. ஆனால், இத்திட்டம் வடபகுதியில் நடைபெறுவதில்லை. கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மிகச் சிறப்பான செயற்பாட்டைக் கொண்ட பகுதி யாழ் மாவட்டமாகும். ஆனால், இன்று அங்கு அரச உதவிகள், தொழில் முயற்சிகள் சீர்குலைந்துள்ளன். ஆனால், அரச கட்டுப்பாட்டிலுள்ள யாழ் தீவுப் பகுதியில் கடல் வலயச் சட்டம் போன்றவற்றினால் தொழில் பாதிக்கப்பட்ட நிலையிலும்கூட, இச்சங்க கட்டமைப்புக்கள் சிறப்பாகவே உள்ளன. எனவே, தீவுப் பகுதியில் இயங்குகின்ற இச் சங்களின் ஊடாக இப்பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கௌரவ கடற்றொழில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மட்டக்குளியில் உள்ள இலங்கை கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் தமிழ் அல்லது சிங்கள மொழியில், "மீன்பிடிக் கலங்கள் கப்பல் தள உத்தியோகத்தர் பயிற்சி நெறி" மற்றும் "மீன்பிடிக் கலங்கள் இயந்திர அறை உத்தியோகத்தர் பயிற்சி நெறி" என்பன 18 மாத காலப் பயிற்சி நெறியாக நடாத்தப்படுகின்றன. இப்பயிற்சி நெறிகளுக்கு வடக்கு — கிழக்குப் பிரதேசங்களில் இருந்தும் கூடுதலான இளைஞர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சின்கீழ் இயங்கும் கடற்றொழில் நீர்வளத் திணைக்களமானது கடற்றொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்து, கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களது நலன்களைப் பேணும் நோக்கில், மீன்பிடி வள்ளங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு உதவிப்பணம் வழங்குதல், மூலதனப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நிறுவன முறையான கொடைகள், வசதிகள் என்பவற்றை ஏற்படுத்துதல், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நலனோம்பல் வசதிகளை ஏற்படுத்துதல், கடற்றொழில் ஓய்வூதியத் திட்டத்தை முகாமை செய்தல், மீன்பிடித் தொழிலிலீடுபட்டுள்ளவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்தலும் பேணுதலும், கடற்றொழில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் செயல்படுத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. மேற்படி செயற்பாடுகளுக்காகக் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆனால், கடந்த ஆண்டிற்கு முந்திய ஆண்டைவிட இது குறைவானதாகும்.

கடற்றொழில் நீர்வளத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அனைத்திலுமிருந்து வடபகுதி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலைமையே இன்று காணப்படுகின்றது. இன்று வடக்குப் பிரதேசத்திலுள்ள அனைத்துக் கடற்றொழிலாளர் குடும்பங்களும் தொழிலிழந்து, இடம்பெயர்ந்து மிகவும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மீனவர்கள் கடலில் இறங்க முடியாத நிலையினால் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள மீன்பிடி உபகரணங்கள் எவ்வித பயன்பாடுமின்றிக் கிடக்கின்றன. இதைவிட, ' பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக ' கடற்றொழிலாளர்களின் மீன்பிடி உபகரணங்கள், " ஷெல் " தாக்குதல்களினாலும் குண்டுத் தாக்குதல்களினாலும் அழிந்து போய்விட்டன. கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், வறுமை காரணமாகவும் அடிக்கடி இடம்பெயர்ந்து ஓடவேண்டிய நிலை இருப்பதனாலும் மிகவும் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு, தங்கள் ஆரம்பக் கல்வியையே தொடர முடியாத நிலையில் கஷ்டப்படுகின்றனர். இவர்களின் எதிர்காலத்திற்கு யார் பொறுப்பு ? இவர்களது சமூகச் சீரழிவுக்கு நாம் என்ன விடை காணப் போகின்றோம் ?

உதாரணத்திற்கு, மயிலிட்டியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் யுத்த நடவடிக்கை காரணமாக, கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்து பல அகதி முகாம்களில் வாழ்ந்து வந்தார்கள். அரச படைகளில் இன்றைய யாழ் படையெடுப்பின் காரணமாக அவர்கள் யாழ் குடாநாட்டை விட்டு கிளிநொச்சிக்கு மீண்டும் அகதிகளாக வருகின்றபோது, அவர்களிடம் என்ன சொத்து இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள் ! புன்னகைகளைத் தொலைத்துவிட்ட ஏக்க முகங்களும் வறுமையில் வாடிப்போன உடம்பில் கட்டியிருக்கும் கந்தல் துணிகளுமே அவர்களிடம் உள்ளன.

கௌரவ கடற்றொழில் அமைச்சர் அவர்களே, வடக்கு — கிழக்குப் பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களினதும் அவர்களது குடும்பங்களதும் நலன்களை மேம்படுத்த தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி, அனைத்துக் கடற்றொழிலாளர் குடும்பங்களையும் இத்திட்டத்துடன் இணைத்து, அவர்களின் நலன்கள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இன்று வடக்கு — கிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற அனைத்து கடற்றொழிலாளர்களும் தமது வேலைகளை இழந்து வேலையற்றோர் தொகையினருடன் இணைந்துள்ளனர். இவர்களது குடும்பங்களை வறுமையின் பிடியிலிருந்து காப்பாற்ற விசேடமாக உலர் உணவு விநியோகம் செய்யப்பட வேண்டுமென்பதையும், இக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடர ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமென்பதையும் கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும், அல்லது அங்குள்ளவர்களின் ஜீவனோபாயத்திற்கு நிவாரணம்


படிப்பகம்

www.padippakam.com

வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கும் விசேட உலர் உணவு வினியோகம், மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புக்கள், பெண்களுக்கு சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடும் சந்தர்ப்பமும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தல், ஓய்வூதியம், காப்புறுதி என்பவற்றை அறிமுகப்படுத்தல் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, அரசினால் விடுவிக்கப்பட்ட யாழ் தீவுப் பகுதியில், மரபு முறையிலான மீன்பிடி முறைகளிலேயே அப்பகுதி கடற்றொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். 1994 — 1995 ஆம் ஆண்டுப் பகுதியில் 92 மில்லியன் ரூபாவிற்கு, படகு உதவித் திட்டத்தின் மூலம் வள்ளம், இயந்திரம் என்பன வழங்கப்பட்டன். இவை வடக்கு — கிழக்குப் பகுதியின் கடற்றொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை. யாழ் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தீவுப் பகுதிக் கடற்றொழிலாளர்கள் கூட, இவ்வுதவித் திட்டத்தின் மூலம் பயன்பெறவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ஐந்து வருடமாக இப்பகுதியில் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் இல்லை. நவீன முறைப் பயிற்சிகளை அளிக்கப் பயிற்றுநர்கள் இல்லை. ஆகவே, உடனடியாக ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவுக்கும் ஒவ்வொரு கடற்றொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், இயந்திரங்கள் இயக்கவும் மற்றும் நவீன மீன்பிடி முறைகளைக் கற்றுக் கொள்ளவும் கூடிய வகையில், அங்கு பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். இப்பகுதியில் கடற்றொழிலாளர் குடியேற்றத் திட்டங்கள் முன்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. ஆனால், அக்காணிகளுக்குரிய உறுதிகள் இன்னமும் வழங்கப்படாமல் இருக்கின்றன. எனவே, இவர்களுக்கு ' ஜயபூமி ' த் திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்கள், காணி மற்றும் வீடு வசதிகளின்றி, சுகாதார வசதிகளின்றி மிகவும் நெருக்கமாக வாழ்க்கை நடாத்துகின்றனர். இவர்களிடத்தில் கல்வி கற்கின்ற வீதம் குறைவாகவே இருக்கின்றது. இவர்களுக்கு வீடமைப்புத் திட்டங்களையும் சுகாதார மற்றும் கல்வி சமூகநல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதான திட்டங்களை அமுல் படுத்தக் கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

கிரிந்திவெல, மோதர, புராணவெல, மிரிஸ்ஸ, பேருவளை போன்ற இடங்களிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் கடந்த வருடங்களில் புனரமைப்புச் செய்யப்பட்டன. சிலாபம், பாணந்துறை, ஹிக்கடுவை, கோட்டேகொட, குடவல ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களையும், நங்கூரத்தானங்களையும் கட்டுவதற்கான சாத்தியங்கள் பற்றி கடந்த வருடங்களில் பரிசோதனை நடத்தப்பட்டது. ஆனால், வடக்கு —கிழக்குப் பகுதியில் மீன்பிடித் துறைமுகங்களைப் புனரமைப்புச் செய்வதில் கவனம் எடுக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். தாளையடி, மயிலிட்டி, காங்கேசன்துறை, மாதகல், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பாரம்பரிய மீன்பிடிப் பிரதேசங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரைநகரில் ' சீநோர் ' நிறுவனம், பேசாலையில் தகரங்களில் மீன் அடைக்கும் தொழிற்சாலைகள் போன்றவை இன்று அழிந்தும், மூடப்பட்டும் இருக்கின்றன. அவற்றை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, வரவு செலவுத் திட்ட விவாதத்திலே கௌரவ அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு பேசியபோது " இரத்தினபுரி மாவட்டத்தில் 15 நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன " என்று கூறினார். அதே மாதிரி வடக்கு — கிழக்குப் பகுதிகளிலும் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். போர் சூழல் காரணமாக சில நடவடிக்கைகளை சில பகுதிகளில் நடைமுறைப்படுத்துவது இயலாத காரியம் என்பதை நாம் விளங்கிக் கொள்கிறோம். விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உடனடியாக இச்செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அங்குள்ள பல ஆயிரம் கடல் தொழிலாளர்களை, தொழிலின்மையில் இருந்தும் வறுமையில் இருந்தும் விடுவித்துக்கொள்ள முடிவதுடன் அரசு அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

கடல், தரை ஆகிய இரண்டும் இயற்கையான வளங்களாகும். கடல் வளத்தைப் பொறுத்தவரை மக்களின் சுய தேவையைப் பூர்த்தி செய்கின்ற — மக்களுக்குத் தேவையான சத்துணவைக் கொடுக்கின்ற — நாட்டிற்கு வெளிநாட்டுச் செலவாணியைப் பெற்றுத் தருகின்ற வளமாக அது இருக்கின்றது. ஆனால் இன்று கொடூர யுத்தம் நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளது. இந்த யுத்தத்தின் காரணமாக வடக்கு — கிழக்கில் இருந்து கிடைக்கின்ற பொருளாதாரம் கிடைக்காமை, இதர பகுதிகளில் இருந்து கிடைக்கின்ற பொருளாதாரத்தை வடக்கு — கிழக்கு யுத்தத்திற்குச் செலவழிக்க வேண்டிய கட்டாயம் ஆகிய இந்த இரண்டு காரணங்களாகும், இன்று தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

சமகால அரச படைகளின் யாழ் படையெடுப்பால் அழிக்கப்படுகின்ற — அழிகின்ற சொத்துக்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் ; இதற்கான நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும். அது அம்மக்களுக்கு உடனடியாக கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். இல்லையேல் நாளை அவர்களை வறுமை கொன்றொழிக்கும் என்பதில் ஐயமில்லை. நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. நடராஜா அவர்கள் தொடர்புச் சாதன உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 01, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ඒ. නඩරාජා මහතා
(திரு. ஏ. நடராஜா)
(Mr. A. Nadarajah)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, நாட்டின் நாடித் துடிப்பாக இருப்பது வெகுஜனத் தொடர்புச் சாதனங்களாகும். உருவத்தைக் காட்டுகின்ற முகக் கண்ணாடி அகத் தோற்றத்தைக் காட்டுவது கிடையாது. ஆனால், வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள், குறிப்பாகப் பத்திரிகைத் துறை, அகத் தோற்றத்தை மட்டுமல்லாமல் நாட்டின் புறத் தோற்றத்தையும் வெளிப்படுத்துகின்ற பணியையும் பங்கினையும் ஆற்றிக்கொண்டிருக்கின்றது.

தகவல் தொடர்புச் சாதனங்களிலே வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த முன்னேற்றமானது பல விந்தைகளைப் புரிந்து கொண்டிருக்கின்றது. தொலைத் தொடர்புச் சாதனங்கள், கரை காணாத எல்லைகளைக் கொண்டதாகக் கருதப்பட்ட உலகத்தை, கையளவாகச் சுருக்கி, ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் செவிவழியாகவும் விழி வழியாகவும் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன. ஆனால்; தகவல் தொடர்புச் சாதனங்களில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகள் ஜன்னல்களை மூடிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணத்தினால், செய்திகள், வெளியேயிருந்து உள்ளேயும், உள்ளேயிருந்து வெளியேயும் செல்ல முடியாத நிலையில், மக்கள் அறிய வேண்டிய செய்திகள் சிறைப்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்தவரையில் செய்திச் சுதந்திரம் அடிக்கடி நெருக்கடிகளை எதிர்நோக்கியே வந்திருக்கிறது ; கெடுபிடிகளைச் சந்தித்தே வந்திருக்கின்றது. செய்தித் துறையைச் சார்ந்தவர்களுக்குத் தடியடிகள் மட்டுமல்லாமல் சில சந்தர்ப்பங்களிலே தலைகளே காணாமல் போகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறான சம்பவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

துரதிஷ்டவசமான ஓர் உண்மையை நாம் நிச்சயமாக ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். செய்தித் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய உறவானது, அடிக்கடி முறிவுக்குள்ளாகின்ற உறவாகவே இருந்து வந்திருக்கின்றது. பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும் நாடுகளிலே எதிர்தரப்பிலே இருக்கின்ற கட்சிகள், பத்திரிகைகளின் சுதந்திரத்தையும் பத்திரிகையாளர்களின் நட்பையும் வலியுறுத்துகின்ற, நாடுகின்ற, அவற்றைப் பற்றிப் போற்றிப் பேசுகின்ற பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்கின்றன. அதே கட்சிகள் ஆளுந்தரப்பிற்கு மாறிய பின்னர், செய்தியாளர்களுக்குத் தினசரி போதனை நடத்துகின்ற கட்சிகளாக மாறிவிடுகின்றன. பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும் நாட்டிலே இது ஒரு பொதுவான நடைமுறையாக இருந்து வருகின்றது.

அதே நேரத்தில், பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரில், தமது பேனாக்களில் மை தீரும் வரை மனம்போன போக்கிலே வதந்திகளை விநியோகம் செய்கின்ற — செய்து கொண்டிருக்கின்ற — ஒரு சில பத்திரிகையாளர்களும் இருக்கவே செய்கின்றார்கள் என்பதையும் நாங்கள் மறந்து விட முடியாது. அதனால், செய்திச் சுதந்திரம் என்று


படிப்பகம்

www.padippakam.com

அழைக்கப்படுவது, சில சந்தர்ப்பங்களிலே கேலிக்குரியதாக மாறி விடுகின்றது. நடப்பதற்குச் சுதந்திரம் இருக்கின்றது என்பதற்காக, "நடுவீதியிலே தான் நடந்து செல்வேன்" என்று அடம் பிடிப்பது, சுதந்திர எண்ணத்தின் வெளிப்பாடாக இருக்க முடியாது; தனிமனிதச் சுதந்திரத்தின் அடையாளமாகவும் இருக்க முடியாது. எழுதுவதற்கு உரிமை இருக்கின்றது என்பதற்காக, பேசுவதற்கு உரிமை இருக்கின்றது என்பதற்காக, பேனா முனைகளாலும் தொண்டைக் குழாய்களாலும் நச்சுக் கருத்துக்களை நாட்டுக்குள் பரப்புவதற்கு அனுமதி வழங்க முடியாது. நமது நாட்டில் இனப்பிரச்சினை தீவிரமடைந்தமைக்கும், அது இன்னும் தீராமல் தொடர்ந்து கொண்டிருப்பதற்கும், சில பத்திரிகைகளும் சில பத்திரிகையாளர்களும் ஒரு காரணம் என்பதையும் நாம் மறந்து விட முடியாது.

ஒரு சில சிங்களப் பத்திரிகைகளிலே வடக்கு — கிழக்கு நிலைவரம் தொடர்பாக வெளியாகின்ற செய்திகள், அந்தப் பத்திரிகைகளிலே வெளியாகின்ற புனைக் கதைகளை விடவும் கற்பனை மிக்கவையாக இருக்கின்றன. புலி எதிர்ப்பு என்ற போர்வையிலே, தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான பிரச்சாரங்களை, அவ்வாறான பத்திரிகைகள் கற்பனை கலந்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, எமது கட்சிக்கெதிராகச் செய்யப்பட்ட பிரச்சாரங்களை நாம் குறிப்பிட முடியும். வடக்கு — கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். புலிகளுக்கெதிரான நடவடிக்கைகள், பொது மக்களுக்கெதிரான நடவடிக்கைகளாக மாறக் கூடாது என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றோம். புலிகளின் பாஸிச நடவடிக்கைகள் முறியடிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் தொடர்ந்து எடுத்துக் கூறியே வந்திருக்கின்றோம். ஆனால், பொதுமக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று நாம் கூறுகின்ற பொழுது, சில சிங்களப் பத்திரிகைகள் அதற்கு வித்தியாசமான வியாக்கியானம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஈ. பி. டி. பி. புலிகளின் நிழலாக இருக்கின்றது என்றெல்லாம், தங்கள் கனவுலகிலிருந்து கை வலிக்கும் வரை சில பத்திரிகைகள் எழுதிக்கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல: வடக்கு-கிழக்கிலே உள்ள தமிழ்பேசும் மக்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகளை 'ராவய', 'யுக்திய' போன்ற விரல்விட்டு எண்ணத்தக்க சில பத்திரிகைகள் வெளியிட்டு வருவதையும் நாங்கள் நினைவுகூர வேண்டியிருக்கின்றது. வடக்கு-கிழக்கில் போர் நடவடிக்கைகளால் பொது மக்கள் பாதிப்படையும் செய்திகளோ, அல்லது புகைப்படங்களோ மிக அரிதாகவே சிங்கள மொழி மூலமான பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், மேதகு ஜனாதிபதியினால் அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது, அவ்வாறு முன்வைக்கப்படவிருக்கின்றது என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே விழுந்தடித்துக்கொண்டு கண்டனக் கணைகளை விடுத்த பத்திரிகைகளும் இருக்கின்றன. சிங்கள மக்களிடம் இருக்கின்ற உரிமைகளைப் பறித்து தமிழ்பேசும் மக்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப் போவதைப் போல ஒரு தவறான கருத்தை அந்தச் சில பத்திரிகைகள் மக்கள் மத்தியிலே ஏற்படுத்த முயன்றிருந்தன.

இனப்பிரச்சினை என்பதை இனங்களுக்கிடையிலான பிரச்சினையாக உருவாக்குவதும் சித்தரிப்பதும் தங்கள் பத்திரிகை விற்பனையைப் பெருக்குவதற்கு உதவியாக இருக்குமென்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இனவாதம் எப்போதுமே சுலபமாகப் பாவிக்கப்படுகின்றது. சுலபமாகவும் கவர்ச்சிகரமாகவும் பிரசாரம் செய்யக்கூடிய ஒன்றாகவும் அது இருந்து வருகின்றது. இனப்பற்று இருக்கின்றதோ, இல்லையோ, இனவாதிகளின் பிரசாரங்கள், தங்களை இனங்களின் காவலர்களாக நடித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களுள் சில அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள்: ஒருசில பத்திரிகையாளர்களும் இருக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்கு வாக்குகளைத் திரட்டும் ஆசை: இனவாதப் பத்திரிகையாளர்களுக்கு இனவாதத்தை விதைப்பதன் மூலம தங்களுடைய பத்திரிகைகளின் விற்பனையைப் பெருக்கிக் கொள்ளும் ஆசை!

'திரிசூல' என்ற பத்திரிகை பக்கம் பக்கமாகச் சகிக்க முடியாத அளவிற்கு இனவாதத்தை நிரப்பிக் கொண்டு வெளியே வருகின்றது. இந்தப் பத்திரிகை ஒரு வேண்டுகோளை வெளியிட்டிருந்தது. "எங்களுக்கு நிதியுதவி செய்யுங்கள்: நீங்கள் கொடுக்கின்ற ஒவ்வொரு ரூபாவும் பிரபாகரனுக்கு விழுகின்ற அடியாகும்" என்று அந்தப் பத்திரிகை தனது பைகளை நிரப்புவதற்காக ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தது. அந்தப் பத்திரிகையின் நிதிக் கோரிக்கைக்கு உடன்பட்டு அதனை நம்பிய சிலர் நிதியைக் கொடுத்திருக்கக்கூடும்! தேசப்பற்று என்ற பெயரிலே தங்களுடைய மொத்த வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக, சொந்த நலன்களைப் பெருக்கிக் கொள்வதற்காக இவ்வாறான முயற்சிகளெல்லாம் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. செய்திச் சுதந்திரம் என்ற போர்வை இவற்றுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது: போர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான பிரச்சார நடவடிக்கைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்போது, பத்திரிகைச் சுதந்திரம் பறிபோவதாகக் கூச்சலிடுவதற்கும் ஒருபகுதியினர் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் மறக்கவில்லை.

சமீபத்திலே 'யுக்திய' பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்டார். அது நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாகும். இனவாதத்திற்கெதிராக விடாப்பிடியாகப் போராடி வருகின்ற சிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவராக மதிக்கப்பட வேண்டியவர் திரு. சுனந்த தேசப்பிரிய அவர்கள் என்பதை நாங்கள் நன்கறிவோம். நாட்டுக்குள் இனவாதம் என்னும் நச்சுப்புகையைப் பரவ விடாமல் தடுக்கின்ற, பொறுப்புமிக்க பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அதுபோலவே இன்னொரு பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. செய்திச் சுதந்திரம் என்ற பெயரிலே இனவாத நச்சுப் புகையை நாட்டுக்குள் பரப்புகின்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

இன்று, நாட்டின் தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்று "விவாதங்கள்" என்ற பெயரில் இனவிரோதக் கருத்துக்களை இடம்பெறச் செய்து கொண்டிருக்கின்றது. கடந்த காலத் தேர்தல்களில் சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்ட இனவாதிகளை அழைத்து வந்து மேடை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இனவாதம் இல்லாமல் போய்விட்டால் தமது அரசியல் எதிர்காலமே அஸ்தமித்து விடும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த இனவாதச் சக்திகள், தமது வாள்களைச் சுழற்றிக்கொண்டு களத்திலே இறங்கியிருக்கிறார்கள். அந்த வாள்கள் எல்லாம் துருப்பிடித்த வாள்கள் என்று எமக்குத் தெரியும். ஆனால், செய்திச் சுதந்திரம் என்ற பெயரில் அந்த வாள்களுக்கு மினுமினுப்பும் புது மெருகும் கொடுக்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவை தமிழ் பேசும் மக்களின் சுய கௌரவத்தைச் சீண்டிப் பார்க்கின்ற செய்திகளாக இருக்கின்றன. "பூமி புத்திரா" போன்ற இயக்கங்கள் இவ்வாறான பிரச்சாரங்களில் முன்னணி வகித்துக்கொண்டிருக்கின்றன.

சிங்கள மக்களுக்குத் தமிழ் பேசும் மக்களின் வரலாறு தொடர்பான தவறான வியாக்கியானங்களைச் சொல்லி, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை அவமதிக்கின்ற பிரச்சாரங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ்பேசும் மக்களுக்கு இங்கே எந்த உரிமையும் கிடையாது என்று ஒருவர் சொல்லுகிறார். போனால் போகட்டும் என்று கருதி ஏதாவது ஓர் உரிமையைக் கொஞ்சம் கொடுத்துவிடலாம் என்று இன்னொருவர் சொல்கிறார். இவ்வாறான நிலையில் இந்த விளம்பரங்களை ஒரு தனியார் தொலைக்காட்சி மிக அக்கறையாக ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறது. ஒளிபரப்பப்பட்ட தமிழ்த் திரைப்படங்களை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பி தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டுமென்றே வெறுப்பேற்படுத்திக் கொண்டிருக்கின்ற ரி. என். எல். தொலைக்காட்சி நிறுவனம், இனவாதக் கருத்துக்களுக்கு மட்டும் புதிதுபுதிதாகத் தினமும் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இனங்களுக்கிடையே மோதல்களை உருவாக்கும் கருத்துக்களைப் பரப்புவதற்கும், ஓர் இனத்தின் சுய கௌரவத்தைச் சிறுமைப்படுத்துவதற்கும் அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியது முக்கியமானதென்று நாம் கருதுகிறோம். ஆனால் இனவாதப் பிரச்சாரங்கள் தொடர்பாகச் சில வேளைகளில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, திட்டவட்டமான கட்டுப்பாட்டு விதிகள் எதுவும் இதுவரையில் அமுல் நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

செய்தித் தணிக்கை முறையாக அமுலுக்குக் கொண்டு வந்தபோது இனங்களுக்கிடையே பதட்டத்தைத் தூண்டுகின்ற முயற்சிகளுக்குத் தடைபோடுவதே நோக்கம் என்று கூறப்பட்டது. ஆனால் இனவாதப் பிரச்சாரங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. வடக்கு — கிழக்கு யுத்தத்திலே பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்குத் தணிக்கை விதிகள் அனுமதிப்பில்லை. ஆனால், வடக்கு — கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்கள் எல்லோரும் புலிகளாகவே இருக்கிறார்கள் என்று சித்திரிப்பதற்குத் தணிக்கை விதிகள் தடைவிதிப்பது கிடையாது. வடக்கு — கிழக்கிலே வாழும் மக்களுக்கு, வாழும் உரிமை கிடையாது என்று எழுதுவதற்கும் பேசுவதற்கும் தணிக்கை விதிகள் அனுமதித்துக் கொண்டிருக்கின்றன. வடக்கு — கிழக்கிலே நடைபெறுகின்ற யுத்தத்திலே பொது மக்களிலே எத்தனை பேர் பலியாகியிருக்கிறார்கள் என்ற தகவல்களை வெளியிடுவதற்கு மட்டும் தணிக்கை விதிகள் குறுக்கே நின்று தடைசெய்து கொண்டிருக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

யுத்தம் நடைபெறுகின்றபோது இராணுவ ரகசியங்கள், போர்த் தந்திரங்கள் என்பவற்றை வெளியிடுவதை எந்தவொரு தரப்பும் விரும்பாது. எனவே அவ்வாறான செய்திகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், யுத்தத்திலே பாதிக்கப்படுகின்ற, பலியாகின்ற பொதுமக்கள் பற்றிய செய்திகளை வெளியிடுவது இராணுவ ரகசியம் சம்பந்தப்பட்ட விடயமாக இருக்க முடியாது ; இனவாதத்தைத் தூண்டுகின்ற முயற்சியாகவும் இருக்கமுடியாது. எனவே, பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்து வெளியாகும் செய்திகளுக்குத் தணிக்கை விதிகள் குறுக்கே நிற்கக் கூடாது என்று கௌரவ அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

பத்திரிகைத்துறை, செய்தித்துறை என்பவற்றைச் சேர்ந்தவர்களின் கடமைகள் குறித்து நாங்கள் எடுத்துக் கூறுகின்ற அதே வேளையில், அவர்களுடைய உரிமைகள் குறித்து அக்கறைப்பட வேண்டிய அவசியமும் நமக்கிருக்கிறது. கடந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் எனது உரையில் நான், " பத்திரிகையாளர்களுக்குப் ' பென்சன் ' வழங்கப்பட வேண்டும் " என்பது குறித்தும் குறிப்பிட்டிருந்தேன். கௌரவ அமைச்சரவர்களால் டோல்ரன் த சில்வா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை சமீபத்தில் அமைச்சரவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுவின் அறிக்கையில், பத்திரிகையாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் சமூக மதிப்பையும் உயர்த்துகின்ற பல நல்ல சிபார்சுகள் அடங்கியிருப்பதாக நாங்கள் அறிகின்றோம். அச்சிபார்சுகளைக் கருத்திற்கொண்டு அவற்றை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு கௌரவ அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகின்றோம். ஒரு கால வரையறையைக் குறிப்பிட்டு, அதற்குள்ளாக நடவடிக்கையெடுக்கப்படுமென்று அமைச்சரவர்கள் உத்தரவாதம் அளிப்பாரேயானால், பத்திரிகையாளர்கள் மகிழ்ச்சியடைய முடியும்.

இந்த நாட்டிலே தற்போது நிலவுகின்ற சூழ்நிலையிலே தமிழ்ப் பத்திரிகையாளர்கள், தமிழ் பேசுவோரென்ற வகையிலே பல சிரமங்களை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள். பத்திரிகையாளர்களுக்கான அடையாள அட்டைகளை அவர்கள் வைத்திருந்தும், அவற்றுக்குரிய மரியாதை வழங்கப்படுவதில்லையோ என்று சந்தேகிக்கக்கூடிய வகையிலே, சந்தேகப் பார்வைக்கு அவர்கள் உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. பத்திரிகையாளர்களுக்கு வெளிநாடுகளுக்குச் செல்கின்ற வாய்ப்புக்கள் வழங்கப்படும்போது, தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு அவ்வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றதென்ற குறை மிக நீண்ட காலமாகவே நிலவி வருகின்றது. மிக அரிதாகவே தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு அவ்வாறான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற வாய்ப்புக்கள், வசதிகள், வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவற்றிலே இன விகிதாசாரம் பேணப்பட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வெகுசனத்தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கான ஒலி, ஒளி பரப்புக்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாக இருந்து வருகின்றது. இது தொடர்பாக எடுத்துக் கூறப்படுகின்ற கருத்துக்கள் கவனிக்கப்படுமென உத்தரவாதமளிக்கப்பட்டாலும் கூட, காத்திரமான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அரச வெகுசனத் தொடர்பு சாதனங்களில் தமிழ் நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரை மூன்று முக்கியமான குறைபாடுகள் நிகழ்ச்சிகளின் தரத்தைக் குறைத்துக்கொண்டிருக்கின்றன, நிகழ்ச்சிகளை இரசிக்கும் மக்களின் பொறுமையையும் சோதித்துக்கொண்டிருக்கின்றன. போதிய நேரம் வழங்கப்படாமை, அரசியல் தலையீடுகள், திறமையாளர்கள் பற்றாக்குறை ஆகிய மூன்று முக்கிய குறைபாடுகளுமே நிகழ்ச்சிகளின் தரத்தைக் குறைத்துக்கொண்டிருப்பவையாகும். இக் குறைபாடுகள் நீக்கப்படாத வரை தமிழிலும் நிகழ்ச்சிகள் ஒலி —ஒளிபரப்பாகின்றன என்று சொல்லிக் கொள்ளக் கூடியதாக இருக்குமே தவிர, அவை தரம் வாய்ந்தவை தான் என்று கூறக்கூடிய நிலை ஏற்படப்போவதில்லை.

போதிய நேரம் வழங்கப்படாமையைப் பொறுத்த வரையில் உதாரணத்திற்காக ஒரேயொரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ரூபவாஹினி தொலைக்காட்சியில் ' ஆயுபோவன் ' நிகழ்ச்சிக்காக இரண்டு மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே இருபது நிமிடங்கள் மட்டுமே தமிழுக்கு ஒதுக்கப்பட்ருக்கின்றது. அதிலும் மூன்று நிமிடங்கள் இடையிலே பாடல் ஒலிபரப்புக்காக எடுக்கப்பட்டுவிடுகின்றது. ' ஆயுபோவன் ' நிகழ்ச்சியில் தமிழ்ப் பத்திரிகைகளை வாசிப்பவர்களின் பெயர்கள் சிங்கள எழுத்துக்களில் மட்டுமே காண்பிக்கப்படுவதனால் தமிழ் பேசும் நேயர்கள் அப்பெயர்களைப் புரிந்துகொள்வது மிகவும் சிரமமாக இருக்கின்றது. பேட்டிகள், சந்திப்புக்கள் போன்றவையும் இந்த ' ஆயுபோவன் ' நிகழ்ச்சியிலே இடம்பெற்று வருகின்றன. ஆனாலும், அந்நிகழ்ச்சிகள் தமிழில் நடத்தப்படுவதில்லை.

திறமையாளர்கள் பற்றாக்குறையைப் பொறுத்தவரை, ரூபவாஹினி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தில் கிட்டத்தட்ட 1200 ஊழியர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் பணியாற்றுகின்றார்கள் ; ஆனால், அவர்களில் பதினாறு தமிழர்களும் இருபது முஸ்லிம்களுமாக மொத்தம் முப்பத்தாறு பேர்தான் தமிழ் பேசுவோராக இருக்கின்றனர். அதனால் நாம் தமிழ் நிகழ்ச்சிகளைத் தரமானவையாக நடாத்துவதற்கும் சிரத்தையோடு செய்வதற்கும் முடியாதவொரு நிலைமை அங்கேயிருக்கின்றது. 'ரூபவாஹினி ' தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தில், நாற்பத்தைந்து படிப்பிடிப்பாளர்கள் வரை பணியாற்றுகின்றார்கள். அதிலே ஒருவர்கூட தமிழ் பேசுவோர் கிடையாது என்பது அதிர்ச்சியான செய்தியாக இருக்கின்றது. இதனால் தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட கலாசார நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றபோது, போதிய தரத்தை வெளிப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

' ரூபவாஹினி ' தொலைக்காட்சியில் " ஊர்க்கோலம் ", " ஊரும் உலகும் ", " ஒளித் தென்றல் ", " உதயகீதம் ", " காதம்பரி " போன்ற நிகழ்ச்சிகள், முன்னர் மாலை 7 மணிக்கும் 7.30 க்கும் இடைப்பட்ட நேரத்தில்தான் ஒளிபரப்பப்பட்டு வந்தன. ஆனால், தற்பொழுது அந்த நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்கும் 6.30 மணிக்கும் இடையில் ஒளிபரப்பப்பட்டு, முடிந்துவிடுகின்றன. வேலை செய்வோர் அலுவலகங்களில் இருந்து வீடு திரும்புவதற்கு மாலை 6.30 மணியாகிவிடுகின்றது. அதற்குள் இந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு முடிவடைந்து விடுகின்றபடியால் தமிழ் பேசும் நேயர்கள் அவற்றைப் பார்க்க முடியாமல் போய்விடுகின்றது. ' ரூபவாஹினி ' கூட்டுத்தாபனமும் சுயாதீனத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனமும் தமிழ்த் திரைப்படங்களை ஒளிபரப்பி வருகின்றன. அவ்வாறு ஒளிபரப்பப்படும் படங்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றன என்று எமக்குத் தெரியவில்லை. பிற்போக்குத்தனமான கருத்துக்களையும் மூடநம்பிக்கைகளையும் வளர்க்கும் விதமான திரைப்படங்கள் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுயாதீன தொலைக்காட்சியைப் பொறுத்த வரை, இதுவரையும் அதில் தமிழில் செய்திகள் வாசிக்கப்படுகின்ற ஒரு நிலைமை இல்லாது காணப்படுகின்றது. எனவே, அதற்கென ஒரு நேரத்தை ஒதுக்கி, தமிழிலும் செய்திகள் வாசிக்கப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

சுயாதீனத் தொலைககாட்சிக் கூட்டுத்தாபனத்தில் 390 ஊழியர்கள் வரை பணியாற்றுகின்றார்கள். அதில் இரண்டேயிரண்டு பேர்தான் தமிழ் பேசும் ஊழியர்களாக இருக்கின்றார்கள். இதனால் ' ரூபவாஹினித் ' தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காணப்படுகின்ற அதே குறைபாடுதான் சுயாதீனத் தொலைக்காட்சியின் தமிழ் நிகழ்ச்சிகளிலும் காணப்பட்டுக்கொண்டிருக்கின்றது. தொலைக்காட்சியின் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஏற்படுகின்ற மற்றொரு பாதிப்பு, விசேஷ நிகழ்ச்சிகள் ஏதாவது ஒளிபரப்ப வேண்டும் என்றால், தமிழ் நிகழ்ச்சிகளைத் தான் தூக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை நீண்டகாலமாக நிலவிக்கொண்டிருக்கின்றது. எப்போதாவது ஒருமுறை அப்படி நடைபெறுமானால் தற்செயல் என்றோ அல்லது அவசியம் என்றோ விளக்கம் சொல்ல முடியும். ஆனால், அது ஒரு வழக்கமாகவே மாறிவிட்டதனால், தமிழ் நிகழ்ச்சிகளின் மீதான அலட்சியம் என்றே நாங்கள் அதனைக் கருத வேண்டியிருக்கின்றது.

அரச வெகுஜனத்தொடர்புச் சாதனங்களில் திறமையாளர்கள் பற்றாக்குறை இருக்கும் போது, அதில் திறமையற்ற நபர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதை, நிகழ்ச்சிகளின் தரத்தை வைத்து நாங்கள் அவதானிக்க முடிகின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் அரச தொலைக்காட்சிச் சேவைகளிலும் சில செய்தி வாசிப்பாளர்களும் அறிவிப்பாளர்களும் தமிழிலேதான் பேசுகின்றார்கள். ஆனால், அவர்கள் தமிழைத்தான் பேசுகின்றார்களா என்று சந்தேகமாக இருக்கின்றது. அவர்கள் அந்த அளவுக்கு உச்சரிப்பிலே தமிழைக் கொலை செய்துகொண்டிருக்கின்றார்கள். தமிழைச் செந்தமிழ் என்று அழைப்பது வழக்கம். சில அறிவிப்பாளர்களின் உதடுகளில், செந்தமிழ், செத்த தமிழாக மாறிக்கொண்டிருக்கின்றது. அவர்கள் எப்படி அறிவிப்பாளர்களானார்கள் என்று கேட்டால், " அரசியல் சிபாரிசு " என்று பதில் வருகின்றது. அரசியல் சிபாரிசுகள் சரியா, தவறா என்பது ஒரு புறம் இருந்தாலுங்கூட, சிறந்தவர்களைச் சிபாரிசு செய்கின்ற முறை கூட பின்பற்றப்படவில்லையே என்பது கவலைக்குரியதாக இருக்கின்றது. கௌரவ பிரதி அமைச்சர் அலவி மௌலானா அவர்கள் அழகு தமிழிலே பேசக் கூடியவர். நாங்கள் இங்கே சுட்டிக் காட்டிய குறைபாடுகளை அவரும் அறிந்து வைத்திருப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அந்த நம்பிக்கை இருந்தால் மட்டும் போதாது. தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறிவிப்பாளர்களின் தரம் பேணப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, அரசாங்கத்தின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில், தற்போது யுத்த நடவடிக்கைகள் பற்றிய செய்திகளுக்கும் விளக்கப் படங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகின்றது. அதேசமயத்தில் இந்த யுத்தம் ஏன் ஏற்பட்டது ? இந்த யுத்தத்தால் எவ்வாறு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உயிர்கள் பலியாக்கப்படுகின்றன என்பவற்றையும் எடுத்து விளக்குகின்ற, தெளிவுபடுத்துகின்ற பிரசாரங்களும் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன், இனப்பிரச்சினைக்குக் கௌரவமான ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியத்தையும், அவ்வாறு காணப்படாது போனால், இந்த நாட்டின் பெருமதிமிக்க மனித உயிர்கள் பலியாகிக் கொண்டேயிருக்கும் என்பதையும் நாம் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

தகவல் தொடர்பு துறையினால் ஒரு தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, ' திங்கள் ' என்ற ஒரு பத்திரிகை வெளியாகியது. மாதம் ஒரு பத்திரிகை வெளிவரும் என்று கூறப்பட்ட போதிலும், ஒரு பத்திரிகை வெளியாகி மூன்று மாதங்களின் பின்னர், இப்பொழுது தான் அடுத்த பத்திரிகை வெளியாகியிருக்கின்றது. இவ்வாறான நிலையில் ஆள் பற்றாக்குறை, தகவல்கள் பற்றாக்குறை போன்றவை இருக்குமானால், அதற்குரிய வழிவகைகளைச் செய்து, சரியான முறையில் அந்தப் பத்திரிகை தொடர்ந்து வெளிவர அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்ளுகின்றோம். அதேசமயத்தில், தமிழில் மட்டுமல்லாமல் சிங்கள மொழியிலும் யுத்தத்தின் கொடுமைகள் பற்றியும், அரசியல் தீர்வின் அவசியம் பற்றியும், இந்த யுத்தம் நிரந்தரமான ஒரு முடிவுக்கு வருவதற்கு அரசியல் தீர்வொன்றின் அவசியம் எவ்வளவு முக்கியமானது என்பது பற்றியும் வலியுறுத்திப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யுத்தத்தின் முடிவு என்பது ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றுவதோடு சம்பந்தப்பட்ட விடயமல்ல. தற்போது வடக்கிலே புலிகளுக்கெதிரான — பாசிசத்துக்கெதிரான — ஒரு . யுத்தத்தில் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டியவர்கள் ; புலிகளுடைய ஜனநாயக விரோத செயல்கள் ஒதுக்கப்பட வேண்டும் ; வடக்கு — கிழக்கிலே ஜனநாயக சூழல் மீளப் பெறப்பட வேண்டும் என்பதிலே ஈ.பி.டி.பி. யினராகிய எங்களுக்கு எள்ளளவும் வேறுபாடு கிடையாது. ஆனால், யுத்தத்தின் வெற்றி என்பது குறித்து தற்போது எழுந்துள்ள கருத்துக்கள் தொடர்பாக எங்களுக்கு மாறுபட்ட கருத்து இருக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவதோடு யுத்தம் முடிவடைந்துவிட்டதாகக் கூறப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே இருக்கிறோம்.

புலிகள் தங்களைப் பற்றி, தங்களுடைய இராணுவ பலம் பற்றி அளவுக்கதிகமாக ஏற்படுத்தி வைத்திருந்த பிரமைகள்தாம் இன்று உடைக்கப்பட்டுள்ளன. ஒரு ' கெரில்லா ' குழுவாக இருந்துகொண்டு, ஒரு பிரதேசத்தைத் தங்களால் வைத்திருக்க முடியும் என்று புலிகள் ஏற்படுத்தி வைத்திருந்த பிரமைகள்தாம் இன்று உடைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்,' கெரில்லா ' போர் முறையில் தொடர்ந்தும் தாக்குப் பிடிக்கக்கூடிய பலத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ' கெரில்லாக்கள் ' உயிர் வாழ வேண்டுமானால், மக்கள் என்னும் கடல் அவர்களுக்கு அவசியமாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்பியிருந்தார்கள்.

அரச தூதுக்குழுவின் யாழ்நகர் நோக்கிச் சென்றபோது, மக்கள் 'ஹெலிகொப்ரரை ' ச் சுற்றி வளைத்து தங்களுடைய பாசத்தை வெளிப்படுத்தி, அந்த அரச தூதுக்குழுவினரை வரவேற்றார்கள். அதனைக் கண்டு பொறுக்க முடியாத புலிகள் இயக்கத்தினர், ' ஹெலிகொப்ரர் ' இறங்கு தளத்தையே பின்னர் மாற்றுகின்ற நிலைக்குச் சென்றார்கள். வடக்கு — கிழக்குத் தமிழ் பேசும் மக்கள், புலிகளுடைய தனி ஆதிக்க நோக்கத்தையும் ' தமிழீழம் தங்களுடைய தாகம் ' என்று கூறிக்கொண்டு அவர்கள் தமிழ் பேசும் மக்களுடைய உயிர், உடைமை இழப்புக்களுக்குக் காரணமாக இருப்பதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய சமாதான விருப்பமும் மேதகு ஜனாதிபதி அவர்கள் மீது இருக்கக்கூடிய விருப்பமும் வளர்ந்துவிட்டால் தங்களால் தமது போரை நடத்த முடியாது என்ற காரணத்தினால், புலிகள் அவசரப்பட்டு போர் நிறுத்தத்தை முறித்துக்கொண்டார்கள். அதன் விளைவாக இன்று மக்களைப் புலிகள் நடு வீதியிலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அந்த மக்களை வென்றெடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும் இருக்கிறது ; நமக்கும் இருக்கிறது. அரசியல் தீர்வொன்றின் மூலமாகத் தமிழ் பேசும் மக்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைய வைக்க வேண்டும். அந்த முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம் என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஆர். இராமமூர்த்தி அவர்கள் வீடமைப்பு நிர்மாணத்துறை, பொதுவசதிகள் அமைச்சு மீதான வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 04, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ආර්. රාමමූර්ති මහතා)
(திரு. ஆர். ராமமூர்த்தி)
(Mr. R. Ramamoorthy)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொதுவசதிகள் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டில் எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், சில கருத்துக்களையும் கூறி வைக்கலாமென எண்ணுகின்றேன்.

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளாவன, உணவு, உடை, உறையுள் என்பனவே. உறையுள் என்பது அவன் தனக்கென்று வீடொன்றை அமைத்துக் கொண்டு வாழ்வதையே குறிக்கும். தமிழில் ஒரு பழமொழி உண்டு. " எலி வளையானும் தனி வளை வேண்டும் " என்று சொல்வார்கள். ஒரு மனிதன், தனக்கென்று ஒரு குடும்பம் அமைந்த பின், எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் தனக்கென்று ஒரு வீட்டைக் கட்டவே தீர்மானிப்பான். ஆனால், வடக்கு — கிழக்கில், கஷ்டப்பட்டுப் பல சிரமங்களுக்கு மத்தியிலும், தாங்களே தனித்துவமாய்க் கட்டிய வீட்டில் வாழ முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ள அந்த நான்கு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள், அநாதரவாக, அகதிகளாக, மர நிழலிலும் இரவல் வீட்டுத் தாழ்வாரங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், நான் வீடமைப்பு, நிர்மாணத்துறையைப் பற்றி இங்கு இச்சபையில் பேசிக் கொண்டிருக்கின்றேன். இது எனக்கு ஒரு மனச்சங்கடத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்துகின்றது. வடக்கு — கிழக்குப் பகுதிகளில், 1983 ஆம் ஆண்டிலிருந்து யுத்தத்தினால் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக நான் கருதுகின்றேன். எனவே, இவற்றை மீண்டும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியது, உடனடித் தேவையெனவும் கருத இடமுண்டு.

ප. ව. 1.45

தேர்தல் தொகுதி ஒன்றிற்கு நூறு வீடுகள் கட்டும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். கஷ்டப்பட்டு வறுமையில் வாடும் மக்களுக்கு இத்திட்டத்தினால் பலன் கிடைக்கும். பலன் கிடைத்துக் கொண்டிருப்பதாகவும் எனக்கு முன்பு பேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கு குறிப்பிட்டு, அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். நானும் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால், வட பகுதியிலுள்ள தொகுதிகளில் இருக்கின்ற வீடுகள், இன்று கொடிய யுத்தத்தினால் நாசமாக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதனையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அரசின் " பொருளாதார சாதனைகள் " என்ற புத்தகத்தில், " யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது " எனக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் அப்பிரதேசங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டதாகவே கருத இடமுண்டு. எனவே, இத்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் விடுக்கப்பட்டுள்ள, பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள தீவுப் பகுதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கௌரவ அமைச்சரவர்களிடம் கேட்டுக்கொள்ளுகின்றேன். மேலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1500 வீடமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 1996 இல் இதே நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 13,500 வீடமைப்பு வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது. இவற்றில் வட பகுதியையும் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

1994 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியால் மாகாணங்களுக்கு வீடமைப்புக்கென வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் புள்ளி விபரங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மத்திய பகுதிக்கு 13.8 சதவீதம், கிழக்குப் பகுதிக்கு 2.8 சதவீதம், வடமத்திய பகுதிக்கு 24.5 சதவீதம், வடமேற்குக்கு 8.2 சதவீதம், வடக்குப் பகுதிக்கு 0.7 சதவீதம், சப்ரகமுவாப் பகுதிக்கு 7.8 சதவீதம், தென்பகுதிக்கு 11.3 சதவீதம், ஊவாப் பகுதிக்கு 2.8 சதவீதம், மேல்மாகாணத்திற்கு 28.1 சதவீதம் என்றவாறு வழங்கப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரத்திலிருந்து வடக்கு — கிழக்குப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவே தெரிய வருகின்றது. சனத்தொகையின் விகிதத்தில் பார்த்தால் கூட வடக்கு — கிழக்கிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் விகிதாசாரம் ஒரு கண்துடைப்பாகவே கருத இடமுண்டு. எனவே, இதனையும் அமைச்சரவர்கள் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தமிழ்த் தேசிய இனமும் சிங்களத் தேசிய இனமும் தமக்கென்றொரு வீட்டிலே பாதுகாப்பாக வாழ்வதுடன், இரண்டு இனங்களும் ஒரு மத்திய அரசின்கீழ் ஐக்கியத்துடன் ஒருமித்து வாழக்கூடியதாக, வடக்கு — கிழக்கிற்குச் சுயாட்சியதிகாரம் கொண்ட ஒரு சமஷ்டி அரசொன்று அமைக்கப்பட வேண்டுமென்பதே ஈ.பீ.டி.பீ. கட்சியினரான எமது நிலைப்பாடாகும். இது தொடர்பான எமது யோசனைகளை ஜனாதிபதி


படிப்பகம்

www.padippakam.com

அவர்களிடம் நாம் கையளித்துள்ளோம். எனவே, இதனடிப்படையில் இரண்டு இனங்களும் ஒன்றாக சகோதரத்துடன் வாழ வழிசமைக்கப்பட வேண்டும்.

கொழும்புக்கு வரும் தமிழ் மக்கள் தமது உறவினருடன் தங்க முடியாத வகையில் பதிவு, தேடுதல், விசாரணைக்கு அழைத்தல் போன்ற நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுகின்றனர். மண்டபம் முகாமைப் போன்று கொழும்பிலும் ஒரு முகாமை அமைக்கவும், அங்கிருப்பதுபோன்று ஆண்களைப் புறம்பாகவும் பெண்களைப் புறம்பாகவும் பாடசாலைகளில் தங்க வைப்பதற்கும் ஒழுங்கு செய்யப்படுவதாக வாரப் பத்திரிகையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் கொழும்பில் விடுதிகளில் பணத்தைச் செலுத்தித் தங்குவதற்குப் பதிலாக தர்ம சத்திரங்களில் தங்க விரும்பமாட்டார்கள். அவர்களும் இந்நாட்டின் கௌரவ் பிரசைகள் என்பதை நீங்கள் கருத்தில்கொள்ள வேண்டும்.

1990 இல் யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் மக்கள் தமது வீடுவாசல்களை விட்டு 24 மணிநேர அவகாசத்தில் எவ்வாறு வெளியேற்றப்பட்டார்களோ, அதுபோன்று கொழும்பில் தமிழர்கள் தங்கியிருந்த பல விடுதிகள் பொலிசாரின் திடீர் உத்தரவினால் 24 மணிநேர முன்னறிவித்தலுடன் இழுத்து மூடப்பட்டுள்ளன. இதனால் இவ்விடுதிகளில் தங்கியிருந்த தங்குமிடமற்ற பல நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் போக்கிடமின்றி நடுத்தெருவில் அவதிப்பட வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டுள்ளது. தமது பல்வேறு சொந்த அலுவல்களின் நிமித்தம் தலைநகருக்கு வருபவர்கள், கூடுதலாக விடுதிகளில் தங்கி நிற்கின்றனர். முன்புபோல் உடனடியாகத் தமது தேவைகளையும் கடமைகளையும் பூர்த்தி செய்துகொண்டு திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலை இன்று இல்லாமையினால் இவ்விடுதிகளே அவர்களுக்கு உதவுகின்றன. வடக்கில் இடம்பெறுகின்ற யுத்தத்தின் காரணமாகப் புலம்பெயர்ந்து கொழும்புக்கு வருபவர்களும் விடுதிகளிலேயே தங்கி நிற்கவேண்டி வேண்டியுள்ளது. பொலிசாரின் தேடுதல் காரணமாக உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் அவர்கள் தங்கி நிற்க முடியாது. விடுதிகளைக் குறுகியகால முன்னறிவித்தலுடன் மூடி, அங்கிருந்தோரை வெளியேற்றியிருப்பது மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட செயலாகவே தோன்றுகின்றது. பாதுகாப்பிற்காகப் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாததும் அவசியமானதும்கூட. இது எமக்கும் புரியும். ஆனால், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலில்லாமல் ஆரோக்கியமான முறையிலே நடந்துகொள்ள வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகின்றேன். *[இடையீடு]*

இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக உள்ளவர்கள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். அம்மக்கள் வசிக்கும் ' லயன்களை ' ப் பாருங்கள் ! ஆடு மாடுகள் அடைக்கப்பட்டுள்ளது போல பல நூற்றாண்டுகளாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று ஐரோப்பிய நாடுகளில் ஆடு மாடுகளைக்கூட அழகான தொழுவங்களில் அடைக்கின்றனர். ஆனால், இம்மலையக மக்கள் இன்றும் இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழைய சௌகரியமற்ற ' லயன்களி ' லேயே வாழ்ந்து வருகின்றார்கள். இதுவரை அவர்களுக்கு வீடமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, அவர்களுக்குத் தகுந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்று இச்சபையில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அம்பாறையில் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வரட்சியினால் வாடுகின்றார்கள். எனவே, அவர்களுக்கு நீர்வழங்கல் திட்டமொன்று ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். இருபது மில்லியன் ஜேர்மன் மார்க் செலவில் அம்பாறையிலும், நாவலப்பிட்டியிலும் நீர் வழங்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அறிகிறோம். அவை வெறும் ஒப்பந்தங்களாகச் செயலற்றுக் கிடக்காமல், அவற்றை உடனடிச் செயல்திறன் உள்ளதாக மாற்றி, அக்கிராம மக்களின் வரட்சியைப் போக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வடக்கு — கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளில் கூட சீமெந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அது மாத்திரமன்றி, சீமெந்து கொண்டு செல்வதற்குப் படையினர் தடைவிதித்துள்ளதாகவும் அறிய வருகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து திட்டமிட்ட அணைக்கட்டு வேலைகள், கட்டட வேலைகள் கூட இதுவரை ஆரம்பிக்கப்படாமல் தாமதமாகவே உள்ளன. ஆண்டு முடிவடையவுள்ளதால் படையினரின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளுக்காவது உடனடியாக சீமெந்து எடுத்துச் செல்வதற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

17.11.1995 அன்று எமக்குக் கிடைத்த அகதிகளின் புள்ளிவிபரங்களைத் தருகின்றேன். கிளிநொச்சியில் தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்கள் 18528. அகதி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்கள் 3997. முல்லைத்தீவில் தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 1625. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 11651. அகதி முகாம்களில் இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 8026. குடும்ப அங்கத்தவர் தொகை 31208. மன்னாரில் தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்கள் 1325. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5925. அகதி முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 997. குடும்ப அங்கத்தவர்கள் 3751 பேர். வவுனியாவில் தனியார், உறவினர் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் 646. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 4104 ஆகும். அகதி முகாம்களிலும் வேறிடங்களிலும் தங்கியிருக்கும் குடும்பங்கள் 162 ; குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 595 ஆகும். செட்டிகுளத்தில் விடுவிக்கப்பட்ட பகுதியில் தனியார், உறவினர் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் 346 : குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1062 ஆகும். அகதி முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியிருப்போரின் எண்ணிக்கை 119 ஆகும்.

இவை 17.11.1995 இற்கு முன்னர் எமக்குக் கிடைத்த புள்ளி விபரங்களாகும். இன்று தொகை அதிகரித்திருக்கலாம். எனவே அகதிகளின் மனங்கோணாமல் அவர்களுடைய மனங்களை வெல்ல வேண்டிய கடமை இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதனைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். *[இடையீடு]*

மேசையில் வைக்கப்பட்டுள்ள " தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் " என்ற புத்தகத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ள 21 புனித பிரதேசங்கள் கருத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. நாம் இதுபற்றி முன்பும் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். எனக்கு முன் பேசிய கௌரவ உறுப்பினர் திரு. பாலச்சந்திரன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டியுள்ளார். இதில் 21 புனிதத் தலங்கள் புனித கருத்திட்டங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் சிலாபம் முன்னேஸ்வரம் கோவில் மாத்திரமே வட பகுதிக்குட்பட்டதாக, தமிழ் பேசும் மக்கள் வணங்கும் வணக்கஸ்தலமாகக் கருத இடமுண்டு. மன்னாரில் திருக்கேதீஸ்வரம், திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம் ஆகிய இரண்டும் பாடல் பெற்ற தலங்கள் என்று பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். நாமும் பலமுறை எடுத்துக் கூறியுள்ளோம். இவற்றை இந்தத் திட்டத்தில் சேர்த்து அந்த மக்களின் மனங்களையும் வெல்ல வேண்டிய கடமை இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. இவற்றை வெறும் பேச்சுக்களாக அனைத்து தமிழ் உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் பேசிக்கொண்டிருக்கும் காலம் இதுவல்ல. இது இந்த அரசாங்கத்தின் கடமை என்பதைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டிய காலகட்டத்தில் இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதைக் கௌரவ அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். சந்திரகுமார் அவர்கள் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், பெருந்தோட்டத்துறை பாராளுமன்ற விவகார அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 05, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

එම්. චන්ද්‍රකුමාර් මහතා
(திரு. எம். சந்திரகுமார்)
(Mr. M. Chandrakumar)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டத்துறை, பாராளுமன்ற விவகார அமைச்சானது இன்றைய அரச இயந்திரத்தில் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கும் அமைச்சாகும். நாட்டின் நிர்வாக அமைப்பிலுள்ள சகல உத்தியோகத்தர்களின் நியமனம், சேவை, நிபந்தனைகள், ஓய்வூதியம் போன்ற விடயங்களையும் நாட்டின் பல்வேறு நிர்வாகக் கடமைகளையும் ஆற்றுகின்ற மாவட்ட நிர்வாகம், நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியைப் பெருமளவில் ஈட்டித் தரும் பெருந்தோட்டத்துறை என்பன இந்த அமைச்சின் கீழேயே வருகின்றன. இத்தகைய முக்கியமான விடயங்களைக் கையாளும் அமைச்சுச் சம்பந்தமான குழுநிலை விவாதத்திலே ஈ.பி.டி.பி. சார்பாகக் கலந்துகொண்டு குறுகிய நேரத்திலே பல்வேறுபட்ட விடயங்களையிட்டு நுண்ணியமான முறையில் ஆராய முடியாவிடினும், சில விடயங்களையிட்டுச் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, கடந்த கலங்களில் பழைய கொள்கையின்படி அரசாங்க சேவைக்கு நியமனங்கள் செய்யப்பட்டபோது சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில அரசாங்க சேவைகளில் ஓரிரு சிறுபான்மை இனத்தவர்கூட நியமனம் பெற முடியவில்லை. உதாரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொண்டால் இலங்கை நிர்வாக சேவை இரண்டாம் வகுப்பு இரண்டாந் தரத்தில் கிட்டத்தட்ட 200 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. வடக்கு — கிழக்கில் பல மாவட்டங்களில் உதவி அரசாங்க அதிபர் பதவிகளும் மாவட்டத்



படிப்பகம்

www.padippakam.com

திணைக்களத் தலைவர் பதவிகளும் பதில் உத்தியோகத்தர்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன. பகிரங்க சேவைக்கு — அரசாங்க சேவைக்கு — ஆட்சேர்ப்பதற்கு கடந்த அரசாங்க காலத்தில் ஒரு புதிய தேசியக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இக்கொள்கை பற்றிய விபரங்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 15/90 இல் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப்புதிய தேசிய கொள்கையின்படி, நியமனங்கள் அரசியல் தலையீடுகள் இன்றித் திறமை அடிப்படையிலும் இன விகிதாசார அடிப்படையிலும் செயற்படுத்தப்பட்டன. அரசியல் தலையீடுகள் இன்றித் திறமையும் இன விகிதாசாரமும் பேணப்பட்டு வந்ததால் இலங்கை நிர்வாக சேவை போன்ற உயர் சேவைகளில்கூட கணிசமான அளவு சிறுபான்மையினர் அரச நியமனங்களைப் பெற்றனர். இந்தத் தேசியக் கொள்கை அமுலாக்கப்பட்ட பின்பு ஒரு சில சிறுபான்மையினர் நியமனங்களைப் பெற்ற போதிலும், ஏற்கனவே கிட்டத்தட்ட 200 வெற்றிடங்கள் இருந்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இலங்கை நிர்வாக சேவை விசேட பரீட்சையொன்று நடத்தப்பட்டு, கிட்டத்தட்ட 90 உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு நிலைமை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தற்பொழுது அரசாங்க சேவை நியமனம் சம்பந்தமான மேற்படி கொள்கை மாற்றப்பட்டுள்ளதாக அறிகிறேன். சிறந்த போட்டி அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை வெளிநாட்டுச் சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவை போன்ற பல்வேறு பரீட்சைகளிலும் இன விகிதாசாரம் பேணப்பட்ட மாட்டாதென அறிய வருகிறது. இன விகிதாசாரம், அரசாங்க நியமனங்களில் பேணப்படுவதானது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்ற வாதத்தின் பேரிலேயே இந்தக் கொள்கை மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் நான் அறிகிறேன். அப்படியாயின் இந்த நாட்டில் பல்கலைக்கழக அனுமதிகளில், தமிழ் பேசும் மாணவர்களுக்கு மிகவும் அநீதி இழைக்கப்படுகின்ற வகையில் மாவட்ட அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது, அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகாதா ?

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, தற்பொழுது வடக்கு —கிழக்கு மாகாணங்களில் மட்டும் இலங்கை நிர்வாக சேவையில் நூற்றுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன. ஏனைய அரச சேவைகளிலும் இந்நிலைமை நிலவுகின்றது. தனியே திறமை அடிப்படையில் நியமனங்கள் செய்ய முயலும் போது, குறிப்பிட்ட பிரதேச மக்களின் மொழியைப் பேசாத உத்தியோகத்தர்கள் தெரியப்பட்டு நியமிக்கப்பட்டால், அதனால் அப் பகுதி மக்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஆகவே, மாவட்ட — மாகாண அடிப்படையில், அல்லது மொழிவாரியாகப் பதவி வெற்றிடங்கள் அடையாளங் காணப்பட்டு நியமனங்கள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

1963 இல் இலங்கை நிர்வாக சேவை முறை உருவாக்கப்பட முன்பு, ' டி. ஆர். ஓ. ' முறை அமுலில் இருந்தது. ' டி. ஆர். ஓ. ' க்கள் அதாவது, இலங்கை பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள், கண்டிய மாகாணங்கள், கீழ் நாடு — 'Low country' — தமிழ் பேசும் பிரதேசங்கள் என்ற மூன்று பிரிவுகளின் அடிப்படையிலே பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெற்றது. 1963 இல் புத்தளம், கற்பிட்டி, முந்தல் போன்ற பிரிவுகள் தமிழ் பேசும் பிரதேசங்களுள் அடங்கின. உள்ளூராட்சிச் சேவைக்குக் கூட மொழிவாரியாகப் பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்டு நியமனங்கள் நடந்தன. இந்த முறையானது மீண்டும் பின்பற்றப்பட்டாலேயே, வடக்கு — கிழக்கிலும், மலையகத்திலும் நிலவும் பதவி வெற்றிடங்களைச் சரியான முறையில் நிரப்பக் கூடியதாக இருக்கும்.

எமது நாட்டின் பகிரங்க சேவை சம்பந்தமாகவும் நான் சில கருத்துக்களை இந்த அவையில் முன் வைக்க விரும்புகின்றேன். நாம் விரைவில் 21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கவுள்ளோம். ஆனால், எமது பகிரங்க சேவையோ இன்னும் பிரிட்டிஷாரால் கையளிக்கப்பட்ட அதே நிலையிலேயே உள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இன்றைய நிலையில், தனியார் துறையின் தேவைகளுக்கு ஒத்துழைப்புக் கூடிய, திறமை மிக்க பகிரங்க சேவையொன்று ஸ்தாபிக்கப்படுதல் அவசியமாகும்.

தலைவர் அவர்களே, தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படக் கூடிய வர்த்தக ரீதியான நடவடிக்கைகளை, அரசாங்கம் பகிரங்க சேவையிடம் விட வேண்டிய அவசியமில்லை. அத்தியாவசிய சேவைகளைத் தவிர, வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளும் அரசாங்க திணைக்களங்கள் மூடப்பட வேண்டும்.

இந்த நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்று வரும் போராட்டங்களையடுத்து, மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் விதத்தில், இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியலமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில், மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாறு மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மத்திய அரசு அபகரிக்கும் விதத்தில், " பழைய குருடி கதவைத் திறடி " என்பதைப் போல செயற்படுவது வருத்தத்துக்குரியது. அதிலும், சிறுபான்மையினருக்கு உரிய நியாயம் வழங்குவதாக நாட்டு மக்கள் அனைவருக்கும் வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம், அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் ஏனைய அரச நிறுவனங்களையும் தன்னகத்தேயே கொண்டிருப்பது முரண்பாடான விடயமாகும். நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புத் திணைக்களம், சமூக சேவைத் திணைக்களம், மத்திய உள்ளூராட்சி ஆணையாளர், மத்திய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் போன்ற திணைக்களங்களும், பதவிகளும் இன்றைய நிலையில் மத்திய அரசின் கீழ் இயங்குவது அவசியமா ? திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் இந்தக் காலகட்டத்தில் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அவசியமா ? தற்போது விவசாய அபிவிருத்தி அதிகார சபைக்கான தேவையுள்ளதா ? அரசாங்க பகிரங்க சேவை சம்பந்தமான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது இவை குறித்துப் பரிசீலிக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் எமக்கு அவசியமானது சிறிய, ஆனால் திறமையான பகிரங்க சேவை ஒன்றே. பொது நிர்வாக அமைச்சு இந்த முயற்சிக்குத் தலைமை ஏற்க வேண்டும். பகிரங்க சேவைச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் சிறிய, ஆனால் பலம்வாய்ந்த குழுவொன்று அமைக்கப்படல் வேண்டும்.

மலேசியா, இந்தோனேசியா, கனடா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் பகிரங்கச் சேவைச் சீர்திருத்தங்களை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். நமது நாட்டிலும் இவ்வாறான சீர்திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். கடந்த காலத்தில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான சீர்திருத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனால், அரசியல் தலைமைத்துவத்தின் உதவியுடன் இச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படின் வெற்றி கிடைப்பது நிச்சயம். We need political commitment இதனை நாம் மறக்கக் கூடாது.

பகிரங்க சேவையைப் பொறுத்தமட்டில் இன்னுமொரு விடயமும் மிக முக்கியமானது. நாம் திறமையான பகிரங்க சேவையொன்றினை எதிர்பார்த்தால், அதற்கேற்ப எமக்குச் சில கடமைகளும் உள்ளன. முதலாவதாக, திறமையான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்ய வேண்டும் ; இரண்டாவதாக, அத்தகைய உத்தியோகத்தர்களுக்குச் சிறந்த சம்பளத்தை வழங்க வேண்டும். இன்று இலங்கையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் திருப்தியானதாக இல்லை. வங்கியொன்றில் சிற்றூழியரொருவர் பெறும் சம்பளம், அரசாங்க சேவையில் ஓர் அலுவலக அதிகாரி — Staff Officer பெறும் சம்பளத்தைவிட அதிகமானது. கௌரவ நிதியமைச்சர் வழங்கியுள்ள 250 ரூபா சம்பள அதிகரிப்பு — அதுவும் இரண்டு கட்டமாக — திருப்தியானதாக இல்லை. நாட்டைப் பாதுகாக்கும் நிதிக்குச் சில அரசாங்க ஊழியர்கள் தமது சம்பளத்தில் இரண்டு சதவீதத்தைக் கொடுக்க வேண்டியுள்ளது. அரச ஊழியர்களின் 250 ரூபா சம்பள அதிகரிப்பைவிட இது அதிகமான தொகையாகும்.

தேசிய சம்பள ஆணைக்குழு அரசாங்க ஊழியரின் சம்பள விடயத்தில் திருப்திகரமான, முன்னேற்றகரமான ஆலோசனைகளைத் தெரிவிக்குமென்று நான் நம்புகின்றேன். சிங்கப்பூர், மலேசியா போன்ற கைத்தொழில் மயமாகிவரும் நாடுகளின் சம்பள விகிதங்களுக்கொப்ப இலங்கையிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படல் வேண்டும். நமது அண்டை நாடான இந்தியாவில்கூட, அரச ஊழியர்களுக்குத் திருப்தியான வேதனம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. திறமைவாய்ந்த, தகுதிவாய்ந்த ஊழியர்களைக் கவரும் விதத்தில் சம்பள விகிதம் அமைவது முக்கியமானதாகும்.

கௌரவ தலைவர் அவர்களே, இந்த அமைச்சின்கீழ் உள்நாட்டு அலுவல்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களும் வருகின்றன. மாவட்டச் செயலாளர்கள், பிரதேசச் செயலாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் போன்றோர் இந்த அமைச்சின் கீழேயே கொண்டுவரப்பட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகம் தொடர்பாக எமது நாடு பல பரீட்சார்த்தங்களை இதுவரை சந்தித்துள்ளது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த கச்சேரி முறை 1990 இல் மாற்றம் கண்டது. எனினும், அதற்குப் பதிலாக உருவான பிரதேச செயலக முறை பெரிதாக வெற்றியளிக்க இடம் தரப்படவில்லை. மீண்டும், அரசாங்க அதிபர்கள், ' மாவட்டச் செயலாளர்கள் ' என்ற உருவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். சிறிது காலம் பிரதேசச் செயலாளர்களும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் மாகாண சபையின் கீழ் செயற்பட்டு, இப்போது மீண்டும் உள்நாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான மத்திய அமைச்சின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர். இப்பரீட்சார்த்தங்கள் யாவும் அவசியமானவையா ? முன்னோடி வழிகாட்டி — PILOT — அடிப்படையில் இவற்றை பரீட்சித்துப் பார்த்துப் பின்னர் அமுலாக்கியிருக்கலாமல்லவா !

கிராம சேவை உத்தியோகத்தர்கள் மத்திய அரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டதை, பொதுஜன ஐக்கிய முன்னணியினர், மேல் மாகாண சபை, தென் மாகாண சபை, வடமேல் மாகாண சபை ஆகியவற்றின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது கண்டித்திருந்தனர். ஆனால், இன்று நிகழ்வது என்ன ? கிராம சேவை உத்தியோகத்தர்களை மீண்டும் மாகாண சபையின் கீழ்க் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்தியாவில் மாவட்ட கலெக்டர்கள், தாசில்தார்கள், கிராம நிர்வாக அதிகாரிகள் போன்றோர் மாநில அரசின் கீழ் கடமை புரிகின்றனர். இலங்கையிலும் உண்மையாகவே அரசு அதிகாரப் பரவலாக்கலை



படிப்பகம்

www.padippakam.com

அமுல்படுத்த விரும்பினால், மாவட்ட நிர்வாகங்களைப் பூரணமாக மாகாண அரசுகளிடமே வழங்க வேண்டும். இதனைக் கௌரவ அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே, வடக்கு — கிழக்கு மாகாணங்களிலே கடமை புரியும் அரசாங்க ஊழியர்களுக்கான இடர்க் கொடுப்பனவு — றிஸ்க் அலவன்ஸ் — தொடர்பாக இச்சபையில் பிரஸ்தாபிக்க விரும்புகின்றேன். நெருக்கடியான பிரதேசங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென்று அரசு தீர்மானித்தது. அதற்கு அங்கீகாரமும் வழங்கியிருந்தது. ஆனால், இன்றுவரை வடக்கு — கிழக்கிலுள்ள விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு அதனை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்து தரப்படவில்லை. இவ்வருடம் ஏப்பிரல் மாதத்திலிருந்து டிசம்பர் வரை இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்து. அனுராதபுரம், புத்தளம் போன்ற பகுதிகளும் நெருக்கடியான பிரதேசங்களாகக் கருதப்பட்டு, அங்கும் இந்த இடர் கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இப்பகுதிகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். ஆனால், மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவர்களும் பல சிரமங்கள் மத்தியில் கடமை புரிபவர்களுமான வடக்கு — கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுவதை வேதனையுடன் நாம் நோக்குகின்றோம். இக்கொடுப்பனவுகளை அரச ஊழியர்களுக்கு வழங்க 180 மில்லியன் ரூபா மாகாண சபைக்குத் தேவைப்படுகின்றது. இப்பணம் கிடைக்கப்பெற கௌரவ அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக, விடுவிக்கப்படாத பிரதேசங்களில் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கும் இந்த இடர்க் கொடுப்பனவு வழங்கத் தீர்மானம் எடுக்கப்படாதது வருத்தத்திற்குரியது. இப் பிரதேசங்களில்தான் மிகவும் சிரமங்களின் மத்தியில், அதிக வாழ்க்கைச் செலவுகளை எதிர் நோக்கி, பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் அரச ஊழியர்கள் கடமை புரிகின்றனர். இவர்களின் நிலைமையை விளங்கி, அவர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் கிடைக்க கௌரவ அமைச்சர் மனிதாபிமான அடிப்படையில் உதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மன்னார்தீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகள் விடுவிக்கப்படாத பிரதேசங்களாகக் கருதப்பட்டு, இந்த இடர்க் கொடுப்பனவு வழங்குவதற்கான பட்டியலிலிருந்து விடுபட்டுள்ளன. இவ்விரு பகுதிகளும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பிரதேசங்களாக இருந்தும் விடுவிக்கப்படாத பகுதிகளாகக் கருதியதன் காரணம் எனக்குப் புரியவில்லை. ஆகவே, இப்படியான தவறுகள் நீக்கப்பட்டு அப்பிரதேசங்களில் கடமை புரியும் ஊழியர்களைக் கௌரவப் படுத்துமாறும், மேலும் அரச ஊழியர்கள் அங்கு சென்று கடமையாற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே, வடக்கு — கிழக்கு மாகாண சபையில் பல்வேறு அமைச்சுச் செயலகங்கள், பிரதேச திணைக்களங்களில் உள்ள ஆளணிப் பற்றாக்குறையின் விபரங்களைப் பார்த்தால், அதிர்ச்சியாக உள்ளது. இந்த ஆளணிப் பற்றாக்குறை சம்பந்தமாக சம்பள ஆளணிக் கமிசனுக்குப் பல தடவைகள் அறியத்தந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பல்வேறு அமைச்சுச் செயலகங்கள், திணைக்களங்கள், பிரதேசச் செயலகங்கள் போன்றவற்றில் காணப்படும் வெற்றிடங்களையும், நிரப்பப்பட வேண்டிய ஆளணித் தேவைகளையும் பற்றிய விபரத்தினை இச் சபா பீடத்தில் சமர்ப்பிக்கின்றேன். * இப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்ய கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. இராசமாணிக்கம் அவர்கள் கால்நடை அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 07, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ඒ. රාසමානික්කම් මහතා
(திரு. ஏ. இராசமாணிக்கம்)
(Mr. A. Rasamanickam)

கௌரவ தவிசாளர் அவர்களே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் "சூரியக் கதிர்" இராணுவ நடவடிக்கை காரணமாக இலட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து, போக்கிடம் தெரியாது, கால் போன போக்கில் கால்நடைகள் போல, புற்றரைகளிலும், மர நிழல்களிலும் வாழ்கின்றார்கள். சொந்த நாட்டுப் படையினருக்கு அஞ்சியும், புலிகளின் நடவடிக்கை காரணமாகவுமே பெருமளவிலான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மக்கள கூறுகின்றார்கள்.

எமது நாடு என்றுமே முகங்கொடுத்திராத துன்பச் சூழ்நிலையில் நாம் பண்ணை விலங்கு அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கின்றோம். கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் கால்நடைகள் சுதந்திரமாக உலவித் திரியலாம். ஆனால், தமிழ் மகன் ஒருவன் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையே தற்பொழுது உள்ளது. பொலிஸுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் மட்டுமன்றி, சிவில் பாதுகாப்புப் படையினருக்கும் அஞ்சி வாழ வேண்டிய நிலையுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகள் தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுகின்றன. சுதந்திரமாக நடமாடும் நிலை பெருமளவில் மறுக்கப்பட்டுள்ளது. அனைவரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமை காரணமாக அப்பாவித் தமிழ் மக்கள் பீதியடைந்துள்ளார்கள்.

கௌரவ தவிசாளர் அவர்களே, ஆடு, மாடுகளுக்குள்ள சுதந்திரங்கூட இன்று தமிழர்களுக்கு இல்லை. தற்போது வடக்கு - கிழக்கில் இளைஞர் - யுவதிகள் ஆயுதத்தில் நம்பிக்கை வைத்ததற்கு ஒரு காரணம், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பற்ற நிலைமையாகும். நாட்டில் பொதுவாக வேலையில்லாப் பிரச்சினை நில்வினாலும், கிராமங்களில் வேலையின்மை பூதாகாரமாக உள்ளது. வேலைவாய்ப்புக் கொள்கைகளில் கிராமியத் துறைக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனக் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அண்மைக் காலங்களில்,- கடந்த அரசகாலத்திலும் - கூட கிராமியக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், அவை எதிர்பார்த்த இலக்கினை அடையத் தவறிவிட்டன. கிராமப்புறங்களில் கிடைக்கின்ற வேலைவாய்ப்பு, வளங்கள், அவற்றின் தன்மைகள் என்பவற்றை யதார்த்த பூர்வமாக அணுகத் தவறியதுதான் இத்தோல்விகளுக்குக் காரணமாகும்.

தொடர்ந்தும், துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கும் அரச அதிகாரத்தைத் தக்க வைக்க முடியாது. குறிப்பாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பிரதேசங்களில் கிராமியக் கைத்தொழில் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். படித்து விட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் - யுவதிகளுக்கு அவர்கள் வாழும் கிராமியச் சூழலைக் கருத்திற் கொண்டு, பொருத்தமான சுயதொழில் பயிற்சிகளை வழங்க வேண்டும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கிலும் கைப்பணி விற்பன்னர்கள் உள்ளனர். கிராம மட்டங்களில் உரியவர்களை இனங்கண்டு, இலங்கைக் கைப்பணிச் சபை, கைப்பணிப் பொருள்களைக் கொள்வனவு செய்து ஊக்குவிக்க வேண்டும். இதற்காக கைவினைஞர்கள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு கைப்பணிப் பொருள்களில் உற்பத்தி, கண்காட்சி, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சந்தைப்படுத்தல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலும் கைப்பணி மன்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரிமுட்டிப் பண்ணையைப் பூரணமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும். அத்தோடு மட்டக்களப்பு நகரில் மேய்ப்புத் தரை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அங்கு நகர வீதிகளிலேயே மாடுகள் மேய்கின்றன. மேலும், உயர் ரகக் கால்நடைகளைத் தருவித்துக் கடன் அடிப்படையில் கிராமப்புற விவசாயிகளுக்கு வழங்குவதுடன், அவை தொடர்பான ஆலோசனைகள், ஊக்குவிப்புக்கள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கால்நடை சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்னவு, பிரயாணப் படி என்பன வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் தாமதமாக வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இந்நிலைமை மாற்றப்பட்டு, சரியான ஒழுங்கின் படி, அந்தக் கொடுப்பனவுகள் மிகவும் விரைவாக அவர்களின கைகளைச் சென்றடைவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கிராமிய வேலையின்மைக்குக் காரணமான பொருளாதார சமூக அமைப்புக்களைத்தெளிவாக இனங்கண்டு அதற்கேற்வாறு கொள்கை வகுப்போரும் செற்படவில்லை. நகரங்களில் இருந்துகொண்டு கிராமங்களை நோக்குவதே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. எனவே, கிாமப்புறச்


படிப்பகம்

www.padippakam.com

சூழ்நிலைகளைத் தெளிவாக இனங்கண்டு, தொழில் திட்டங்களை ஏற்படுத்திக் கிராமிய வேலையின்மையைத் தீர்க்க அமைச்சர் முனைய வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை கிராமப்புறக் கைத்தொழில் வளர்ச்சியடையாமையே, நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் இடம்பெயர்வதற்குக் காரணமாகும். துறைவாரியான இலங்கையின் வேலையின்மை, கிராமியத் துறையில் 73 சத வீதமும் நகர்ப்புறங்களில் 22 சதவீதமும் பெருந்தோட்டங்களில் 4 சதவீதமுமாக உள்ளது. அத்தோடு, கிராமப் புறங்களில் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுள்ளவர்களில் 38 சதவீதமானோர் தற்காலிக வேலைகளையே பெற்றுள்ளனர். இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 72 சதவீதமானோர் கிராமிய மக்களே என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கிராமிய மக்களின் மன உணர்வுகளே நாட்டின் ஆட்சி இயந்திரத்தை இயக்கும் கட்சிகளைத் தெரிவு செய்தாலும், பதவிக்கு வருகின்றவர்கள் கிராமிய மக்களை முன்னேற்றக் கூடிய திட்டங்களைச் செயற்படுத்துவதில்லை.

கௌரவ தவிசாளர் அவர்களே, பல அரசியல்வாதிகள் கிராமிய மண்ணில் தவழ்ந்து விளையாடி அரசியலில் நுழைந்தாலும், பதவிகளைப் பெற்ற பின்னர் நகரவாசிகளாகி ஆடம்பர வாழ்க்கையில் மிதக்கின்றார்கள் ; பிறந்த மண்ணை மறக்கின்றார்கள். இந்த நிலைமை மாறவேண்டும். நாட்டின் 72 சதவீத மக்களைப் புறக்கணித்தால் எழக்கூடிய எதிர்கால விரக்திகளை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், களுவாஞ்சிக்குடி போன்ற பிரதேசங்களில், கால்நடைத் தொற்றுநோய்த் தடுப்பு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது மாரி காலமாக உள்ளதனால், தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, அங்கு நிலவுகின்ற தொற்றுநோய்த் தடுப்பு மருந்துத் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், எமது கிராமப்புற மக்களுக்கான விடிவுகளுக்கும் அவர்களின் எதிர்காலத்துக்கும் சரியான வழிகாட்டுதல்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கௌரவ அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. யூ. பாஸ்கரன் அவர்கள் போக்குவரத்து, மகளிர் விவகார அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 07, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

යූ. බාස්කරන් මහතා
(திரு. யூ. பாஸ்கரன்)
(Mr. U. Baskaran)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்திலே பங்கு கொள்வதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். இச்சபையிலே எனது கட்சியாகிய ஈ.பீ.டி.பீ யின் சார்பிலும் நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் சார்பிலும் சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். இச்சபையில் எம்மால் முன்வைக்கப்படும் கருத்துக்கள், மக்களின் தேவைகள் போன்றவை இவ்வரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கிலேயே முன்வைக்கப்படுகின்றனவேயன்றி, வெறுமனே ' ஹன்சாட் ' பதிவுகளுக்காக மட்டுமல்ல.

வடக்கு — கிழக்குப் பிரதேசம் இன்று போரினால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதுவும், வட பகுதியில் போர் உச்சநிலையை அடைந்துள்ளது. இன்று முற்றுமுழுதாக இவ்வமைச்சின் செயற்பாடுகள் அற்றுக் காணப்படுகின்ற பகுதியாக வடக்குப் பகுதியும், 95 சதவீதம் செயற்படுத்தப்படாத பகுதிகளைக் கொண்டதாகக் கிழக்குப் பகுதியும் காணப்படுகின்றன. வடக்கில் இன்றுள்ள நிலைமையில் அங்கு போக்குவரத்தைப் பற்றியோ சுற்றாடலைப் பற்றியோ பேசுவதாயின், பேசக்கூடிய ஒரேயொரு வார்த்தை, " அங்கு எதுவுமே இல்லை " என்பதுதான். இந்த நிலைமையைக் கௌரவ அமைச்சர் நன்கு புரிந்திருப்பாரென நான் நினைக்கின்றேன். போக்குவரத்தைப் பொறுத்தவரை அங்கு சீரான பாதைகளில்லை. இருபது வருடங்களுக்கு மேலான பாதைகளாகவே அங்குள்ளவை அனைத்தும் காட்சியளிக்கின்றன. பஸ் வண்டிகள் இல்லை. அங்கு போக்குவரத்துக்கு அவசியமான எரிபொருள் தட்டுப்பாடு அதிகமாக நிலவுகின்றது. யாழ் குடாநாட்டிலிருந்து மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து சொல்லவொண்ணாத் துயரங்களோடு கிளிநொச்சி நிலப்பரப்புக்கு வந்து சேர்கின்றனர். இவர்களின் போக்குவரத்து மார்க்கம் கால் நடையும் மாட்டு வண்டி, மிதிவண்டி போன்றவையுமாகும். கிளாலி கடலேரிப் பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதனால் குடாநாட்டு மக்கள் கிளிநொச்சிப் பெருநிலப் பரப்புக்கு வந்து சேர வேறு மார்க்கமின்றி அல்லற்படுகின்றனர். கிளாலிக் கடலேரிப் பகுதியை மக்களின் பாவனைக்காக அனுமதிக்கும்படி பல தடவை எமது கட்சி வலியுறுத்கு வந்திருக்கின்றது. கிளாலிக் கடலேரிப் பயணம் மிகவும் துன்பகரமானது.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, இன்றைய வட பகுதி நிலைவரங்களின் அடிப்படையில் அப்பகுதி மக்கள் போக்குவரத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில், சூழ்நிலைக்கேற்பத் தீர்க்கப்படக்கூடிய உடனடித் தேவைகள் தீர்க்கப்பட வேண்டும். தாண்டிக் குளத்திற்கப்பால் உலருணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு லொறி வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. கௌரவ அமைச்சாவர்கள் மேற்படி உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான லொறி வசதிகளை வழங்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுவது முக்கியமல்ல ; மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும் என்பதை எமது கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இதனடிப்படையில், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பகுதிகளின் நிலைமைகளை ஓரளவுக்காவது அரசாங்கம் சிந்திக்க வேண்டும். மக்கள் தொடர்ந்தும் மோசமான சூழலில் வாழ்கின்ற அவலநிலை யாழ் தீவுப் பகுதியில் காணப்படுகின்றது. அதனால், இம்மக்களின் மனங்களில் இவ்வாசாங்கத்தின் மீதான நம்பிக்கை அற்றுப் போகின்ற நிலைமை ஏற்படும். கடந்த ஆகஸ்ட் 28 இல் இடம் பெற்ற "ஐரிஸ் மோனா" சம்பவத்திற்குப் பின், தீவுப்பகுதி மக்கள் இந்நாட்டின் தலைநகரில் வெளியாகின்ற ஒரு செய்திப் பத்திரிகையைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். தீவுப் பகுதிகளுக்கும் திருகோணமலைக்குமிடையில் நடைபெற்று வந்த முக்கியமான போக்குவரத்து மார்க்கமான கடல் போக்குவரத்து இன்று முற்றுமுழுதாகத் தடைப்பட்ட நிலையில் இருக்கின்றது. அதனைக் கௌரவ அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு உடனடியாக மீண்டும் அதனை ஒழுங்கு செய்துதா வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நெடுந்தீவு, நயினாதீவு, காரைநகர், புங்குடுதீவு, வேலணை போன்ற பகுதிகளில் முன்னைய காலங்களில் போக்குவரத்து வசதிகள் இருந்தன. ஆனால், யாழ் பெரு நிலப்பரப்பிலிருந்து தொடர்பு துண்டிக்கப்பட்ட பின்பு அங்கு போக்குவரத்து முற்றாகச் சீர்குலைந்துவிட்டது. பல மைல் தூரங்களுக்கு நோயாளர்கள், மாணவர்கள் நடந்துசெல்ல வேண்டிய நிலை உள்ளது. நெடுந்தீவில் ஒரு பஸ் வண்டி இருந்தும் அதைப் பிரயோசனப்படுத்த முடியாத நிலை இருக்கின்றது. காரைநகரிலுள்ள கடற்படையினரால் வழங்கப்படும் குறைந்தளவு டீசலைக்கூடப் பயன்படுத்த முடியவில்லை. அங்குள்ள எட்டு மைல்கள் நீளமான சாலை பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. எனவே, நயினாதீவு, காரைநகர், வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களிலுள்ள மக்களின் போக்குவரத்துக்கு பஸ் வண்டிகளைத் தந்து, அவற்றுக்கான எரிபொருளும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கும்படி கௌரவ அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளு
கின்றேன்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் உடல், உள ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுற்றாடலைப் பொறுத்தவரை வெடி மருந்துகளின் கெந்தக மணமே வடக்கின் சூழலை ஆக்கிரமித்திருக்கின்றது. அங்குள்ள சூழல் அனைத்தும் "யானை அழித்த கரும்புத் தோட்டமாய்" மாறிக்கிடக்கின்றது. இன்று நடைபெறுகின்ற தொடர்ச்சியான யுத்தத்தின் காரணமாகக் கர்ப்பத்திலிருக்கின்ற சிசுக்கள்கூடக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளாகப் பிறப்பதற்கான வாய்ப்பிருப்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதைவிட, இன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டமிடப்படாத கைத்தொழிற்சாலைகளினால் சுற்றாடல் அதிகளவு மாசடைந்துள்ளது. எமது நாட்டில் அதிசிறந்த சுகாதார வசதிகள் கிடைப்பதற்கான சாத்தியமில்லாத நிலையில், எமது மக்களைப் பாதுகாத்துக்கொள்ளவெனச் சுற்றாடல் நலத் திட்டங்களுக்கமைவாகத் தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும். இவ்விதிகளுக்கு மாறாகத் தொழிற்சாலைகளை அமைப்பவர்களுக்கெதிராக அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வடக்கு — கிழக்கு மகளிரைப் பொறுத்தவரை அங்கு வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த பெண்கள் இன்று போருக்குப் புறப்பட்டிருக்கின்றார்கள். சமையலமையில் அகப்பை பிடித்த கரங்கள் இன்று "ஏ. கே. 47 " ஐப் பிடித்திருக்கின்றன. நமது நாட்டில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறோமா எனக்கேட்டால், விடை — பெண்கள் அனைத்துத் துறைகளிலும் பின் தங்கியவர்களாகவே இருக்கிறார்கள் என்பதுதான். புலிகள்

படிப்பகம்

www.padippakam.com

இயக்கத்தைப் பொறுத்தவரை பெண்கள் புலிகளின் படைபலத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். குண்டுகளைக் கட்டி வந்து தற்கொலை செய்து கொள்கிறார்கள். இவை பற்றி நாம் கட்டாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வடக்கு — கிழக்கில் வளர்ந்து வரும் இளைய பெண் சமுதாயத்தின் எதிர்காலம் கேள்விக்குள்ளான நிலையில் திகைத்து நிற்கிறது. இப் பெண்களுக்கு நாம் சிறந்த வழிகாட்டுதலைக் காட்ட வேண்டும். வடக்கு — கிழக்கில் பாடசாலைகள் மூடிக்கிடக்கின்றன. பல்கலைக்கழகங் களுக்குப் போக முடியாத நிலை காணப்படுகின்றது. வடக்கு — கிழக்கிலுள்ள படித்த யுவதிகள் தெற்கிற்கு வந்து தொழில் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. பொட்டு வைத்துக் கொண்டு கொழும்பில் ஒரு தமிழ்ப்பெண் நடமாட முடியாதிருக்கின்றது. வேலைக்குச் செல்லுமிடத்தில் புலியெனச் சந்தேகின்றார்கள். தெற்கில் தொடரும் கைதுகளில் இளம் பெண்கள்கூட விட்டு வைக்கப்படுகிறார்கள் இல்லை. பாதுகாவலர்கள் இல்லாமலேயே அவர்களைப் பொலிசார் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லுகிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டுமென கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் கைது செய்யப்படும்போது பெண் பொலிசாரும் கட்டாயம் உடன் இருத்தல் வேண்டும். பெண்கள் கைது செய்து அழைத்துச் செல்லப்பட வேண்டுமா னால் அவர்களின் பாதுகாவலர்களையும் உடன் அழைத்துச் செல்ல கௌரவ அமைச்சர் அவர்கள் வழியேற்படுத்த வேண்டும். யாழ் பல்கலைக் கழக மாணவி சிவரமணியின் கவிதையொன்று இன்றைய பெண்களின் நிலையை அப்பட்டமாக எடுத்துரைக்கின்றது. அவரின் துன்பம் நிறைந்த வார்த்தைகளினூடே அவரின் இக்கவிதையை இச்சபையில் வாசிக்கின் றேன்.

" உங்கள் வரையறைகளின்
சாளரத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது

இதுவரை காலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப் போன்று
நானென்னை கண்டெடுத்துள்ளேன்.

என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக் கொள்ள முடியாது
கண்களைப் பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னைக் கீறிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல் உறுதி பெற்றது

நிராகரிக்கப்பட முடியாதவள் நான்
இனியும் என்னை
தூக்கியெறியப்படாத கேள்வியாய்
நான் பிரசன்னமாய் உள்ளேன்.
என்னை அவமானங்களாலும்
அநாகரிகமான வார்த்தைகளினாலும் போர்த்துங்கள்

ஆனால் உங்கள் எல்லோரினதும்
நாகரிகம் வாய்ந்த கனவுகளின் மீது
ஒரு அழுக்குக் குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சம்பாத்துக்களை
அசுத்தம் செய்கிறேன். . . . . .

என்னுடைய நியாயங்கள்
நிராகரிக்கப்படும் வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே "

கௌரவ அமைச்சரின் கவனத்துக்கு நான் ஒரு முக்கிய விடயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். அது, ஏழ்மை காரணமாக வீடுகளில் வேலைக்கு அடிமை போல் கொண்டுவரப்பட்டு வீடுகளில் வைக்கப்பட் டுள்ள இளம் யுவதிகளைப் பற்றிய விடயமாகும். அவர்கள் இன்று அனுபவிக்கும் துயரங்களை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அடிமைச் சந்தையில் வாங்கப்பட்ட அடிமைகள் போல் அவர்கள் நடாத்தப்படுகின் றனர். விரும்பினால் முதலாளிகளால் கொலை செய்யப்படவும் கூடும். இச்சம்பவம் இலங்கைக்கு வெளியே நடக்கவில்லை. கொழும்பில் நடந் துள்ளது. ஒக்ரோபர் 3 ஆந் திகதி 'வீரகேசரி' ப் பத்திரிகையில் அச்செய்தி வெளிவந்துள்ளது. வெள்ளவத்தை பீட்டர்சன் வீதியிலுள்ள ஒரு வீட்டில் 20 வயதையுடைய லட்சுமி என்ற பணிப்பெண் தனது கொடூரமிக்க எஜமானியால் தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளார். இது விடயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? இச்சம்பவங்களை நாம் தொடர்ந்து அனுபவிக்கக் கூடாது. இது லட்சுமிக்கு மட்டும் நடந்த விடயமல்ல. ஆயிரக்கணக்கான அடிமைப் பணிப்பெண்களுக்கு நடைபெறக் காத்திருக் கும் கொடூரம். இக்கொடுமைக்கு எதிராக பெண்கள் நிறுவனங்கள் எதுவும் குரல் எழுப்பவில்லை. கௌரவ அமைச்சர் அவர்கள் ஆயிரக்கணக்கான இவ்வப்பாவிப் பெண்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, மத்திய கிழக்கில் தொழில் வாய்ப்பைப் பெறும் நோக்கில் ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லிம் யுவதிகள் இந்த நாட்டை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டின் அந்நியச் செலாவணி வருமானத்தில் "தனியார் அனுப்புதல்" இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இப்பெண்களின் பாதுகாப்புக்கு அந்தந்த நாடுகளில் அரசாங்கப் பாதுகாப்பு அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். இவர்களின் நலன் காக்க எமது அரசாங்கம் தீவிர கொள்கை ஒன்றை வகுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒரு பணிப்பெண் விடயத்தில் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கை எமக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். எமது பெண்கள் வெளிநாடுகளில் உடல், உள ரீதியாகத் துன்புறுத்தப்படும்போது வாளாதிருப்பதானது வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பெற்றுச் செல்லும் பெண்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமையே தோற்றுவிக்கும். இங்கே வெளியிடப்படுகின்ற சினிமாக்களிலும் பெண் களைத் தரக்குறைவாக சித்தரிக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படியான வெளியீடுகளை இங்கே வெளியிடாதவாறு தடை செய்யும்படி கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. இராசமாணிக்கம் அவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக, உணவு அமைச்சு மீதான வரவு செலவுத் குழுநிலை திட்ட விவாதத்தின் போது, 08, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ඒ. රාසමානික්කම් මහතා
(திரு. ஏ. இராசமாணிக்கம்)
(Mr. A. Rasamanickam)

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது நாட்டில் 1977 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு இன்று பதினெட்டு வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் அம்மாற்றத்தின் பலாபலன்கள் எந்தளவுக்கு நாட்டு மக்களை அடைந்துள்ளன என்பது கேள்விக்குரியதே ! குறித்த சிறு தொகையினர் மட்டுமே திறந்த பொருளாதாரக் கொள்கையின் பயனாக நன்மையடைந்துள்ளனர். யுத்தத்தின் காரணமாகவும் திட்டமிட்ட புறக்கணிப்புக்களினாலும் வடக்கு - கிழக்கு மக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தின் மாற்றங்களின் நன்மைகளை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. தற்போதைய அரசு சமாதானக் குரலோடு பதவிக்கு வந்திருப்பதனால் திறந்த பொருளாதாரத்தின் பலாபலன்களை வடக்கு - கிழக்கு வாழ் மக்களும் அனுபவிக்க வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை வர்த்தகத்திற்குப் பொறுப்பான அமைச்சு, வெளிநாட்டு வர்த்தகத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. எனினும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு உள்நாட்டு வர்த்தகத்திலும் போட்டி நிலையை ஊக்குவித்து நுகர்வோர் நன்மையடைய நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டிற்குரியது. இவ்வமைச்சு கூட்டுறவு மொத்த நிறுவனங்களின் கிளைகளை 127 ஆக அதிகரித்துள்ளதுடன் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை முகவர் நிலையங்களை ஏற்படுத்தியிருப்பது பாராட்டிற்குரியது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் கிழக்கு மாகாணத்திலுள்ள கிளைகளில் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை அமைச்சரவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். வடக்கு - கிழக்கில் யுத்த சூழ்நிலை காரணமாகப் போக்குவரத்துத் தடைப்படுவதால் அத்தியாவசியப் பொருள்களுக்கு அங்கு அடிக்கடி தட்டுப்பாடேற்படுகின்றது. அச்சந்தர்ப்பங்களில்


படிப்பகம்

www.padippakam.com

தனியார் துறை வர்த்தகர்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வரும் பொருள்களைப் பெற்று அதிக விலைக்கு விற்பனை செய்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் சீர்கேடுகள் நிலவுவதாகப் புகார் தெரிவிக்கின்றனர். அங்கு வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பொருள்களைப் பொதுமக்கள் தாராளமாகப்பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனினும், தனியார்துறை வர்த்தகர்கள் அங்கிருந்த ' பின் கதவால் ' பொருள்களைப் பெற்று அதிக விலையில் விற்பனை செய்கின்றார்கள்.

கௌரவ தவிசாளர் அவர்களே, பொது மக்களின் நலன் கருதி, அத்தியாவசிய பொருள்களின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களின் சகல பிரேதச செயலகப் பிரிவுகளிலும் ஒவ்வொரு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளைகள் திறக்கப்படவேண்டும். குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் உணவு விநியோகத்தைச் சீர் படுத்த கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் உணவுக்குரிய நுகர்வுப் பொருள்களின் விநியோகத்தை மட்டுமே மேற்கொள்ளுகின்றது. எனவே, விளையாட்டு உபகரணங்கள், வானொலி, இலத்திரனியற் பொருள்கள் மற்றும் கட்டடப் பொருள்கள என்பவற்றையும் ஏனைய பிரதேசங்களிற்போன்று எமது பகுதியிலும் விற்பனை செய்ய வேண்டும்.

யுத்த சூழல் காரணமாக, வடக்கு — கிழக்கில் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை. இதனால், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், அளவைகள் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பவற்றின் நன்மைகளை அங்குள்ள மக்கள் பூரணமாக அனுபவிக்க முடிய வில்லை. மேலும், மாவட்ட மட்டத்தில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நிறுவை, அளவைகள் பரிசோதகர்கள் என்போர் குறைவாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, வடக்கு கிழக்கில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் வலையில் சிறிய வர்த்தகர்களே சிக்குகின்றனர். வடக்கு — கிழக்கில் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் சீராக இயங்குவதில்லை. அவற்றைப் புனரமைத்துச் சிறப்பாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு நுகர்வோர் கல்வித் திட்டத்தின் மூலம் எம்மவர்களும் அறிவைப் பெற ஆவன செய்யப்பட வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, உள்நாட்டு வர்த்தகத்தில் போட்டி நிலையை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பும் ஊக்குவிக்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

" சூரியகதிர் " இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்நாட்டு வர்த்தகம் முற்றாகச் சீர்குலைத்துள்ளது. பல வர்த்தகர்கள் வர்த்க நிலையங்களை அப்படியே விட்டு விட்டு உடுத்த துணியுடன் இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்கள் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பி வரும் பட்சத்தில் அவர்களுக்குத் துரித நிவாரணங்களை வழங்க இவ்வர்த்தக அமைச்சு விசேட திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டும். விசேட இழப்பீட்டுத் திட்டத்தின் மூலம் நிவாரணங்களையும் வங்கிக்கடன் வசதிகளையும் வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் பயங்கரவாதத்துக்கெதிரான காப்புறுதிகளை வழங்க, காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மறுத்து வருகிறது. இதனால் அப்பிரதேசங்களில் உள்ள மக்கள் அசையாச் சொத்துக்களை அடைமானமாக வைத்து வங்கிக் கடன்களைப் பெறமுடியாதிருக்கின்றது. வர்த்தக அமைச்சர் இவ்விடயத்தையிட்டுச் சிந்தித்து அம்மக்களுககு நிவாரணமளிக்க வேண்டுமெனக கேட்டுக்கொள்கிறேன். வடக்கு - கிழக்கில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளைகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஏற்றுமதி வர்த்தகத்தைப் பொறுத்தவரை எமது நாடு தாராள வர்த்தகக் கொள்கையை 1977 களின் பின் முனைப்பாகக் கடைப்பிடித்து வருகிறது. பல்வேறு ஊக்குவிப்புக்களும் சலுகைகளும் வழங்கப்பட்டமையால் 1985 ஆம் ஆண்டு 52.5 சத வீதமாக இருந்த வேளாண்மைப் பொருள்களின் ஏற்றுமதி தற்போது 22 சத வீதமாகக் குறைந்து, கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளன. தற்போது கைத்தொழில் ஏற்றுமதி 72 சத வீதத்திற்கு மேலாக அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ஊக்குவிப்புக்காகப் பல ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் விளைவுகள் மன நிறைவைத் தரக்கூடியனவாக அமையவில்லை. எமது பிரதான ஏற்றுமதியான தைக்கப்பட்ட ஆடைகளுக்கு ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்பன விதிக்கும் கோட்டா முறைக் கட்டுப்பாடு பெரிதும் பாதிப்புக்களையே ஏற்படுத்தி வருகின்றது. அத்தோடு, எமது கைத்தொழில் ஏற்றுமதிகளில் கணிசமான பங்கை வகிக்கும் தைக்கப்பட்ட ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள் என்பன இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களையே நம்பியுள்ளன. இதனால் கைத்தொழில் ஏற்றுமதி வருவாய் எத்தனை மடங்கு அதிகரித்தாலும் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் குறைவாகவே கிடைக்கிறது. எனவே, அரசாங்கம் ஏற்றுமதிக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். ஊழியச் செறிவுள்ள ஏற்றுமதித்துறையும் மூலதனச் செறிவுள்ள இறக்குமதிப் பிரதியீட்டு, கைத்தொழில் துறையும் சமாந்தரமாக வளர்க்கப்படடாலேயே பொருளாதாரச் சமநிலையை ஏற்படுத்த முடியும். அவ்வாறின்றி, தொடர்ந்து சலுகைகளை வழங்குவதன் மூலம் அந்நிய முதலீட்டாளர்களே நன்மை பெறுவார்கள். இதனால் இந்த நாட்டு மக்கள் தாராளமயமாக்கலின் பலாபலன்களை எந்த வகையிலும் அனுபவிக்க முடியாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

சர்வதேச மட்டத்தில் ஏற்றுமதி வர்த்தக நிலையங்களின் பங்கு, பெரிதும் உணரப்பட்டுள்ளது. கனடா போன்ற நாடுகளில் ஏற்றுமதி வர்த்தகத்தில் 40 சதவீதத்தினை அவை கையாண்டு வருகின்றன. கடந்த 25 வருடங்களில் சர்வதேச வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க விசையாக வர்த்தக நிலையங்கள் விளங்கி வருகின்றன. எமது நாட்டிலும் வர்த்தக நிலையம் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது. எமது சர்வதேச வர்த்தகத்தை நவீன சர்வதேச அணுகுமுறைகளுடன் மேற்கொள்ள, வர்த்தக நிலையத்தின் பங்களிப்பை மேலும் விருத்தி செய்யவேண்டுமென கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்றுமதிக்கான உற்பத்தியைக் கிராம மட்டத்திலேயே தொடங்கினால்தான் அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிப்பார்கள். எனவே, ஏற்றுமதி உற்பத்தியைக் கிரமமாக நாடெங்கும் குறிப்பாக, வடக்கு - கிழக்கிலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு ஏற்றுமதிக் கைத்தொழில் ஈடுபட பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமே நாம் கூடிய பலாபலன்களைப் பெறமுடியும்.

நாட்டில் யுத்த சூழல் நிலவும் பட்சத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வரத் தயங்குவார்கள். எனவே, அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடியதாக அது அமைய வேண்டும். தாராள பொருளாதாரக் கொள்கையினால் நாம் ஈட்டக்கூடிய பலாபலன்களை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தாது, இந்த நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்கெதிரான யுத்தத்திற்குப் பயன்படுத்துவதால் நாடு குட்டிச்சுவராகவே மாறும். எனவே, அரசாங்கம் உடனடியாகத் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும். மக்கள் இல்லாத யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொடியேற்றுவதல்ல வெற்றி; தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுத்து அதன் மூலம் உண்மையான வெற்றியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

இறுதியாக, ஒரு சஞ்சிகையில் படித்த கூற்றை இங்கு குறிப்பிட்டு எனது பேச்சை முடிக்க விரும்புகின்றேன்.

" இலங்கையில் 1994 இல் மிகை நிதி நாணயங்களின்படி, யுத்தத்துக்குத் தொடர்ந்தும் [illegible] முன்னெடுத்துச் 'செல்ல' [illegible] செலவு [illegible] பில்லியன் [illegible] [illegible] பில்லியன் [illegible] செலவாகின்றது. அதாவது யுத்தத்திற்கான மொத்தச் செலவு ஒரு பில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும். பிரித்தானியாவிலுள்ள நவீன விஞ்ஞான தொழில்நுட்ப [illegible] கூடிய 1.6 மில்லியன் மீற்றர் நீளமான வீதியை அமைக்க ஒரு பில்லியன் ஸ்ரேலிங் பவுண் செலவாகின்றது. இத்தகைய வீதியை இலங்கையில் ஒரு மீற்றர் தூரத்திற்குக்கூட இல்லை. "

எனவே, குண்டு வீசும் யுத்தச் செலவுத் திட்டங்களை நிறுத்தி அதன் மூலம் பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்து யுத்தம் புரிவதுதான் [illegible] [illegible] நிறுத்தி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அதிகாரப் பரவலாக்கலை [illegible] [illegible]. தாமே இந்த நாட்டின் வர்த்தகக் கொள்கைகள் உண்மையான வெற்றியைப் பெறும் [illegible] நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். நன்றி.

படிப்பகம்

www.padippakam.com

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஆர். இராமமூர்த்தி அவர்கள் மாகாண சபைகள் சுதேச மருத்துவ அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 11, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ආර්. රාමමූර්ති මහතා
(திரு. ஆர். ராமமூர்த்தி)
Mr. R. Ramamoorthy)

கௌரவ தவிசாளர் அவர்களே, கூட்டுறவு, மாகாண சபைகள், உள்ளூராட்சி, சுதேச மருத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் பேச எனக்கு நேரம் ஒதுக்கித் தந்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் தமிழ் மக்களும் தமது உயிரையும் உதிரத்தையும் கொடுத்து நடாததிய ஆயுதப் போராட்டத்தின் காரணமாக, இலங்கை – இந்திய ஒப்பந்தமும், அதையடுத்து மாகாண ரீதியிலான அதிகாரப் பரவலாக்கமும் முழு இலங்கை மக்களுக்கும் கிடைத்தது. ஆனால், இன்றைய நிலை என்ன ? யார் அதிகாரப் பரவலாக்கலுக்காகப் போராடினார்களோ, அவர்களுக்கு அதிகாரப் பகிர்வும் இல்லை. மாகாண சபை ஆட்சியும் இல்லை. வடக்கு – கிழக்கு மக்களுக்கு மாகாண சபை நிர்வாகத்தினால் இதுவரை உரிய பலன் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு சில அதிகாரிகளே வடக்கு – கிழக்கு மாகாண சபை மூலம் பயனடைகின்றனர்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக மேதகு ஜனாதிபதி அவர்கள முன் முயற்சிகளை மேற்கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்றுவரும் இக்காலகட்டத்தில், மாகாண அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள், 'ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிப்பது போன்று' மீண்டும் மத்திய அரசின் கைகளுக்குச் சென்று சொண்டிருக்கின்றன. இவை நல்ல அறிகுறிகளாகத் தென்படவில்லை.

கடந்த ஐந்து வருடங்களாக வடக்கு – கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிகளால் நடத்தப்படவில்லை. மாறாக, அரசியல் தலைமைத்துவம் இல்லாமல், ஒரு சில அதிகாரிகளின் சுய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப, எதேச்சையான நிர்வாகமே அங்கு நடைபெறுகின்றது. அதனைத் தவிர்ப்பதற்கு வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு ஓர் அரசியல் தலைமைத்துவம் கட்டாயமாகத் தேவை. இதனைக் கருத்திற்கொண்டே எமது கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வடக்கு – கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம், இடைக்கால நிர்வாக சபையொன்றினால் நடாத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாகப் பல முறை வலியுறுத்தி வந்தது ; வலியுறுத்தியும் வருகின்றது. எனவே, மீண்டும் அந்தக் கோரிக்கையை எமது கட்சியின் சார்பில் இச்சபையில் வலியுத்துகின்றேன்.

வடக்கு – கிழக்கு மாகாண சபையில மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத — அரசியல் தலைமைத்துவம் இல்லாத — அதிகாரிகளின் ஆட்சியில் ஒரு காட்டுத் தர்பார்ரே நடைபெறுகின்றது. இவர்களைக் கேள்வி கேட்க, இவர்களது நடவடிககைளைக் கட்டுப்படுத்த, கண்காணிக்க இன்று எவருமே இல்லாத ஒரு நிலை ! ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம், வீண்விரயம், பணமோசடி, அசிரத்தை, ஒழுங்கீனம் போன்றவற்றில் இந்த நாட்டிலேயே முதல் இடத்தை வகிப்பது, வடக்கு – கிழக்கு மாகாண சபை நிர்வாகமே. இதில் எதுவித சந்தேகமுமில்லை. இந்நிலைக்கு எல்லா அதிகாரிகளையும் நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. ஒரு சில அதிகாரிகளே இவைகளுக்குக் காரணிகளாக இருக்கின்றனர். தேவைப்பட்டால அவர்களின் விபரங்களையும் வெளியிடத் தயாராய் உள்ளேன். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், வடக்கு - கிழக்கு மாகாண சபை தனக்கு வேண்டிய நிதியினைப் போதுமான அளவு திரட்டிக் கொள்ள முடியாத நிலையிலுள்ளது. வரி விதிப்பு போன்ற நடவடிககைகளால் தற்போது திரட்டப்படும் சிறிதளவு நிதிகூட, மத்திய அரசிற்குச் செலுத்தப்பட வேண்டும் என்பதால், அதனால் அப்பகுதி மக்களுக்கு எவ்விதமான பயனும் கிட்டுவதில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணம், இலங்கையிலேயே முதலாவது பெரிய நிலப் பரப்பையுடைய மாகாணமாகும். ஆகக் கூடுதலான எட்டு மாவட்டங்களையும், எழுபத்திரெண்டு பிரதேச செயலகப் பிரிவுகளையும் கொண்டதும் வடக்கு - கிழக்கு மாகாணமே. இங்கு இருபத்தைந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். ஆனால், இவைகளைக் கருத்திற்கொள்ளாமல் ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவே வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கும் ஒதுக்கப்படுகின்றது. இது மாகாணத்தின் தேவைகளைச் சமாளிக்கவோ, நிறைவு செய்யவோ போதுமானதல்ல. ஒதுக்கப்படும் நிதிகூட உரிய தவணைகளில் கொடுக்கப்படுவதில்லை. ஒதுக்கப்படும் நிதிகூட வருடக் கடைசிலேயே கிடைக்கின்றது. அக்குறுகிய கால அவகாசத்தில் ஒதுக்கப்பட்ட முழு நிதியினையும் முழுமையாகப் பயன்படுத்த முடிவதில்லை. இதனால் பயன்படுத்தாத பெருமளவு நிதி மீண்டும் திரும்பிச் செல்கின்றது. இந்நிகழ்வுகள் ஒவ்வொரு வருடமும் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எடுத்துக் காட்டாக, பின்வரும ஒதுக்கீட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இவ்வாண்டு வடக்கு-கிழக்கு மாகாண சுமநல சேவைகள் திணைக்களத்திற்கு 27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இது வரை 12 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடம் முடிவடைவதற்கு இன்னும் இருபது நாட்களே உள்ளன. இந்நிலையில் மீதியான 15 மில்லியன் ரூபா வழங்கப்படப் போவதில்லை. வழங்கப்பட்டாலும் காலம் பிந்திவிட்டது. எனவே, இந்தப் பணமும் மீண்டும் திறைசேரிக்குச் செல்லப் போகின்றது.

இது இவ்வாறிருக்க, முற்பணக் கணக்கீட்டின்மூலம் வடக்கு-கிழக்கு கமநல சேவைத் திணைக்களம் 16.5 மில்லியன் ரூபாவினைச் செலவு செய்துள்ளது. இத்தொகையில் இதுவரை 12 மில்லியன் ரூபா மட்டுமே திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது. மிகுதியான 4.5 மில்லியன் ரூபா இன்னும் வழங்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண சபை முற்பணக் கணக்கின் கீழ் 1990 களில் பதிப்பகம், எரிபொருள் வள நிலையம், தொழிற் பயிற்சி நிலையம், இயந்திர உபகரணத் திருத்த நிலையம் போன்ற அமைப்புக்களை ஸ்தாபித்தது. கடந்த ஐந்து வருடங்களாக இவற்றில் கடமைபுரியும் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிக ஊழியர்களாகவே கடமைபுரிகின்றனர். இதனால், இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு மற்றும் சலுகைகள் கிடைப்பதில்லை. அத்துடன், மேலதிகாரிகளால் இவ்வூழியர்கள் 'எடுப்பார் கைப்பிள்ளைகளாக' நடாத்தப்படுகின்றனர். 'தரக் குறைவாக நடாத்தப்படுதல், பழிவாங்கப்படுதல், வேலையிலிருந்து நிறுத்தப்படுதல்' போன்ற கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாகி வருகின்றனர். இம்மேலதிகாரிகளால் இவ்வூழியர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் சொல்லுந்தரமன்று. எனவே, இந்த ஊழியர்களின் துன்ப நிலை குறித்துச் சம்பந்தப்பட்டவர்கள் தாராள மனதுடன் நடந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். இவர்களின் நிலை குறித்து எமது கட்சி பல தடவைகள் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளது. ஆனால், இவையனைத்தும் "செவிடன் காதில் ஊதிய சங்கு போல்" ஆகிவிட்டது. எனவே, இனிமேலாவது காலம் தாழ்த்தாது இவ்வூழியர்களை நிரந்தரமாக்கிச் சம்பள உயர்வுகளை வழங்க வேண்டும். இதன் மூலம் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பயனடையும்.

நான்கு வருடங்களாக இந்நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், ஒழுங்கீனம், துஷ்பிரயோகம், வீண் விரயம், பண மோசடி போன்றன குறித்து எதுவும் அறியமுடியாதுள்ளது. எனவே, இக்கணக்காய்வைச் செய்வதற்கு விசேட கணக்காய்வுத் திணைக்களத்திலுள்ள சிலர் இம்மோசடிகளுக்கு ஆலோசனை வழங்கி, ஊழலுக்கு உறுதுணையாகவுள்ளனர். எனவே, அவர்களை நம்பிச் செயற்பட முடியாது. அவர்கள் உண்மைகளை மூடிமறைத்துவிடுவார்கள். கடந்த நான்கு வருடங்களாகக் கணக்காய்வு செய்யப்படாததனால் வேலைப்பளுவும் அதிகமாகவிருக்குமென்பதனால் இந நடவடிக்கையில் பெருமளவு ஆளணியினர் ஈடுபடுத்தப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் எழுபத்திரண்டு பிரதேச செயலகப் பிரிவுகள் இருப்பதனால் மாவட்ட ரீதியாகக் கணக்காய்வு நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். இதற்கென எட்டு மாவட்டங்களிலும் கணக்காய்வுத் திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் நிறுவப்பட வேண்டுமெனக் கேட்டு முடிக்கின்றேன். நன்றி.


படிப்பகம்

www.padippakam.com

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. யூ. பாஸ்கரன் அவர்கள் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை, பிரதேச அபிவிருத்தி அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 11, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

යූ. බාස්කරන් මහතා

(திரு. யூ. பாஸ்கரன்)

(Mr. U. Baskaran)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, இளைஞர் அலுவல்கள், விளையாட்டுத்துறை, கிராம அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான இன்றைய விவாதத்தில் நான் சில கருத்துக்களைக் கூற விருப்பம் கொண்டுள்ளேன்.

இளைஞர் விவகாரம் என்பது மிக முக்கியமான விடயம் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குபவர்கள் இளைஞர்கள். இளைஞர்கள் மத்தியில் அமைதியற்ற நிலைமை உருவாகுமாயின், ஒரு நாடோ அல்லது அது சார்ந்திருக்கும் சமூகமோ அமைதியாக இருக்க முடியாது; அபிவிருத்தியும் அடைய முடியாது. பிரச்சினைகள் உருவாகுவதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் இருந்த போதிலும், அதற்கு மிக எளிதில் இரையாவது இளைஞர்களே. எமது நாட்டில் வடக்கு-கிழக்கிலும் தென்னிலங்கையிலும் ஏற்பட்ட போராட்டங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் இளைஞர்களே காரணமாக இருந்துள்ளார்கள். இளைஞர் சக்தி காட்டாற்று வெள்ளம் போன்றது. இவற்றை நாம் சரியான வழியில் திசைதிருப்பத் தவறினால், நாடும் சமூகமும் பெரும் அழிவிற்கு உள்ளாகும் நிலை ஏற்படும். எனவே, இளைஞர்களின் சக்தியை நல்ல முறையில் பயன்படுத்த இளைஞர் விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சு நல்ல பல திட்டங்களைச் செயற்படுத்துதல் வேண்டும்.

අ. භා. 1.30

குறிப்பாக, வடக்கு-கிழக்கில் இன்று 'நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்திற்கு, தமிழ் பேசும் இளைஞர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் காட்டப்பட்ட புறக்கணிப்பே முக்கிய காரணமாகும். வடக்கு-கிழக்கில் புவியியல் காலநிலை அம்சங்கள், வடக்கு-கிழக்கு மக்களின், குறிப்பாக இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கவில்லை. இதன் காரணமாகத் தமிழ் பேசும் இளைஞர்கள் உயர் கல்வியிலும், அரச வேலை வாய்ப்புக்களிலும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களிலும், வர்த்தக நடவடிக்கையிலும் அதிக அக்கறை காட்டி வந்துள்ளனர்; இன்றும் அக்கறை காட்டி வருகின்றனர். மேற்குறித்த விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் சுதந்திரத்தற்குப் பின் அதிகாரத்திற்கு வந்தவர்கள் நடந்து கொண்டதனாலேயே, வடக்கு-கிழக்கில் இன்றைய நிலை உருவானது. இந்நிலைமையை நாம் தொடர்ந்தும் நீடிக்கவிடலாகாது. இதற்கு வடக்கு-கிழக்கு மக்களின் கல்வி, விளையாட்டு, தொழில் வாய்ப்புக்கள், பொழுது போக்குக்கள் போன்ற விடயங்களில் அரசு கூடிய அக்கறை காட்ட வேண்டும்.

1980 களில் வடக்கு-கிழக்கில் இளைஞர் சேவைகள் மன்றம் நல்ல முறையில் சேவையாற்றி வந்தது. இன்று அந்த நிலை இல்லை. எனவே, அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிரதேசங்களில், மீண்டும் இளைஞர் சேவைகள், மன்றங்கள் நல்ல முறையில் செயற்பட கௌரவ அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கின்றேன். சுயதொ ழி ‍ ‍ ‍ில் ஈடுபடுவதற்கு வடக்கு-கிழக்கு இளைஞர்களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன், இளைஞர்கள் ஈடுபடக் கூடிய தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கும் இவ்வமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கின்றேன்.

இவ்வமைச்சின் மூலம் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பயிற்சிக்கு இளைஞர்களைத் தெரிவு செய்யும் போது இனப் பாகுபாடு காட்டலாகாது. விகிதாசார அடிப்படையிலாவது தமிழ் பேசும் இளைஞர்—யுவதிகளைத் தெரிவு செய்தல் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன். கடந்த காலங்களில் இளைஞர் சேவைகள் மன்றத்தினாலும் வேறு அமைப்புக்களினாலும் இளைஞர்களைப் பயிற்சிக்காக வெளிநாட்டிற்கு அனுப்பும் போது, தமிழ் பேசும் இளைஞர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது. அதிகாரிகளை நியமனம் செய்யும் போதும் போதிய அளவு தமிழ் பேசும் அதிகாரிகள் இளைஞர் சேவைகள் மன்றங்களில் நியமிக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

இனங்களுக்கிடையில் இன ஐக்கியம், சௌஜன்யம் தோன்ற வேண்டுமாயின், முதலில், இவை சிங்கள—தமிழ்—முஸ்லிம் இளைஞர்களுக்கிடையே ஏற்படல் வேண்டும். இவற்றை இளைஞர் சேவைகள் மன்றங்கள் ஊடாகவும் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்று வந்த 'யொவுண்புர' நிகழ்ச்சிகள் மூலமாகவும் ஏற்படுத்தலாம் என்பதையும் இங்கு நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.

வடக்கு—கிழக்கில் பல திறமையான விளையாட்டுக் கழகங்கள் இருந்த போதிலும், இன்றைய யுத்த சூழ்நிலை காரணமாக அவற்றினால் திறமையாகச் செயற்பட முடியாமல் உள்ளது. அரசினால் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலாவது விளையாட்டுக் கழகங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு, அவர்களுக்கு வேண்டிய மைதான வசதி, விளையாட்டு உபகரணங்கள், பயிற்சி வசதி போன்றவற்றை இவ்வமைச்சு வழங்க வேண்டும். அத்துடன் இந்த விளையாட்டுக் கழகங்கள் மாவட்ட அடிப்படையிலும் தேசிய அடிப்படையிலும் அடிக்கடி நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வேண்டிய வசதிகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும். தமிழ் பேசும் இளைஞர்கள் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டி இலங்கைக்கு நற்பெயரைத் தேடிக் கொடுத்தனர். ஆனால், இன்று தேசிய மட்டத்திலே சர்வதேச மட்டத்திலோ கலந்து கொள்ளும் அணிகளில் தமிழ் பேசும் இளைஞர்களைக் காண்பது முயல் கொம்பாகவே உள்ளது. இந்தக் குறைபாட்டைக் களைவதற்குக் கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு விளையாட்டு வீரர்களையும் மத்தியஸ்தர்களையும் பயிற்சிக்காக அனுப்பும் போது, அதில் தமிழ் பேசுபவர்களும் போதியளவு இடம்பெற வழிவகுக்கப்பட வேண்டும்.

தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளான யாழ் தீவுப் பகுதி, வவுனியா, மன்னார் மற்றும் திருமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டு மைதானங்களும் பயிற்சிக் கூடங்களும் பயிற்சி வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படல் வேண்டும். எமது நாட்டின் பாரம்பரிய விளாட்டுக்களான எல்லே, கிளித்தட்டு, கிட்டி, கொம்புமுறித்தல், போர்த்தேங்காய் உடைத்தல் போன்றவை இன்று அழிந்து போகும் நிலையிலுள்ளன. எனவே, இவற்றை அழிவிலிருந்து தடுப்பதற்கு மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் போட்டிகளை நாடாத்திப் பரிசில்களை வழங்கி ஊக்கவிக்க வேண்டும்.

இன்று உலகெங்கும் நகர மயமாக்கம் அதிகரித்து வருகின்றது. காரணம், கிராமப்புறங்களில் உள்ளவர்கள் வேலை வாய்ப்புத் தேடியும் மற்றும் பல்வேறு வசதிகள் கருதியும் நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருவதாகும். இதனால் நகரங்களில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. அதன் காரணமாக, நகர்ப்புறங்களில் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வன்செயல், போதைப்பொருள் பாவனை போன்றவை அதிகரிக்கின்றன. எனவே, இவற்றைத் தவிர்ப்பதற்கு மக்கள் நகரங்களை நோக்கி இடம்பெயர்வதை நிறுத்த வேண்டும். வேலை வாய்ப்பையும் நகர்ப்புறங்களில் கிடைக்கும் ஏனைய வசதிகளையும் நாம் நமது கிராமங்கள்தோறும் ஏற்படுத்திக் கொடுப்போமாக இருந்தால், எமுது நாட்டில் நகர்ப்புறத்தை நோக்கிய குடிப்பெயர்வை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்த முடியும்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, இந்தியாவின் தேச பிதாவாகிய மகாத்மா காந்தி அவர்கள் 'கிராம இராஜ்ஜியம்' பற்றி அதிக அக்கறை கொண்டிருந்தார். ஒவ்வொரு கிராமமும் தனது சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டுமென அவர் விரும்பினார். நாமும் அக்கொள்கையைக் கடைப்பிடித்தால், எமது கிராமங்களும் அட் த்தியடையும்; அதன் மூலம் முழு நாடும் அபிவிருத்தியடையும் நிலை ஏற்படும். ஒரு கிராமம் அபிவிருத்தியடைய அங்கு போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு, நீர்ப்பாசனம், சுகாதார மருத்துவ வசதிகள், கல்வி, சுயதொழில் வாய்ப்புக்கள், குடிநீர் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும். நமது நாட்டின் பெரும்பாலான கிராமங்களில் இன்னும் மேற்படி வசதிகள் பூரணமாகச் செய்து கொடுக்கப்படவில்லை. இன்று வடக்கில் முழுமையாகவும், கிழக்கில் சில பகுதிகளிலும் தோட்டப்பகுதிகளிலும் மின்சாரம் இல்லை. இதனால் கல்வி, சுயதொழில் போன்றவற்றில் மாணவர்களும் மக்களும் ஈடுபட முடியாத நிலை உள்ளது. அத்துடன் கிராமங்களை நகரங்களுடன் இணைக்கும் வீதிகள் மண் வீதிகளாகவே பெரும்பாலும் உள்ளன. மழைக்காலங்களில்



படிப்பகம்

www.padippakam.com

இப்பாதைகளைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே, கிராமப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவும் மண்பாதைகளைத் தார்ச்சாலைகளாக்குவதற்கும் உரிய இடங்களில் பாலங்களை அமைப்பதற்கும் உரிய நடவடிக்களைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்தியாவில் உள்ளது போல கிராமங்களில் நீர் தேங்கும் பகுதிகளில் சிறு குளங்கள், கழிவுநீர்க்குட்டைகள் போன்றவற்றை அமைக்க வேண்டும். இதன்மூலம் நன்னீர் மீன்வளர்ப்பு, கால் நடைகளுக்குக் குடிநீர், கிணறுகளில் வருடம் பூராவும் நீர் இருக்கும் நிலைமை போன்ற வசதிகள் கிராம மக்களுக்கு ஏற்படும். அத்துடன் மண்ணரிப்பும் தடுக்கப்படும். தற்போதுள்ள குளங்களில் பெரும்பாலானவற்றின் அணைக்கட்டுகள் பழுதடைந்த நிலையிலும், குளத்தின் உட்பகுதிகள் தூர்ந்துபோன நிலையிலும் காணப்படுகின்றன. இவ்வாறான குளங்களைக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இளைஞர் சேவை மன்றங்கள் போன்றவற்றின் உதவியுடன் ஆழமாக்கி, அணைக்கட்டுக்களைப் பலப்படுத்த வேண்டும். வரட்சிக்காலத்தில் கிராம மக்களுக்கு வரட்சி நிவாரணங்களை வழங்குவதன் மூலம், அவர்களின் ஒத்துழைப்புடன் இவ்வாறான திட்டங்களைச் செயற்படுத்த முடியும்.

இவ்வமைச்சு மனித வளத்தை உச்ச அளவில் பயன்படுத்து வதையும், சமூக ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதையும், வறுமையைத் தணிப்பதையும் நோக்கமாகக் கொண்டு 'சமுர்த்தி' திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் 'சமுர்த்தி' திட்டமானது, கிராமியக் குடும்ப அடிப்படையில் அமைந்த பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்துதல், பிரதேச வளங்கள் மீது அடிப்படைக் கவனஞ் செலுத்தப்படுவதை வலியுறுத்துதல், பரம்பலாக உள்ள கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை ஒன்றிணைத்தலுடன் வளங்களின் வீண் அழிவைக் குறைத்தல், தொழில்நுட்ப அறிவு, மூலதனத் தேவைப்பாடு, சந்தை வசதிகள், முகாமைத்துவ அறிவு ஆகியவற்றை வழங்குதல், பொருளாதார அபிவிருத்தியின் முன்னோடிகளாக இளைஞர்களை ஆக்குதல் போன்ற நடைமுறைகளைக் கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. அரசினால் விடுவிக்கப்பட்ட யாழ் பகுதியில் உள்ள தீவுப் பகுதியில் 21 கிராம சேவையாளர் பிரிவு களில் 'சமுர்த்தி' திட்டம் உடன் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய சூழல் இருக்கின்றது. எனவே, கௌரவ அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து இப்பகுதி இளைஞர்களின் நலனில் அக்கறை கொள்கின்ற வேளையில் மிகுதியான யாழ் பகுதியில் மக்கள் வந்து குடியேறுவதற்கான வாய்ப்பையும் சூழலையும் அதன் மூலம் தோற்றுவிக்க முடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இளைஞர் விவகார அமைச்சின் வெளியீடான புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் அனைத்தையும் வடக்கு - கிழக்கில் நடைமுறைப்படுத்துவோமாயின், இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களின் மனநிலையை நாம் மாற்ற முடியும் என்பதைக் கூறி எனது பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். சந்திரகுமார் அவர்கள் புனர்வாழ்வு புனரமைப்பு கப்பற்துறை அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 12, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

එම්. චන්ද්‍රකුමාර් මහතා
(திரு. எம். சந்திரகுமார்)
(Mr. M. Chandrakumar)

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான அமைச்சான கப்பல் துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில், இவ்வமைச்சினூடாகத் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நான் சார்ந்துள்ள கட்சியாகிய ஈ. பீ. டீ. பீ. யின் சார்பில் பேச எண்ணுகின்றேன். முதலில் இவ்வமைச்சின் பொறுப்பையேற்றிருக்கின்ற கௌரவ அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களுக்கும் கௌரவ பிரதியமைச்சர் மஹிந்த விஜேசேக்கர அவர்களுளுக்கும் அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

யுத்தம் நடைபெறும் தேசமொன்றில் அனைத்தையும் இழந்து தவிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு இன்று பிரதானமாகத் தேவைப்படுவது நிரந்தர சமாதானமும் அதனுடன் கூடிய புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுமே! கடந்த இரண்டு தசாப்த காலமாக நடைபெறுகின்ற யுத்தத்தினால் வடக்கு - கிழக்குப் பகுதிகள் சிதைந்துபோய் இடிபாடுகளும் அழிவுகளும் மிக்க பூமியாய் மாறிக் கிடக்கின்றன. மனித வாழ்வின் அடிப்படை விழுமியங்கள் தொட்டு சமூக ஆக்க அபிவிருத்தி நிலையங்கள் வரை அங்கு சிதைந்துபோய் விட்டன. வடக்கு - கிழக்கில் போரில் அவலத்தால் வெந்துபோன மனித மனங்களைப் புனரமைப்பது தொடக்கம் ஏனைய அத்தியாவசிய தேவைகள் அனைத்திற்குமான நிலையங்களையும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

எமது மக்களுக்கு இன்று உடனடியாகத் தேவையான, ஏன், இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் எதிர்கால சுபிட்சத்திற்காகச் செய்யப்பட வேண்டிய, பிரதான காரணிகள் இரண்டு உள்ளன. அதில் முதலாவது, தமிழ் பேசும் மக்களின் பாரம் பரிய பிரதேசங்களான வடக்கு - கிழக்கில் அவர்கள் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் அனைத்து உரிமைகளும் வாய்க்கப் பெற்றவர்களாகவும் வாழ்வதை உறுதிப்படுத்தும் ஓர் அரசியல் தீர்வும், அடுத்து அவ்வரசியல் தீர்வினூடாக, வடக்கு - கிழக்கில் முற்றாகப் பாதிப்படைந்துள்ள மனித வாழ்வியல், பொருளாதாரம், கல்வி, சமூக கலாசாரத் துறைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடியான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுமே. போரின் விளைவுகளால் அங்கவீனர்களாகி எதிர்காலத்தைத் தொலைத்த ஆயிரக்கணக்கானவர்கள் எமது தேசத்தில் உள்ளனர். போரின் அவலங்களால் தமது பாதுகாவலர்களை இழந்த ஆயிரக்கணக்கான மக்கள் அநாதைகளாகிப்போன துக்ககரம் மிக்க நிலைமை எமது தேசத்தில் உள்ளது. இலட்சக்கணக்கான எம் மக்கள் உள்நாட்டிலும வெளிநாடுகளிலும் அகதிகளாக வாழ்கின்றனர். துன்பத்திலும் துயரத்திலும் கண்ணீரிலும் மூழ்கிப்போயுள்ள எமது மக்களுக்குப் புதுவாழ்வு அளிக்க வேண்டிய உன்னத பொறுப்பை நாம் சுமந்தவர்களாகவுள்ளோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, அண்மையில் யாழ் குடாநாட்டில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து, வட பகுதியின் மொத்தச் சனத்தொகை குறித்தும் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை குறித்தும் மாறுபட்ட, அல்லது முரண்பட்ட புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன. இச்சர்ச்சை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு காணப்படுவது அவசியமானதாகும். இல்லையெனில், இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணங்கள் மற்றும் உதவிகள் குறித்துப் பலதரப்பட்ட சந்தேகங்களும் வீண் வாதப் பிரதிவாதங்களும் ஏற்பட்டு, இறுதியில் பாதிக்கப்படப்போவது அந்த அப்பாவி மக்களே. இன்று வட பகுதியிலுள்ள மக்களின் எண்ணிக்கை குறித்தும் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை குறித்தும் அரசும் ஏனைய கட்சிகளும் சரியான புள்ளிவிபரங்களை அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும். எனவே, இப்பிரச்சினைக்குச் சரியான முடிவு காணப்படுவதற்காக, விடுவிக்கப்படாத பகுதிகளுக்குச் சென்று வரக்கூடிய, நடுநிலையான, அரச சார்பற்ற நிறுவனங்களைக் கொண்டு புள்ளிவிபரங்களைத் திரட்டுவதற்கு அரசும் கௌரவ அமைச்சரவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகின்றோம். மக்களின் எண்ணிக்கை குறித்த இச்சந்தேகப் போக்கு நீடிக்குமானால், நிவாரணம் மற்றும் பல்வேறு துறைக்கான ஒதுக்கீடுகள், அபிவிருத்தி போன்றவைகளில் வட பகுதி மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகும்.

இச்சந்தர்ப்பத்தில 'இன்றைய 'வீரகேசரி' பத்திரிகையில் வெளியாகிய செய்தியொன்றினை இங்கு நான் நினைவுகாட்ட விரும்புகின்றேன்.

> "இலங்கையின் தொடரும் போரினால் சுமார் மூன்று இலட்சம் [illegible] அவர்களின் சொந்த இடங்களில் வாழ முடியாமல் [illegible] ஐக்கிய நாடுகள் [illegible] இலங்கைப் பிரதிநிதி தெரிவித்திருக்கின்றார்."

என்ற செய்திதான் அதிலே வெளியாகியிருக்கின்றது. வட [illegible]த்திலுள்ள அரசாங்க அதிபர்களிடமிருந்தும் வடக்கில்


படிப்பகம்

www.padippakam.com

சேவையாறும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் எமக்குக் கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களிலிருந்த சிலவற்றை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏற்கனவே யாழ் மாவட்டத்தின் விடுவிக்கப்பட்ட பகுதி நீங்கலாக, யாழ் மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் 1993 இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி, யாழ் மாவட்டத்தின் மொத்தச் சனத் தொகை 7,22,593 பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரங்கள் இன்று சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த சில வருடங்களில் இருந்து இன்று வரையும், இப்புள்ளி விபரங்களின் அடிப்படையிலே யாழ் குடாநாட்டிற்கான நிவாரணம், உணவு மற்றும் பொருள்கள், ஏனைய ஒதுக்கீடுகள், கொடுப்பனவுகள் போன்றன வழங்கப்பட்டு வந்தன என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

யாழ் மாவட்டம் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்டது. 1991 இல் யாழ் தீவுப் பகுதிகளில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகவும், அதன் பின் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகவும், இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் வரை யாழ் மாவட்டத்தில் மொத்தமாக 3,40,000 மக்கள் இடம்பெயர்ந்து, அம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் தங்கியிருந்தனர். இவர்களில் 10,517 குடும்பங்களைச் சேர்ந்த 37,480 பேர் யாழ் மாவட்டத்தின் 199 நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர் நலன்புரி நிலையங்களுக்கு வெளியே, யாழ் மாவட்டத்தில் 74,535 குடும்பங்களைச் சேர்ந்த 3,02,520 பேர் இருந்தனர். நேற்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட 1995 - 1996 ஆண்டுக்குரிய "செயல் நிறைவேற்றும் கொள்கை உத்திகள் நிகழ்ச்சி முறைகள்' சம்பந்தமான வெளியீட்டின் இணைப்பு 1 இல், இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான அறிக்கையில் இவ்விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

"சூரிய கதிர்" இராணுவ நடவடிக்கையை அடுத்து, இந்த இராணுவ நடவடிக்கை நடைபெற்ற பகுதிகளில் இருந்து ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்த மக்களும், இப்பகுதிகளில் நிரந்தரமாக வசித்து மக்களுமாக பெரும் எண்ணிக்கையினர், யாழ் மாவட்டத்தில் தற்போது விடுவிக்கப்படாத பகுதிகளாகவுள்ள மருதங்கேணி, கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளனர். அவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 2,63,856 பேர் நிரந்தரமாக வசித்து வந்தவர்களாவர். யாழ் மாவட்டத்தின் மொத்த சனத்தொகை எனக் கணிப்பிடப்பட்ட 7,22,593 பேரில் மேற்படி நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நிரந்தரமாக வசித்த மக்களின் தொகையான 2,63,856 பேரைக் கழித்தால் வரும் தொகையான 4,58,737 யாழ் மாவட்டத்தின் மொத்த இடம்பெயர்ந்தோரின் தொகையாகும்.

யாழ் மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி மற்றும் வன்னிப் பகுதிகளுக்கு 2,32,127 பேர் நேற்று வரை கிளாலி கடலேரிப் பாதையைக் கடந்து வந்துள்ளனர். தற்போது யாழ் குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறாத பகுதிகளான வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த, இடம் பெயராத மக்கள் அனைவரையும், கிளிநொச்சி மற்றும் வன்னிப் பெரு நிலப் பரப்புப் பகுதிகளுக்குச் செல்லும் படி புலிகள் வற்புறுத்தி வருகின்றனர். அதனால் சமீப நாட்களாக தடை செய்யப்பட்ட கிளாலி கடலேரி ஊடாக பெருமளவு மக்கள் பெருநிலப்பரப்பை நோக்கி இடம்பெயர்ந்த வண்ணமுள்ளர். இதனால் ஒவ்வொரு நாளும் கிளிநொச்சி, வன்னிப் பகுதிகளுக்கு வந்து சேரும் யாழ் மாவட்ட இடம்பெயர்ந்த மக்கள் தொகை அதிகரித்த வண்ணமேயுள்ளது.

யாழ் மாவட்டத்திலிருந்து பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் கிளிநொச்சி மாவட்டத்திலேயே தங்கியுள்ளனர். 1990 இல் இருந்து 1993 வரை பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கிட்டத்தட்ட 46,000 பேர் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திற்குப் புகலிடம் தேடி வந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து கிளிநொச்சி மாவட்டத்தின் சனத்தொகை 1,76,206 பேராக இருந்தது. 1995 ஜூனில் மேலும் இடம் பெயர்ந்தவர்களின் வருகையால் கிட்டத்தட்ட 1,85,000 ஆக இம் மாவட்டத்தின் சனத்தொகை அதிகரித்தது. "சூரியக் கதிர்" இராணுவ நடவடிக்கையின் பின்பு யாழ் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளாலி கடலேரிப் பாதையைத் தாண்டி வந்துள்ள 2,32,127 பேரில் 1,37,981 பேர் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ளனர். இவர்களையும் உள்ளடக்கி கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் தொகை இரட்டிப்படைந்துள்ளது. இத்தொகை அண்ணளவாக 3,22,981 ஆகும்.

கிளாலி கடலேரியைத் தாண்டி இடம்பெயர்ந்து வந்த மக்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 59,260 பேரும், மன்னார் மாவட்டத்தில் 15,818 பேரும் வவுனியா மாவட்டத்தில் 19,068 பேரும், தற்போது தங்கியுள்ளனர். இவர்கள் பல்வேறு நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர், வீடுகளிலும் புகலிடம் தேடியுள்ளனர்.

கௌரவ தவிசாளர் அவர்களே, யாழ் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி, வன்னி போன்ற பகுதிகளுக்கு வந்துள்ள மக்கள் படும் துயரங்கள் சொல்லி மாளாது. இவர்களில் நலன்புரி நிலையங்களில் வசிப்போரின் நிலை மிகவும் மோசமானது. நலன்புரி நிலையங்களின் பற்றாக்குறை காரணமாக இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் மிகவும் இட நெருக்கடிகளின் மத்தியில் அதாவது, ஒரு வீட்டில் பல குடும்பங்கள் சேர்ந்து வாழும் நிலையில் வாழுகின்றனர். இதனால் பல்வேறு சமூக, கலாசார, குடும்பப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. பெரும்பாலான நலன்புரி நிலையங்கள் அடிப்படை வசதிகளான சுத்தமான குடிநீர், போதிய மலசலகூட வசதி போன்ற வசதிகள் இல்லாத பாடசாலைகளிலேயே அமைந்துள்ளன. இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு போதிய தங்குமிட வசதி, பெருமளவு மருத்துவ சுகாதார வசதிகள் தேவைப்படுகின்றன. இதைவிட, படுக்கை விரிப்புகள், பாய், லாம்பு, சமையல் பாத்திரம் உணவுத் தட்டுக்கள், வாளிகள் போன்ற பொருள்கள் பெருமளவு தேவைப்படுகின்றன.

இடம்பெயர்ந்தோருக்கு முதல் மூன்று நாட்களுக்குச் சமைத்த உணவும் பின்னர் உலர் உணவும்வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. 12 வயதுக்குட்பட்டோருக்கு ரூபா 15 வரையிலும், 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு ரூபா 25 வரையிலும் நாளொன்றுக்குச் சமைத்த உணவுக்காகச் செலவிடப்பட வேண்டும் என அரசாங்க அதிபர்களுக்கு அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தொகைகள் பொருளாதாரத் தடை, போக்குவரத்துப் பிரச்சினை, இதர கெடுபிடிகள், விலைவாசி உயர்வு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் போதுமானதாக இல்லை. இதுபோலவே ஐந்து பேருக்கு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தினரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு அரிசி, சீனி, மண்ணெண்ணெய், பருப்பு போன்றவற்றுக்காக ரூபா 45 செலவிடப்பட வேண்டுமென அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உலர் உணவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையும் வடபகுதியைப் பொறுத்தமட்டில் போதுமானதாக இல்லை. எனவே இவற்றை அதிகரிக்க கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடபகுதியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகின்றன. சுமார் 200 - 300 மாணவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளில் 400 - 500 இடம்பெயர்ந்த மக்கள் இன்று வாழ்க்கை நடத்துகின்றனர். பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு இன்னும் 18 நாட்களே உள்ளன. பாடசாலைகள் 01.01.1996 முதல் இயங்க வேண்டுமானால் தற்போது பாடசாலைகளில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு மாற்றுத் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். எனவே, குடி தண்ணீர், மலசல கூட வசதிகளுடன் கூடிய தற்காலிக வதிவிடங்களையாவது அமைத்து பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க வழி செய்தல் வேண்டும். இவ்வாறான தற்காலிக வதிவிடங்களை மைதானங்கள், அரச காணிகள், பொது இடங்கள் போன்றவற்றில் அமைக்கலாம். இப்படியான வதிவிடங்களை அமைப்பதற்கு 'கிடுகுத் தட்டுப்பாடு' பெரும் பிரச்சினையாகவுள்ளது. எனவே கூரைகள், அமைப்பதற்கு வவுனியாவூடாக இராணுவ ரீதியில் பயன்படுத்த முடியாத செயற்கைக் கூரைத்தகடுகளைப் போதியளவு கொண்டு செல்ல அனுமதிக்கப்படல் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, யாழ் மாவட்டத்துக்கான உணவு விநியோகம் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் தடைப்பட்டிருந்த வேளையில் தடைகளை அகற்றி அங்கு விரைவாக உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்குக் கௌரவ அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் எடுத்த அயராத முயற்சிகளுக்கு ஈ.பீ.டீ.பீ. சார்பில் மீண்டும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதுள்ள தேவைகளின் அடிப்படையில் போதுமான அளவு உணவுப் பொருள்களைச் சீரான அடிப்படையில் அனுப்பிவைக்க தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப்


படிப்பகம்

www.padippakam.com

பொருள்களை அனுப்புவது சம்பந்தமாக அமைச்சு ஏற்படும் செய்யும் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பாடு தேவையற்ற தாமதங்கள், இழுத்தடிப்புக்கள் என்பவற்றால் உணவு விநியோகத்தில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கௌரவ அமைச்சர் அவர்கள் தலையிட்டு ஆவன செய்யவேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வடபகுதியில் இம்முறை வடக்கு கிழக்கு பருவப் பெயர்ச்சி மழை பொய்த்துவிட்டது. இதனால் பெரும்போக நெற்செய்கையும் ஏனைய பயிர்ச் செய்கைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, வரும் மாதங்களில் வடபகுதியில் அரிசி, ஏனைய தானியங்கள், காய்கறிகள் போன்றவற்றிற்குப் பற்றாக்குறை ஏற்படும். இத்துடன் வட பகுதிக்கு யூரியா, அமோனியம் சல்பேற் என்பனவற்றை எடுத்துச் செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ரி. டீ. எம் போன்ற அசேதன உரங்களை எடுத்துச் செல்வதிலும் பல்வேறு கெடுபிடிகள்! கிருமிநாசினி, விவசாய உபகரணங்களுக்கு பற்றாக்குறை; எரிபொருள் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு; மண்வெட்டி கூட கொண்டு செல்லப்பட முடியாத நிலை! இதனால் பெரும்பாலான விவசாயிகள் பயிர்செய்கையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர். மேற்கூறிய காரணங்களால் வடபகுதிக்குப் பெருந்தொகையான உணவுப் பொருள்களை நிவாரணமாக அனுப்பிவைக்க வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படலாம்.

கடல்வலயத் தடைச்சட்டத்தாலும் கடற்றொழில் உபகரணங்களை எடுத்துச் செல்வதில் உள்ள தடைகளாலும் மீனவர்கள் கடலில் கால்வைக்க முடியாத நிலைமை வடக்கு-கிழக்கில் உள்ளது. இதனால் மீனவர்களே இறக்குதி செய்யப்படும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களைச் சாப்பிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களின் அவல நிலைமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் யுத்த நிலைமைகளால் பல்வேறு வழிகளில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய இரு மாவட்டங்களுக்கு மட்டுமே இவ்வமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுவாக வடக்கு - கிழக்கிலுள்ள அல்லது வடக்கு - கிழக்கு எல்லையோரங்களை அண்டிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகளவு பொருளாதார ரீதியான பாதிப்புக்களுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களே ஆளாகியுள்ளனர். யுத்தம், பொருளாதாரத்தடை, கடல்வலயத் தடைச்சட்டம் போன்றவற்றின் காரணமாக, வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துத் தொழில் துறைகளுமே முற்றாகப் பாதிப்படைந்துள்ளன. மட்டக்களப்பில் மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலைமை! அக்கரைப்பற்றில் வயலுக்குச் செல்ல முடியாத நிலைமை! பயிர்ச் செய்கைக்குகந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. வியாபார வர்த்தக நிலையங்கள் மூடிக் கிடக்கின்றன. ஏன் இவர்களும் இன்றைய சூழல் காரணமாக பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்" எனக் கருதப்படவில்லை. உண்மையில் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்தவர்கள், வடக்கு - கிழக்கிலுள்ள மக்களே என்பதை நாம் மறந்துவிடலாகாது. இம் முக்கிய விடயத்தைக் கௌரவ அமைச்சர் அவர்கள் கவனத்திலெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால் ஒன்றுபட்டிருந்து, வடக்கைத் தமது தாயகமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள், இரண்டு மணி நேர அவகாசத்துடன், உடுத்த உடையுடன் வடக்கிலிருந்து புலிகளால் நயவஞ்சகமாகத் துரத் தப்பட்டனர். இம்மக்கள் இன்று தெற்கின்பல பிரதேசங்களில் அவலம் மிக்க வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இம்மக்கள் அனேக பிரச்சினைகளை அகதி முகாம்களில் எதிர்நோக்குகின் றனர். திருப்தியான இருப்பிட வசதிகள் இல்லை. சுகாதார வசதி மிக மோசமாகவேயுள்ளது. கல்வி வசதி மிகவும் பாதிப்படைந்துள்ளது. தொழில் இன்மைப் பிரச்சினை மிகவும் அதிகமாக நிலவுகின்றது. கலாசாரச் சீர்கேடுகள் தலைவிரித்தாடுகின்றன. இந்நிலைமைகள் காரணமாக அம்மக்களின் எதிர்காலம் மிகவும் இருளடைந்ததாகவே காணப்படுகின்றது. எமது கட்சியால் முடிந்த உதவிகளை இம்மக்களுக்கு நாம் தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். இம்மக்களுக்கு வழங்கப்படும் உலர்உணவுப்பொருள் நிவாரணத்தில் பாரிய குறைபாடுகள் உள்ளன. வழங்கப்படும் அரிசி மிகவும் தரம் குறைந்ததாகவே காணப்படுகின்றது. சாப்பிடுவதற்கு உகந்ததாக இல்லாத அரிசியே நீண்டகாலமாக இம்மக்களுக்கு வழங் கப்படுகின்றது. உலர் உணவு நிவாரண விநியோகத்தில் கூட்டுறவுக் கடைகள் மோசமாக நடந்து கொள்வதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. கடந்த செப்டெம்பர் மாதத்திற்குரிய உலர் உணவு நிவாரணம், டிசம்பர் மாதத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. முகாம்களுக்கு வெளியே வாழும் இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம் மக்களுக்கு உலர் உணவு விநியோகம் வழங்கப்படல் வேண்டும்.

கப்பற்றுறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விபரங்களின்படி, புத்தளம் மாவட்டதில் 10,239 குடும்பங்களைச் சேர்ந்த 45,771 பேர் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகுதி 5,000 குடும்பங்களை சேர்ந்த முஸ்லிம் மக்களும் கொழும்பு, அனுராதபுரம், குருநாகல், சிலாபம், போன்ற மாவட்டங்களில் வசித்து வருகின்றனர். இம்மக்களுக்கான உதவிகள் மிகவும் குறைவாகவே கிடைத்து வருகின்றன. அகதி முகாம்களில் உள்ள திருமண வயதினை அடைந்த வர்கள் திருமணம் செய்யும்போது, அவர்களுக்கென அமைச்சர் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உதவித் திட்டம் பாராட்டுக்குரியது. இதேபோல் அகதி முகாம்களில் தொழிலற்று இருக்கும் இளைஞர் - யுவதிகளுக்குச் சுய தொழில் வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அகதி முகாம்களில் உள்ள மக்கள் கடந்த ஐந்து வருடங்களாக அகதிகளாகவே வாழ்ந்து பழக்கப்பட்டுப் போய்விட்டனர். அரசாங்க நிவாரணங்களை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர். ஆகவே, இந்த நிலைமை மாற்றும் நோக்கில் இந்த மக்களுக்குத் தொழிற்பயிற்சிகள், தொழில் வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம் மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதைக் கௌரவ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் திருகோணமலை - தீவுப்பகுதிக்கிடையில் சேவையில் பயன்படுத்தப்பட்டுவந்த 'ஐரிஸ் மோனா' பயணக் கப்பல் புலிகளினால் பணயமாகக் கடத்தப்பட்டதன் பின்பு, தீவுப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவை தடைப்பட்டது. இப்போக்குவரத்துத் தடையால் தீவுப்பகுதி மக்கள் பாரிய கஷ்டங் களை எதிர்நோக்குகின்றனர். இந்நிலைமை கடந்த நான்கு மாதங் களாக நீடிக்கின்றது. இதனையிட்டு கௌரவ அமைச்ச ரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தற்காலிகமாக நீக்கும் பொருட்டு ஐ. சி. ஆர். சி. மூலமான போக்குவரத்துக்கு அவர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆனால், துரதிஷ்டவசமாக அப் போக்குவரத்து காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் ஏராளமான மக்கள் திருகோணமலையிலும் கொழும்பிலும் தவித்து நிற்கின்றார்கள். இவர்களின் துயர் துடைக்க கௌரவ அமைச்சர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தீவுப்பகுதிகளில் மின்சார விநியோகம், தீவுகளுக்கிடையேயான போக்குவரத்து, சுகாதார மருத்துவப் பிரச்சினைகள், குடிநீர் விநி யோகம், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற அத்தியாவசிய தேவைகளி லுள்ள குறைபாடுகள் பூர்த்தியாக்கப்படாமல் தொடர்ந்தும் நீடிக் கின்றன. 167 அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடைபெற்று விட்டன. ஆயினும் பிரச்சினைகளுக்கான தீர்வென்பது காலத்தை நீடித்துக்கொண்டே போகின்றது. கௌரவ அமைச்ச ரவர்கள் அடுத்த ஆண்டு ஜனவரியில் தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்து அம்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எம்மிடம் உறுதியளித்திருக்கின்றார். இதனை நாம் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, துயரம் தரக்கூடியதும் ஆச்சரியம் மிக்கதுமான ஒரு விடயத்தை இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். "அகதி வாழ்க்கை" என்பது எந்தவொரு சமுகத்திற்கும் எந்தவொரு காலகட்டத்திலும் ஏற்படக் கூடாது. அந்த வாழ்வு மிகவும் கொடியதென்று அதனை வாழ்ந்து அனுபவித்தவர்களுக்கே புரியும். நீண்ட காலமாக இந்த நாட்டில் தொடரும் தேசிய இனப்பிரச்சினையின் தீவிரம் காரணமாக இலங்கையும் அகதிகள் அதிகமுள்ள நாடாக மாறி விட்டது. இவ்வகதிகளில் மிகவும் அதிகமானோர் தமிழ் பேசும் மக்களே!


படிப்பகம்

www.padippakam.com

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழ்ப் பேசும் மக்கள் அகதிகளாகப் போக்கிடமின்றி அல்லல் படுகின்றனர். வடக்கு — கிழக்கிலுள்ள மக்களில் கிட்டத்தட்ட எட்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாகியுள்ளனர். இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள 117 அகதி முகாம்களில் 14,966 குடும்பங்களைச் சேர்ந்த 57,100 பேரும் முகாம்களுக்கு வெளியே கிட்டத்தட்ட 85,000 பேருமாக மொத்தம் 1,42,100 மக்களும்,இதைவிட ஐரோப்பிய நாடுகளில், இலட்சக்கணக்கானவர்களுமாக இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் அகதிகளாகத் துன்பப்படுகின்றனர். இத்தொகையானது இலங்கையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களின் சனத்தொகையில் கிட்டத்தட்ட 25 சத வீதமானதாகும். அதாவது, நான்கு பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் அகதிநிலை தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைப்பைப் பொறுத்தவரையில் வடக்கு — கிழக்கில் அது மேற்கொள்ளவேண்டிய பணிகள் ஏராளமுள்ளன. அழிந்தவற்றை மீளக்கட்டியெழுப்பி அழகிய தேசமொன்றை உருவாக்குவதற்கு இவ்வமைச்சு தீர்க்கமாக உழைக்க வேண்டியிருக்கின்றது. அதிக நிதியை ஒதுக்கி யுத்தத்தை நடாத்தும்போது புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு அதைவிடவும் அதிகளவான நிதியை ஒதுக்க வேண்டியவர்களாகவே உள்ளோம். இன்றைய யுத்தத்தால் பொலிவிழந்துபோன யாழ் நகரைக் கட்டியெழுப்புவதற்கு நாம் எவ்வளவு பணத்தைச் செலவிடவேண்டியிருக்கும்! "அழிப்பது சுலபம் ; ஆக்குவது கடினம்" என்பதை நாம் அறிவோம். ஆசியாவிலேயே மிகவும் கனதி மிக்க நூல் நிலையம் தீயில் எரிந்துபோயிற்று. கலை, சிற்பம், பண்பாட்டு அம்சங்கள் பொருந்திய அந்த நூல் நிலையத்தை மீண்டும் புனர்நிர்மாணம் செய்ய முடியுமா என்பதை நாம் சிந்திக்கவேண்டியவர்களாகவுள்ளோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, வட பகுதியில் பல இன்னல்களின் மத்தியில் துயருற்றிருக்கும் மக்களின் சுமை போக்க அயராதுழைக்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் சேவையை நான் இச்சபையில் கௌரவிக்க விரும்புகின்றேன். இதைவிட அம்மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கும் மற்றும் வடபகுதியில் சேவையாற்றும் சர்வதேச, உள்ளூர் தொண்டர் நிறுவனங்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். வட பகுதிக்குச் சென்றுவரக்கூடிய உயரதிகாரியொருவரை அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளராக நியமித்தால், அங்குள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சாதகமாக இருக்குமென்பதைக் கௌரவ அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

யாழ் அரச அதிபரினால் ஐ.சி.ஆர்.சி. ' குமண ' கப்பலில் ஒய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் ஊடாகக் கடந்த புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட ஒன்பது மில்லியன் ரூபா காசோலை விடயமாக மிகவும் வேதனையுடன் மீண்டும் இச்சபையில் பிரஸ்தாபிக்க விரும்புகின்றேன். இக்காசோலை கடந்த ஆறு நாட்களாக வழங்கப்படாது தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நிகழ்வானது, மாகோ கப்பல் இன்றுவரை ஆறு நாட்களாகத் தரித்து நிற்பதற்கும் நாள் ஒன்றுக்கு 1500 அமெரிக்க டொலர் வீதம் துறைமுகத்திற்குப் பணம் செலுத்தப்பட வேண்டிய சூழ்நிலைக்கும் காரணமாகவுள்ளது. கௌரவ அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக அறிவார். ஆகவே, துரிதமாக அந்தக் காசோலை கிடைக்கப் பெற அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இறுதியாக, துறைமுகங்கள் தொடர்பாக சில விடயங்களைக் கௌரவ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். காலித் துறைமுக அபிவிருத்திக்கு அமைச்சர் எடுத்த முன் முயற்சிகளை நாம் பாராட்டுகின்றோம். இலங்கையின் இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகத்திலுள்ள சில குறைபாடுகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இத்துறைமுகம் தேசியமயமாக்கப்பட்ட பின், 1964 ஆம் ஆண்டு முதல் அங்கு ஊழியர் பற்றாக்குறை அதிகமாகவே இருக்கின்றது. இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும்பொருட்டு புதிய ஊழியர்களைச் சேர்ப்பதற்குக் கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஊழியர்களைச் சேர்க்கும் போது இம்மாவட்டத்திலுள்ள மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இத்துறைமுகத்திலுள்ள பிறிமா, ரோக்கியோ சீமெந்து போன்ற கம்பனிகளில் ஏற்றியிறக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, அவை ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் வழங்கப்பட்ட அளவு கூலியே இன்னும் வழங்கப்படுகின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட பின்பு இத்திருகோணமலைத் துறைமுகம் எவ்வித முன்னேற்றத் திட்டங்களையோ அபிவிருத்திகளையோ கண்டதில்லை. எனவே, கௌரவ அமைச்சர் அவர்கள் இதில் உரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடிக்கின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். சந்திரகுமார் அவர்கள் கல்வி, உயர்கல்வி அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 13, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

[illegible]
(திரு. எம். சந்திரகுமார்)
(Mr. M. Chandrakumar)

கௌரவ தவிசாளர் அவர்களே, கல்வி உயர்கல்வி அமைச்சின் குழுநிலை விவாதத்தில் ஈ. பீ. டீ. பீ. யின் சார்பில் பேசுவதற்கு முன்னர், கௌரவ கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரண அவர்களுக்கும் அவரது பிரதியமைச்சர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் மக்களின் இன்றைய கல்விநிலை தொடர்பாகவும் கல்வித்துறையில் எம்மக்களுக்கு நீண்ட காலமாக ஏற்பட்டு வரும் பாரபட்சம், புறக்கணிப்பு, அக்கறையின்மை போன்ற விடயங்களையிட்டும் பேசலாமென எண்ணுகின்றேன்.

கல்வியானது மனித அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானதாகும். கல்வி ஒரு நாட்டின் பல்துறை அபிவிருத்திக்கும் நாட்டின் உறுதிப்பாட்டிற்கும் உயிர்நாடியானது. கல்வியைக் கற்காமல் விடுவது பெருந்தவறு ; கல்வியை வழங்க மறுப்பது அதைவிடப் பெருந்தவறு. கல்வி மனிதர்களை வாழ வழிவகுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கேதுவாண கல்வியை நாம் வளர்க்க வேண்டும். சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்குகொள்ளுகின்ற வலிமையையும் அறிவுத்திறன் மனப்பான்மையையும் மக்களுக்கு வழங்குவது கல்வியாகும். இலங்கை போன்ற பல்லின, பலமொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழும் ஒரு நாட்டில் எல்லாச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் சமமான பாகுபாடுமின்றிக் கல்வியைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கப்பட வேண்டும். இதற்கான சம சந்தர்ப்பத்தை வழங்குவதுதான் உண்மையான ஜனநாயகப் பண்பாகும். கல்வி அபிவிருத்தியில் உயர்வு பெறாத ஒரு நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தி காண முடியாது. கல்வியும் தேசத்தின் அபிவிருத்தியும் ஒன்றில் மற்றொன்று தங்கியுள்ளது. கல்வியில் ஒரு நாடு முன்னேற்றமடையும் போது வறுமை அந்த நாட்டிலிருந்து தானாகவே நீங்கிவிடும்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, 1948 ஆம் ஆண்டில் இந்த நாடு சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் தமிழர் — சிங்களவர்களுக்கிடையிலேற்பட்ட உத்தியோக ரீதியான போட்டி, இன முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்தது. தமிழர்கள் உயர் பதவிகளில் பெருந்தொகையாக இருந்ததனால், அதனை இல்லாதொழிக்குமுகமாக 1956 இல் "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனால் தமிழ் சமூகத்துக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. 1972 இன் தரப்படுத்தல் கொள்கை காரணமாகத் திறமையான தமிழ் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புக்களை இழந்தனர். தமிழர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி வழங்க மறுக்கப்பட்டது. இந்தச் செயற்பாடானது, தமிழ் மக்களின் கல்விக்கு விதிக்கப்பட்ட பெருந்தடையாக தமிழர் சமுதாயம் கருதியது. கல்வியின் மூலம் இனங்களுக்கிடையே தேசிய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியும். ஆனால், இதில் தவறு இழைக்கப்பட்டு விட்டது. இத்தவறின் காரணமாகப் பாரிய விளைவுகளை இந்த நாடு இன்று எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. அனுபவத்தின் வாயிலாக இத்தவறின் விளைவுகளை உணர்ந்த பின், மீண்டும் அந்தத் தவறைத் திருத்திக்கொள்ளும் மனோபாவம் இல்லாதது துரதிஷ்டமானது.

இன்றைய மாணவர்களுக்கான ஆரம்பப் பாடசாலைப் பாடப் புத்தகங்களில் தொடர்ந்தும் தமிழ் விரோத கருத்துக்கள் இடம்பெற்று வருவது மிகவும் கவலைக்குரியது. இவ்வாறான தமிழ் விரோதக் கருத்துக்கள், படித்த மக்களிடையே இனவாதம் வளர்வதற்கான காரணியாக இருந்திருக்கிறது. இவ்வாறான தவறான கருத்துகள் பாடப் புத்தகத்திலிருந்து உடனே நீக்கப்பட வேண்டும். ஆசியாவிலே கல்வியறிவுள்ளோர் அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால் உண்மை நிலைபரம் என்ன? எம்மை விட கல்வியில் பின்தங்கிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, தென் கொரியா போன்ற நாடுகள் எவ்வளவோ முன்னேறிவிட்டன. நாம் பின் நோக்கியே சென்று கொண்டிருக்கிறோம். எமது இளைஞர் — யுவதிகளில் பலர் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக, கையொப்பம் மட்டும் வைக்கத் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். இந்த நிலைமை வடக்கு — கிழக்கிலும் தோட்டப் பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படுகிறது. இன்று நிலவும் போர், தொடர்ந்தும் நீடிக்குமேயானால் வடக்கு — கிழக்கில் இந்நிலைமை துரிதமாக வளர்ந்துவிடும் என்று நான் அச்சப்படுகிறேன்.

www.padippakam.com

கௌரவ தவிசாளர் அவர்களே, 1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலையடுத்து, ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ்ப்பாண நூலகம் திட்டமிட்ட முறையில் தீ வைத்து எரிக்கப்பட்டதுடன், தமிழர்கள் கல்வி மீதான இரண்டாவது கட்டத் தாக்குதல் ஆரம்பமானது. இன்று தமிழ்ச் சமூகத்தின் மீது யுத்தத்தின் விளைவுகளில் ஏற்படும் தாக்கமும் ஏதோ ஒரு வகையில் தொடரும் அரசின் தரப்படுத்தல் கொள்கையும் அரசியல் சார்ந்த கல்வி முறையும் தமிழ் மாணவர்களை மிகவும் பாதித்து வருகின்றன. தமிழ் மாணவர்களின் கல்விக்குத் தடை 'விதிக்கப்படுகிறது. பரீட்சைகள் நடத்தாமல் இருப்பதாலும் நீண்டகாலமாக யுத்தம் தொடர்வதாலும் பாடசாலைகள் மீதான தாக்குதல்களாலும் மாணவர்கள் கைது செய்யப்படுவதாலும் சித்திரவதை செய்யப்படுவதாலும், அவர்கள் கொல்லப்படுவதாலும் இன்று தமிழர் கல்வியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் இன்று தமது உயிர் உடைமைகளை இழந்து, தாம் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு, தாங்கள் காலாகாலமாகத் தேடிய செல்வங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இத்துடன் அழியாத செல்வமாகிய கல்விச் செல்வத்தையும் மெல்ல மெல்ல இழந்து கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ் பல்கலைக்கழகம், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி உட்பட, பல முன்னணிப் பாடசாலைகளும் கல்லூரிகளும் மூடப்பட்டு விட்டன. வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, வன்னி போன்ற பகுதிகளில் பெரும்பாலான பாடசாலைகள் அகதி முகாம்களாகி விட்டன. மாணவர்களும் ஆசிரியர்களும் அகதிகளாகி விட்டனர். ஆசியர்கள் கற்பிக்கவும், மாணவர்கள் கற்கவும் ஏற்ற அகப் புறச் சூழ்நிலை இல்லை. குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல்களும் 'ஷெல்' தாக்குதல்களும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் மான பயத்தில் நித்தம் சித்தம் கலங்க வைக்கின்றன.

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் சில மாதங்களுக்கு முன் மாணவர்கள் கொல்லப்படவும் படுகாயம் அடையவும் நேர்ந்த தாக்குதல் இன்னும் அந்த மக்கள் மத்தியில் இருந்து நீங்கவில்லை. யுத்தத்தின் பிடியில் தமிழர்கள் கல்வி சிக்கித் திணறுகிறது. வருங்காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் தலைவர்களாகவும் கல்விமான்களாகவும் பல்வேறு தொழில் துறை நிபுணர்களாகவும் வரவேண்டிய இளம் சமுதாயம், இன்று உடல்கள் சிதறி பலியாகி வருகிறது. இதன் விளைவுகள் வருங்காலத்தில் தமிழ் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும். எதிர் காலத்தில் ஏனைய சமுகங்களை விட தமிழ் சமுகம் கல்வியில் பல்லாண்டு காலம் பின் தள்ளியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் கல்வியை உயிராக மதிப்பவர்கள். தங்களின் சந்ததியினரின் கல்வி குறித்து அளப்பரிய அக்கறை காட்டுபவர்கள். பிள்ளைகளின் கல்விக்காக வேறு செலவுகளைச் சுருக்கி, வாயை வயிற்றைக் கட்டிச் செலவு செய்பவர்கள். இப்படிப்பட்ட மக்கள் தரப்படுத்தலினால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் இருளாக்கப்பட்ட போது அதிர்ச்சியடைந்தார்கள். தரப்படுத்தலும் திட்டமிட்ட குடியேற்றமுமே தமிழ இளைஞர்களின ஆயுதப் போராட்டத்துக்கு முக்கிய காரணிகளாகும். ஆனால், இன்றுவரை தரப்படுத்தல் ஏதோ ஒரு ரூபத்திலும் திட்டமிட்ட குடியேற்றமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

கௌரவ தவிசாளர் அவர்களே, நாட்டில் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை அதிகமாகவே நிலவுகின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கிலும் மலையகப் பகுதிகளிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை பெருமளவில் காணப்படுகின்றன. இப் பகுதிகளிலுள்ள அநேகமான பாடசாலைகள், ஓரிரு ஆசிரியர்களுடன் காலத்தைக் கடத்துகின்றன. 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற வீதமே, மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நல்ல முறையில் கல்வி போதிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்கும். ஆனால், சில தமிழ்ப் பாடசாலைகளில் ஓர் ஆசிரியருக்கு 40 அல்லது 50 மாணவர்கள் எனக் கல்வி கற்கும் நிலைமையே உள்ளது.

யுத்தப் பிரதேசப் பகுதிகளுக்கு கல்வி கற்பிப்பதற்கு வெளிப் பகுதிகளில் இருந்து ஆசிரியர்கள் வரத் தயங்குகின்றனர். போதிய அளவு புதிய ஆசிரியர் நியமனங்களும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் மாணவர்கள் தங்கள் கல்வியைத் திறமையாகக் கற்க முடியவில்லை. குறிப்பாக கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கு, பெரும் எண்ணிக்கையிலான பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் குறிப்பிட்ட துறைகளில் ஆழ்ந்த அறிவில்லாத ஆசிரியர்கள், கற்பித்தலில் ஈடுபட்டுமந்த கருத்துக்களைப் புகட்டுகின்றனர். பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறையும் வடக்கு கிழக்கில் நிலவுகின்றது. ஆசிரியர் கலாசாலையில் வதிவிடப் பயிற்சியை முடித்தவர்களையும் தொலைக்கல்விப் பாடநெறிப் பயிற்சியை முடித்தவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தொலைக் கல்விப் பயிற்சிப் பாடநெறியை முடித்தவர்களின் தரம் குறைவாகவே காணப்படுகின்றது. அவ்வாறே போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை விட, 'ஜனசவிய' மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் திறமையும் குறைவாகவே காணப்படுகின்றது.

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் ஐம்பது சதவீதமான பாடசாலைகளில், ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு இருக்கின்ற பற்றாக்குறை காரணமாக, பயிலுநர் ஆசிரியர்களும் பயிற்றப்படாதோரும் கற்பித்தல் செயல்முறைகளில் ஈடுபடுவதன் விளைவாக, ஆரம்பக் கல்வி நிலை மிகவும் மோசமடைந்து, வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. இதனால் கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களிலுள்ள மாணவர்கள் வாசிக்க முடியாத நிலையிலும், எழுதக் கஷ்டமான நிலையிலும் காணப்படுகின்றனர். இந்த நிலைமையால், இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிரமப்படுகின்றனர்.

வடக்கு — கிழக்கிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் தாரதம் பெற்ற அதிபர்களின் பற்றாக்குறையும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. பாடசாலைகளின் தரங்களுக்கேற்ப அதிபர்கள் நியமிக்கப்படாமையால், பாடசாலை முகாமைத்துவத்தில் பல பிரச்சினைகளும் குறைபாடுகளும் காணப்படுகின்றன. அதிபர் சேவைக்குப் போட்டிப் பரீட்சை மூலமும் சேவை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். கடந்த காலங்களில் தற்காலிக அதிபர்களுக்கு நியமனம் வழங்கியதன் மூலம் பாடசாலைகளில் முகாமைத்துவப் பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த நிலைமையை கௌரவ அமைச்சர் அவர்கள் கருத்தில் எடுத்து, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்வாறு பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, பௌதிக வளப் பற்றாக்குறை, சிறந்த முகாமைத்துவமின்மை, அதிபர்களின் அசமந்தப் போக்கு, ஆசிரியர்களின் அசமந்தப் போக்கு, சீரில்லாத பாடசாலை நிர்வாகம் போன்ற பல்வேறு குறைபாடுகளினால், இன்று தனியார் கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவம் என்றுமே இல்லாதவாறு மேலோங்கிக் காணப்படுகின்றது. பல ஆசிரியர்கள், பாடசாலையை ஓய்வுகூடமாகவும் 'ரியூட்டரி' களைக் கற்பித்தல் நிலையமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இன்று ஆசிரியர் தொழில் பலருக்குப் பகுதிநேரத் தொழிலாக மாறிவிட்டது. பெரும்பாலான அதிபர்களும் ஆசிரியர்களும் முழுநேரமாக வேறு தொழில்களைச் செய்கின்றனர். பாடசாலைகளில் ஒழுங்காகக் கற்பிக்காத ஆசிரியர்கள், 'ரியூட்டரி' களில் நன்றாகக் கற்பிக்கின்றனர். தன்னிடம் 'ரியூசனு'க்கு வராத மாணவர்கள் அவ்வாசிரியர்களினால் பழிவாங்கப்படுகின்றனர்.

இன்று ஒரு பிள்ளை சிறப்பாகக் கல்வி கற்க வேண்டுமென்றால் பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பியிருக்க முடியாத நிலையுள்ளது. இதனால் ஏழை மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களுமே இலவசக் கல்வியின் பயனை அடைய முடியாத நிலை உள்ளது. 'ரியூசனு'க்குப் பிள்ளைகளை அனுப்பக் கூடிய பண வசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளே கல்வி கற்று முன்னேறும் நிலை இன்று உள்ளது. இந்த ஆரோக்கியமற்ற நிலையைக் கௌரவ அமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தமது உறவினர்கள், நண்பர்கள் என்பதற்காக அவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதை நிறுத்த வேண்டும். நல்லறிவு பண்பும் ஒழுக்கமும் மிக்கவர்களே கண்ணியமாக ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்படல் வேண்டும். ஆசிரியர்களுக்கு திறமை அடிப்படையிலேயே பதவியுயர்வு வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர் சமூகம் கற்பித்தலோடு மட்டும் நின்று விடாது, புதிய விடயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். பல ஆசிரியர்கள் கிணற்றுத் தவளைகளாகவே இருக்கின்றனர். நடப்பு நிகழ்வுகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. இதனால் மாணவர்கள், ஆசிரியர்களுக்குக் கற்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. எனவே, ஆசிரியர்களின் தரத்தைப் பேணும் வகையில் உயரிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும்.

மு. ப. 11.45

வடக்கு — கிழக்கு மாகாண ஆசிரியர் விபரங்களைப் பார்க்கும்போது, அங்கு 5234 தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை இருப்பது புலனாகின்றது. ஆனால், வடக்கு — கிழக்கிலுள்ள சிங்கள மொழிமூல ஆசிரியர்களின் விபரங்களைப் பார்க்கும்பொழுது, 721 ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே, இந்த இடத்தில் தமிழ் மாணவர்களுக்குக் காட்டப்படும் பாரபட்சம் தெரிகின்றது. இந்த நிலையைப் போக்குவதற்காகக் கௌரவ அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பேரால் தற்பொழுது தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஆனால், கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆந் தேதி நடாத்தப்பட்ட தமிழ்மொழிமூல ஆசிரியர் பதவிக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தபோதும், சில மாவட்டங்களில் ஓரிரு நியமனங்கள் வழங்கப்பட்டதைத் தவிர மற்றைய நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதைக் கௌரவ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், தற்போது கோரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மூலம் ஆசிரியர் பற்றாக்குறை முழுவதையும் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.


படிப்பகம்

www.padippakam.com

இன்று வடக்கு — கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் 5,83,811 மாணவர்களுக்கென 1287 தமிழ்ப் பாடசாலைகளும், 292 முஸ்லிம் பாடசாலைகளுமாக மொத்தம் 1579 பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் 115 பாடசாலைகள் மட்டுமே ஆய்வுகூட வசதிகளைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் அதிக கூடிய மாணவர்கள் அதாவது, 1,90,740 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அங்கு 490 பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றுள் 47 பாடசாலைகள் மட்டுமே ஆய்வுகூட வசதிகளைப் பெற்றுள்ளன. அத்துடன், யாழ் மாவட்டத்தில் மட்டும் 1694 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

இன்று வடக்கு — கிழக்கில் உள்ள தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் தொகையை தமிழ்மொழிமூலம் கல்விகற்கும் மாணவர்களின் தொகையுடன் ஒப்பிடும்போது, சராசரி 34 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அடிப்படையேயுள்ளது. இதேவேளை, வடக்கு — கிழக்கிலுள்ள சிங்கள மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தொகையை ஒப்பிடும்போது, சராசரி 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அடிப்படையுள்ளது. இந்நிலைமையானது தமிழ்ப் பேசும் சமூகத்தின் மீதான பாகுபாட்டினை வெளிப்படுத்துகின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்றைய பிரதமர் கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் 1970 களில் பிரதமராக இருந்த வேளையில், யாழ்ப்பாணம் திருநெல்வேலியில், சேர். பொன். இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக பரிணாமம் பெற்றது. தமிழர் பிரதேசத்தில் முதல் முதல் பல்கலைக்கழகமொன்றை நிறுவியமைக்காக தமிழ்மக்களின் மனங்களில் அவர் நிறைந்திருந்தார். தமிழ்ப் பிரதேசமொன்றில் முதன்முதலில் பல்கலைக்கழகமொன்றை நிறுவிய பெருமைக்குரிய கௌரவ பிரதமர் அவர்கள் மீண்டும் பிரதமராக பதவி வகிக்கும் இவ்வேளையில், அவரால் நிறுவப்பட்ட யாழ் பல்கலைக்கழகம் இயங்க முடியாத நிலையில் இருப்பது தமிழ் மக்களுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதுடன், கௌரவ பிரதமர் அவர்களுக்கும் கவலையை ஏற்படுத்தியிருக்குமென நான் நம்புகின்றேன். மூடப்பட்டிருக்கும் பல்கலைக்கழகம் எப்போது திறக்கப்படும் என்பது குறித்து யாராலுமே அறிய முடியாதுள்ளது. இதனால் ஏற்கெனவே பல்வேறு பாதிப்புக்களுக்குள்ளாகியிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது பெரும் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர். சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின் போது யாழ் பல்கலைக்கழகமும் சேதமடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ் பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலை தொடர்பாகவும் அதை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பாகவும் அதில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்வி கற்பிக்கும் பேராசிரியர்கள் தொடர்பாகவும் அரசு என்ன முடிவு எடுத்துள்ளது என்பதை நாம் அறிய விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல், சட்டம், மருத்துவம், பல் மருத்துவம், மிருக வைத்தியம் போன்ற பீடங்கள் இல்லாது கடந்த இரண்டு தசாப்தங்களாக அரைகுறையாகவே இயங்கி வருகின்றது. இதேபோலவே மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டபோதிலும், கிழக்குப் பல் கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் இன்னும் அமைக்கப்படவில்லை. கிழக்குப் பல்கலைக்கழகமும் பொறியியல், சட்டம், பல் மருத்துவம், மிருக வைத்தியம் போன்ற பீடங்கள் இல்லாத நிலையில் குறைபாடுகளு டனேயே இயங்கி வருகின்றது. ஆனால், இப்பல்கலைக்கழகத்துக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட றுகுணு பல்கலைக்கழகம் இன்று அனைத்துப் பீடங்களுடனும் அனைத்து வசதிகளுடனும் ஒரு முழு நிறைவான பல்கலைக்கழகமாக இயங்கி வருகின்றது. இவ்வாறான பாரபட்சம்தான் இனப்பிரச்சினையைக் கூர்மையடைய வைத்தது என்று இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மேலும், விடுதி, கட்டட, தளபாட பற்றாக்குறைகளையும் பாதுகாப்புப் பிரச்சினைகளையும் அவர்கள் எதிர் நோக்குகின்றனர். இங்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் போன்றவர் களுக்கே பாதுகாப்பு இல்லாத நிலைமை காணப்படுகின்றது. முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சந்தானம் அவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுப் பல வாரங்களாகியும் இன்னும் அவரின் நிலை குறித்து எவ்வித தகவலுமில்லை.

கௌரவ தவிசாளர் அவர்களே, வட மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகிய இடங்களில் புதிதாகப் பல்கலைக்கழகங்களை நிறுவ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதேபோன்று, திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களிலும் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ முடியும். கிளிநொச்சியிலுள்ள யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும்படி நான் கௌரவ அமைச்சரவர்ககளிடம் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திருகோணமலையிலுள்ள இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியாவிலுள்ள இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி, கல்வியில் கல்லூரி, ஆகியவற்றின் நிலைமை, ஒரு தேசியப் பாடசாலையின் தரத்தைவிட மோசமானதென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின் றேன். திருகோணமலை இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியும் வவுனியா இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியும் முறையே கிழக் குப் பல்கலைக்கழகத்துடனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்படத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன். திரு கோணமலை இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ள சில குறைபாடுகள் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். திருகோணமலை இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கணக்கியல் முதலாம், இரண் டாம் வருட மாணவர்களுக்கு நிரந்தர விரிவுரையாளர் ஒருவர் மாத்திரமே இருக்கின்றார். ஆங்கிலம் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கு இரண்டு விரிவுரையாளர்களே உள்ளனர். இக்கல்லூரியில் நிர்வாக உத்தியோகத்தர்களாக நிரந்தர ஊழியர்களாக ஒரு பதில் இயக்குநரும் மூன்று எழுதுவினைஞர்களுமே உள்ளனர். இக்கல்லூரியில் நிரந்தர பதிவாளர் இல்லை. அதைவிட விரிவுரை மண்டபங்கள், தளபாடங்கள், விடுதி வசதிகள் போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனால், இங்கு கணக்கியல், ஆங்கிலம் ஆகிய இரண்டு கற்கைநெறிகள் மாத்திரமே தற்போது நடைபெறுகின்றன. தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் மேலதிக கற்கைநெறிகளை ஆரம்பிக்க முடியும். இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுச் சுமார் மூன்று வருடங்களாகியும், தெற்கி லுள்ள இதுபோன்ற கல்லூரிகளின் வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமே காணப்படுகின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, 1994/95 கல்வியாண்டில் பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி முறையினால் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட மாணவர்களின் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்பட வில்லை. அம்மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக அவர்களின் பிரதிநிதிகள் எமது கட்சியாகிய ஈ.பீ.டீ.பீ.யின் செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்த, எம். பீ. அவர்களைச் சந்தித்ததன் நிமித்தம், அவர் எடுத்துக்கொண்ட முன்முயற்சிகளினால், உரிய அதிகாரிகள், கௌரவ அமைச்சர்கள், அதிமேதகு ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பயனாக ஜனாதிபதி அவர்களின் பணிப் பின்பேரில் அம்மாணவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக கௌரவ அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அவர்களின் தலைமையில், கௌரவ பிரதியமைச்சர் விஸ்வ வர்ணபால மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பிரதிநிதி ஆகிய மூவரைக்கொண்ட உப குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த உபகுழு மேற்படி மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவர் களில் ஐந்து சத வீதமானவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்தது. இதனால், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 10 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கும் 24 மாணவர்கள் ஏனைய பீடங்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி பெறும் சந்தர்ப்பமேற்பட்டது. ஆனால், இன்றுவரை அந்த உபகுழுவின் சிபார்சு அமுல்படுத்தப்படாததனால் அந்த 34 மாணவர்களும் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத' நிலையில் இருக்கின்றனர். எனவே, மேற்படி உபகுழுவின் தீர்மானத்தை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் நான் கௌரவ அமைச் சரவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

வாக்குறுதிகளும் தீர்மானங்களும் செயற்படுத்தப்படும் பட்சத்தில்தான் கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் ஏற்பட்ட, ஏற்படுகின்ற சந்தே கங்கள் நிவர்த்தி செய்யப்பட வழியேற்படுமென்பதை இச்சபையின் கவனத்திற்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். 1994/95 கல்வியாண்டு தொடக்கம் கலைப்பீட மாணவர்களை நூறு வீதம் திறமையின் அடிப்படை யிலேயே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்வதெனப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் 1994 இல் கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. இதன்படி 1994/95 கல்வியாண்டுக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீடங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும்போது, வடக்கு — கிழக்குத் தவிர்ந்த ஏனைய சில மாவட்டங்களில் 1993/94 கல்வி யாண்டில் கலைப்பீடங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் எண் ணிக்கையைவிடக் குறைந்த தொகையினரே அனுமதி பெறும் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து, "நூறு வீதம் திறமையினடிப்படையில் தெரிவு" என்ற கொள்கை முடிவு திடீரென மீறப்பட்டு — மாற்றப் பட்டு — கலைப்பீடங்களுக்கு அனுமதி குறைந்த மாவட்டங்களிலே, கலைப்பீட அனுமதி 1993/94 கல்வியாண்டின் நிலைக்கு மீண்டும் எப்படியோ கொண்டுவரப்பட்டது. இந்தக் கொள்கை முடிவு எந்த அடிப்படையில் இவ்வாறு திடீரென மாற்றப்பட்டது என்பதைக் கௌரவ அமைச்சர் அறிவாரா ?

கௌரவ தவிசாளர் அவர்களே, தமிழ்ப் பிரதேசங்களின் பல் கலைக்கழக அனுமதியில் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டபோது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு தனது கொள்கை முடிவுகளை மாற்றி, தமிழ்ப் பேசும் மாணவர்களுக்குச் சாதகமான நிலையை ஒருபோதும் மேற்கொள்ளவில்லை என்பதை மிக மனவருத் தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 94/95 கல்வியாண்டில் றுகுணு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் களுக்குப் புறம்பாக மேலும் 17 மாணவர்கள் 94/95 கல்வியாண்டுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் 17 மாணவர்களும் என்ன அடிப்படை யில் றுகுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அனும்திக்கப்பட்டனர் ? இவர்கள் என்ன அடிப்படையில் இப்பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப் பட்டனரோ, அதேயடிப்படையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட, ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் மேலதிகமாக மாணவர்களை ஏன் அனுமதிக்க முடியவில்லை ? இது குறித்து கௌரவ அமைச்சர் அவர்களிடம் நான் விளக்கம் கேட்க விரும்புகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்று பின்னர் பல்வேறு காரணங்களினால் தம்மைப் பதிவு செய்யாமல் விடும் மாணவர்களின் இடங்களுக்குப் பதிலாக புதிய மாணவர்களை அனுமதிக்கும் விடயத்தில் பல குறைபாடுகள் ஏற்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் கடந்த பல வருடங்களாக ஆணைக் குழுவின் பிரதித் தலைவரே பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்து வந்துள்ளார். ஆனால் பேராசிரியர் பத்மநாதன் பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்குப் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் இந்த வழக்கமான நடைமுறை மாற்றப்பட்டு ஆணைக்குழுத் தலைவரே பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விடயங்களைக் கையாண்டு வருகிறார். இது ஒரு பாரபட்சமான நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் 160 பேர் கடமையாற்றுகின்றனர். இதில் இரண்டு அலுவலக அதிகாரிகள், மூன்று எழுதுவினைஞர்கள், இரண்டு சுருக்கெழுத்தாளர்கள் என ஏழு தமிழர்களே கடமையாற்றுகின்றனர். இன விகிதாசார அடிப்படையில் பார்த்தால்கூட, 40 தமிழ்ப் பேசும் ஊழியர்கள் இங்கு கடமையாற்ற வேண்டும்.

நாட்டில் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் எல்லா இனத்தவர்களுக்கும் பாகுபாடற்ற முறையில் நீதியான வகையில் செயற்பட வேண்டிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு போன்ற முக்கியமான அமைப்பு ஒன்றிலேயே இன விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படாமல் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம் மட்டுமல்ல, இவ்வமைப்பு எப்படி இனப்பாகுபாடற்ற முறையில் செயற்படும் என்ற கேள்வியையும் உருவாக்கியுள்ளது.

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த ஐந்து வருடங்களாக நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் நடந்த மாணவர் அனுமதி தொடர்பாகப் பூரண விசாரணைகளை மேற்கொள்ள சுதந்திரமானதும் நடுநிலைமையானதுமான ஆணைக்குழு ஒன்றை உடனடியாக நியமித்து, உண்மை நிலைமைகளை வெளிக்கொணர வேண்டுமென கௌரவ அமைச்சர் அவர்களிடம் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் பல்வேறு நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர். பல மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. தனியார் வீடுகளில் தங்கிநின்று கல்வி கற்கின்ற மாணவர்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவதற்கு அதிக இடம் ஒதுக்கித் தரவேண்டுமென கௌரவ அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மொறட்டுவ ஜெர்மன் தொழில் நுட்பக் கல்லூரி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் தமிழ் மாணவர்கள் போதியளவு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் அமைச்சர் அவர்களிடம் முன்வைக்கிறேன். தமிழ் மொழி மூலப் பரீட்சை வினாத்தாள்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பரீட்சை வினாத்தாள்களில் மொழி நடை மிகவும் கடுமையாக உள்ளதால் சிறந்த மாணவர்கள்கூட, கேள்விகளை விளங்கிக்கொள்ள முடியாமல் நல்ல முறையில் பரீட்சை எழுத வாய்ப்பில்லாமல் போகிறது. எனவே பரீட்சை வினாக்கள் குழப்பமில்லாமல் இலகுவான மொழி நடையில் அமைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எஸ். சிவதாசன் அவர்கள் தபால், தொலைத்தொடர்பு அமைச்சு மீதான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 14, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

[illegible]
(திரு. எஸ். சிவதாசன்)
(Mr. S. Sivathasan)

Mr. Deputy Chairman, I am pleased to participate in this debate on the Votes of the Ministry of Posts and Telecommunications. Before I start, I should congratulate the Hon. Minister, the most energetic and youthful Minister and the energetic and youthful Deputy Minister for the progress as far as this Ministry is concerned. Before that Sir, I should really congratulate them for having created a new precedent in this House which I consider, is a very healthy precedent in the sense that all doubts expressed by Members of both sides of the House were clarified by the Hon. Minister or the Deputy Minister and assurances were given. Upto now the practice in this House was for the Minister and even the Deputy Minister to listen to what the Members say and reply at the end of the day's proceedings, when they have the time or the chance to reply. As time is very limited, the Hon. Minister or the Deputy Minister would not have the time to take into consideration most of the issues raised by Members of Parliament and to reply.

Sir, the Committee stage is really the stage that the Members of Parliament have a chance of sharing their views, the grievances of the people of their electorates and the problems that the people of the various electorates face. I really think that if all Ministers and the Deputy Ministers can continue this practice, this new precedent which the Hon. Minister of Posts and Telecommunications and the Deputy Minister have created today, it would be very useful and easy for Members of Parliament to pinpoint the grievances of their electorates, their districts and see that redress is done.

Sir, coming to the Votes of the Ministry, the Progress Report for the period September, 1994 to October, 1995, is fairly a good record in which the Hon. Minister in his message says:

**"The Postal Department which commenced activities in 1799 has grown to 559 Post Offices, 3382 Sub-Post Offices and 181 Agency Post Offices. The activities during the past one year were directed at extending the postal services, expanding the postal network, providing new postal buildings and enhancing the quality of the letter post."**

He further says:

**"We have paid special attention to the grievances of the employees by deciding to remove the salary anomalies and granting Public Servants status to the Sub-Postmasters. Sub-Postmasters will be granted this status from 01.01.1996.**

Telecommunication sphere has recorded an increase in the number of subscribers, improvement of service quality, rehabilitation and modernisation of telecommunication systems. Efforts have been made to utilize aid funds and successful attempts have been made to obtain further external resources for the development of telecom services.

Encouragement has been given to the private sector and today we have 18 operators providing value added telecom services. Growth of the cellular mobile phone service has been remarkable and we have nearly 50,000 mobile phones.

The Deputy Minister has said, "I am pleased to note the activities undertaken, especially in the North-East of the country to develop postal and telecommunication services during this period." Sir, I do not in any way doubt the good-intentions of either the Hon. Minister or the Deputy Minister. But, Sir, to be very frank and to say it in very plain and simple words, the entire postal and telecommunication system in the North-East, especially in the Jaffna electorate which I represent, is in a most chaotic state for reasons well beyond the control of this Ministry. Sir, even before the operations commenced the conditions were not that healthy. It is something that all of us know.


படிப்பகம்

www.padippakam.com

It is no secret that practically everybody living in this area has somebody very close to him, somebody closely related to him, living outside the shores of our country. It is very necessary for the people living in those areas to communicate with their relatives abroad. Sir, before the disturbances erupted there was a very efficient network of telecommunications system in almost all the areas of the Jaffna peninsula, including all the islands of Jaffna. But today Sir, they are unable to communicate in any from with their kith and kin living outside the shores of our country. Most of them are forced to travel all the way to Colombo just for a telephone call or to cash a bank draft. Sir, when such people come to Colombo the difficulties and the hardships that they encounter owing to security risks, arrests, the questionings and the lack of board and lodging facilities have become a big problem today. Sir, this is one aspect of it.

Then, Sir, as far as the postal service is concerned neither can any letter reach them nor can they send any letter from the Jaffna peninsula. And specially today, after the Operation "Riviresa" and with so many thousands of people displaced and not living at the addresses they were living at earlier, there is no way of them to receive any letter or communication with anybody outside. Sir, the Hon. Minister's Ministry and this Report speaks of the work undertaken and the work to be undertaken by this Ministry.

Sir, to be very brief, as far as buildings are concerned, most of the Post Offices in the North-East are housed in very old and dilapidated buildings which need very urgent repair. For lack of time I am not refering to particular places and say that this particular building at this particular place should be repaired or renovated. In general the conditions are that they are housed in old and dilapidated buildings or buildings that have been completely damaged or devastated by the on-going war. Sir, as far as buildings are concerned, this is the realistic situation, be it Jaffna, be it Batticaloa or Trincomalee. There are some post-offices which are housed in rented buildings. Under the plans of this Ministry it is very necessary that this Ministry should take urgent action and steps to see that this situation is remedied.

Sir, there were a number of speakers before me, especially the Tamil-speaking Members of Parliament, who brought to the notice of the Hon. Minister of circulars being sent only in the Sinhala language even to officials working in post-offices in the Tamil-speaking areas where the entire population is 100 per cent Tamil-speaking who do not understand or who will not be able to follow any other language other than Tamil.

ගරු එම්. එල්. ඒ. එම්. හිස්බුල්ලාහ් මහතා
(மாண்புமிகு எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்)
(The Hon. M. L. A. M. Hisbullah)

This will be rectified. From January all the circulars sent to the North-East will be sent in all the three languages.

එස්. සිවදාසන් මහතා
(திரு. எஸ். சிவதாசன்)
(Mr. S. Sivathasan)

Thank you. Sir, I thank the Hon. Deputy Minister for this assurance. Very hopeful that it would come into operation in January. Then, Sir, as far as the staff is concerned, in Colombo you cannot send an obituary notice in the Tamil language to a Tamil-speaking area because in the evening, especially after 5 p.m., there is no Tamil Officer even at the General Post Office in Colombo to receive this message. Sir, the Hon. Deputy Minister knows it personally that an obituary notice cannot be sent from Batticaloa after 5 p.m. because there is no officer who could take down this message in Tamil. Sir, immediate steps should be taken to rectify this situation.

Besides that, Sir, senior officers in all grades all over, be it in Colombo or the entire North-East, from the Deputy General Manager right down to the officers of the staff grade, are completely lacking in knowledge, and it is very difficult for the post-offices to transact business with the customers who go there. Sir, I must bring to your notice especially the anomalies that that the people in the islands of Jaffna face.

Sir, the post offices are there only with the name board that it is a post office. That is all that is there. We do not really have the necessary staff. But we are thankful to the Hon. Minister and the Hon. Deputy Minister for regularizing of four Post Masters who had been working in these post offices for quite some time. But, Sir, the mere regularizing and bringing them into the service as Post Masters would not be that much of a benefit to the people living there as they are unable to transact any business because there are no letters which go to the island or which come from there because of the present situation.

Sir, earlier there was a post box which was provided for the island from where the mail was sent to Anuradhapura. Repeated requests have been made for a post box to function from Trincomalee to Karainagar, and for the letters to be distributed from Karainagar to the other islands. Sir, this problem has been discussed over and over again on many occasions. I would urge the Hon. Deputy Minister to provide this facility. I am sorry that the Hon. Minister is not in the House. I am sorry the Hon. Minister is not in the House now, I saw somebody coming with the message and he has gone out. Anyway, I urge the Hon. Deputy Minister to take this matter up with the Hon. Minister for necessary action.

ප. ව. 3.00

Then, Sir, there are a number of postal peons in many post offices who have been working for many years. I am told that there are about 20 such postal peons in the Trincomalee District. Some of them have worked for very many years, as long as 20 years, but who have not been regularised in service. With your new scheme of recruitment which comes into operation from 1st January, 1996, I am afraid that these postal peons, after being in employment for so long, might not be considered for permanent employment. This is not only in the case of peons but even in the case of some of the Sub Post Masters who have the necessary educational qualifications and other stipulated requisite qualifications. If they are not absorbed into the service of Post Masters before the 31st of December this year, whether they would have a chance of getting into the new scheme and be absorbed into the permanent service is doubtful. As such, I would humbly request the Hon. Deputy Minister to take the necessary steps and see that these Sub Post Masters, who are in service and who have served the Postal Department continuously for many years, be considered for permanent employment.

ගරු එම්. එල්. ඒ. එම්. හිස්බුල්ලාහ් මහතා
(மாண்புமிகு எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்)
(The Hon. M. L. A. M. Hisbullah)

Hon. Member, if you can submit the names of those peons who are working on casual basis, we can look into that.

එස්. සිවදාසන් මහතා
(திரு. எஸ். சிவதாசன்)
(Mr. S. Sivathasan)

Thank you.


படிப்பகம்

www.padippakam.com

As far as the Batticaloa District is concerned and about which the Hon. Deputy Minister is well aware, there are about thousand telephones which starts with the digit '2' and there are about two hundred telephones which start with the digit '7'. I am told that it is very doubtful whether these telephones would continue in the same manner and whether an effective telephone or telecommunication system could be provided. It is nearly fifteer years since the Batticaloa Telephone Exchange really started operations. As such immediate steps should be taken in this direction.

ගරු එම්. එල්. ඒ. එම්. හිස්බුල්ලාහ් මහතා
*(மாண்புமிகு எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்)*
(The Hon. M. L. A. M. Hisbullah)

Under the new Project we have included the Batticaloa and Valaichenai areas and we are making arrangements to replace the old exchange with a new exchange.

එස්. සිවදාසන් මහතා
*(திரு. எஸ். சிவதாசன்)*
(Mr. S. Sivathasan)

With regard to the new telephone rates which the Government is contemplating to increase. The rate Rs. 180 is to be increased to Rs. 198/- and a call which costs Rs. 13/- is going to be increased to Rs. 18. All this is going to create certain difficulties and hardships for those who use these telephones. Sir, I am reliably informed that in Trincomalee some of these Government Offices, during the non-working hours, are doing some manipulation through some system. The calls are transferred to these private telephone booths – the agency post offices or private booths – whereby some sort of illegal use of telephones is being resorted to. I am also reliably informed that during the time the Trincomalee Court was on vacation, there was a very big telephone bill which was sent to the Court because the telephone systems had been transferred by using some device. This happens not only in the Court houses but even to telephones of a number of other Government Departments. They are being used by these private individuals with some connivance and connections with –

ගරු එම්. එල්. ඒ. එම්. හිස්බුල්ලාහ් මහතා
*(மாண்புமிகு எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்)*
(The Hon. M. L. A. M. Hisbullah)

I will look into that.

එස්. සිවදාසන් මහතා
*(திரு. எஸ். சிவதாசன்)*
(Mr. S. Sivathasan)

This is something which has got to be definitely gone into in the national interest. And, Sir, I am hopeful that early meaningful steps would be taken to see that the grievances of these people are met. The present plans of the Governments' new schemes of rehabilitation and reconstruction of the North-East, improvement of the postal and telecommunication system is a must which should receive priority. As the previous speakers have said, the world is becoming very closer. When we are almost on the verge of stepping into the 21st century, an effective system of communication internally within the country and communication with the outside world is a must. It is a necessity.

Sir, I am hopeful that these spheres would be looked into. I would repeat the request that, especially that there should be Tamil officials who could receive fax messages, telegrams, obituary notices at the General Post Office, Colombo and at post offices in places like Wellawatte, Bambalapitiya, Kotahena, Mutwal, where there are sizeable Tamil concentrations. That arrangement should be made for Tamil officers. Sir, as the Hon. Deputy Minister claims with pride, the Ministry is a unique ministry which has a Sinhalese Minister, a Muslim Deputy Minister and a Tamil Secretary. Sir, we welcome this and we accept this as an example that other Ministries should follow. But this should not only be a symbolic gesture, it should be something in effect. Thank you, Sir.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஏ. இராசமாணிக்கம் அவர்கள் நிதிதிட்டமிடல் இனவிவகார நல்லிணக்க அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது, 15, டிசம்பர் 95 இல் ஆற்றிய உரை.

ඒ. රාසමානික්කම් මහතා
*(திரு. ஏ. இராசமாணிக்கம்)*
(Mr. A. Rasamanickam)

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, அரச நிர்வாகத்தின் இருதயமாக விளங்கும் முக்கியமான அமைச்சின் குழுநிலை விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஏற்படுத்தியபோது தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால், அந்த அமைச்சு வெறுமனே பெயர்ப்பலகையோடு இயங்குவதாகவே தெரிகின்றது. இராணுவ நடவடிக்கைகளால் விரக்தியும் வேதனையும் அடைந்த தமிழ் மக்கள் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் சந்தேகக் கதைகளால் பெரிதும் அவதியுற்ற வருகிறார்கள். வடக்கு — கிழக்கை அறியாத தமிழ் மக்களும் வடக்கு — கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களும் கொழும்பில் பெறும் அனுபவங்கள், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போலாகும். இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு இவ்விடயங்களையிட்டுக் கரிசனை காட்டவேண்டும். தற்போது நடைபெற்று வரும் யுத்தம் தமிழ் மக்களுக்கெதிரானதல்ல என ஒருபுறம் கூறிக்கொண்டு, தமிழ் மக்களை வீதிகளிலும் வாகனங்களிலும் அரச அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் சந்தேகத்தின் பேரில் விசாரிப்பது, கைது செய்வது போன்ற அரசின் கொள்கை, பொது மக்களை அதிருப்தி கொள்ளச் செய்கிறது. "நாம் அண்மையில்தான் பதவியேற்றோம்; இதனால் பொலிஸ் அதிகாரிகளை உரியவாறு வழிநடத்தமுடியவில்லை; இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதற்குக் கடந்த அரசின் வன்முறைக் கலாசாரத்தினால் வழி நடத்தப்பட்ட அதிகாரிகளே காரணம்" என்று சாக்குப்போக்குக் கூறி அரசாங்கம் தப்பித்துக்கொள்ளக் கூடாது. தமிழ் மக்கள் உளவியல் ரீதியாக அனுபவிக்கும் வேதனைகளை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் கொழும்பு நகரில் முன்னர் போலச் சுதந்திரமாக நடமாடத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த அமைச்சு நடைமுறையில் ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, வடக்கு — கிழக்கு மக்கள் தற்போது அபிவிருத்தியையோ அற்ப சொற்ப சலுகைகளையோ எதிர்பார்க்க வில்லை. யுத்தமில்லாத சூழலை, அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய தீர்வை எதிர்பார்க்கிறார்கள். தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவிதமான தீர்வையும் ஆயுத பலத்தின் மூலம் திணிக்க முற்படக்கூடாது. அவ்வாறு அர்த்தமுள்ள தீர்வை முன்னெடுத்துச் செல்லாவிடின், இந்த நாடு ஒருபோதுமே அமைதியான நிலையை அடைய முடியாது. தீவிரவாதத்துக்குத் தீனி போடுவதாகவே அது அமையும்.

தற்போது பாதுகாப்புச் செலவினம் 38 பில்லியனாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு, இத்தகைய சுமையைத் தொடர்ந்தும் தாங்க முடியாது. பாதுகாப்புச் செலவினத்தை ஈடு செய்வதற்காக இந்த வருடத்தில் பாதுகாப்பு வரி வீதத்தை 4.5 சதவீதமாகத் தொடரவிட்டு, வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நேரடியாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் வர்த்தமானி மூலம் இரவோடிரவாகப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சகல உற்பத்திப் பொருள்களுக்கும்


படிப்பகம்

www.padippakam.com

பாதுகாப்பு வரி விதிக்கப்படும் நடைமுறையை அரசு மறுபரிசிலனை செய்யய வேண்டும். பால்மா, பற்பசை மற்றும் அத்தியாவசிய அன்றாடப் பாவனைப் பொருள்களுக்குப் பாதுகாப்பு வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும். ஆடம்பர உற்பத்திப் பொருள்களுக்கான வரி வீதத்தை அதிகரிப்பின் பொதுமக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

முத்திரைத் தீர்வின் அதிகரிப்பின் மூலம் அரச ஊழியர்கள் வருடத்துக்கு 240 ருபா வரை வரி செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. 10,000 ருபா வரையான கொடுக்கல் வாங்கலுக்குரிய முத்திரைத் தீர்வையைத் தொடர்ந்தும் இரண்டு ருபாவாகவே இருக்க அனுமதிக்கப்பட வேண்டும். வடக்கு — கிழக்கிலுள்ள அரசுடைமை வங்கிகளில் ஆளணிப் பற்றாக் குறை நிலவுகிறது. இதனால் ஊழியர்களுக்கு வேலைப் பளு அதிகரிப்பதுடன், தமது தேவைகளுக்காக வங்கிக் கிளைகளை நாடிச் செல்லும் வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

1990 இல் நடைபெற்ற வங்கி எழுதுவினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சைகளுக்குப் பெரும்பாலான தமிழ் பரீட்சார்த்திகளால் தோற்ற முடியவில்லை. ஆயினும் தமிழ் பரீட்சார்த்திகளுக்கென விசேட பரீட்சை நடைபெறவில்லை. எனவே மீண்டும் பரீட்சையை நடாத்தி வடக்கு — கிழக்கில் நிலவும் வங்கி ஊழியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், இலங்கை வங்கி நிர்வாகம் மாகாண மட்டத்திற்குப் பரவலாக்கப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என்பவற்றிற்குரிய மாகாண அலுவலகங்கள் தொடர்ந்தும் கொழும்பிலேயே இயங்கி வருகின்றன. கிழக்கு மாகாணம் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் தெரிவிக்கப்பட்ட போதிலும் மட்டக்களப்பில் இயங்குமென அறிவிக்கப்பட்ட இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண அலுவலகம் அங்கு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பல்வேறு கருமங்களுக்குரிய அங்கீகாரத்திற்கான கோவைகள் தொடர்ந்தும் கொழும்பிற்கு அனுப்பப்பட வேண்டியிருப்பதால் நிர்வாக ரீதியான தாமதங்கள் ஏற்படுகின்றன.

மேலும் மட்டக்களப்பு பசார் வீதியில் இலங்கை வங்கி கட்டிடத்தை அமைப்பதற்குக் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பத்து வருடங்களாகியும், கட்டிடம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மட்டக்களப்பு நகரின் வர்த்தக மையப் பகுதியில் உள்ள இக் காணியில் இலங்கை வங்கிக்கான கட்டிடத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் வங்கியின் அரசடிக் கிளைக்கு கட்டிடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை திட்டம் செயலுருப்பெறவில்லை.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு "றேப்பியா" கடன்கள் வழங்கப்பட்டன. அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் தற்போது அவர்களுக்கு ஒன்றரை லட்சம் ருபா வரை இழப்பீடு வழங்கப்படுகிறது. எனவே, "றேப்பியா" கடன் பெற்ற அரச ஊழியர்கள் இழப்பீடு பெறாதவிடத்து, அவர்களுக்கு வழங்கப்பட்ட புனர் வாழ்வுக் கடனை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இக்கடன்களுக்கான நிதியை "றேப்பியா" நிறுவனமே வங்கிகளுக்கு வழங்குகிறது. எனவே, புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சும் நிதி அமைச்சின் செயலாளரும் இணைந்து இந்நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

வெறுமனே அராசாங்க ஊதியத்தை நம்பியிருக்கும் அரசாங்க ஊழியர்கள் வடக்கு — கிழக்கில் தொடரும் வன்செயல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் மாதாந்த கடன் தவணைப் பணத்தைச் செலுத்துவதில் அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள். எனவே இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட "றேப்பியா" கடன்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், வடக்கு — கிழக்கில் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்த விதவைகள், பெற்றாரை இழந்த அநாதை இளைஞர்கள் போன்றோரைச் சுயதொழில்களில் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டு விசேட கடன் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் அரசிறையைப் பொறுத்த வரை, வரி வருமானம் முக்கிய இடம் பெறுகிறது. வரி அரசிறைகள் 90 சதவீதமாகவும் வரியில்லா அரசிறை 10 சதவீதமாகவும் உள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் 22 சதவீதம் வரை அரசிறை பங்களிப்பை வழங்குகின்றது. எனினும், வருமான வரிக்குட்படுபவர்களின் எண்ணிக்கை சார்பளவில் குறைவாகவே உள்ளது.

வருமானம் உழைப்பவர்களின் தொகை 50 இலட்சமாக இருந்த போதிலும் சுமார் 3 இலட்சம் பேரே வருமான வரி செலுத்துவோராக உள்ளனர். மொத்த சனத்தொகையில் 1.3 சதவீதத்தினர் அல்லது வருமானம் உழைப்பவர்களில் 5 சதவீதத்தினர் மட்டுமே வருமான வரி செலுத்துபவர்களாக உள்ளனனர். இதனால் எமது நாட்டில் வருமான ஏற்றத்தாழ்வு — இடைவெளி — தொடர்ந்து அதிகரிப்பதுடன் மொத்த சனத்தொகையில் அரைப் பங்கினர் வரை வறுமை நிவாரண முத்திரை பெறும் நிலையே தொடர்கிறது.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, தாராள பொருளாதாரக் கொள்கையின் காரணமாக பொருளாதார ரீதியிலான சமமின்மை இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இலங்கைப் பிரஜை ஒருவரின் சராசரி வருமானம் 465 அமெரிக்க டொலர்களாக இருந்தபோதிலும் மொத்த சனத் தொகையில் 75 சதவீதமானோர் இத்தொகைக்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர்.

எனவே, வரி செலுத்தாது ஏய்ப்பவர்களையும் வரியைச் செலுத்தாது தவிர்ப்பவர்களையும் உரிய முறையில் கண்காணித்து அரசிறையைப் பெருக்க வேண்டும். எமது நாட்டின் சேவைத் துறையைச் சார்ந்தோர் வரி செலுத்தாது தவிர்க்கின்றனரெனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 6 சதவீதம் கறுப்புப் பணம் இருப்பதாக அறிய முடிகிறது. இலங்கையின் வரிச் சட்டங்கள் பலவீனமாக உள்ளதுடன் வரி அறவிடுவதில் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப் படாமையே இதற்குக் காரணமாகும். எனவே, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நடவடிக்கைகளைத் திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் சூழலுக்கு ஏற்ப நவீன மயப்படுத்த வேண்டும். இறைவரி அறவீட்டுச் சட்டங்களைத் தேவைக்கேற்ப திருத்தி, அதன் செயற்பாடுகளைத் தீவிரப் படுத்தவும். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எமது நாட்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினை நவீன மாற்றங்களுக்கேற்ப சீரமைக்கும் பணிகள் மிகவும் மந்த கதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு அரசாங்கத் துறைகள் கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இத் திணைக்களத்தின் தலைமையகம் தவிர்ந்த பிராந்திய அலுவலகங்கள் இதுவரை கணனி மயப்படுத்தப்படவில்லை.

உள்நாட்டு இறைவரிச் சேவையின் இரண்டாம் வகுப்பின் இரண்டாம் தரத்திலான வரிமதிப்பாளர் பதவிகளுக்கு 98 வெற்றிடங்கள் உள்ளதாகவும், மூன்றாம் வகுப்பு இரண்டாம் தர வரி உத்தியோகத்தர் பதவிகளுக்கு 135 வெற்றிடங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆளணி பற்றாக்குறை காரணமாக அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப் படுகின்றன. எனவே வெற்றிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்நாட்டு இறைவரி ஊழியர் சங்கம், 51 வரி மதிப்பாளர் வெற்றிடங்களுக்கு வரி உத்தியோகத்தர்கள் மத்தியிலிருந்து ஆட்கள் தெரிவு செய்யப்படல் வேண்டுமென்று போராடி வருகிறது. அவர்களது நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தவொரு நிறுவனத்தைப் பொறுத்த வரையிலும் ஊழியர்களது திருப்தியே முக்கியம். அவர்கள் திருப்தியாக இருந்தால்தான் உரிய சேவைகளைப் பெற முடியும். எனவே உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்குரிய பதவி உயர்வுகள் பற்றிச் சீரான கொள்கைகளைச் செயற்படுத்த வேண்டும். அத்துடன் வரி உத்தியோகத்தர்களுக்கும் வரி அறவீடு தொடர்பாக சில அதிகாரங்களை வழங்க வேண்டும்.

வடக்கு — கிழக்கில் பணியாற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், பல்வேறு சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்குக் கடந்த ஏப்ரல் முதல் இவ்வருடம் டிசம்பர் வரை ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் கீழுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உட்பட பலவேறு திணைக்கள ஊழியர்களுக்கு இந்த 25 சதவீத ஊக்குவிப்பு, ஆபத்துக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை அனுப்பியும் திறைசேரி அதற்குரிய நிதி ஒதுக்கீட்டை வழங்காததே இதற்குக் காரணமென ஊழியர்கள் கூறுகின்றார்கள். எனவே உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுத்து, கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். ஊக்குவிப்பு ஆபத்துக் கொடுப்பனவை மேலும் சில மாதங்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையின் மொத்த வரி சேகரிப்பில் மொத்த விற்பனை வரி 54 சதவீதமாகவும் வருமான வரி 27.7 சதவீதமாகவும் பாதுகாப்பு வரி 8.5 சதவீதமாகவும் உள்ளன. நேரில் வரி கிட்டத்தட்ட 73 சதவீத இடத்தைப் பெறுகிறது. இதனால் நுகர்வோரே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மொத்த சனத்தொகையில் கிட்டத்தட்டஅரைப் பங்கிற்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்கின்றனர். மொத்த விற்பனை வரி, பாதுகாப்பு வரி வீதங்கள் அதிகமாகக் காணப்படுவதால் பொருட்களின் விலை அதிகரிப்பது வாழ்க்கைச் செலவையும் கூட்டுகின்றது. எனவே வரி சேகரிப்பில் வருமான வரியின் பங்கை அதிகரிப்பதன் மூலம் வருமான


படிப்பகம்

www.padippakam.com

ஏற்றத்தாழ்வை குறைக்கலாம். வருமானம் உழைப்பவர்களில் 95 சத வீதத்தினைத் தப்ப வைப்பதன் மூலம் நாட்டின் மொத்த சனத்தொகையில் அரைப் பங்கினரை வதைப்பது நியாயமாகாது.

கடந்த அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சனசக்தி திட்டத்தினதும் தற்போது அமுல் படுத்தப்படும் ' சமுர்த்தி ' திட்டத்தினதும் பலாபலன்கள் வடக்கு — கிழக்கு மக்களைப் பூரணமாக அடையவில்லை. யுத்தத்தைச் சாட்டாக வைத்து தமிழ் பேசும் மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோர் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

" சூரிய கதிர் " இராணுவ நடவடிக்கையின் காரணமாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள எண்பது சத வீத மக்களும், தொடரும் இராணுவ நடவடிக்கையின் காரணமாகக் கிழக்கு மாகாண மக்களும் உடைமைகள், தொழில்கள் என்பவற்றை இழந்து வறுமைக் கோட்டுக்குக் கீழே வலிந்து தள்ளப்பட்டுள்ளனர். நடைப்பிணங்களாக உரிய உணவு, மற்றும் அடிப்படை வசதிகளின்றி வாழும் மக்களுக்கு உங்களின் வரவு செலவுத் திட்டம் எந்த வித நன்மையையும் தரப்போவதில்லை என்பதை நான் மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நாட்டில் யுத்தம் இல்லாத ஒரு சூழலை ஏற்படுத்த அரசும் புலிகளும் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் எமது நாடு இன்னொரு சோமாலியாவாக நேரிடும். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 38 பில்லியனை இந்த நாட்டின் இன்னொரு பகுதி மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதன் மூலம் இந்த நாட்டில் அழிவுகளும் வேதனைகளும் மிஞ்சும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் நீட்டிய நேசக்கரங்களை அரசு உதாசீனம் செய்யக்கூடாது. தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடியதாக உரிய நடவடிக்கைகளில் இறங்கி, இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வினைக் காண முன்வர வேண்டும். வெறுமனே பிரசாரங்களும் ஆசை வார்த்தைகளும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தா. உருப்படியான நடவடிக்கைகள் மூலமே அதனை ஏற்படுத்த முடியும் எனக் கூறி எனது உரையை முடிக்கின்றேன். நன்றி.

## ஈ.பி.டி.பி. பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எஸ். தங்கவேல் அவர்கள் அவசரகால நீடிப்பு விவாதத்தின் மீது, 06, செப்டம்பர் 95 இல் ஆற்றிய உரை.

එස්. තංගවේල් මහතා)
(திரு. எஸ் தங்கவேல)
(Mr. S. Thangavel)

கௌரவ சபாநாயகர் அவர்களே, கொழும்பில் வாவிகளிலும் குளங்களிலும் மிதந்த பிணங்களை வீசியவர்கள் யார் என்பது தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றது. இந்தக் கொலைகளுக்கான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தமைக்காக ஜனாதிபதி அவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாதுகாப்புப்படையிலே இருந்த ஒரு சாரார்தாம் இந்தக் கொலைகளுக்கான சூத்திரதாரிகளென்று இன்று தெரிந்திருக்கின்றது. விசாரணைகள் நடந்திருக்காவிட்டால் இந்த உண்மையும் வெளியே தெரிந்திருக்காது. இந்தக் கொலைகள் தமிழ் மக்கள் மீதோ அல்லது புலிகள் இயக்கத்தின் மீதோ ஏற்பட்ட வெறுப்பினால் மட்டும் செய்யப்பட்டதாக நாம் நினைக்கவில்லை. அரசாங்கத்துக்கோ அல்லது படை உயர் அதிகாரிகளுக்கோ தெரியாத வகையில் மிகவும் திட்டமிட்டு இக்கொலைகள் நடத்தப்பட்டுள்ளன. பாராளுமன்ற வாவி வரை பிணங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. இந்த நாட்டின் ஜனநாயக நிறுவனங்களைக் கேலிக்குள்ளாக்கும் விதமாக திட்டமிட்டு அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் கொலையாளிகளுக்கு இந்த நாட்டு நலனில் அக்கறை இருக்கவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. வாவிகளில் மிதந்த பிணங்கள் தமிழர்களுடையவை என்று தெளிவாகத் தெரிந்தமையால் பல்வேறு வியாக்கியானங்கள் செய்யப்பட்டன. ஈ. பி. டி. பி. மீது கூட சந்தேகம் எழுப்பப்பட்டது. தமிழ் அமைப்புக்கள் புலிகள் மீது வெறுப்பாக இருப்பதால் புலிகளைக் கொலை செய்வதாகவும் வதந்திகள் எழுப்பப்பட்டன. ஆனால் கொலை யாளிகளோ இந்த நாட்டின் சகல இன மக்களின் முகங்களிலும் கரி பூசிக்கொண்டிருந்தார்கள். வெளியுலகின் முன்னால் இந்த நாட்டில் மனித உயிர்கள் மதிப்பிழந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தமது கொலைகள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதனால்தான் கொலையாளிகளின் நோக்கம் என்னவென்பதைக் கண்டறிவது முக்கியமானதென்று நாம் கருதுகின்றோம். கொலையாளிகளின் நோக்கத்தைக் கண்டறிவதோடு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படுவதன் மூலமே பாதுகாப்புப் படையினர் மீதான நம்பிக்கையை உருவாக்க முடியும்.

1991 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக மோசமான மனித வேட்டையொன்று நடாத்தப்பட்டது. சத்துருக்கொண்டான் அகதி முகாமில் இருந்த அகதிகள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 185 பேர் கொலை செய்யப்பட்டனர். கொலையுண்டவர்களின் உடல்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை மர்மமாகவே இருக்கின்றது. இந்த மனித வேட்டையில் சம்பந்தப்பட்ட ஒருவரும் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம். அந்த சத்துருக்கொண்டான் மனித வேட்டைகளுக்கு விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால் பல உண்மைகள் வெளிவந்திருக்கும். மனித வேட்டைகளுக்கான துணிச்சல் இல்லாமல் போயிருக்கும். ஆனால் முளையிலே கிள்ளியெறியாமல் வேர்விட்டு வளரும்வரை அத்துமீறல்களை அனுமதிக்கும் போக்கு தொடர்ந்துகொண்டே வருகின்றது. கொலைகளைச் செய்து பழக்கப்பட்டவர்கள் இறுதியில் அரசாங்கத்தின் கண்களிலும் மண்ணைத் தூவ முடியும் என நினைத்து வருகின்றார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, கொழும்பில் மிதந்த பிணங்கள் குறித்து விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் திருகோணமலையில் தமிழர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் வருபவர்கள் பலரைக் கைது செய்துள்ளனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 15 க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். பாதுகாப்புப் படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தான் இக்கடத்தல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இதுகுறித்து எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல தடைவைகள் இச்சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் மிக முக்கியமான பிரச்சினைகள்கூட கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாததையிட்டு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருகோணமலையில் வெள்ளை வான் ஒன்றில் திரிபவர்கள் குறித்தும், அவர்களது அத்துமீறல் நடவடிக்கைகள் குறித்தும் நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஆனால், வெள்ளை வானில் திரியும் கோஷ்டியினர் மீது இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் சமீபத்தில் ஒரு விபரீதம் நடைபெற்றுள்ளது. கடந்த 28.08.1995 அன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள உவர்மலைப் பகுதியில் லக்ஸ்மிபிள்ளை எனப்படும் பெண்ணொருவர் இந்த வெள்ளை வான் கோஷ்டியினரால் பலாத்காரபடுத்தப்பட்டுள்ளார். வெள்ளை வானில் திரியும் இரண்டு நபர்களே அப்பெண் மீது பலாத்காரம் புரிந்துள்ளனர். அவர்கள் இருவரும் தற்போது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், அவர்களது சகாக்களான வெள்ளை வான் கோஷ்டியினர், பாதிக்கப்பட்ட பெண்ணை மிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் ; தமது சகாக்களின் கற்பழிப்பு நடவடிக்கையை மூடி மறைப்பதற்கு அவர்கள் முயன்று வருகின்றனர். இக் கற்பழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இருவரும் புலிகளை இளங்காட்டுவதற்காக இராணுவ உளவுப் பிரிவினரால் பயன்படுத்தப்பட்டு வந்தவர்களாவர்.

அதுமட்டுமல்லாமல், வீதிகளில் செல்லும் பெண்களைச் சோதனை என்னும் பெயரில் கேவலமாக நடாத்துவது ; " உங்கள் சகோதரர்களைப் பொலிஸில் பிடித்துக் கொடுப்போம் " என மிரட்டுவது ; அவ்வாறான மிரட்டல்களுக்குப் பணியும் பெண்களைத் தமது காம இச்சைகளுக்குப் பயன்படுத்துவது போன்ற அத்துமீறல்களிலும் வெள்ளை வான் கோஷ்டியினர் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது, அவர்களால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் புகார் செய்த காரணத்தினாலும், மனித உரிமைகள் பணிக்குழு அதில் தலையிட்டதாலுமே இந்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், இவர்கள் மீது நீதியான விசாரணை நடாத்தப்படுமா என்பது தொடர்பாக திருகோணமலை மக்களிடையே சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. திருகோணமலையில் தற்போது காணாமல் போயுள்ளவர்கள் குறித்து உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். " அவ்வாறு காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது ? அவர்களைக் கைது செய்தது யார் ? " போன்ற விபரங்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு, வெள்ளை வான் கோஷ்டியினரின் தொடர்ச்சியான அத்துமீறல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1990 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தொடர்ந்து வரும் இந்த வெள்ளை வான் கோஷ்டியினரின் நடவடிக்கைகள் நிறுத்தப்படுமானால், திருகோணமலையிலுள்ள தமிழ் மக்கள் அரசாங்கத்துக்குத் தமது நன்றியைத் தெரிவிப்பார்கள். காணாமல் போனோர் விசாரணைக்குழு, மனித உரிமைகள் பணிக்குழு போன்றவை எல்லாம்


படிப்பகம்

www.padippakam.com

இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவ்வாறிருந்தும் தமிழர்கள் காணாமல் போகும் நடவடிக்கை தொடருமானால், விசாரணைக் குழுக்கள் மீதும், மனித உரிமைகள் குழுக்கள் மீதும் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விடும். அதுமட்டுமல்லாமல், இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவோர் துணிச்சலடையவும் வழியேற்படும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். திருகோணமலை விமானப்படைத் தளத்தில் சிவில் ஊழியர்களாக நீண்ட காலம் வேலை செய்து வந்த தமிழ் ஊழியர்கள், திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். நிரந்தர ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள ஊழியர்கள்கூட எவ்வித காரணங்களுமின்றி, எவ்வித நிவாரணங்களுமின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக வேலை நீக்கஞ் செய்யப்பட்ட இவர்களுக்கு உடனடியாக மீள வேலை வழங்கப்பட வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் பல கிராமங்களில் இருந்த இராணுவமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. அவ்வாறு இராணுவ முகாம்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் இயங்கிவந்த கூட்டுறவுக் கடைகளும் தற்போது மூடப்பட்டுள்ளன. அப்பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லக்கூடாது என அரசு எச்சந்தர்ப்பத்திலும் தடை விதிக்கவில்லை. ஆனால், இராணுவத்தினர் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லவிடாமல் தடுத்து வைத்துள்ளனர். குறிப்பாக, ஈச்சிலம்பற்றை இராணுவ முகாம் மூடப்பட்டதும், அங்கு இதுநாள் வரை இயங்கிவந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனையை மூடிவிட்டு, சேருவிலவில் பணிமனையை ஆரம்பிக்கும்படி இராணுவத்தினர் கட்டளையிட்டுள்ளனர். ஆனால், திருகோணமலை அரசாங்க அதிபரோ, உதவி அரசாங்க அதிபர் பணிமனையைத் தொடர்ந்தும் ஈச்சிலம்பற்றையிலேயே வைத்திருக்க வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளார். இதனால் ஈச்சிலம்பற்றை உதவி அரசாங்க அதிபரும் மற்றைய ஊழியர்களும் என்ன செய்வது எனத் தெரியாமல் திணறுகின்றனர். கடந்த 1 ஆந் தேதி முதல் அவர்கள் சேருவில உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கையொப்பமிட்டுவிட்டு தமது வீடுகளுக்குத் திரும்புகின்றனர். எனவே, மேற்படி பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் செல்வதையும், அங்கு சிவில் நிர்வாகம் சரியான முறையில் இயங்குவதையும் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

இன்னொரு விடயத்தையும் நான் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன். மணலாற்றில் ஏன் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று தமிழர்கள் கேட்பதாகக் கௌரவ உறுப்பினர் ஒருவர் கூறினார். ஆனால், மணலாற்றுக் குடியேற்றம் வடக்கு — கிழக்கைப் பிரிப்பதற்காகவும் தமிழர்களின் தொடர் நிலப்பரப்பை இல்லாமற் செய்வதற்காகவும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைச் சிதைப்பதற்காகவுமே ஏற்படுத்தப்பட்டதென்பதைக் கௌரவ உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். மேலும், சிங்கள இடங்களில் படித்த தமிழர்கள் அரசாங்க வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் இது சிங்களவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் ஒரு விடயத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும். தமிழ் மாணவர்களுக்கெதிராகத் தரப்படுத்தல் முறை பெரும்பான்மையினரால் கொண்டுவரப்பட்டபோது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட ஓர் அநீதியாக அதைச் சிங்களச் சமூகம் கருதவில்லை. தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, பெரும்பான்மையினம் அதை அநீதியென்று கூறவில்லை. பல்லாயிரக் கணக்கான வடக்கு — கிழக்குத் தமிழ் மக்கள் அரச பயங்கரவாதத்தினால் கொல்லப்பட்டபோது அதைத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியென்று கூறவில்லை. எங்கோ ஒரு கிராமத்தில் படித்த தமிழர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்களென்று கூறுவது அவரது குறுகிய மனப்பான்மையினை வெளிப்படுத்துவதாக உள்ளது. இவ்வாறான அரசியல் வாதிகளால் தான் இந்த நாட்டில் இன்று இனப்பிரச்சினை கொழுந்துவிட்டெரிகின்றது கௌரவ சபாநாயகர் அவர்களே. எதிர்காலத்தில் இந்தப் பாராளுமன்றம் இனத்துவேஷிகளின் கூடாரமாக கொழுந்துவிட்டெரிகின்ற இனப்பிரச்சினைக்கு எண்ணெய் ஊற்றுபவர்களின் கூடாரமாக மாறிவிடுமோ என்ற பயம் தமிழ் மக்களைப் பற்றிக்கொண்டுள்ளது. நன்றி



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்